
அது மட்டும்
ரகசியம்
இந்திரா சௌந்தர்ராஜன்
திருமகள் நிலையம்

முதற் பதிப்பு: மே, 2002
உரிமை: ஆசிரியருக்கு©

ATHUMATTUM RAKASIYAM

By: Indhira Soundaarajan

First Edition: May, 2002
Second Edition Nov 2003

No. of Pages: 272

Paper used: 11.6 cream wove

விலை ரூ. 68/-

5329352
35846

THIRUMAGAL NILAYAM
New No: 16, Old No: 55,
Venkatnarayana Road,
T.Nagar, Chennai-600 017.
Phone: 4342899, 4327696

Laser Typeset By: Sivaa Graphics, Chennai-94. Ph: 4730810

Printed at: Udayam Offsets, Chennai - 600 002.

# பதிப்புரை

*இந்திரா சௌந்தர்ராஜன்-*

இன்றைய பத்திரிகை உலகில் முன்னணியில் இருக்கும் நாவலாசிரியர்களில் முதன்மையானவர். இவர் எழுதாத வார, மாத இதழ்களே இல்லை என்று கூறுமளவு புகழ்பெற்றவர்.

படிப்பவர்களை மட்டுமல்லாது சின்னத்திரையின் வழியாக பார்ப்பவர்களையும் பரவசப்படுத்தும் பெருமைக்குரியவர்.

எப்படி இவரால் இவ்வளவு எழுத முடிகிறது என்று வாசகர்களை வியப்படைய வைப்பவர்.

கதை சொல்லும் உத்தியும், தமிழைக் கையாளும் விதமும், தனது கற்பனை வழித்தடங்களில் வாசகர்களைக் கூட்டிச் செல்லும் விதமும் புதுமையானது.

"இவரது நாவல்களை வாசிக்கத் தொடங்கும் வாசகனின் மனம் ஒருமுகப்பட்டு விடுகிறது. இது ஒரு புனைகதை என்பதை மறந்து அதில் ஆழ்ந்து விடும் வாசகன், படித்து முடித்ததும் தியானத்திலிருந்து விடுபட்ட நிலையடைகிறான்."

-இது நமது கருத்தல்ல. ஒரு பேராசிரியரின் கருத்து.

'அது மட்டும் ரகசியம்' என்ற இந்த நாவலைப் படித்து முடித்தபோது, பேராசிரியரின் கருத்து மிகையல்ல என்பதை உணர முடிந்தது.

திகிலைத் தந்து, பிரமிப்பை ஏற்படுத்தும் அடுக்கடுக்கான சம்பவங்களைக் கொண்ட 'அது மட்டும் ரகசியம்' ஹிட்ச்ஹாக் படம் பார்ப்பதைப் போன்று அத்தியாயத்திற்கு அத்தியாயம் பரபரப்பை உண்டாக்குகிறது.

ஆயிரம் வேலிக்காட்டுக்குள் சூத்திரதாரிகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் சமாதான பாண்டியும், அவரது அண்ணன் மகனான கழுகாசல தேவராயரும் அற்புதமான பாத்திரப்படைப்புகள்.

குட்டி நந்தஸ்வாமி கோயில் மர்மம்... ஆயிரம் வேலிக்காட்டைச் சுற்றி நடக்கும் மர்மங்கள்...

படித்துப் பாருங்களேன்...

'அதுமட்டும் ரகசியம்' என்ன என்பதைக் கண்டு நீங்களே வியந்து போவீர்கள்.

—பதிப்பகத்தார்

சென்னை மாவட்ட கிளை நூலகம்
35846
5329362
கொளத்தூர், சென்னை - 99

# அது மட்டும் ரகசியம்

## 1

விடிந்தும் விடியாத காலைப் பொழுது!

அழகர் கோயில் மலைச் சரகத்தை ஒட்டிய ஆயிரம் வேலிக்காட்டுக்குள் நுழைந்து கொண்டிருந்தது ஒரு படகுக் கார். கப்பி மண் சாலையில் புழுதிப் புயலை உருவாக்கிய படி ஊர்ந்து கொண்டிருந்த அதை வயல்களில் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்த சிலர் பார்த்துவிட்டு கண்களை அகலத் திறந்து விட்டுக்கொண்டார்கள்.

கங்காணி ஏழுமலை மட்டும் பார்த்ததோடு நில்லாமல் கார் செல்லும் பாதையில் பின்னாலேயே ஓடத் தொடங்கினான்.

"ஏழுமலை, ஆருவே அது... முதலாளி ஒறம்பறைங்களா?" வயலுக்குள் இருந்து கொண்டு ஒரு பெண் கேள்வியை அனுப்பினாள். ஓடிக்கொண்டே கங்காணி பதிலைச் சொல்லலானான்.

"நம்ம நாட்டாமை பேரனும் பொஞ்சாதியும் வந்திருக் காங்கங்கோய்... இன்னிக்கு நமக்கெல்லாம் கோழி அடிச்சு பிரியாண்தாரங்..."

கார் அடர்த்தியான தென்னந்தோப்பு ஒன்றில் நுழைந் திருந்தது. தோப்பின் மையத்தில் ஒரு கருங்கல் பங்களா!

பார்த்த நொடி கண்களில் அகலம் தட்டிப்போய்விடும். அப்படி ஒரு விஸ்தீரணம். வாட்டசாட்டம்!

காரிலிருந்து இறங்கிய சந்திரமோகனும் பங்களாவைப் பார்த்து அசந்துதான் போயிருந்தான். அவனோடு சேர்ந்து இறங்கிய அவன் மனைவி ஸ்ரீமதி "சந்திரா... என்னப்பா இது நம்ம லண்டன் பேலஸ் மாதிரியே இருக்கே! ஐ நெவர் எக்ஸ் பெக்ட் இட்!" என்று அவளது ரோஸ் நிற உதட்டை ஒரு சுழி சுழித்துக் கொண்டாள்.

மகனும் மகளும் அசந்துபோய் விட்டதைப் பார்த்த படியே கூடவே காரிலிருந்து இறங்கியிருந்தார் ரத்ன சபாபதி. பெரிய தொழிலதிபர்!

"பங்களாவை மட்டும் பார்த்துட்டு அசந்து நின்னா எப்படி? இந்த ஆயிரம் வேலிக் காட்டுக்குள்ள அங்குலத் துக்கு அங்குலம் உனக்கு ஆச்சரியம் காத்திருக்கு. சந்திர மோகன்" என்றவர்.

"ஆயிரம் வேலிக்காடுங்கற பேரே என்னவோ மாதிரி இருக்கு... ஆளை விடுங்கப்பான்னு சொன்னியே இப்ப என்ன சொல்றே...? ஒரு பிக்னிக் ஸ்பாட்டுக்கு வந்த மாதிரி இல்லே?"

-கேள்வியோடு தனது சஃபாரி சூட்டின் சுருக்கத்தை எடுத்துவிட்டுக் கொண்டார்.

சந்திரமோகன் ஆமோதிப்பதாக சிரித்ததைத் தொடர்ந்து அடுத்தடுத்து வரவேற்பு, விசாரிப்பு என்கிற விஷயங்கள் ஆரம்பமாகத் தொடங்கிவிட்டன.

காரிலிருந்து இறங்கிய மூவரையும் உற்சாகமாக உள்ளே அழைத்துச் செல்ல ஆரம்பித்தார் அந்த கருங்கல் பங்களாவில் இருந்து வந்திருந்த கழுகாசலத் தேவராயர்.



"மாப்ளைக்கும் மருமகனுக்கும் இப்பதான் இந்த பக்கம் வரணும்னு தோணிச்சாக்கும்?" என்று அவர் குரலில் விஸ்தாரமான ஆதங்கம்.

கழுகாசலத் தேவராயரின் கருத்தை அப்படியே எதிரொலித்தாள் அவரோடு வாசலுக்கு வந்திருந்த அவரது பத்தினி சங்கவை நாச்சி.

"வாங்க மாப்ள... எம்புட்டு நாளாச்சு...?"

"நாளா... வருஷமாச்சுன்னு சொல்லு சங்கா..."

"எப்படியோ இப்பவாச்சும் வந்தீகளே... எலேய் கோபாலு, ஆரு வந்துர்காங்கன்னு பாருடா..."

சங்கவை நாச்சி திரும்பி, உள் கொட்டாரம் அதிரும் வண்ணம் கத்தினாள். அவள் கூப்பிட்ட கோபால் என்னும் இளைஞன் நல்ல மஸ்லின் வேட்டியும் மடக்கி விட்ட சட்டையுமாக, "வா சந்திரா... வாங்க மிஸஸ் சந்திர மோகன்" என்றபடியே எதிரில் வந்து கை குலுக்கினான். பின் எல்லோரும் உள்ளே நுழைய ஆரம்பித்தனர்.

ஸ்ரீமதி, பங்களாவுக்குள் பிரவேசித்த நொடிப்பொழுதில் இருந்தே பிரமிப்பில் தான் இருந்தாள். அமெரிக்காவில் இருந்து கிளம்பியபோது ஒரு பட்டிக்காட்டுக்குள் நுழையப் போவதாகத்தான் நினைத்துக் கொண்டிருந்தாள்.

ஆடும் மாடும் அலைந்தபடி இருக்கும் ஒரு அழுக்குக் கிராமம்தான் அவள் மனக்கண்ணில் இருந்தது. இங்கோ எல்லாமே நேர்மாறாக இருக்கிறது.

ஒரு ரிஸார்ட்டுக்குள் வந்தது போல ஆச்சரிய உணர்ச்சி. அதைவிட ஆச்சரியம், பங்களா வேலைக்காரர் பலர் இடுப்பில் துண்டைக் கட்டிக் கொண்டும் ஒரே சீராக கையைக் கட்டிக் கொண்டும் நிற்கும் அந்தப் பணிவுதான். கூடவே ஒரு நூலிழைப் பருமனில் புது பணிவா, இல்லை அடிமைத்தனத்தின் வெளிப்பாடா என்னும் சந்தேகமும்...

காரைப் பார்த்துவிட்டு பின்னாலேயே மூச்சிரைக்க ஓடிவந்திருந்த கங்காணி ஏழுமலையும் பங்களாவுக்குள் பிரவேசித்திருந்தான்.

வந்த வேகத்தில் ரத்னசபாபதியைப் பார்த்து நெடுஞ் சாண்கிடையாக காலில் விழுந்தான். ரத்னசபாபதியும் அவனை எழுப்பி கட்டிக் கொண்டார்.

"என்ன ஏழுமலை, எப்படி இருக்கே?"

"நல்லா இருக்கேன்யா... என்னய்யா நீங்க மட்டும் தான் வந்திருக்கிங்களா?"

"நான் மட்டுமா... என்னய்யா கேள்வி இது. பாரு என் மகன் வந்துருக்கான், மருமகள் வந்துருக்கா..."

"ரொம்ப சந்தோஷமய்யா... அம்மா வரலீங்களா?"

"அவ இப்ப பயணம் பண்ணக் கூடாது ஏழுமலை. டாக்டர் நல்லா ரெஸ்ட்ல இருக்கணும்னு சொல்லி யிருக்கார்."

"அம்மாக்கு என்னங்க உடம்புக்கு?"

"அதையெல்லாம் உனக்கு சொன்னா புரியாது. அவ ஒரு ஹார்ட் பேஷண்ட். ஆனா எப்படியும் நம்ம குல தெய்வம் கோயில் பூஜைக்கு வந்துடுவேன்னு சொல்லி யிருக்கா."

ரத்னசபாபதி, ஏழுமலையின் தோளைக் கட்டிக் கொண்டு வாஞ்சையாகப் பேசியது கழுசாசலத் தேவ ராயருக்குப் பிடிக்கவில்லையோ என்னவோ... முகம் ஒரு மாதிரி மாறிப் போயிருந்தது.

"ஏலேய் ஏழுமலை... பேசுனது போதுண்டா... போய் சோலி மசுரைப் பாரு! மாப்ள, நீங்க வாங்க. பயணக் களைப்பு நெட்டி முறிக்குமே? முதல்ல நல்ல ரெஸ்ட் எடுங்க... கோவாலு, மாப்ளயை, சந்திராவை மாடி ரூமுக்கு கூட்டி



கிட்டு போய் ஆகவேண்டியதைப் பாரு..." தேவராயரின் குரலில் அதட்டல் தூள் பறந்தது. அவர் அப்படிப் பேசியது ஸ்ரீமதிக்குப் பிடிக்கவில்லைபோல தோன்றியது. அவளது தக்காளிச் சிவப்பு முகத்தில் ஊதிவிட்டது போல ஒரு கடுமை தெரிந்தது.

மூவரும் மாடிப்படிகளில் ஏறத் தொடங்கினார்கள். ஒவ்வொரு படியும் க்ரானைட்டில் சிலீரென்று பதியும் பாதங்களை ஜில்லிட வைத்தது.

பக்கவாட்டுச் சுவர்களில் பாடம் செய்த எருமைத் தலையும், சிங்க முகங்களும் அவைகளுக்குள் உயிர் இருப்பது போன்ற மிரட்சியைக் கொடுத்தன.

இந்த நூற்றாண்டின் கட்டட நுட்பம் எங்குமே தெரிய வில்லை. ஸ்ரீமதியும் சந்திரமோகனும் பலமுறை ரோம் நகருக்குப் போயிருக்கிறார்கள். அங்கே ஜூலியஸ் சீசர் காலத்து அரண்மனைச் சிதைவுகளையும் தென்னைமரம் போன்ற உயரமான தூண்களையும் பார்த்து பிரமித் திருக்கிறார்கள்.

அந்த வரலாற்று வாசனை ஸ்ரீமதிக்குள் இப்பொழுதும் தோன்றிச் சிலிர்ப்பையூட்டியது. கோபால் அவளது சிலிர்ப்பைப் புரிந்துகொண்டவன் போல அவளுக்கு பதில் தரத் தொடங்கினான்.

"மிஸஸ் சந்திரா... இந்த பங்களா இப்ப கட்டின பங்களா இல்லை. கிட்டதட்ட 250 வருஷங்களுக்கு முன்னால் சேதுபதி ராஜாக்கள் காலத்துல கட்டப்பட்டது. இந்த பங்களாவோட கன்ஸ்ட்ரக்டர் ஒரு வெள்ளைக்காரர்!"

அவன் பதிலைக் கேட்டு ஸ்ரீமதி ஒரு சின்னப் புன்னகையை உதிர்த்தாள்.

"என்னை ஸ்ரீமதின்னே நீங்க கூப்பிடலாம்" என்றாள். சொன்ன படியே அறைக்குள் நுழையவும் ஜில்லென்று

ஏசியின் ஆதிக்கம். அவன் குறிப்பிட்ட சரித்திர கால கட்டடத்துக்குள் நிகழ்கால விஞ்ஞானம் வந்து ஓர் ஓரமாக ஆக்ரமித்துக் கொண்டிருப்பதையும் சொல்லாமல் சொல்லிற்று.

உள்ளே ஒரு காட்டையே அழித்து மேஜையும் நாற்காலியும் செய்தது போல மரத்தாலான நாற்காலிகள், மேஜைகள், பீரோக்கள், ஷெல்புகள்! சந்திரமோகன் ஊவ்வ்... என்று கூறியபடியே சிம்மாசனம் போன்றதொரு நாற்காலியில் அமர்ந்தான். 'பியூட்டிஃபுல்' என்றான்.

ரத்னசபாபதி, கோபாலின் தோளில் கையைப் போட்டுக் கொண்டு அங்கிருந்து அவர்களை விட்டு பால்கனியை நோக்கி நகர்ந்திருந்தார்.

"என்ன மாமா... ஒரு பத்து நாளாவது இருப்பீங்க தானே?" அவன்தான் கேட்டான்.

"இருப்பேன்னுதான் நினைக்கறேன் கோபால். ஆமாம், நம்ம கோவிலை இப்ப யார் பார்த்துக்கறாங்க...?"

"என்ன மாமா கேள்வி இது...? அப்பாதான் எப்பவும் அதோட ட்ரஸ்ட்டி!"

"மெயினா கோயிலுக்குதான் கோபால் வந்துருக்கோம். ஆமா, பூஜை எல்லாம் ரெகுலரா நடக்குதா?"

"நடக்குதாவா... அப்பா சாப்பிட, தூங்க கூட மறப்பார். அதை மட்டும் மறக்கமாட்டார்."

"குட்... ரொம்ப நாளாயிடிச்சு இல்லையா... எனக்கு இப்ப கோவில் எந்தத் திசைல இருக்குன்னு கூட தெரியாது. முதல்ல போய் ஒரு கும்பிடு போட்டுட்டு வரணும்."

"வாங்களேன், இப்ப கூட போய்ட்டு வருவோம்."

"போவோம், போவோம். இதோ பார் கோபால், நான் இப்ப கோவிலுக்குப் போறது கூட முக்கியமில்ல. சந்திர



மோகனும் ஸ்ரீமதியும் அங்க போகணும். நம்பிக்கையோட போகணும். அப்படியே அவன் நம்ம குடும்ப வழக்கப்படி மொட்டையும் அடிச்சிக்கணும். அது மட்டும் நல்லபடியா நடந்துட்டா போதும் எனக்கு..."

"நீங்க பேசறத பார்த்தா சந்திரவுக்கு இதுல எல்லாம் நம்பிக்கை இல்லாத மாதிரி தெரியுதே?"

"ஆமாம் கோபால். வசதியான இடத்துல பொறந்து வளர்ந்துட்ட பிள்ளை. கஷ்டம்னா என்னன்னே தெரியாத நிலை. அதான் கடவுளைப் பத்தி நினைக்க வேண்டிய அவசியமே அவனுக்கு இல்லாமப் போயிடிச்சு."

ரத்னசபாபதி பெருமூச்சுடன் சொன்னதில் ஏராள மான ஆதங்கம். காற்று ஏதோ பூவை நீவுகிற தினுசுக்கு மிக நிதானமான வேகத்தில் அவரது நரைத்த தலையில் வகிடெடுத்தபடி வீசிக் கொண்டிருந்தது.

பால்கனியில் இருந்து பார்க்க முடிந்த வயல்வெளியில் நண்டைத் தேடி அலையும் கொக்குக்கூட்டம் ஒன்று, பறக்கிறதா இல்லை அந்தரத்தில் நீந்துகிறதா என்பது தெரியாதபடி திரிந்துகொண்டிருந்தது.

கோபால் அதை எல்லாம் ரசிக்காமல் ரத்னசபாதி சொன்னதில் தூண்டில் போட ஆரம்பித்திருந்தான்.

"இத்தனை வருஷம் இல்லாம இப்ப என்ன மாமா திடீர்னு குல்தெய்வம் கோயில் பூசை?"

"காரணமிருக்கு கோபால். உங்கப்பாகிட்டையும் விவ ரமா பேசணும். எனக்கு நீதான் ஒரு உதவி செய்யணும்."

"சொல்லுங்க."

"சந்திரமோகனை எப்படியாவது மொட்டை போட சம்மதிக்க வைக்கணும்."

"அது அவ்வளவு கஷ்டமா மாமா?"

"கஷ்டம்தான் கோபால். படிப்பு, வளர்ப்பு, வேலை, வாழ்க்கை எல்லாமே அவன் வரைல, மேல்நாடுன்னே ஆயிடுச்சு.

நம்ம குடும்ப பழக்கவழக்கம், நம்ம நம்பிக்கைங்க, வழிபாடுங்க எதுவுமே தெரியல அவனுக்கு. நம்ம நம்பிக்கை களைச் சொன்னாலே கசந்து வழியறான். ஆனா எதுக்குமே கைகூப்பியிராத அவனை இப்ப காலம் ஒரு விஷயத்துக் காக கைகூப்ப வெச்சிருக்கு. அவனோ முடியாதுங்கறான்!"

"என்ன மாமா, என்னென்னவோ சொல்றீங்க?"

"உள்ளதைத்தான் சொல்றேன்." மீண்டும் பெருமூச் சுடன் புதிர் போட்ட அந்த மனிதர், பால்கனிக்கு வெளியே எதிரில் ஒருபுறம் தென்னையும் ஒருபுறம் வயலுமாய் தெரியும் ஆயிரம் வேலிக்காட்டை ஒருவித தேடலுடன் பார்த்தார்.

"யாரைப் பார்க்கறீங்க மாமா...?

"சொல்றேன்... சொல்றேன்..."

ரத்னசபாபதி தொடர்ந்து பார்வையைத் துழாவ விட்டார்.

வயல் வரப்பில் தொலைவில் ஒருவன் கட்டைக் காலுடன் கெந்திக் கெந்தி வந்து கொண்டிருந்தான்.

அவனைப் பார்க்கவும் அவர் முகத்தில் ஒருவித பரவசம். காதுக்குள்ளே குடும்ப ஜோதிடர் கிருஷ்ணன் பணிக்கர் சொன்னது ஒரு ஓட்டம் ஓட ஆரம்பித்தது.

"நீங்க உங்க குல தெய்வம் கோவிலுக்கு சாமி கும்பிடப் போங்க. போன இடத்துல போய்ச் சேர்ந்த பதினைந்தாவது நிமிஷத்துல ஒரு கால் இல்லாத முடவன் உங்க கண்ணுல பட்டா குலதெய்வத்தோட கருணை உங்களுக்கு கட்டாயமாக உண்டு... இல்லேன்னா...!"



# 2

ரத்னசபாபதி முகத்தில் தெரிந்த பரவசமும் அவர் கண்ணில் மளுக்கென்று தொற்றிக்கொண்ட ஒருவித வெளிச்சமும் கோபாலுக்கு ஆச்சரியத்தைத் தந்தது.

"மாமா... என்ன மாமா எதுக்காக அந்த காலில்லாத வனைப் பார்த்து இவ்வளவு சந்தோஷப்பட்டீங்க. என்ன விஷயம் மாமா?" பால்கனி கைப்பிடிச் சுவரின் மேல் ஏறி அமர்ந்தபடி கேட்டான்.

"பணிக்கர் சொன்னபடியே எல்லாம் நடக்குது. பணிக்கர் பணிக்கர்தான்!"

-அவர் பதில் அவனைக் கொஞ்சம் குழப்பியது.

"யார் அது பணிக்கர்?"

"குடும்ப ஜோசியர் கோபால்... சும்மா சொல்லக் கூடாது, பணிக்கர் நல்ல தெய்வாம்சமுள்ள சோதிடர் தான்."

"அவருக்கும் நீங்க காலில்லாத வைத்தியலிங்கத்தைப் பார்த்ததுக்கும் என்ன சம்பந்தம்?"

"நிறைய இருக்கு கோபால். அதான் சொன்னேனே உங்ககிட்ட நிறைய்ய பேசணும்."

"உங்க பேச்சு, கவலை, அப்புறமா உங்க பரவசம்... எனக்கு எல்லாம் ஒரே புதிரா இருக்கு. என்ன விஷயம் மாமா...?"

கோபாலை, ரத்னசபாபதி கொஞ்சம் பெருமூச்சோடு பார்த்தார். அவர் சொல்ல நினைத்த விஷயங்கள் அவருக்குள் ஓட ஆரம்பித்தன!

சந்திரமோகன் நல்ல அழகு! மணிரத்னம் கூட அவனை தன் படத்தில் நடிக்கக் கூப்பிட்டதாக கேள்வி. ஆனால் அவனோ நடிப்பை மறுத்துவிட்டு படிப்பு பெரிது என்று அமெரிக்கா போய் படித்து முடித்ததில் இன்று அவன் ஒரு நம்பர் ஒன் சாஃப்ட்வேர் எஞ்ஜினீயர்.

போன இடத்தில் சேலம் உமாகாந்த் என்பவரின் இருபத்தி இரண்டு வயசுப் பெண்ணான ஸ்ரீமதி மேல் காதல் கொண்டு, அமெரிக்காவிலேயே லிவர்மோர் எனும் ஊரில் உள்ள இந்து கோவில் ஒன்றில் வைத்து அவளைத் திருமணமும் செய்து கொண்டான். அப்புறமாய்த்தான் அப்பா ரத்னசபாபதிக்கே தெரியும். அதன்பின் என்ன நடந்திருக்கும் என்று சொல்லத் தேவையில்லை.

ரத்னசபாபதிக்கு முதலில் கோபம் எகிறியது. பிறகு B.P. எகிறியது. அதன்பின் எல்லாமே ஒரு பத்து பதினைந்து நாளில் சரியாகி அரை மனசாக அவன் கல்யாணத்துக்கு ஒப்புதல் கொடுத்தார். அவர் கொடுத்தார் என்பதை விட கொடுக்க வைக்கப்பட்டார் என்றால் சரியாக இருக்கும்.

கிரீன் சிக்னல் கிடைக்கவும் சந்திரமோகனும் ஸ்ரீமதியோடு சென்னைக்குத் திரும்பி வந்து அவர் காலில் விழுந்து எழுந்தான். அப்படியே சேலம் வரை போய் ஸ்ரீமதியின் அப்பா உமாகாந்த் காலிலும் விழுந்து எழுந்தனர்.

காதல் திருமணங்கள் அங்கீகாரத்திற்குத் தவிப்பது பெரும்பாலும் மிடில் கிளாஸில்தான். மேல் மட்டம் அதிக பட்சம் பதினைந்து நாளில் சமாதானமாகி சரியாகி விடுகிறது.

அப்புறமென்ன...? திரும்பவும் அமெரிக்கா. ஃபோர்ட் காரில் பயணம், சொகுசான வாழ்க்கை என்று நாளும் ஓட ஆரம்பித்தது. ஆனால் ஒரே ஒரு விஷயம் மட்டும் தள்ளிக் கொண்டே போனது. (போய்க் கொண்டும் இருக்கிறது!)



ஸ்ரீமதியால் ஒரு தாயாக முடியவில்லை! இப்படி ஒரு சிக்கலின்போது டாக்டர்களிடம் போகாமல் இருப்பார்களா என்ன?

அதிலும் சந்திரமோகன் மாசம் ஐந்து லட்ச ரூபாய்க்குக் குறையாமல் சம்பாதிக்கும் ஒரு சூப்பர் குபேர வருமானப் பேர்வழி. ஸ்ரீமதியும் இந்திய ரூபாய் மதிப்புக்கு இரண்டு மூன்று லட்சம் சம்பாதிக்கிறாள். எனவே அமெரிக்காவிலேயே நம்பர் ஒன் எனும் டாக்டரிமே அப்பாய்ன்ட்மென்ட் வாங்கி இருவரும் போய் அவரைச் சந்தித்தார்கள்.

அவரும் செமன் டெஸ்ட்டிலிருந்து ஒரு டெஸ்ட் பாக்கி இன்றி செய்து பார்த்துவிட்டு, “ஒரு கோளாறும் இல்லை சந்திரா. அற்புதமா இருக்கு, இரண்டு பேரோட உயிர்த் துளிகளும். அப்படி இருக்க ஏன் குழந்தை பிறக்கலேங்கறதுதான் ஆச்சரியமா இருக்கு. இந்த மாதிரி இடங்கள்ள கடவுள்தான் இரண்டு கண்ணையும் போட்டுகிட்டு நல்லா எட்டிப்பார்க்கறாரு. ஸோ நீ போய் அவர்கிட்ட முறையிடு. இனிமே அவர் மனசு வெச்சாதான்...” என்று கூறிவிட்டார்.

அந்த டாக்டரிடம் போனதில் இரண்டு விஷயங்கள் சந்திரமோகனுக்குத் தெரிந்து போயிற்று. ஒன்று தங்களிடம் எந்தக் குறையும் இல்லை. அடுத்தது கடவுளை நம்பச் சொல்லும் டாக்டர்கள் அமெரிக்காவிலும் இருக்கிறார்கள். இப்படியாக கல்யாணம் ஆகி மூணு வருஷம் ஓடிவிட்டகையோடும் புதிதாகத் தெரிந்த அந்த இரண்டு விஷயங்களோடும் இந்தியா திரும்ப நேரிட்டது.

அப்போது ஸ்ரீமதியைப் பார்ப்பவர்கள் முதலில் கேட்ட கேள்வியே ‘நீ எப்படி இருக்கே?’ எனும் நலன் விசாரிப்பு இல்லை. ‘இன்னுமா உன் வயத்துல ஒரு புழு பூச்சி வரலை?’ என்பதுதான்.

அப்போதெல்லாம் சந்திரமோகனுக்கு பெட்ரோல் ஊற்றிக் கொளுத்தியது போல கோபம் வரும்.

"எங்களுக்குக் குழந்தை வேண்டாம்னு முடிவு செய்திருக்கோம் அதான் பெத்துக்கலை..." என்று அப்படிக் கேட்டவர்கள் வாயை அடைக்கப் பார்த்தான். அவர்களோ ஒரு அவுட்டுச் சிரிப்பு சிரித்தார்கள். பின் பக்கமாய்ப் போய் 'என்ன கோளாறோ என்ன குந்தகமோ?' என்று வாயை மெல்லவும் ஸ்ரீமதியால் தாள முடியவில்லை. ஒருநாள் 'ஓ' என்று வாய்விட்டு அழுது விட்டாள். அது ரத்னசபாபதியை ரொம்பவே பாதித்து விட்டது. இந்த மாதிரி தருணங்களில் தானே பலரும் ஜாதகத்தைக் கையில் எடுப்பார்கள்?

ரத்னசபாபதியும் இருவர் ஜாதகத்தையும் கையில் எடுத்தார். கிருஷ்ணன் பணிக்கர் என்று ஒரு தேர்ந்த ஜோதிடர். பாலக்காட்டுக்காரர். காரை அனுப்பி அவரை அள்ளிப் போட்டுக்கொண்டு வரச் சொன்னார். பணிக்கரும் வந்து சேர்ந்தார்.

பணிக்கர் கிட்டத்தட்ட அந்த பாரதத்து சகாதேவனைப் போன்றவர். ஆளுக்கும் காசுக்கும் ஜோதிடம் சொல்லும் ரகமில்லை. அவர் வரையில் விஷயத்துக்குத்தான் ஜோதிடம். அன்று அவர் சந்திரமோகனின் துக்கத்திற்கான காரணத்தைக் கட்டங்களில் தேடியபோது பளிச்சென்று அது கண்ணில் பட்டது. பிரஷ்ணமும் போட்டுப் பார்த்தார்.

"ஆமாம், உங்களுக்குக் குலதெய்வம்னு ஒண்ணு உண்டுதானே?" -கேட்டார். ரத்னசபாபதியும் கையைக் கட்டிக் கொண்டு பதில் சொன்னார்.

"இல்லாமல்... ஆயிரம் வேலிக்காடு குட்டி நந்த ஸ்வாமி தான் எங்க குலதெய்வம்..."

"ஓ... வேலிக்காட்டு ஸ்வாமியோ?"

"உங்களுக்குத் தெரியுமோ?"



"கேள்விப்பட்டிருக்கேன், கேள்விப்பட்டிருக்கேன்."

"அந்த ஸ்வாமிக்கு நாங்க எதான பண்ணணுமா?"

"எதனா பண்ணணுமாவா... நன்னாருக்குப் போங்கோ, குலதெய்வத்தைக் கொண்டாடணும்கறதையே மறந்துட்டேள் போல இருக்கே?"

"நீங்க என்ன சொல்றீங்க பணிக்கரே...?"

"நீங்க உங்க குலதெய்வத்தையே மறந்துட்டீங்கன்னு தெரியுது. ஆமா, கடேசியா எப்ப அந்த கோவிலுக்குப் போனீங்க...?"

"கடைசியா... கடைசியா... அது... அது... ஆங் சந்திர மோகனுக்கு மூணு வயசுல இருக்கும்போது மொட்டை போடப் போனோம்."

"இப்ப அவனுக்கு என்ன வயசு?"

"இப்போ... இப்போ... என்னடா சந்திரா, வாட்ஸ் யுவர் ஏஜ்? 1970ல பொறந்தேன்னு நினைக்கறேன்."

"தென் இப்ப முப்பதா...?"

"யெஸ் டாடி..."

"அப்ப இருபத்தி ஏழு வருஷமாச்சு அந்தப் பக்கமா போய்..."

"அதான் அந்த ஸ்வாமி வந்து உங்க குடும்பத்தை வழிமறிக்கறது..."

"அப்படி எல்லாம் கூட பண்ணுமா என்ன?"

"பண்றதே... பிரஷ்ணம் போட்டா அதானே கண்ணுக்குத் தெரியறது. ஜாதகக் கட்டத்துலையும் புத்ர பாக்கியத்துக்குக் காரணமான கிரகங்கள் பலவீனமா இருக்கு."

"ஐ சீ... இப்ப என்ன பண்ணலாம்?"

"என்ன பண்ணலாமா... போய் அந்தத் தெய்வத்தோட கால்ல விழுங்கோ ஸ்வாமி. அதான் ஒரே வழி."

"ஒரு சந்தேகம்...?" -சந்திரமோகன் பணிக்கரைத் தன் பக்கம் திருப்பினான்.

"என்ன... குழந்தைப் பொறப்புக்கும் குல தெய்வத்துக்கும் என்ன சம்பந்தம்னு கேக்கப்போறியா?" -பணிக்கர் பொட்டிலடித்தார்.

"ஆமாம்... அது முழுக்க முழுக்க புருஷன் பொண் டாட்டியோட உடம்பும் மனசும் சம்பந்தப்பட்ட விஷயம். இதுல குலதெய்வம் எங்க இருந்து வந்தது...?"

-பணிக்கர் தன் சின்னக் கண்களால் இப்படிக் கேட்ட சந்திரமோகனைப் பதிலுக்குப் பார்த்த விதம் இருக்கிறதே... அடேயப்பா!

"பதில் சொல்லுங்கோ ஜோசியரே..."

"சொன்னா உனக்குப் புரியாதுப்பா..."

"நான் ஒரு சாஃப்ட்வேர் எஞ்ஜினியர். கஷ்டமான கம்ப்யூட்டர் லாங்வேஜ்லயே டிஸ்டிங்ஷன் வாங்கினவன்..."

"அதனால?"

"எப்படின்னு சொல்லுங்கோ. என்னால புரிஞ்சுக்க முடியும்."

"அப்ப என் பிரஷ்ண பலனை நீ நம்ப மாட்டேங்கறே... அப்படித் தானே?"

"எப்படி நம்ப முடியும்? கடவுள் வழிபாட்டுக்கும் கருத்தரிக்கறதுக்கும் என்ன சம்பந்தம். அது நம்பிக்கை சார்ந்த விஷயம். இது உடம்பு சார்ந்த விஷயம்னா?"

"அந்த நம்பிக்கை உன் உடம்பு சார்ந்த மனசுல தானே இருக்கு...?"



"மனசுக்கும் கருத்தரிக்கறதுக்கும் என்ன ஜோசியரே சம்பந்தம்?"

"நிறைய்ய இருக்கு... மனம் போல மாங்கல்யம்னு தாலிக்காக மட்டும் சொல்றது கிடையாது. பல விஷயங்களுக்குப் பொதுவா அதைச் சொல்வா."

"இதோ பாருங்க... இண்டியன் கல்ச்சர்ல மொட்டைத் தலைக்கும் முழங்கால்களுக்கும் முடிச்சு போட்ற விஷயங்கள் நிறைய உண்டுங்கறது தான் என் அபிப்ராயம். இப்ப நீங்க சொல்றதும் அப்படித்தான் இருக்கு." சந்திர மோகன் அமெரிக்கவாசியாயிற்றே? எனவே விஞ்ஞானப் பாதிப்போடு பேசினான். பணிக்கர் சிரித்தார். பார்த்துக் கொண்டே இருந்த ஸ்ரீமதி என்ன நினைத்தாளோ...?

"பணிக்கரே, நாங்க எங்க குலதெய்வத்தைப் போய் கும்புட்டுட்டு வந்துட்டா குழந்தை பொறந்துடுமா?" என்று பாய்ன்ட்டாக கேட்டாள்.

"நிச்சயமா...!"

"அப்ப குலதெய்வத்தைக் கும்பிடலைங்கற குறைதான் இதுக்கு காரணமா?"

"ஆமா..."

"சரி... நாங்க அதை தேடிப் போய் கும்பிட்றதால அந்தக் கடவுளுக்கு அப்படி என்ன கிடைச்சுடப் போவுது?"

அவள் புரிந்துகொள்ளக் கேட்கிறாளா இல்லை பணிக்கரை மடக்குவதற்காகக் கேட்கிறாளா என்பது தெரியாத மாதிரி இருந்தது, அவளது தொனி.

"என்னம்மா, உன் புருஷன் ஒரு தினுசா கேட்டான். நீ அதை வேற தினுசுல கேக்கறியா?"

"இல்லை... இது எனக்குள்ள ஏற்பட்டிருக்கிற ஞாயமான சந்தேகம். அதான் கேட்டேன். பொதுவா ராஜாக்கள் தான்

தன்னை பணிஞ்சு நடக்காதவனையும், தன்னை மதிக்காத வனையும் வழிக்கு வர வைப்பதற்காக மிரட்டுவாங்க. இங்க நீங்க சொல்றபடி பார்த்தா கடவுளும் அந்த லிஸ்ட்டைச் சேர்ந்தவர் போலில்ல இருக்கு...?"

-ஸ்ரீமதியின் கேள்விக்கு சந்திரமோகனும் சபாஷ் சொல்லி சுருதி கூட்டினான். அவர்கள் இப்படி மடக்கி மடக்கி கேள்வி கேட்பது ரத்னசபாபதிக்கு உதறலைத் தந்து விட்டது. ஆனால் பணிக்கரோ மர்மச் சிரிப்பு சிரித்தார். பனங்குடலைக்குள் கிடந்த சோழிகளை எடுத்து அந்த சிரிப்புக் கலையாதபடி தரையில் போட்டார். கவிழ்ந்ததை யும், கவிழாததையும் தனித்தனியே ஒதுக்கி எண்ணிப் பார்த்துவிட்டு சந்திரமோகனை நிமிர்ந்து பார்த்தார்.

அந்த நொடியில் அவன், 'பணிக்கரே, இந்த டுபாக்கூர் வேலையை எல்லாம் எங்ககிட்ட காட்ட வேண்டாம்' என்று மனதில் எண்ணி முடித்திருந்தான்.

"என்ன சந்திரமோகன், ஞான் டுபாக்கூர் வேலை காட்றதா நினைக்கிறியோ?"

-ஆடிப்போய் விட்டான் சந்திரமோகன். ரத்னசபா பதியோ பதறத் தொடங்கினார்.

## 3

சந்திரமோகன், பணிக்கரிடம் வார்த்தைக்கு வார்த்தை என்று முட்டிக் கொண்டே போனது ரத்னசபாபதிக்கு பயத்தையும், படபடப்பையும் தான் அதிகமாகத் தந்தது.

"டேய் சந்திரா, சும்மா இருடா... அம்மாடி உன்னையும் தான். சும்மா இருங்க. பணிக்கர் சாதாரண ஜோசியர் இல்ல. அவர் சொன்னா அர்த்தம் இருக்கும்.



பணிக்கரே, நாங்க நாளைக்கே ஆயிரம் வேலிக்காட்டுல உள்ள எங்க குல தெய்வம் கோவிலுக்குப் போறோம். போய் பூஜையும் செய்துட்டு வரோம். அதனால தெய்வக் குற்றம் நீங்கி எனக்கு ஒரு பேரன் பிறந்தா அது போதும்." என்று சொல்லிவிட்டு கன்னத்திலும் போட்டுக் கொண்டார்.

பணிக்கர் திரும்பவும் சிரித்தார். சிரித்துவிட்டு, "இவங்க கேள்வியில் ஒரு தப்பும் இல்ல ரத்னசபாபதி. இவங்களுக்கு பதில் சொல்லாம நான் போனா என்னைப் பத்தி என்ன நினைப்பாங்க? ஒரு முட்டாள் ஜோசியன்னுதானே?"

"அப்ப, பதில் இருந்தா பளிச்சின்னு சொல்லுங்க. கும்பிட்டுக்கிட்டே இருந்தா தான் குழந்தை பொறக்கும்னா அந்தக் கடவுள் ஒரு சர்வாதிகாரி மாதிரி தானே ஆயிட்றார்?"

"இதுல அவர் குற்றம் எதுவும் இல்லைப்பா..."

"எப்படி...?"

"தாகத்துல தவிக்கிறவன்தான் தண்ணீர் தொட்டியைத் தேடிப் போகணும். அதேபோல புத்ரபாக்யம் இல்லாத உனக்கு அதைக் கொடுக்க அந்த தெய்வத்தாலதான் முடியும். அதனாலதான் அங்க போகச் சொன்னேன்."

"அப்ப, குலதெய்வம் நாங்க கும்பிடாததால கோபத்துல இருக்குன்னு சொன்னீங்களே...?"

"உண்மைதான். அந்த கோபம், உன் கோபம், என் கோபம் மாதிரியான மலிவான கோபமில்ல. ஆட்டைத் தோள்ல தூக்கிப் போட்டுகிட்டு அந்த ஆட்டை வெளிய தேடற ஒருத்தனைப் பார்த்தா நமக்கு எப்படி கோபம் வரும். அப்படிப்பட்ட ஒரு கோபம் அது.

குலதெய்வம் நம்மை காப்பாற்றி ரட்சிக்க காத்திருக்கிற ஒரு சக்தி. அந்த சக்தியை வேண்டாம்னு சொல்ற மாதிரி

நடந்துக்கும் போது அதுக்கு கோபம் வரத்தானே செய்யும்?"

"அப்படியானா நாம தேடிப் போனாதான் அது உதவி செய்யுமா? தானா வந்து செய்தா அது குறைஞ்சு போயிடுமா?"

-சந்திரமோகன் கேட்ட தொனியில் ஏளனமும், ஒருவித ஆங்காரமும் ஒளிந்திருந்தது. குறிப்பாக நீ சொல்லும் எதையும் நான் ஒரு சதவிகிதம் கூட நம்பத் தயாராக இல்லை என்பது பளிச்சென்று மின்னியது.

பணிக்கர் தன் சந்தனப் பொட்டு நெற்றியில் வரிகள் பலவாக விழ ஒரு கூர்மைப் பார்வை பார்த்தார்.

"மன்னிக்கணும் பணிக்கரே... பதில் சொல்ல முடிஞ்சா சொல்லுங்க. நான் விஞ்ஞானப் பார்வை உள்ளவன். இப்படித்தான் கேட்பேன். உங்க தரப்புல உண்மை இருந்தா அதை நீங்க போட்டு உடைக்கலாம்.

மூலிகைப் பெட்ரோல் ராமர் கதை தெரியும்தானே? அவர் பெட்ரோல் தயாரிச்சு கண் எதிர்க்க எரிச்சுக் காட்டியும் விஞ்ஞானிகள் நம்பலை. அதுல மாறாத தன்மை இருக்கான்னு பார்த்தாங்க. பார்த்துகிட்டும் இருக்காங்க. நானும் அந்த விஞ்ஞானி மாதிரிதான்னு வெச்சுக்குங்களேன்..."

"நீ விஞ்ஞானியோ இல்லை அரைகுறை ஞானியோ அது அப்புறம். குலதெய்வத்தை நீ யாருன்னு நினைச்சே?" பணிக்கர் மிக அழுத்தமாகப் பதிலுக்குக் கேட்டார்.

"நான் இல்லாத ஒண்ணைப் பத்தி நினைக்கறதே இல்லை பணிக்கரே..." -பட்டென்ற பதில் சந்திர மோகனிடம்.

"அப்ப கடவுளே இல்லைங்கறது உன் கருத்தா?"



"ஆமாம்!"

"சரிப்பா... இனி உன்கிட்ட பேசறதுல அர்த்தமில்லை. உனக்கு ஏற்படப் போற அனுபவங்கள்தான் உனக்கு உண்மைகளைப் புரிய வைக்கும். ஒண்ணு மட்டும் உறுதி. உன் குலதெய்வம் கோவிலுக்குப் போகாம, அதை மனதார வணங்காம, உன் மனசும் உடம்பும் அந்த சன்னிதானத்துல நெகிழாத நிலைல உன் சுரோணிதத்துல ஒரு மனுஷ உயிர் துளிர்க்கவே துளிர்க்காது. இது மட்டும் நிச்சயம்."

பணிக்கர் சொன்ன சூட்டோடு பிரஷ்ணம் போட்டுப் பார்த்த சோழிகளை அள்ளி எடுத்துக் கொண்டார். ஒரு அர்த்த புஷ்டியோடு கூடிய சிரிப்போடு புறப்படவும் தயாராகிவிட்டார்.

ஆனால் ரத்னசபாபதியால் அதை வேடிக்கை பார்த்துக் கொண்டு எனக்கென்ன என்று இருக்க முடியவில்லை. பணிக்கரை சமாதானப்படுத்தினார். நீங்கள் என்னவோ செய்து கொள்ளுங்கள் என்று சந்திரமோகனும், ஸ்ரீமதியும் அங்கிருந்தும் போய்விட...

"பணிக்கரே... அவன் வயசு அவனை அப்படிப் பேச வைக்குது. அதோட அவன் இருக்கற அமெரிக்க மண் அப்படிப்பட்டது. அங்க விஞ்ஞானம் வானத்தைத் தொடற அளவு வளர்ந்துருக்கறதால அந்த பாதிப்போட சந்திரா அப்படி எல்லாம் பேசறான். ஆனா நான் நீங்க சொல்ற தைக் கேட்க விரும்பறேன்.

என் மகனுக்கு ஒரு மகன் வேணுமோ வேண்டாமோ எனக்கு ஒரு பேரப் பிள்ளை கட்டாயம் வேணும். அதுக்கு நீங்க ஒரு நல்ல வழியைக் காட்டித்தான் தீரணும்," என்று புறப்பட்டு விட்ட பணிக்கரின் கைகளைப் பிடித்துக் கொண்டார் ரத்னசபாபதி.

பணிக்கர் முகத்தில் தர்மசங்கடத்தின் வியாபிப்பு நன்றாகத் தெரிந்தது.

"ரத்னசபாபதி... நான் என்ன செய்யட்டும். உங்க மகனோட விதி அவனை அப்படி எல்லாம் பேசவைக்குது. நான்தான் சொல்லிட்டேனே... நந்தன் குட்டி ஸ்வாமி கோவிலுக்குப் போகாம இதுக்கு ஒரு நல்ல வழி பிறக்கப் போவதில்லை."

"எப்படியாவது அவனை சமாதானப்படுத்தி நான் சந்திராவை அங்க கூட்டிக்கிட்டு போறேன். போனா குழந்தை ஜனிச்சுடும் தானே?"

"போங்க... அங்க அவனுக்கு பலவிதமான அனுபவங்கள் ஏற்படப் போகுது. அதான் அவனை மாற்றும்."

"பலவிதமான அனுபவங்கள்னா...?"

"போங்க... போய்ப்பாருங்க. தன்னால புரியும். ஒவ்வொண்ணும் உயிர்ப் பந்தை உருட்டிப் பிசையற அனுபவம் ரத்னசபாபதி."

"நல்ல அனுபவமா இருந்தா போதும் பணிக்கரே. முடிவு எனக்கு ஜெயமா இருக்கும் தானே?"

ரத்னசபாபதி கெஞ்சினார். பணிக்கர் ஒரு வினாடி கண்களை மூடிக் கொண்டு தியானித்தார். பிறகு கண் களைத் திறந்தவர், "அங்கேபோய் தங்க் ஆரம்பிச்சு பத்து பதினைஞ்சு நிமிஷத்துல அங்க ஹீனமுள்ள ஒருவனைப் பார்ப்பீங்க. அப்படிப் பார்த்தா நீங்க நினைச்சது போலவே எல்லாம் நல்லபடியா முடியும். பார்க்க முடியாம போனா உடனே திரும்பிடுங்க. திரும்பலைன்னா உங்க சந்ததியே ஒரு முடிவுக்கு வந்துடும்."

-பணிக்கர் பயங்கரமாக ஒரு எச்சரிக்கையைச் செய்துவிட்டுப் போய்விட்டார். ரத்னசபாபதியும் அதைக் கேட்டு கர்ம சிரத்தையாக காரியத்தில் இறங்கினார். இதோ இப்பொழுது கோபாலிடம் அவ்வளவையும் சொல்லி முடித்தவர் ஆக பெருமூச்சு விடுகிறார் ரத்னசபாபதி.



கோபால் தளர்ந்து தொங்கிய முழுக்கை சட்டையை சற்று மேலே இழுத்து விட்டுக்கொண்டவனாக, "ரொம்ப இன்ட்ரஸ்ட்டா இருக்கு மாமா..." என்றான்.

"உனக்கு இன்ட்ரஸ்ட்டா இருக்கற விஷயம் என் வரைல ரொம்ப த்ரில்லா இருக்கு கோபால். எப்படியோ சந்திரமோகனையும் அவன் பொண்டாட்டியான என் மருமகளையும் இங்க கூட்டிகிட்டு வந்துட்டேன். நீதான் சந்திரா நம்ப குலதெய்வத்தை மனசார கும்பிட ஏதாவது பண்ணனும்."

-ரத்னசபாபதி கோபாலை கொஞ்சம் திகைக்க விட்டார்.

"மாமா... என்ன நீங்க? பக்திங்கறது ஒருத்தரோட பர்சனலான விஷயம். அதுலையும் சந்திரா அமெரிக்கா வுல படிச்சு அங்கேயே இருக்கறான். பணிக்கராலையே அவன் கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாதப்ப நான்லாம் எந்த மூலைக்கு...?" என்று திருப்பி கேட்டான்.

"எனக்கு அதெல்லாம் தெரியாது. சந்திரா நம்ம குல தெய்வத்தை நம்பி மனசார வழிபடணும். அதுக்கு ஒரு வழி சொல்."

-ரத்னசபாபதி திரும்பவும் பாடிய பாட்டையே பாடினார். கோபாலும் தாடையைத் தடவத் தொடங் கினான்.

"என்ன யோசிக்கிறே கோபால்...?"

"ஒண்ணுமில்ல மாமா... நம்ம கோவிலைப்பத்தி உங்களுக் குத் தெரியும். எல்லா கோவில்லையும் கர்பகிரகத்துல இருக்கற சாமியைத்தான். கும்பிடுவாங்க. ஆனா இங்க மட்டும் கர்பகிரகத்தை மூடி, மூடியிருக்கிற கதவை மட்டும்தான் சாமியா கும்புடணும்னு ஐதீகம்.

வருஷத்துக்கு ஒரு தடவை கண்ணை கட்டிகிட்டு கதவைத் திறந்துகிட்டு உள்ள போய், உள்ள இருக்கற சாமிக்கு அலங்காரம் பண்ணி பூஜை செய்துட்டு, திரும்ப கதவை மூடிடணும்கறது இங்க நிலவர வழக்கம். இதுக்கு மாறுபட்டு யாராவது உள்ள இருக்கற சாமியைப் பார்க்க முயற்சி செய்தா அவங்க கண் போயிடும்கற பயம் இருக்கு. அவ்வளவு ஏன், இந்த ஆயிரம் வேலிக்காட்டுல அந்த மாதிரி பார்த்த இரண்டுபேருக்கு கண்ணும் போயிடிச்சு. அவங்கள நான் சந்திரமோகனுக்கு காட்றேன் அவங்களப் பார்த்தா சந்திரா வழிக்கு வந்தாலும் வருவான். என்ன சொல்றீங்க?"

-கோபாலின் கேள்வி ரத்னசபாபதியைக் கொஞ்சம் போல மிரட்டியது. அது முகத்தில் தெரிந்தது.

"என்ன மாமா... அதுக்கெல்லாம் சந்திரா மசிய மாட்டான்னு சொல்றீங்களா?"

"ஆமாம்ப்பா... எங்க நான் பாக்கறேன். எனக்கு எப்படிக் கண்ணு போகுதுன்னு பாக்கறேன்னு அவன் திரும்பிட்டா ஆபத்துப்பா..." என்றபடி கையைப் பிசைந்தார்.

"என்ன மாப்ள? மருமகனும் மாப்பிளையும் என்ன அப்படிப் பேசிகிட்டிருக்கீங்கன்னு தெரிஞ்சுக்கலாமா?" என்றபடியே கழுகாசல தேவராயர் வேறு கச்சிதமாக சமயம் பார்த்து அங்கு வர, கோபால் சற்று பரபரப்பானான்.

மிக மரியாதைக்குரிய ஒருவர் சமீபத்துவிட்டது போல பதட்டத்தைக் காட்டியவன் சற்று ஒதுங்கி ஓரமாகப் போய் நின்றான்.

அது பணிவா இல்லை பயமா என்பதைப் பிரித்துப் பார்க்க முடியாதபடி இருந்தது அவன் செயல். ரத்ன சபாபதி அதை ரசித்தப்டியே, "ஒண்ணுமில்ல கழுகாசலம், எல்லாம் சந்திரமோகனைப்பத்தின கவலைதான்..."



என்றவர், கோபாலிடம் சொல்லி முடித்திருந்த அவ்வளவையும் கழுகாசலத்திடமும் சொல்லி முடிக்கவும் கழுகாசலம் முகம் பேயறைந்தார் போல் மாறி விட்டிருந்தது.

"என்ன கழுகாசலம்... ஏன் ஒரு மாதிரி ஆயிட்டே?"

"ஒண்ணுமில்ல மாப்ள... நம்ப வம்சத்துலையே நம்ப சாமியை நம்பாத ஒரு பிள்ளையான்னு நினைச்சுப் பார்த்தேன். கொஞ்சம் போல கலக்க மாயிடிச்சு..."

"என்ன பண்ணச் சொல்றீங்க... அதிகம் படிச்சாலே இப்படித்தான் ஏதாவது கோளாறு வந்து சேர்ந்துடுது."

"இது கோளாறு இல்ல மாப்ள. சந்திரமோகன் உசுரையே பலிவாங்கற சமாசாரம்."

"என்ன கழுகாசலம் சொல்றீங்க... ரொம்ப பயமுறுத்துதே உங்க பேச்சு."

"என்ன மாப்ளே... நம்ம சாமிபத்தி அதோட சக்தி பக்தி உங்களுக்கு ஒண்ணும் தெரியாதா... ஏண்டா கோபாலு, நீ கூடவா சொல்லல..."

"அது... அதைப்பத்தித்தான்பா சொல்லிகிட்டிருந்தேன். அதுக்குள்ள நீங்க வந்துட்டீங்க..."

"மாப்ளே... சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க. யார்கிட்ட வேணும்னாலும் விளையாடலாம். ஆனா நம்ம சாமிகிட்ட விளையாடுனா அது முதலுக்கே மோசமா யிடும். நம்ம குட்டி நந்தஸ்வாமி ஒண்ணும் லேசுப்பட்ட சாமி இல்ல. கம்சனை வதம் பண்ணி, காளிங்கன்கற பாம்போட கொட்டத்தை அடக்குன ஆக்ரோஷ சொரூபம் நம்ம சாமி. அந்த சாமியை நம்பிக்கையா பக்தியோட கும்பிட வந்துருக்கறாதான் நான் நினைச்சுக்கிட்டிருக்கேன். நீங்க என்னடான்னா இப்படி ஒரு குண்டைத் தூக்கி போட்றீங்களே...

சொல்றேன்னு தப்பா நினைச்சுக்காதீங்க.

இன்னிக்கே நீங்க சந்திரமோகனோட புறப்படுங்க. அதுதான் உங்களுக்கு, அவனுக்கு எல்லாத்துக்கும் நல்லது.

அந்த சாமி பத்தின அலட்சியமான நினைப்போட இங்க ஒருநாள் இருந்தாலும் அது உங்க மகனுக்கு தான் ஆபத்தா முடியும். அதனால சொல்றேன். முதல்ல புறப்படுங்க..."

கழுகாசலத் தேவராயர் படபடவென்று விஷயத்திற்கு வந்தார். ரத்னசாபாதிக்கு படபடவென்று வந்தது.

பிள்ளையார் பிடிக்க குரங்காவது என்று கேள்விப் பட்டிருக்கிறார். அதை இப்பொழுதுதான் பார்ப்பதாக உணர்ந்தவர், "கழுகாசலம்... என்னங்க நீங்க, பையனை வழிக்குக் கொண்டு வர என்ன பண்றதுன்னு சொல்லாம -ஓடிப்போன்னு சொல்றீங்களே..." என்று கசிந்தார்.

"உசுரோட இருக்க வேண்டாமா மாப்ள...?"

"என்ன அப்படிக் கேட்டுப்புட்டீங்க... நான் என் வம்சத் துக்கு வாரிசு வேணும்னு கேட்டு இங்க வந்துருக்கேன். அதுவும் குடும்ப ஜோசியர் பணிக்கர் சொல்லி நம்பிக்கை யோட வந்துருக்கேன். நீங்க இப்படி வந்ததும் வராததுமா மிரட்டினா எப்படி?"

"அப்ப நான் சொல்றத கேட்கமாட்டீர். அனுபவப் பட்டாதான் வழிக்கு வருவீர், அப்படித்தானே?"

"கழுகாசலம், உம்ம பேச்ச நான் மறுக்கல. எனக்கு நல்லது நடக்கணும். அதுக்கு வழியைச் சொல்லுங்க."

"அதுக்கு சந்திரமோகன் சாமியை நம்பணும். எகனைக்கு மொகனை பேசப்படாது."

"நம்ப வைக்க வழி சொல்லுங்க..."



"என்ன சோதிக்கிறீர் மாப்ள நீங்க. அவன் நம்பணும்னா அவனை விட்றுங்க. அவனுக்கு ஏதாவது நடந்தாதான் புத்தி வரும். பரவாயில்லையா?"

"ஏதாவதுன்னா...?"

"எனக்குத் தெரியாது... சாமி கிட்ட நீங்களே வேண்டிக் குங்க. இனி சாமியாச்சு- நீங்களாச்சு..."

-கழுகாசல தேவராயர் கையை உதறிக்கொண்டு விலகினார்.

ரத்னசபாபதிக்கு நின்ற இடம் நடுங்க ஆரம்பித்திருந்தது!

**அ**ந்த தென்னந்தோப்பினுள் கோபாலும் சந்திர மோகனும் நடந்து கொண்டிருந்தனர்.

"இப்ப எங்க போறோம் கோபால் நாம...?"

சந்திரமோகன் ஒரு வித உல்லாச மூடில் கேட்டான்.

"கோவிலுக்கு சந்திரா..."

"அப்படியா... போவோம். ஆனா என்னை கும்பிடச் சொல்லி நீ வற்புறுத்தக் கூடாது..."

"அப்படி இல்ல சந்திரா... நீ நம்ம சாமியை நம்பிப்பாரு. அப்ப தெரியும்."

"இல்லாததை எதைவெச்சு நம்பச் சொல்றே?"

"வேண்டாம் சந்திரா... இந்த மண்ணுல சாமியைப் பத்தி தப்பா பேசாதே. அது உனக்கு நல்லதல்ல."

"என்ன ஆயிடும்?"

-அவன் கேட்ட நொடி அவனது தலைக்கு மேலாக தென்னங்குலை ஒன்று அப்படியே அறுந்து அவன் தலை நோக்கி விழ ஆரம்பித்திருந்தது.

# 4

மேலிருந்து கீழே விழத் தொடங்கி விட்ட அந்த தென்னங்குலையில் கிட்டதட்ட நாற்பது காய்கள். ஒவ்வொரு காய்களும் சராசரியாக மூன்று கிலோ இருக்கும். அப்படியானால் நூறு கிலோவுக்கு குறையாத பளு...!

ஐன்ஸ்டீனின் புவி ஈர்ப்பு விசைத் தத்துவப் படி தனது பாரத்துக் கேற்ற வேகத்தோடு அதிகபட்சம் ஒண்ணரை நொடிக்குள் சந்திரமோகன் தலையை நெருங்கி விட்டது அந்த தென்னங்குலை.

இருந்தும் சந்திரமோகனுக்கு கொஞ்சம் அதிர்ஷ்டம் இருந்தது. ஒரு நூலளவு நகர்ந்து அந்தக் குலையை ஏமாற்றினான். அதுவும் அவன் தோளை உரசியபடி தரையில் விழுந்து எட்டுத் திக்குக்கும் உதை பந்தாட்டம் காய்கள் சிதறின. தலையில் மட்டும் பட்டிருந்தால் மூளை சிதறி ஒரு காலிஃபிளவர் ஆக கண்ணில் பட்டிருக்கும்.

"மைகாட்!" கோபால் விக்கித்துப் போனான். கண்களிலும் விக்ஸ்டப்பா சைசுக்கு அகட்டல். சந்திரமோகன் கோபாலைப் போல பதறிப் போகவில்லை. நிதானமாக நிமிர்ந்து மேலே பார்த்தான்.

"சந்திரா, நல்லவேளைப்பா. நீ தப்பிச்சே, தலைல விழுந்திருந்தா என்னாயிருக்கும்?" கோபால் படபடப்பை கைவிடாமல் பேசினான்.

"விழுந்திருந்தா அடிபட்டிருப்பேன். மயக்கமாயிருப்பேன். இல்லே செத்துப் போயிருப்பேன். நீயா டாக்டரை தேடி ஓடியிருப்பே. தட்ஸ் ஆல்!"

"என்ன சந்திரா இவ்வளவு கேஷுவலா சொல்றே. உனக்கு இந்த ஆயிரம் வேலிக் காட்டைப் பத்தி தெரியாது- இங்க ஜாக்ரதையா நடந்துக்கணும்."



"வாட் டு யூ மீன்... ஜாக்ரதையான்னா- இப்ப நான் என்ன அஜாக்ரதையா நடந்துக்கிட்டேன்?"

"அது... அது..." கோபாலுக்கு சொல்லத் தெரியவில்லை. கத்தரித்தது கோயில் மணி சப்தம். தென்னந்தோப்பில் அதன் இலகுவான இளந்தென்றல் காற்றில் நீந்தி வரும் மணி சப்தமும், நல்ல ராகமும் ஒன்று என்று தோன்றியது.

"என்ன இது மணி சப்தம் கேக்குது...?"

"நம்ம குட்டி நந்தஸ்வாமி கோவில் மணி சப்தம்தான்."

"நம்ம குட்டி நந்தஸ்வாமியா?" நறுக்கினபடி கோபாலை முறைத்தான் சந்திரமோகன்.

"நீ என்ன சென்ஸ்ல இப்படி கேக்கறேன்னு தெரியாது சந்திரமோகன். உனக்கு இந்த கோவில் குளம் இது லெல்லாம் நம்பிக்கை இல்லைன்னு எனக்குத் தெரியும்.

ஓபனா சொல்லிடறேனே- நம்பிக்கை இல்லாம இங்க தன்னிச்சையா நடந்துக்கறவங்களுக்கு ஏதாவது கெடுதல் வந்துடுது சந்திரா. அதான் பயமா இருக்கு." -நடந்து கொண்டே கவலைப்பட்டான் கோபால்.

"ஓ... அப்ப அந்த தென்னங்குலை எனக்கு விடப்பட்ட எச்சரிக்கையா?"

"அஃப்கோர்ஸ்... அப்படிக் கூட எடுத்துக்கலாம்."

"கடவுளை அன்புமயமானவர்னு தான் பெரிய பெரிய மகான்கள்லாம் சொல்றாங்க. அவர் இருக்காரோ இல்லையோ அன்புமயமா அவர் இருந்தா நல்லாத்தான் இருக்கும்னு நானும் அப்பப்போ நினைச்சிப்பேன். ஆனா இங்க நீ கொடுக்கற டெஃபனஷன் கடவுள் தத்துவத்தையே கொச்சைப் படுத்துது கோபால். அவர் என்ன ரவுடியா என்னை மிரட்டி வழிக்கு கொண்டுக்கிட்டு வர்றதுக்கு? நான் உன்னை மதிக்கலைன்னா நீ என்ன பண்ணுவே?

வருத்தப்படுவே... அதுவும் ஓர் அளவுக்குத்தான். அப்புறமா பதிலுக்கு நீயும் மதிக்காம போய்கிட்டே இருப்பே. கடவுளும் இருந்தா அப்படிப் போக வேண்டியதுதானே? இதெல்லாம் என்னோட லாஜிக். அது நான்தான் இந்த உலகத்துலயே சுபீரியர்னு என்கிட்ட காட்டிக்க ஆசைப் படுதா?"

சந்திரமோகனின் பகுத்தறிவுக் கேள்விகளுக்கு என்ன பதில் சொல்வது என்று கோபாலுக்குத் தெரியவில்லை.

'இவனை எப்படி அந்த சாமியை கும்பிட வைக்கப் போகிறோம்?' அவநம்பிக்கை அவனுக்குள் கொழுந்து விட்டது.

நல்லவேளையாக எதிர்ப்பட்டார் கிட்டா மணியரசு! அறுபது வயதுக் கிழவர். தட்டுத்தடுமாறிக் கொண்டு கைக்கோல் ஒன்றால் துழாவியபடி வந்து கொண்டிருந்தார்.

"மணியரசு..." -கூவினான் கோபால்.

"ஆரு... ராயர் மவனா?"

குருடர்களுக்கு கூர்மை அதிகம் தான்!

"ஆமாம் இப்படி வாங்க..."

கோபால் கூப்பிட்டது சந்திரமோகனுக்கு கோபத்தை உருவாக்கியது.

"என்ன கோபால் நீ... கண்ணு தெரியாதவரை இங்க வான்னு கூப்பிடறே. அதுக்கு நாம அவர்கிட்ட போகலாம்ல?"

-குரலின் தொனியில் மனிதத்தின் மகத்தான கரிசனம்.

"ஆரு தம்பி... ஆரு அது கூட..."

"கூடவா... என் அத்தை மகன்... சந்திரமோகன்!"



"அடடே... நம்ம ரத்னசாபாதி முதலாளியோட மவனுங் களா? கும்புடறேங்க."

"வணக்கம்..."

"மணியரசு, உங்க பார்வை எப்படி போச்சுன்னு நம்ம சந்திரமோகனுக்கு சொல்லுங்க..."

-கோபால் கூப்பிட்ட காரணம் சந்திரமோகனுக்கு புரிந்து போயிற்று. ஆனால் மணியரசு முகமோ வாட லாயிற்று. அந்த அறுபது வயதுக்கிழவர் தனது குருவை உத்தேசித்து ஒரு பெருமூச்சு விட்டார்.

"இப்ப எதுக்கு கோபால் இந்த கதையெல்லாம்...? இது ரொம்ப அநாகரிகம். ஒருத்தரோட ஊனத்தை டிஸ்க்ரைப் பண்ணச் சொல்றது- அதுவும் அவங்களையே பண்ணச் சொல்றது ரொம்ப தப்பு."

சந்திரமோகன் இரண்டாவது முறையாக மனிதக் கரிசனத்தை அந்த கிழவர் எதிரில் வெளிக்காட்டினான். கிழவர் மணியரசுவின் முகத்தில் கொஞ்சம் போல வெளிச்சம் மண்டியது.

'இல்ல சந்திரா... நான் அவரோட ஊனத்தை ஞாபகப் படுத்தி அதுல சுகம் காணறதுக்காக அவரை பேசச் சொல் லலை. அவரும் உன்னை மாதிரிதான். அதானாலதான் உனக்கு சில விஷயங்கள் தெரியட்டுமேன்னு சொல்லச் சொான்னேன்."

"என்னை மாதிரின்னா...?"

"ஓ... அப்ப தம்பி இளவட்டத்தில நான் இருந்த மாதிரி சாமியில்லை பூதமில்லைன்னு சொல்ற ரகமா?"

"அது மட்டுமில்ல... நம்ம ஊர்ல நம்ம சாமியை ஆயிரம் கேள்விகள் கேட்கறான். கேட்கலாமா மணியரசு?"

"அப்படியா... தம்பி வேண்டாம் தம்பி. நம்ம சாமி பேசற சாமி. சந்தேகப்பட்டு நம்ம சாமியைப் பாக்க ஆசைப் பட்டேன். கண்ணு போய் இப்ப குருடனா நிக்கேன்.

ஒரு நாள் இரண்டு நாள் இல்லை முப்பது வருஷமாச்சு தம்பி, எனக்கு பார்வை போய் முப்பது வருஷமாச்சு."

"எப்படி போச்சு?"

"அதான் சாமி சக்தி. சாவித் துவாரம் வழியா எட்டிப் பார்த்த என் கண்ணுக்குள்ள உள்ள இருந்த தேளோட கொடுக்கு பட்ருச்சு. உசுரு பொழைச்சதே பெரும்பாடு."

கிழவரின் நடுங்கும் குரல் சந்திரமோகனையும் ஒரு உலுக்கு உலுக்கிற்று.

"சாவித் துவாரத்துல தேள் இருந்துதா?"

"ஆமாம் தம்பி... நம்ப சாமியைத்தான் யாரும் பாக்கக் கூடாதுல்ல. கதவுதானே இங்க சாமி?"

"கோபால் கமான்... அந்த கோயிலுக்கு முதல்ல போவோம்."

-சந்திரமோகன் உடனேயே அசுரத்தனமான ஆர்வத் தோடு எட்டி நடைபோட்டான். பயப்படுவான் என்று பார்த்தால் பந்தாட்டம் எகிறுகிறானே? கோபால், "நில்லு சந்திரா நில்லு" என்று தடுக்கும் குரலோடு பின்தொடர்ந் தான்.

**வ**ரிசையில் நின்று கொண்டிருந்தது வயலில் வேலை செய்திருந்த கூட்டம். மூடையில் இருந்த நெல்லை அளந்து போட்டுக் கொண்டிருந்தார் களஞ்சியம் முத்தையா பிள்ளை.

பால்கனியில் நின்றபடி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள் ஸ்ரீமதி. சாவியோடு அப்பொழுது வந்த



வேலைக்காரியைத் திரும்பிப் பார்த்தவள். "ஆமாம் அதெல்லாம் என்ன?" -கேட்டாள்.

"அதுங்களா... கூலிக்கு நெல்லு படியளக்கறாங்க."

"கூலிக்கு நெல்லா... ஏன் பணமா தரமாட்டாங்களா?"

"அது வாரத்துல சனிக்கிழமை ஒரு நாள்தான். மத்த நாளெல்லாம் இப்படி நெல்லுதான் கூலிம்மா."

"எதுக்கு இப்படி நெல்லா கொடுக்கறாங்க...?"

"அதாம்மா இந்த ஆயிரம் வேலிக் காட்டுல வழக்கம்..."

வேலைக்காரி பதில் சொல்லும்போது பார்வை திரும்பவும் வரிசையில் நிற்பவர்கள் பக்கம் சென்றது. வரிசையில் ஒரு பிராமணரும், பேண்ட்- சட்டை அணிந் திருந்த ஒரு இளைஞனும் கூட இருந்தான்!

பிராமணர், "ஒரு இரண்டு படி கூட போடுங் கோண்ணா- ஊர்ல இருந்து என் பொண்ணும் மாப் பிள்ளையும் வர்றா" என்றார்.

"அப்படியா... சரி பிடியும்" -இரண்டுபடி நெல்லை கூடப் போட்டார் முத்தையா பிள்ளை. பேண்ட்- சட்டை அணிந்திருந்த இளைஞன் தன் பையில் விழுந்த நெல்லை அவர்கள் எதிரிலேயே கையில் எடுத்து ஒரு ஆராய்ச்சிப் பார்வை பார்த்தான்.

"இல்ல... நெல்லு ரொம்ப சவலையா இருக்கேன்னு பார்த்தேன்."

"கஞ்சி வச்சிக் குடிக்கறதுக்கு உனக்கென்ன பாசுமதி அரிசியையா போடுவாங்க?"

"ஐயோ நான் அப்படிச் சொல்லலீங்க. எங்க வீட்லயும் கூட்டம் அதிகம். இந்த நெல்லு சோறு காணலை."

"போய் உங்கப்பாவை வரச்சொல். என்கிட்ட அது சரியில்லை இது சரியில்லேங்காதே..." -முத்தையா பிள்ளை அவனை பயங்கரமாக உதாசினப்படுத்தினார். அவனும் மறுபேச்சு பேசவில்லை.

ஸ்ரீமதிக்கு எல்லாமே வியப்பாக இருந்தது. நடு நெற்றியில் வகிட்டை ஒட்டி குறுகுறுத்தது.

வேலைக்காரி நகரப் பார்த்தாள்.

"ஆமாம் இங்க என்ன பேண்ட் சட்டை போட்டவங்க கூட வரிசைல நின்னு..."

-அவள் எங்கு வருகிறாள் என்பது அந்தப் பெண்ணுக்கு புரிந்தது.

"அம்மா... யாரா இருந்தாலும் ராயரய்யா படி அளந்தாத்தான் இங்க அடுப்பு பொங்கும்."

"விசித்திரமா இருக்கே..."

"தலைமுறை தலைமுறையா அப்படித்தாங்களே இருக்கோம்."

"என்ன சொல்றே?"

"உங்களுக்கு ஒண்ணும் தெரியதுங்களா... இந்த ஆயிரம் வேலிக்காடு உங்க குடும்ப சொத்துங்க. இங்க நாங்க உங்க தலைமுறைக்கு சேவை செய்யறதுக்காக சேதுபதி ராசாவால விடப்பட்டவங்க..."

"சேவை செய்யறதுக்குன்னா?"

"அம்மா... இப்படி நுணுக்கி நுணுக்கி கேட்டா எனக்கு சொல்லத் தெரியாதுங்க. சுருக்கமா சொல்றேம்மா. எங்க ராசா நீங்க. உங்க அடிமைகள் நாங்க!"

"அடிமைகள்... யு மீன் ஸ்லேவ்ஸ்."



"என்ன சொல்றீங்கன்னு தெரியலியேம்மா...?'

'அடிமைங்கறத இங்கிலீஷ் சொன்னேன். அந்த வார்த்தைக்கே இப்ப இருக்கற இந்தியாவுல இடம் கிடையாது தெரியுமா?"

-ஸ்ரீமதி கேட்ட தொனியில் ஏராளமான அழுத்தம். அந்தப் பெண் முழித்தாள். பின்னால் ஏதோ சப்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தாள். வீரபத்ரன் வந்து கொண்டிருந்தான். அவன் கையில் ஒரு செத்துப்போன மயில் இருந்தது.

நீண்ட தோகை... அவன் பக்கவாட்டில் இடுப்பை ஒட்டிப் பிடித்தபடி வருவதில் அதன் தோகைகள் தரையை விளக்குமாறு போல கூட்டிக் கொண்டு வந்தன.

அதன் தலை முறிக்கப்பட்டது போல துவண்டு போய் கழுத்தை ஒட்டி ரத்தச் சகதி!

வேலைக்காரப் பெண் விசுக்கென்று ஒதுங்கினாள். அருகில் அழகுக்காக வைக்கப்பட்டிருந்த வெள்ளைக்கார வீரன் சிலையைத் துடைக்கத் தொடங்கினாள்.

வீரபத்ரன் அவளை ஒரு பார்வையும் ஸ்ரீமதியை ஒரு பார்வையும் பார்த்துவிட்டு கடந்து போனான்.

ஸ்ரீமதிக்கு நெஞ்சைக் கரித்தது.

## 5

**வே**ட்டையாடிய மயிலோடு வந்த வீரபத்ரன் கண்ணை விட்டு மறைந்த நொடி அந்த வேலைக்காரப் பெண் 'அப்பாடா' என்று பெருமூச்சு விட்டாள்.

ஸ்ரீமதி கவனித்துக் கொண்டே இருந்தாள்.

"மயிலோட அந்த ஆள் எங்க போறான். யார் அவன்?" ஒருவிதப் துடிப்பேதாடு கேட்டாள்.

"அம்மா மெல்லப் பேசுங்க. அது வீரபத்ரன், ராயரய்யாவோட வலது கை. நம்ம கடலைக்காட்டுக்குள்ள எது வந்தாலும் சுட்டுப்புடுவான். சுட்டதை இப்படித்தான் அய்யாகிட்ட காட்ட தூக்கிட்டு வருவான். ஒரு தடவை இப்படித்தான்... பக்கத்து ஊர் கோயில் யானை சங்கிலியை அறுத்துக்கிட்டு நம்ம தென்னந்தோப்புக்குள்ள நுழைஞ் சிடிச்சு. அதைக் கூட இந்த வீரபத்ரன் விடலை. சுட்டுப் பிட்டான்!"

அவள் அதிகபட்ச அதிர்ச்சியளித்தாள். ஸ்ரீமதிக்கு தலையைச் சுழற்றியது.

"ஆமாம்... இதையெல்லாம்..." ஸ்ரீமதி அடுத்த கேள்விக் காக நிமிர்ந்தாள். வேலைக்காரியைக் காணவில்லை. விலகி விட்டிருந்தாள். பார்வை அவளைத் தேடியதில் மார்பிள் தரைப்பரப்பில் மயிலின் ரத்தச் சொட்டுகள் தெரிந்தன.

குட்டி நந்தஸ்வாமி கோயில்!

"இதான் சந்திரா நம்ம கோயில்... ஐநூறு, அறுநூறு வருஷத்து கோயில். எல்லா சேதுபதி ராஜாக்களும் இந்த கோயிலுக்கு வந்து செல்வாங்களாம். கல்வெட்டுல அதுக்கு ஆதாரமே இருக்கு..."

கோபால் ஆவலாதியோடு சொல்லிவிட்டு சந்திர மோகனை அளப்பதுபோல பார்த்தான். சந்திரமோகன் பார்வை கேமரா கண்கள் போல பதிவெடுத்துக் கொண் டிருந்தன. மதில் சுவர்களில் பெஸ்கியின் வருகைக்கு முந்தையகாலத்து வட்டெழுத்து தமிழ்ச் சொற்கள். கொம்பு வாங்கியோ, துணை எழுத்தோட ஒரு வார்த்தை கூட இல்லை. 'கேதனன்... கருடசேதனன், வன்னியரு றாட்டந்த விழ்த்தவன் சந்தனமதன வெற்பினன் அரசரவணருறாமன் பரறாச கேசரி பரறாசசிங்கம்...'



"வெரி இன்ட்ரஸ்ட்டிங் கோபால்... இதிலெல்லாம் ஏதோ தகவல் இருக்கு. ஆமா இதை யாரும் ரிசர்ச் பண்ணலையா?"

"இதோ பார்... இது நம்ம குடும்பத்தோட பூர்வீக சொத்து. நம்மைத் தவிர நெல்லுக்குடியாருக்கும் இந்த கோயில்ல சாமி கும்பிடற உரிமை உண்டு. அவங்க ஒரு நூறு நூத்தம்பது குடும்பம் தேறும். அதுல தொண்ணூறு சதம் பேர் இங்க இந்த ஆயிரம் வேலிக் காட்டுலயே இருக்காங்க. ஒரு சில குடும்பங்கதான் வெளிய இருக்காங்க... வெளிய இருக்காங்கறத விட இந்த வேலிக்காட்டை விட்டு ஓடிட் டாங்கன்னு சொன்னா அது பொருத்தமா இருக்கும். அவங்க இனி எந்த நாளும் இங்க வரப்போறது இல்லை. வேற யார் வந்தாலும் கோயில் கட்டு திட்டத்துக்கு உட்பட்டு சாமி கும்பிட்டு போய்க்கிட்டே இருக்கணும். மீறினா நெற்குடிக் கொத்தவால் ஆலால சுந்தரம் அவங்கள அள்ளி வெளிய எறிஞ்சிடுவார். இதுதான் இங்க சிஸ்டம். இந்த சிஸ்டத்துக்கு நீ சொல்ற ரிசர்ச்சும் ஆராய்ச்சியும் ஒத்து வராது."

-பேச்சோடு கையைப் பிடித்து இழுத்தான் கோபால்.

"இல்ல கோபால்... இதை எல்லாம் படிச்சு தெரிஞ்சுக் கணும். இதை நாம நம்ம குடும்ப சொத்தா வெச்சு வீணடிக்காம எல்லா பப்ளிக்கும் வந்துட்டு போகும்படி செய்யணும்..."

எதிரில் கோயில்பட்டார் முகுந்தாச்சாரி வந்தார். கோபாலைப் பார்த்தவர் தோளில் கிடந்த துண்டை இடுப்புக்குக் கொண்டு போய் கட்டிக் கொண்டார்.

"என்ன சாமி, யார்னு பாக்கறீங்களா... அத்தை மகன். சந்திரமோகன்!"

"நமஸ்காரம். முடி இறக்கணும்னு சொன்னது இவருக்கு தானோ?"

சந்திரமோகனுக்கு சுருக்கென்றது.

"கோபால், என்ன சொல்றார் இவர்?"

"அது-- அது-- குலத்தெய்வத்துக்கு நேர்த்திக் கடனா முடி காணிக்கை கொடுப்போமில்லியா அதைச் சொல்றார்."

"யூ மீன் மொட்டை? நத்திங் டூயிங்.. நான் அப்பாகிட்ட கிளியர்கட்டா சொல்லிட்டுத்தான் இங்க வந்துருக்கேன். முடிகொடுக்கறது, மொட்டையடிச்சுக்கறதுங்கறதெல்லாம் பேத்தடிக். ஹைலி இடியாட்டிக்."

கத்தினான் சந்திரமோகன்.

"வேண்டாம் சந்திரா, இங்க நின்னு எதையும் பேசாதே. வா முதல்ல பங்களாவுக்கு போவோம். அங்கப் போய் எல்லாத்தையும் பேசிக்கலாம்."

"ஒய்... எதுக்கு பயப்படறே. நீ ஒரு கிராஜுவேட்தானே. ஏதோ ட்ரைபல்ஸ் மாதிரி பிஹேவ் பண்றியே. கமான் முதல்ல அந்த கதவைக் காட்டு. ஐ வாண்ட் டூ சீ..."

"அண்ணா என்ன சொல்றார். ஸ்வாமி தரிசனம் பண்ணணும்கறாரா?" இடையிட்டார் பட்டர்.

"ஆமாம் பட்டரே... கதவைத் திறந்து உள்ளறயே பாக்கணுமாம்."

"இத்தனை வருஷத்துல நானே ஒரு தடவை கூடத் திறந்து உள்ளே என்ன இருக்குன்னு பார்த்தது கிடையாது. பார்க்கவும் கூடாது. இதெல்லாம் இவருக்குத் தெரியாதா?"

"இதோ பாருங்க பட்டரே... நீங்க பார்த்ததைப் பற்றியும் பாக்காததைப் பற்றியும் எனக்கு அக்கறை கிடையாது. ஆனா நான் பாக்க விரும்பறேன்..."

"அப்படிச் சொல்லப்படாது. அது பெரிய அபசாரம்."



"எது அபசாரம்? உலகம் பூரா கருவறைல இருக்கற சாமியைத்தான் கும்பிடறாங்க. இப்படி கருவறைக் கதவை கிடையாது."

"உலகம் பூரா எப்படியோ? பதினெட்டாம்படி கருப்புக்கும், இங்க இருக்கற குட்டி நந்தஸ்வாமிக்கும் நேத்ர தரிசனம் ஆகாதுங்கறது ஐதீகம். அவாளைத் தடுத்துண்டுருக் கற கதவை சேவிச்சாலே அவாளை சேவிச்ச மாதிரிதான்."

"மீறிப் பார்த்தா...?"

"சிலருக்கு கண்ணு போயிருக்கு. சிலருக்கு உசிர் போயிருக்கு. சிலருக்கு புத்தி பேதலிச்சிருக்கு."

"இது மிரட்டல். சரியான பதில் இது இல்ல."

"எனக்கு தெரிஞ்சதை நான் சொன்னேன். இது உங்க கோயில். இங்க யாரும் இப்படி பேசினதில்ல. பேசிட்டு சந்தோஷமாகவும் வெளியே போனதில்லை."

"அப்படின்னா நானும் வருத்தப்படுவேன்னு சொல்றீங் களா?"

"அப்படித்தான் இந்நாள் வரை நடந்துருக்கு."

"ஆனா இனி அப்படி நடக்காது. நிச்சயமா இப்படி ஒரு ஐதீகம் இருக்குன்னா, அதுக்குப் பின்னால ஏதோ இருக்கு. அதை என்னன்னு தெரிஞ்சுக்காம நான் விட மாட்டேன்."

"சந்திரா, என்னப்பா இது... வேலில போற ஓணானை எடுத்து வேட்டில விட்டுக்கிட்ட கதையா, வேண்டாம் வா. ஏற்கெனவே உன் உயிருக்கு எச்சரிக்கை வந்தாச்சு."

"தற்செயலான சம்பவங்களை எல்லாம் எச்சரிக்கைன்னு சொல்லி பயமுறுத்தாதே கோபால், கமான்..."

சந்திரமோகன் ஆவேசத்துடன் முன்னால் நடந்தான். எங்கே சன்னதி என்று தேடினான். கற்படிகளில் தாவி ஏறி சுற்றிலும் பார்த்தான். பிரதான கோபுரத்தைப் பார்த்துவிட்டு அந்தப் பக்கமாய் நடந்தான்.

"சந்திரா நில்லு... அவசரப்படாதே." கோபால் கத்திக் கொண்டு பின்னால் செல்லும்போதே, "மிஸ்டர் சந்திர மோகன், ஒரு நிமிஷம். உங்க மனைவிக்கு சீரியஸ்" என்று ஒரு குரல், ஒரு ஒடுக்கில் திரும்பப் பார்த்த அவனைத் தடுத்தது.

நின்று திரும்பிப் பார்த்தான்.

ஒருவர் கோவில் வாசலில் பெருமூச்செரிய நின்று கொண்டிருந்தார்.

"என்ன பாக்கறீங்க... கமான் பால்கனியில இருந்து கீழே விழுந்து உயிருக்கு போராடிக்கிட்டிருக்காங்க," என்றார்.

"இப்பத்தான் நல்லதில்லைன்னு சொன்னேன். பாத்தேளா..." பட்டர் வாயைப் பிளந்தார்.

சந்திரமோகனுக்கு நிஜமாலுமே பகீரென்றது.

ஸ்ரீமதி பால்கனியில் இருந்து விழுந்து உயிருக்குப் போராடும் செய்தி சந்திரமோகனை உடனேயே அங்கிருந்து துரத்தியது. பாய்ச்சலெடுத்தான்... பட்டர் 'நாராயணா' என்று பக்திப் பரவசத்தோடு கன்னத்தில் போட்டுக் கொண்டார்.

## 6

மதுரை.

அந்த தனியார் ஆஸ்பத்திரிக்குள் ஒரு காற்றைப் போல் நுழைந்தான் சந்திரமோகன். கூடவே கோபால்.



எமர்ஜென்சி வார்டுக்கு வெளியில் அப்படியும் இப்படியுமாக அலைந்து கொண்டிருந்தார் ரத்னசபாபதி. ஓர் ஓரமாக அமைதியாக ராயரும் அவர் மனைவியும் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். சந்திரமோகன் வரவும் மூவரும் ஒருசேர அவனைப் பார்த்தார்கள்.

"டாடி..."

"சந்திரா வந்துட்டியா?"

"என்னாச்சு டாடி... இப்ப எப்படி இருக்கா ஸ்ரீ...?"

"என்னன்னே தெரியலப்பா. நல்லாதான் பேசிகிட்டிருந்ததா வேலைக்காரி சொல்றா. பால்கனியில் நின்னு வேடிக்கை பார்த்துகிட்டிருக்கும்போது எப்படியோ தவறி விழுந்திருக்கா. தலைல பலமான அடி..."

"பால்கனில இருந்து தவறி விழ அவ என்ன குழந்தையா?"

சந்திரமோகன் ஆஸ்பத்திரி என்று கூடப் பார்க்காமல் படபடத்தான்.

"எப்படி நடந்துச்சுன்னு தெரியல சந்திரா... அவ கண்ணு முழிக்கட்டும். தன்னால தெரிஞ்சிடும்..." -பதிலோடு தோளில் கை போட்டார் ராயர்.

"நான் இப்ப ஸ்ரீயை பார்க்கணும்..."

"பொறுமை சந்திரா... இன்டென்சிவ்ல அவளுக்கு இப்போ ஆபரேஷன் நடந்துகிட்டிருக்கு..."

"மை காட்... ஆபரேஷன் பண்ற அளவுக்கு அடியா?"

சந்திரமோகன் உடம்பு நடுங்கியது.

"ப்ளீஸ் பீ காம்... பீ காம்..." -ரத்னசபாபதி அவன் கைகளைப் பற்றி வருடித் தந்தார். அவர் கரமும் லேசாக நடுங்கிக் கொண்டிருந்தது.

நடுவில் கோபால் ராயரை ஓரமாகக் கூப்பிட்டுக் கொண்டு போய் அவரிடம் கோவிலில் சந்திரமோகன் பேசியதைச் சொல்லிக் கொண்டிருந்தான்.

ராயர் முகத்தில் வருத்தம் விலகி ஒருவித சலனம் மண்டத் தொடங்கியது. அந்த சலனம் குறையாதபடி ராயர் ரத்னசபாபதியையும் சந்திரமோகனையும் நெருங்கினார்.

"மாப்ள... ஏன் இப்படி நடந்துச்சங்கறதுக்கு எனக்கு காரணம் தெரிஞ்சு போச்சு" என்று வருத்தத்தோடு பேச்செடுத்தார் ராயர்.

"என்ன சொல்றே கழுகாசலம்...?"

"நான் முந்தியே சொன்னேன். பேசாம உடனே ஊருக்கு திரும்பிடுங்கன்னு. ஆனா நீங்கதான் கேக்கல..."

ராயரின் பதிலில் ரத்னசபாபதி முகம் கொஞ்சமாய் கருத்துப் போனது.

"டாடி... என்ன சொல்றார் அங்கிள்?"

"என்கிட்ட கேள் தம்பி நான் சொல்றேன். நீ அமெரிக்காவுல படிச்சு வளர்ந்த பிள்ளையா இருக்கலாம். ஆனா கடவுள் நம்பிக்கையைப் பொருத்தமட்டுல நீ அரிச்சுவடி கூட படிக்காதவன்கறது என் அபிப்ராயம்.

ஏதோ குலதெய்வத்துக்கு பூசை போட்றதுக்காகத் தான் வரப்போறதாக மாப்ள சொன்னார். நல்ல காரியம் தானேன்னு நானும் நினைச்சேன். ஆனா வந்துருக்கறது பூசை 'போடறதுக்காக இல்ல. அந்த நம்பிக்கையையே ஆட்டி அசைச்சு பார்க்கறதுக்கு தான் வரது, நீ வந்த பொறவுதான் தெரிஞ்சிச்சு. நம்ப குலதெய்வம் கும்பிட்டு கால்ல விழுந்தா கூடவே துணை இருக்கும். நேர் எதிரா நடந்தா இப்படித்தான் நடக்கக் கூடாதது எல்லாம் நடக்கும்.



இப்பவும் சொல்றேன். நம்பிக்கை இல்லாம இங்க இருந்து அவஸ்தை படறதுக்கு அப்படியே கிளம்பிப் போயிடுங்க." -ராயரின் நீண்ட பதிலில் எச்சரிக்கையும் வருத்தமும் கலந்திருந்தது.

"அப்ப இது சாமியால நடந்ததா?" -சந்திரமோகன் ஆவேசமானான்.

"ஆமாம்..."

"நீங்க சொல்றது மட்டும் உண்மையா இருந்தா நான் அந்த சாமியை சும்மா விடமாட்டேன். ஜாக்கிரதை."

"வேண்டாம் தம்பி. சாமி சக்தி தெரியாம விளையாடாதீங்க. மாப்ள... சொல்லி சமாதானப்படுத்தி கூட்டிகிட்டு போங்க."

கழுகாசலராயர் சொன்னபடியே ஒதுங்கினார். சங்கவை நாச்சி அங்கு அவர்கள் பேசிக் கொள்வதைக் கலவரத்தோடு பார்த்தபடி இருந்தாள்.

அவளுக்கு இந்த மாதிரி எதிர்ப்பெல்லாம் புதிது.

சாமி பேரைச் சொன்ன மாத்திரத்தில் கன்னத்தில் போட்டுக் கொண்டு கீழே விழுந்தவர்களைத்தான் பார்த்திருக்கிறாள்.

ஆனால் தன் வம்சாவளியிலேயே ஒருவன் இப்படி ஏட்டிக்குப் போட்டியாக பேசுவதும் நடந்து கொள்வதும் அவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

அவர்களின் பேச்சு ரிசப்ஷன் கவுன்டர் வரை கேட்டது. நர்ஸ் ஒருத்தி வந்து 'சைலன்ட் ப்ளீஸ்' என்றாள் மிதமான குரலில்.

ரத்னசபாபதிக்கு கூசியது.

ஒரு பக்கம் மருமகள் உள்ளே கிடக்கிறாள். மறுபக்கம் மகன் எகிறிக் குதித்துக் கொண்டிருக்கிறான். ஒரு நல்ல காரியம் நடக்க வேண்டும் என்று வந்த இடத்தில் இப்படியா...?

மனது குடைந்தது.

கோபால் கஷ்டப்பட்டு சந்திரமோகனை இழுத்துக் கொண்டு வெளியில் போனான்.

"சந்திரா, எதுக்கு இவ்வளவு டென்ஷன் ஆகறே... இப்ப சாமி இருக்கா இல்லையாங்கறதா பெரிசு. ஸ்ரீமதி பிழைக்கணும், அதுதான் பெரிசு..."

"அஃப் கோர்ஸ்... ஆனா அவளுக்கு இப்படி நடந்ததுக்கு காரணமே நான்தாங்கற மாதிரி பேசறது மட்டும் நல்லா இருக்கா கோபால். நானா ஸ்ரீமதியைப் பிடிச்சு தள்ளினேன்?"

"மெல்லப் பேசு. அப்பா அவரோட நம்பிக்கையை சொல்றார். என் கருத்தும் அதுதான். உனக்கு நம்பிக்கை இல்லேன்னா நான் சொல்ற மாதிரி செய். அப்புறம் நம்புவே."

"என்ன செய்யணும்கறே?"

"நம்ம குலதெய்வத்தை மனசார இங்க இருந்தே பிரார்த் தனை செய். முழு மனசா, முடி கொடுக்கறேன், என் மனைவியைக் காப்பாத்துன்னு பிரார்த்தனை செய். சில மணி நேரங்களிலேயே நீ அந்த அதிசயத்தைப் பார்க்கலாம்."

–கோபாலின் பதில் சந்திரமோகனை கோபத்தின் உச்சிக்குக் கொண்டு போனது.

"வாட் நான்சென்ஸ் யூ ஆர் டாக்கிங்... அந்த சாமியா இங்க வந்து ஸ்ரீக்கு ஆபரேஷன் பண்ணப் போகுது?



திரும்பத் திரும்ப என்னை உங்க நம்பிக்கைக்குள்ளயே பிடிச்சு இழுக்கறீங்களே... நான்சென்ஸ்." –கத்தினான்.

அப்பொழுது கங்காணி ஏழுமலையும் அங்கு வந்தான்.

"தம்பி, உங்கள முதலாளி கூப்பிட்றார்," என்று கோபாலைப் பார்த்தான். கோபாலும் அங்கிருந்து விலக ஏழுமலை பார்வை சந்திரமோகனை ஊடுருவியது.

"என்ன மேன்... நீயும் எதையாவது சொல்லப் போறியா?"

–சந்திரமோகனின் கேள்வியில் அனல் அடித்தது. அப்படியே பார்வை எமர்ஜென்சி வார்டு பக்கமும் எட்டிப் பார்த்தது.

"தம்பி..."

"என்ன... கமான், நீ என்ன சொல்லப் போறே?"

"எனக்கு வயசு அம்பத்து நாலுங்க. பொறந்து வளர்ந்ததுல இருந்து வேலிக்காடுதான் என் உலகம்."

"சுத்தி வளைக்காம விஷயத்தை சொல்லு."

"உங்களைப் போல ஒருத்தரை இப்பதான் பாக்கறேன்."

"திரும்பவும் சொல்றேன். சுத்தி வளைக்காம பேசு. எனக்கு பொறுமை இல்ல."

"சொல்லத் துடிக்கறேன்க. ஆனா பயம் மென்னியப் பிடிக்குதுங்க."

–ஏழுமலை மிடறு விழுங்கியபடி திரும்பித் திரும்பிப் பார்த்தான்.

"என்ன... உன்னையும் அந்த குலதெய்வம் எதுல இருந்தாவது பிடிச்சு தள்ளிருமா?"

"அது... அது..."

"எதுய்யா?"

ஏழுமலை திரும்பவும் திரும்பித் திரும்பிப் பார்த்தான். குளத்தில் குளித்து வந்த மாதிரி வியர்த்தான். கைகால்கள் நடுங்க ஆரம்பித்திருந்தன. சந்திரமோகனுக்கே அவனைப் பார்க்க சங்கடமாகிப் போனது. ஒருவேளை, தான் அதட்டலாக பேசுவது தான் இவனை இப்படி ஆக்கி விட்டதோ?

"ஆமா உன் பேர் என்ன?" -இதமாய் கேட்டான்.

"ஏழுமலைங்க..."

"பெக்குலியரா இருக்கே. நம்பரையும், மலையையும், கூட்டி பேரா வெச்சுகிட்டிருக்கியே. ஒரு மீனிங் வேண்டாம்." -மீண்டும் இதம்.

"தம்பி... எனக்காக இதமா பேச வேண்டாம். உங்க கோபம் ரொம்ப நியாயமானது."

-ஏழுமலை தனது பதிலில் வியப்பளித்தான்.

"என்னய்யா சொல்றே... எனக்காக பயந்துவிட்டு பல்டி அடிக்கிறியா?"

"இல்ல தம்பி... பல்டி எல்லாம் எனக்கு அடிக்கத் தெரியாது. எனக்கு ஒரு சத்தியம் செய்து தருவீங்களா?"

"சத்தியமா?"

"ஆமாய்யா..."

"என்ன சத்தியம்?"

"அது வந்து தம்பி..." மீண்டும் ஏழுமலை திரும்பித் திரும்பிப் பார்த்தான்.



"ஏன்யா இப்படி என்னை சோதிக்கறே... வாட் யு வான்ட் டு சே... புரியலையா? நீ என்ன சொல்ல விரும்புறே?"

"பயமா இருக்குய்யா... எனக்கு நீங்க சத்தியம் செய்து தாங்கய்யா. பொறவு சொல்றேன்."

"அப்ப சத்தியம் பண்ணாம சொல்ல மாட்டே?"

"இல்லய்யா... எனக்கு தைரியமில்லை."

"சரி என்ன சத்தியம் பண்ணணும்?"

"நான் சொல்லப்போறத கேட்டு அதிர்ச்சியடையக் கூடாது."

"........."

"நான் சொல்லி முடிச்ச பிறகு இப்படி உணர்ச்சிவசப் பட்டு நடந்துக்கக் கூடாது. ரொம்பவும் புத்திசாலித்தனமா நடந்துக்கணும்."

"என்ன விஷயம் முதல்ல சொல்."

"சொல்றேன். எந்த நிலையிலும் என் மூலமா உண்மை தெரிய வந்ததா நீங்க காட்டிக்கக் கூடாது."

"இப்ப நீ விஷயத்தைச் சொல்லலே, உன் கழுத்தை நெரிச்சு கொன்னுடுவேன்."

"அதைச் சொல்லத் தான் துணிஞ்சு வேலிக்காட்டுல இருந்து வந்துருக்கேன். என்னை ராயரும் பார்த்துட்டார். நிச்சயமா என் கால் போகப் போகுது...! பரவாயில்ல! வேலிக் காட்டுக்குள்ள முதல் முறையா ஒரு வேங்கைப் புலியைப் பாக்கறேன். அது எங்களுக்கெல்லாம் நல்லது செய்யும்னு நம்பி உண்மையை சொல்றேன். முதல்ல சத்தியம் செய்யுங்க."

-ஏழுமலை தன் கருத்த காப்பு காய்த்த வலக்கையை நீட்டினான். ஏராளமான நெற்றிச் சுருக்கங்களுடன் சந்திர மோகனும் தன் கரத்தை அவன் கரத்தின் மேல் வைத்தான்.

"தம்பி.. திரும்ப சொல்றேன். புத்திசாலித்தனமா நடந்துக் குங்க. உணர்ச்சிவசப்படாதீங்க. குறிப்பா குலதெய்வத்தை நம்புறதா நடிங்க. அதுதான் இப்போதைக்கு உங்க உயிரை யும் காப்பாத்தும்."

"என்னய்யா சொல்றே... என் உயிரையும் காப்பாத்தும்னா?"

"உங்க மனைவி உயிர் போகப் போகுதுங்க. ஆபரேஷன் கறது கண்கட்டு வேலை. உண்மைல உள்ள எப்படி கொலை செய்யலாம்- என்ன செஞ்சா தங்களுக்குப் பாதிப்பில்லாதபடி உயிர்போகும்கற சதிவேலைதாங்க நடந்துகிட்டிருக்கு!"

ஏழுமலை சொல்லி முடிக்க சந்திரமோகனுக்குள் ஜிவ் வென்று பி.பி. எகிற ஆரம்பித்தது!

## 7

கங்காணி ஏழுமலை சொன்னது சந்திரமோகனை ஒரு கலக்கு கலக்கிவிட்டது. கண்களில் பீதியோடு அவனைப் பார்த்தான்.

"தம்பி... இப்பத்தான் நீங்க ரொம்ப புத்திசாலிதன மாகவும் எச்சரிக்கையாவும் நடந்துக்கணும். நீங்க அப்படி நடந்துக்கறதுலதான் என் எதிர் காலமும் இருக்கு."-என்ற கங்காணி, பேசும் போது அடிக்கடி சுற்றிச் சுற்றிப் பார்த்துக் கொண்டான்.

சந்திரமோகனுக்கு அதிரடியாக தலையைச் சுற்றியது.



இவன் பேச்சில் எந்த அளவு உண்மை இருக்கும்? என்கிற சந்தேகமெல்லாம், தெரு நாய் வீதியில் அலைகிற தினுசில் மனவெளியில் வந்து ஓடிவிட்டுப் போனது.

ஆனாலும் ஏழுமலையின் கண்கள் நான் பொய் பேசுபவனில்லை என்பது போன்ற ஒரு உணர்ச்சியைத் தர சந்திரமோகனும் விவேகத்தின் முதல் படியில் ஏற ஆரம்பித்தான்.

பிரிந்து கிடந்த கைகளை சட்டென்று கூப்பினான்.

அப்படியே குளிரில் நடுங்குகின்றவன் மாதிரி ராயர் எங்கே என்று தேடிக்கொண்டு நடந்தான். ஏழுமலைக்கும் புரிந்து விட்டது.

ஹாஸ்பிட்டல் காரிடார்கள் அழுக்கு வாசமும் குளோரைடு டெட்டால் கலப்புமாக மூக்கை நிமிண்ட, அங்கங்கே பண்ணையாட்கள், சங்கவை நாச்சி என்று கண்ணில் பட்டார்கள்.

எங்கே ராயர்?

எமெர்ஜென்சி வார்டை ஒட்டி நின்று கொண்டு கோபாலுடன் பேசிக் கொண்டிருந்தார்.

கூப்பிய கைகளுடன் அவர் எதிரே போய் நின்று அதிக சிரமத்தின் பேரில் கஷ்டப்பட்டு அழுதான். கண்ணீரும் சுமாராக வந்தது.

"மாமா, என்னை மன்னிச்சிடுங்க மாமா... நான் இப்பத் தான் நம்ம குலதெய்வத்தோட சக்தியை உணர்றேன். எல்லாம் என் தப்பு மாமா... என் தப்பு" -பட்பட வென்று தலையில் அடித்துக் கொண்டான்.

ராயர் கூட அதைப் பார்த்து தடுமாறிப் போனார்.

35846
629352
சென்னை - 99

கோபால் சந்திரமோகனை சமாதானப்படுத்தி கட்டிக் கொண்டான். ஒரு மூலையாக பார்த்து உட்கார்ந்து விட்டிருந்த ரத்னசபாபதியும் சப்தம் கேட்டு எழுந்து வந்தார்.

"அப்பா... நான் மொட்டை போட்டுக்கறேன்பா. இந்த தடவை மட்டுமில்லப்பா. இனி வருஷா வருஷம் இதே தேதியில மொட்டையடிச்சுக்கறேன்பா-சாமி என்னை மன்னிச்சுடுமாப்பா... சொல்லுங்கப்பா... சாமி என்னை மன்னிச்சிடுமா?"

-அவனது கேள்வி அவரை உலுக்கியது. ராயரைப் பார்த்தார்.

"நம்புவோம்... மனசார அவனை நம்புவோம். அது மட்டும்தான் இப்ப நம்ம கைல இருக்கு," என்ற ராயர் தொடர்ந்து அங்கே நிற்கப் பிடிக்காதவர் மாதிரி விலகினார்.

வேளச்சேரியை ஒட்டி மகாபலிபுரம் கடற்கரைச் சாலைப்பகுதி. ரத்னசாபதியின் பங்களா.

அந்தப் பங்களாவை விட்டுத்தான் ஆப்பிள் நிறத்திலிருக்கும் சாண்ட்ரோ ஒன்று வெளியேறிக் கொண்டிருந்தது.

உள்ளே ரத்னசபாபதியின் தர்மப்பத்தினி ருக்மணி!

'கிருஷ்ண... கிருஷ்ண...' என்றது அவள் உதடு. டிரைவர் இனி வேகமாகலாம் என்கிற மாதிரி ஆக்சிலேட்டரில் வேகம் கூட்டினான்.

"அந்த போனை எடுத்து பேசேன்... அவரையும் என்கிட்ட பேசச் சொல்லேன்."

அந்தப் பெண்மணி கொஞ்சம் வெண்கலக் குரலில் நடுக்கத்தோடு கட்டளையிட, டிரைவர் டிரைவிங்குக்கு



நடுவிலேயே செல்போனை எடுத்து எண்களைத் தட்டி காதருகே வைத்துப் பிடித்தான்.

"என்ன நீலமேகம், என்ன ஆச்சு?"

"அம்மா, ஐயா போனை லாக் பண்ணி வெச்சிருக்கார்னு நினைக்கேன். கொஞ்சம் கழிச்சு தட்டிப்பாக்கேன்" என்று தன் நெல்லைத் தமிழைக் கொஞ்சம் போல காண்பித்தான்.

"ஐயய்யோ! நான் இப்ப என்ன பண்ணுவேன். ஹார்ட் பேஷண்ட் ஹார்ட் பேஷண்ட்டுன்னு எனக்கு எதுவுமே சொல்லக்கூடாதுன்னு முடிவு செய்துட்டாங்க போல இருக்கு."

ருக்மணியம்மாள் சலிப்பு மணியம்மாளானாள்.

"கவலப்படாதீங்கம்மா."

"அந்த விஷ்ணு சஹஸ்ரநாமம் கேசட்டை போடு..." என்றாள் ருக்மணி.

அதுவும் 'சுக்லாம் பாதரம் விஷ்ணும்...' என்று ஸ்டீரியோவில் கசியத் தொடங்கியது. நடுவில் சாப்பாட்டில் சிக்கிய கல்லால் முகம் கோணலாகிற மாதிரி டிரைவர் தடுமன் தும்மல் போட்டு ருக்மணியின் முகத்தில் கோணலை உருவாக்கினான்.

"உனக்கென்ன தடுமனா?" -கேட்டாள்.

"ஆமாங்கம்மா..."

"எனக்குத் தெரியாம ஐயாவோட ஏ.சி. ரூம்ல படுத்திருப்பே அதான்..." என்றாள் அவள்.

"இல்லம்மா. நான் அப்படி எல்லாம் படுத்துக்கறவன் கிடையாது. எப்பவும் கார் ஷெட்டு மரப்பெஞ்சி தான்..."

"இதை நான் நம்பணுமாக்கும். இப்படித்தான் தோட்டக்காரன் கண்ணாயிரம் நான் தர்மபுத்திரனோட பேரன்னான். கடைசியில பார்த்தா தோட்டத்து மரத்து வாழைக்கா அவன் வீட்டு சமையல்ல மணக்குது. உங்களை எல்லாம் வைக்க வேண்டிய இடத்துல வைக்க எங்களுக்குத் தெரியல."

டிரைவர் நீலமேகம் எதிரில் வரும் லாரி மீது அப்படியே காரை ஏற்றி விடலாமா என்று ஒரு வினாடி யோசித்தான்.

"அதான் கார்ல ஏசியை போடமா வர்றியாக்கும்?" -இது ருக்மணியின் அடுத்த பஞ்ச்!

"இல்லம்மா. மறந்துட்டேன்..." என்று ஸ்விட்சை தட்டி விட்டான்.

பத்தாவது நிமிஷம் தும்மல் அவன் மூச்சுக்குள் ஒரு துருவலை நிகழ்த்தியது.

கஷ்டப்பட்டு அடக்கப்பார்த்தும் முடியாமல் தும்மினான்.

ருக்மணிக்கு எரிச்சலாக வந்தது.

நிமிர்ந்து நிமிர்ந்து பார்த்தாள்.

அவனும் அடக்கிக் கொண்டான். கவனத்தை திசை திருப்புகிற மாதிரி செல்போன் கனைத்தது.

"எடு... எடு..."

எடுத்துத் தந்தான்.

"ஹலோ... யாரு.. நீங்கதானா?"

"......"

"என்னது... ஸ்ரீ போய் சேர்ந்துட்டாளா? டேய், அந்த டேப்பை நிறுத்துடா. என்னங்க சொல்றீங்க?"



"......"

'நான்தான் சொன்னேனே... நம்ப சாமி சக்தி போல வருமா? சந்திரன் இப்ப எப்படி இருக்கான்?"

"......"

"அவனுக்கும் இது வேணும்! அவனை ஜாக்கிரதையா பார்த்துக்குங்க. அண்ணன் பக்கத்துல இருக்காரா?"

"......"

"அண்ணே... என்னண்ணே இப்படி ஆயிடுச்சு?"

"......"

"சரிண்ணே... நீ சொல்றது தான் சரி. சனியன் ஒழிஞ்சதுன்னு நினைச்சுக்க வேண்டியதுதான்! இடையில வந்தவ இடையிலேயே போய்ட்டா. எல்லாம் நல்லதுக்குத் தான்! நீ நம்ம ராதாவை தருவேதானே?"

"......"

"எனக்கு ஒண்ணுமில்லண்ணே... என்னடா இப்படி ஆயிடுச்சேன்னு கொஞ்சம் சுருக்குன்னு இருந்துச்சு. ஆனா இப்ப உன் கூட பேசின உடனே சரியாயிடிச்சு. அது சரி சந்திரன் மொட்டை போட சம்மதிச்சுட்டானா?"

"......"

"நல்லது... நல்லது... அவன் மேல ஒரு கண் இருக்கட்டும். ஸ்ரீமதிதான் உலகத்துலயே ரம்பைங்கறது அவன் நினைப்பு. நம்ம ராதாவுக்கு என்ன குறைச்சல்?"

"......"

"சரிண்ணே... சரிண்ணே... நான் வந்துக்கிட்டே இருக்கேன். இன்னும் அஞ்சாறு மணி நேரத்துல அங்க இருப்பேன். இட வழில எங்கேயும் நிறுத்தப் போறதில்ல...

ஹாச்ச்சூ! தடுமன் எனக்கு இல்ல டிரைவருக்கு.. நாயிக்கு ஏ.சின்னா ஒத்துக்காதாம்... சரி... சரி... சொச்சத்தை நேர்ல பேசிக்கலாம் வெச்சுடறேன்."

-ஒரு வழியாக பேசி முடித்து விட்டு செல்ஃபோனை அருகிலேயே வைத்துக் கொண்டாள்.

டிரைவர் நீலமேகம் முகத்தில் ஏகத்துக்கும் எண்ணப் பந்தல்!

**ஆ**யிரம் வேலிக்காட்டின் மண்சாலை மேல் புழுதிப் பூச்சுகளை உருவாக்கியபடி பிரவேசித்த சாண்ட்ரோ, அந்த கருங்கல் மாளிகை முன் ஆசுவாசத்தோடு நின்றது.

சங்கவை நாச்சி "ருக்கு" என்றபடி ஓடி வந்து கட்டிக் கொண்டாள்.

பிரம்பு நாற்காலி ஒன்றில் சோகமாக உட்கார்ந்து கொணடிருந்த சந்திரமோகன் உலர்ந்து போன ஃபெவி கால் போல இறுகிப்போயிருந்தான். நிமிர்ந்தும் பார்த்தான்.

"சந்திரா..." என்று அவன் பார்ப்பதை வைத்து அவனிடம் ஓடியது அந்தப் பணக்கார பரங்கிப் பழம்.

"வாம்மா... பயணமெல்லாம் எப்படி இருந்துச்சு?"

"அதை விடுடா... இப்ப அதுவா முக்கியம் -ஸ்ரீ நம்மளை விட்டுப் போய்ட்டாளேடா?"

"எல்லாம் என் தப்பும்மா. உலகத்தைப் படைச்ச கடவுளை நான் சந்தேகப்படலாமா? அதான் எனக்குத் தண்டனை கொடுத்துட்டான்."

பரபரப்பு, பதட்டம், தடுமாற்றம் எதுவுமேயில்லாத ஒரு ஞானியைப் போல ஆனால் அதில் வெற்றிலைக்கு ஏற்ற அளவு சுண்ணாம்பு போல துக்கம் கலந்து பேசினவனை கங்காணி ஏழுமலையும் பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால் அவனை அந்த கல் பங்களாவின் கொலைகார



ராஜபாளையத்து நாயும் பார்த்துக் கொண்டிருந்ததுதான் கொடுமை!

## 8

**ச**ங்கிலியால் இழுத்துக் கட்டப்பட்டிருந்த அது பாய்வதற்காக அடிக்கடி முயற்சி செய்து கொண்டிருந்தது. முடியாமல் போனதில் அது கட்டப்பட்டிருக்கும் இடத்தில் அரை அடிக்குப் பள்ளம்!

அங்கங்கே மனிதர்கள்.

குறிப்பாக வேலிக்காட்டு கூலிக்கூட்டம் மிக செயற்கையாக அழுது கொண்டு நின்று கொண்டிருந்தது.

ருக்மணியும் சந்திரமோகனை விட்டு விலகி பங்களா காரிடாரில் கிடத்தப்பட்டிருந்த ஸ்ரீமதியின் சடலத்தை நோக்கிச் சென்றிருந்தாள்.

தலையில் கட்டோடு உடம்பு முழுக்க பொட்டலமாய் கட்டப் பட்டிருக்க நெற்றிப் பொட்டிற்கு பதிலாக தங்க நாணயம் மின்ன ஸ்ரீமதி தன் அன்பு(?) மாமியாரை ஆத்ம சொரூபத்திலிருந்து பார்த்தாள்.

"என் தாயி... இதுக்குத்தானா நீ அமெரிக்காவுல இருந்து வந்தே?" சூழ்நிலைக்கேற்ற டயலாக்கோடு மார்பில் அறைந்து கொண்டாள்.

சங்கவை தேற்றினாள்.

"நடந்தது நடந்து போச்சு ருக்குமணி... நீ வா!"

அவள் ருக்மணியின் தோளைப் பற்றித் திரும்பும்போது 'சலபுலசலபுல' என்று கடலை உடைபடுவது போல ஒருவித சலசலப்பு.

வாயிற்புறத்தில் குதிரை ஒன்று கனைக்கும் சப்தமும் கேட்டது.

"ருக்மணி, பெரியப்பா வந்துட்டாராட்டம் இருக்கு..." என்றபடியே திரும்பிப்பார்த்தாள்.

வெள்ளைக் குதிரை ஒன்று பெருமூச்சோடும் தலையை உழற்றிய படியும் தெரிந்தது. அது இழுத்து வந்திருந்த சாரட் வண்டியில் இருந்து ஒரு வயதானவர் இறங்கிக் கொண்டிருந்தார். அவரது பெயரும் வித்தியாசமானதுதான். சமாதான பாண்டி!

இறங்கியவரால் நிமிர்ந்து நிற்க முடியவில்லை. போதைக்காரன் போல ஒரு தடுமாற்றம்.

ராயர் ஓடிப்போய் அவரைத் தாங்கிப் பிடித்திருந்தார்.

"என்னலே... என்ன நடக்கு இங்க?" -இது அந்தக் கிழட்டு மனிதர் தான்.

"ஒண்ணுமில்லப்பா- நீங்க அமைதியா இருங்க."

"இப்ப நான் என்ன அவுத்துப் போட்டு ஆடிக்கிட்டா இருக்கேன்?"

-உடம்பின் தள்ளாடல், துவளல் என்று எதற்கும் சம்பந்தமில்லாத கட்டையால் அடிப்பது போன்ற பதில்.

'சந்திரமோகன், யார் இவர்?' என்கிற மாதிரி பார்த்தான். ரத்னசபாபதி மிகப் பணிவாக அவரை நெருங்கி "சௌக்கியமா மாமா...?" என்று கேட்டது நன்றாக காதில் விழுந்தது.

"ஆரு... ஆருடா நீ?"

"அப்பா... இவர் நம்ம மாப்ள... ருக்மணி வீட்டுக்காரர்."

"ஆரு... சபா... ரத்ன... ரத்னசபாபதியா?"



"ஆமா... ஆமா..."

"சரி சரி மனசுல வெச்சுக்காதே, கண்ணு சரியா தெரியறதில்ல அதான். ஆமாம் உன் மருமகள்தான் போய்ட்டாளா...?"

"ஆமாம் மாமா..."

"இருந்திருந்து இருபது வருஷம் கழிச்சு வந்தது இப்படி காவு கொடுக்கத்தானா சபாபதி...?"

"அது... அது..."

"அதான் இந்த வேலிக்காடு ஒரு சாமித் தோட்டம்னு தெரியும்ல?"

"ஏதோ தெரியாம... விதி..." ரத்னசாபாதி சமாளிக்க, "பெரியப்பா..." என்று பக்கவாட்டில் வந்து அந்த மனிதரைக் கட்டிக் கொண்டாள் ருக்குமணி.

"ருக்கு..."

"நான்தான் பெரியப்பா ருக்குவேதான்!"

"உனக்குகூட நெஞ்சுல ஏதோ கோளாறுன்னாங்களே..."

"ஆமாம் பெரியப்பா... ஆனா அதுக்காக நீங்க கவலைப் படாதீங்க. நீங்க எப்படி இருக்கீங்க?"

"அதான் பாக்கறேல்ல... இருக்குறேன்... ஏதோ இருக்குறேன். இந்த பய என்ன குளத்து வீட்லயே கட்டிப் போட்டுட்டான்..."

அவர்கள் பேச்சின் இடையில் இன்னொரு காரின் பிரவேசம்.

ஸ்ரீமதியின் அப்பா உமாநாத்தும் அவர் மனைவி ராஜகாந்தமும் சேலத்திலிருந்து ஒரு புயலைப் போல வந்திருந்தார்கள்.

"அம்மாடி ஸ்ரீ..." -அலறல் குரலோடு வந்த ராஜகாந்தத்தையும் உமாநாத்தையும் பார்த்த நொடி சந்திரமோகனும் உடைந்து விட்டான்.

**வ**குப்பறைக்குள் இருந்தாள் ராதா. மெடலர்ஜி பிரிவில் கார்பைட் உலோகம் பற்றிய விளக்கத்தில் புரொபஸர்.

இடையில் வகுப்பறை ஸ்டீரியோ 'கொர் கொர்' என்று கொஞ்சம் கமறி விட்டு, "அட்டென்ஷன் டு மிஸ் கே ராதா. ஃபைனல் இயர் ஸ்டுடண்ட்... வுட் யூ ப்ளீஸ் கான்டாக்ட் இம்மீடியட்லி ரைட்டர் பத்ரிநாராயணன் இன் மெய்ன் ஆபீஸ் ரூம்!" என்றது.

அடுத்த இரண்டாவது நிமிடம் அந்த இன்ஜினீயரிங் கல்லூரியின் வகுப்பறையை விட்டு எந்தப் பதட்டமும் இன்றி வெளியேற ஆரம்பித்தாள் அந்தப் பெண்.

அதிசயமாக புடவை உடுத்தி, சாதாரணமாக தலையை பின்னிக்கொண்டு, ஆச்சரியப்படும்படியாக குங்குமக் கீற்றோடு இருந்தவளை ஒரு ஃபைனல் இயர் பி.ஈ. ஸ்டுடண்ட் என்று நம்புவது சிரமமாகத்தான் இருக்கும்.

நடையிலும் பாராட்டும்படியான ஒரு அமரிக்கை. மெயின் ஆபீசுக்குள் நுழைந்து ரைட்டர் பத்ரிநாராயணன் டேபிளை சமீபித்தபோது தொலைபேசி ரிசீவர் பிரிந்து கிடந்தது.

பத்ரி, ராதாவைப் பார்த்த பார்வையே உனக்கு போன் என்று ஜாடை காட்ட ராதாவும் காதைக் கொடுக்க,

"ராதாக் கண்ணு நான் அம்மா பேசறேன்..."

"என்னம்மா, ஏதாவது முக்கியமான விஷயமா?"

"ஆமாண்டா... உனக்கு சந்திராவை தெரியும்தானே?"

"யாரு...?"



"அதான் உன் மெட்ராஸ் அத்தை ருக்மணியோட பையன். அமெரிக்கால வேலையில இருக்கானே..."

"சொல்லு..."

"அவனும் அவன் சம்சாரமும் நம்ப வேலிக்காட்டுக்கு வந்த இடத்துல நடக்கக்கூடாதது நடந்து போச்சுடா!"

"சுருக்கமா சீக்கிரமா சொல்லு. முக்கியமான சப்ஜெக்ட் கிளாஸ்ல போய்க்கிட்டிருக்கு."

"பெரிய கிளாசு... இதைக் கேளு. நீ கூட நம்ம சாமி பத்தி அடிக்கடி அலட்சிமா பேசுவியே, அந்த சாமி சந்திராவோட பொண்டாட்டி ஸ்ரீமதியை காவு வாங்கிடுச்சு."

"என்னம்மா சொல்றே?"-ராதாவின் பதட்டம் ரைட்டர் பத்ரியை கூட நிமிர்ந்து பார்க்க வைத்தது.

"ஆமாண்டா கண்ணு... இப்பத்தான் அடக்கம் பண்ணிட்டு வர்றோம். நீ கோயமுத்தூர்ல இருக்கிறதால மெல்ல சொல்லிக்கலாம்னு நினைச்சேன். ஆனா இங்க விஷயம் வேறவிதமா ஆயிடுச்சு."

"என்ன...?"

"உன்னை உடனே புறப்பட்டு வரச் சொன்னார் உன் அப்பா. மிச்சத்தை நேர்ல பேசலாம்."

"செத்து காரியமெல்லாமும் முடிஞ்ச பிறகு நான் வந்து என்னம்மா பண்ணப் போறேன். எனக்கு இங்க முக்கியமான அசைன்மெட்டெல்லாம் இருக்கு..."

"இதோ பார்... உன் அப்பாவைப் பத்தி உனக்குத் தெரியும். சொல்ல வேண்டியதை சொல்லிட்டேன். நீ வராட்டி வர்ற வரை இங்க இருக்கற வேலைக்காரனுங்களை போட்டு மிதிச்சுக்கிட்டு இருப்பார். ஞாபகத்துல வெச்சுக்க. நான் போனை வெச்சுடறேன்." -டொக்.

ராதாவும் ரிசீவரை வைத்துவிட்டு நிமிர்ந்தாள்.

"எனி பேட் நியூஸ் மிஸ் ராதா...?" -இது பத்ரி.

"ஆமாம் சார். நான் ஊருக்குப் போகணும்."

"அப்ப சொல்லிட்டு கிளம்பம்மா...!"

தென்னந்தோப்பு சுத்தப்படுத்தப்பட்டுக் கொண்டிருந் தது. பாத்திகள் பிரித்துக் கட்டும் செவ்வகங்கள். அதில் நிமிண்டியபடி முளை விட்டிருக்கும் மதர்ப்பான புற்கள், கழஞ்சிச் செடிகள்... புசுபுசுவென்று குஞ்சரமாட்டம் தெரியும். அறுகம்புல்லின் எள்ளின் அளவான கதிர்த் தோகைகள்... எல்லாவற்றையும் சரசரவென வெட்டிச் சீவிக் கொண்டிருந்தான், ஜமக்காலித்தான் என்பவன். தூர நின்றபடி 'உம் ஆகட்டும்... ஆகட்டும்...' என்று ரேக்கி விட்டுக் கொண்டிருந்தான் கங்காணி ஏழுமலை.

தோப்பிலேயே கிணற்றை ஒட்டி அவசரப்பந்தல் ஒன்று போடப்பட்டு ராட்சஸ போவுணிகளில் கறி பிரியாணி கமகமப்போடு வெந்து கொண்டிருந்தது.

சற்றுத்தள்ளி பிரியாணிக்குப் பயன்பட்ட கரும் பன்றி களின் கால் குளம்புகள், அறுத்துப் போட்ட காதுகள், வால் துண்டுகள் கிடந்தன.

ஆயிரம் வேலிக்காட்டு கூலி ஜனம் வாசம் பிடித்தபடி நின்று கொண்டிருக்க, அந்தப் பக்கமாக வந்து கொண்டிருந் தான் சந்திரமோகன். கூடவே நாயைப் பிடித்தபடி கோபால்.

அந்த நாய் அவ்வப்போது அவன் கையில் இருந்து நழுவி ஓடி வேலிக்காட்டு ஜனங்களைப் பார்த்துக் குரைக்க, கோபாலும் 'ரீட்டா' என்ற குரலில் அதை அடக்க, ஒரு களேபரமான காட்சியாக அது இருந்தது.



ஏழுமலைக்கும் சந்திரமோகனைப் பார்க்கவும் ஒரு மாதிரியாகி விட்டது.

புசுபுசுவென்றிருந்த தலைமுடியை தியாகம் செய்து விட்டு மொட்டைத் தலையோடு அவனைப் பார்ப்பதில் வருத்தம் கொப்புளித்தது.

சந்திரமோகனும் தன்னைப் பார்க்கும் ஏழுமலையைப் பார்த்தான்.

'தம்பி... ரொம்ப நன்றி தம்பி... உங்க நடிப்புக்கு தலை முடியை கூட காணிக்கையாக கொடுத்துட்டீங்க. அதை விட்றாதீங்க...' அவன் பார்வையை மொழி பெயர்த்தால் இப்படித்தான் அர்த்தப்படும்.

சந்திரமோகன் புரிந்தது போல விரக்தியாக சிரித்தான்.

கையை அசைத்து அருகே அழைத்தான்.

நெருங்கிய ஏழுமலையிடம் கேட்டான்:

"என்ன நடக்குது இங்க?"

"சாவுச் சாப்பாடுங்க... வேலிக்காட்டு கூலி ஜனங் களுக்கு."

"இங்க எங்க வெச்சு போடுவீங்க...?"

"அதுக்குத்தான் தோப்பை சுத்தம் செய்யறாங்க."

"தோப்புல மண் தரையிலயா உக்கார வெச்சு போடப் போறீங்க...?" -குரலில் அதிர்ச்சியும் எதிர்ப்பும் தெரிந்தது. கோபால் வேறு திசையில் கவனமாக இருந்தான்.

"தம்பி, உணர்ச்சிவசப்படாதீங்க. அடக்கி வாசிங்க" என்றான்.

தோப்புக்கு எதிரில் பெரிய வேல்கம்பு கிராதிக் கதவோடு நந்தவனம் போல ஒரு தோட்டம்.

அதனுள்தான் ஸ்ரீமதியை புதைத்திருந்தார்கள். அதைப் பார்த்தவனுக்கு கண்களைக் கண்ணீர் மறைத்தது. நடுவில் கோபாலின் நாய் திரும்ப அறுத்துக் கொண்டு ஓட, அதைத் தொடர்ந்து கோபாலும் ஓட, அந்த இடைவெளியில் ஏழுமலை சொன்னான்: "இன்னிக்கு எப்படியும் அம்மா பொணத்தை வெளிய எடுத்துடணும்."

ஏழுமலையின் பேச்சில் ஒரு திட்டம் தெரிந்தது. சந்திர மோகனுடன் கலந்து முன்பே பேசிவிட்டது போன்ற அந்தத் திட்டத்தின் பின்புலம் பயங்கரமானது.

## 9

ஆயிரம் வேலிக் காட்டின் மயான நந்தவனம் என்பது ஒரு மதிப்பான இடம். ஊனக்கள்ளன் என்னும் மயானக் காப்பாளி சதா மயான மண்டபத்திலேயே படுத்துக் கிடப்பான்.

அவன் தான் ஆயிரம் வேலிக் காட்டில் யாராவது இறந்தால் போனால் காரியங்கள் செய்பவன். சமயங்களில் ராயரின் முன்னால் மண்டியிட்டபடி பேசிக் கொண்டிருப்பான்.

இப்பொழுது கூட விருந்துக்காக வெட்டப்பட்ட பன்றியின் மாமிசக் கழிவுகளை ஒரு ஈச்சம் பாயில் எடுத்து வைத்து அதை ஒரு குழியில் போட்டு மூடுவதற்காகத் தென்னந்தோப்புக்குள் வந்து கொண்டிருந்தான்.

அவன் வருவதைப் பார்த்துவிட்டு ஏழுமலையும் ஒதுங்கினான்.

சந்திரமோகனும் அவனை அளக்கின்ற மாதிரி பார்த்தான். சொரசொரவென்ற தாடை, அழுக்கேறி சடை பிடித்து விட்ட தலைமுடிக்கூட்டம், பழுப்பு நிறத்துக்கு



மாறிவிட்ட அழுக்கு வேட்டி, பார்வை மூடியபடி ஒரு கறுப்புத் துண்டு, இடது காலில் ஒரு செப்பு வளையம், கைவசம் சலங்கை கட்டிய கருவேலந்தடி, சற்று கெந்தலான நடை.

கோபாலின் வசம் ஒரு காவல் வீரனைப் போல் வந்த நாயானது அவனைப் பார்த்துவிட்டுக் குரைக்காமல் அவனை நோக்கி ஓடிவந்தது.

"வாடா வா..." என்று அவனும் அதை வாரி அணைத்தான். அது அவனிடம் விழுந்து புரண்டது. நாவால் காதோரமாய் ஆவேச இளைப்பு இளைத்து அன்பைக் கொட்டியது.

கோபாலும் நெருங்கி வந்தான்.

"கும்புட்றேன் சின்னாண்டே!" -ஊனக்கள்ளன் நாயை ஷணத்தில் விலக்கி விட்டு விட்டு அப்படியே மண்டியிட்டான்.

"என்ன கள்ளா... விருந்துக்கு வந்தியா?"

"இல்லீங்க சின்னாண்டே. இந்த விருந்துல நான் கலந்துகிட்டா பெரியாண்டே என்னை சும்மா விடுவாருங்களா... பன்னிக்கழிவிங்கள அள்ளிப் போடச்சொல்லி சமையற்காரன் சொல்லிவிட்டான். அதான் வந்தேனுங்க."

"சரி சரி போய் வேலையைப் பாரு."

கோபால் சொல்ல அவன் மண்டியிட்ட நிலையில் இருந்து எழுந்து வேகமாக பிரியாணி சமைக்கும் இடம் நோக்கி நடக்க ஆரம்பித்தான். நாயும் அவன்பின் ஓடியது.

கோபால் பார்வை திரும்பி சந்திரமோகனைப் பார்த்தது.

சந்திரமோகன் முகத்தில் அதிர்ச்சிகளின் அணிவகுப்பு.

"என்ன சந்திரா... திகைச்சுப் போயிட்டே...?"

"ஒண்ணுமில்ல கோபால். ஆமா ஏன் அவன் மண்டி போட்டுகிட்டு பேசறான்."

"இங்க ரொம்ப பேர் என்கிட்ட, அப்பா கிட்ட அப்படித்தான் பேசுவாங்க."

"இட்ஸ் ஹைலி இடியாட்டிக்-டோட்டல் ஸ்லேவிசம்." கோபால் அதைக்கேட்டு சிரித்தான். சிரித்தபடியே,

"ஏன் அப்படி நினைக்கறே... இதை ஒரு எஜமான விசுவாசமா நினைச்சுப்பாரேன்."

"இதுக்கு பேரா எஜமான விசுவாசம்?"

"இங்க இப்படி நடந்துக்கறதுதான் எஜமான விசுவாசம். இதெல்லாம் இன்று நேற்று பழக்கங்க இல்லை. முன்னூறு வருஷத்து பழக்கம்."

"முன்னூறு வருஷத்து தப்புன்னு சொல்லு." -சந்திர மோகனின் குரலில் ஆவேசம் கூடிப்போனது. ஐய்யய்யோ அது தப்பு -ஆபத்து! என்று உடனேயே கண்டிக்கிறார் போல தொலைவில் நின்று கொண்டு மட்டை வெட்டத் தொடங்கியிருந்த ஏழுமலை பெரிதாக இருமினான்.

சந்திரமோகனும் ஷணத்தில் புரிந்து கொண்டு தடுமாற்றத்துடன் கோபாலைப் பார்த்தான்.

"சந்திரா, நான் சொல்றேனேன்னு தப்பா எடுக்காதே. நீ காரியமெல்லாம் முடிஞ்ச உடனே சென்னைக்கு கிளம்பிடு. அதுதான் உனக்கு நல்லது."

"சாரி கோபால்ட்... எனக்கு இந்தியாவோடே கல்சரே ரொம்ப அந்நியமா போயிட்டதால அப்பப்ப நான் நார்மல் ஹ்யூமன் ஃபீலிங்கோட பேசிட்றேன். ஐ ஆம் சாரி."

"சரி சரி வா... நாம இங்க இருந்தா ஒருத்தன் கூட சாப்பிட மாட்டாங்க."



"ஏன்?"

"அதுவும் இங்க எஜமான விசுவாசத்தோட சேர்த்தின்னா உனக்கு கோபம் வராதே."

கோபால் சாமர்த்தியமாக கேட்க, சில நொடி அவனை ஊன்றிப் பார்த்து விட்டுப் புன்னகையோடு அவனோடு சேர்ந்து கொண்டு நடக்க ஆரம்பித்தான்.

பார்த்துக் கொண்டேயிருந்த ஏழுமலைக்கு அப்பாடா என்றிருந்தது!

**ந**ல்ல காராம் பசு ஒன்று - கூடவே ஒரு பித்தளைக் குடம் - அது வழிய வழிய பச்சை அரிசி. அதன் மேல் மஞ்சள் பூசிய தேங்காய்.

அவ்வளவையும் தானமாக வாங்கிக் கொண்ட அந்த பிராமணர், "அப்ப நான் உத்தரவு வாங்கிக்கறேன்" என்றவராக அங்கிருந்து புறப்பட்டார்.

அவ்வளவையும் கவனித்துக் கொண்டிருந்த உமாநாத் தும் ராஜகாந்தமும், ரத்னசபாபதியையும் ருக்குமணியையும் தயக்கத்தோடு நெருங்கினார்கள்.

"சம்பந்தி..."

"சொல்லுங்க -என்ன விஷயம்?"

"என் மகள் செத்து இன்னிக்கு இரண்டாவது நாள். பால் தெளிக்கற சடங்குல இருந்து -பத்து நாள் காரியம் வரை எவ்வளவோ இருக்கு -தீட்டு கழிஞ்சிட்டதா சொல்றாங்களே எப்படி?" உமாநாத் சுரத்தே இல்லாத குரலில் கேட்டதற்கு ரத்னசாபதிக்கு விடை தெரியவில்லை. ருக்மணி கூட நெளிந்தாள். அப்படியே நிமிர்ந்து எங்கே தன் அண்ணன் என்று ராயரைத் தேடினாள். ஆனால் ராயருக்கு பதில் ராயருக்கு இந்த மாதிரி விஷயங்களில்

எல்லாமாய் இருக்கும் பண்ணை கேஷியர் ராமலிங்கம் தான் கண்ணில் பட்டார்.

"ராமலிங்கம்..."

"அம்மா..." -குரலோடு வந்தார் ராமலிங்கம்.

"இவங்க என்னவோ கேக்கறாங்க பாரு."

"அப்படீங்களா... ஐயா என்னங்க விஷயம்?"

"இல்ல... என் மக செத்து இரண்டு நாள் தான் ஆகுது. பத்து நாளைக்கு காரியம் இருக்கு. ஆனா இரண்டாம் நாளான இன்னிக்கே தீட்டு கழிஞ்சிடிச்சுன்னு சொல்லிட்டு தானம் வாங்கிட்டு போறாரே ஐயர்."

"அதுதாங்க வேலிக்காட்டுல இந்த பண்ணை வீட்டோட வழக்கம்."

"புதுசா இருக்கே..."

"பண்ணைக்காட்டு ஐதீகங்களே வித்தியாசமாதாங்க இருக்கும். பத்து நாள் துக்கம் அனுஷ்டிச்சா கோயில்ல பூஜை செய்ய முடியாது பாருங்க... அதனால இரண்டாம் நாளே எல்லாத்தையும் முடிச்சு விட்டுட்றோம்."

"கோயில் இருக்கற தெருவுல பிணம் விழுந்தாதான் இப்படி சொல்வாங்க. சாவு காரியத்துக்கும் கோயிலுக்கும் என்ன சம்மந்தம்?"

உமாநாத் ஏதோ ஒரு பெரிய தவறை ஒப்புக்கொள்ள மறுக்கிறார் போல திரும்பவும் பதில் கேள்வி கேட்டார்.

"தெரியாதுங்க... இதுக்கு பதிலை பெரியாண்டே தான் சொல்லணும்." -நறுக்கென்று சொல்லிவிட்டு ஒதுங்கிக் கொண்டார் ராமலிங்கம். அருகில் இருந்து அவ்வளவையும் கேட்டுக் கொண்டிருந்த ருக்மணிக்கு மூஞ்சி கோணிப் போய் விட்டிருந்தது.



"செத்துபோனதுக்கு பின்னால காரியம் எத்தனை நாள் நடந்தா என்ன, ஸ்ரீமதி உயிரோடயா வந்துடப் போறா?" -என்று சற்றுக் காட்டமாகவே கேட்டான், சந்திரமோகன்.

"மாப்ள..."? -உமாநாத் விக்கித்தார்.

"இங்க இது தான் வழக்கம்னா விட்டுட்டு போவீங்களா-என்னமோ பெரிசா கேள்வி கேட்டுக்கிட்டு இருக்கீங்களே..."

-திரும்பவும் அவனிடம் அசிரத்தையான வார்த்தைப் பிரயோகங்கள்...

சுற்றி நிற்கும் பலருக்கும் புருவத்தில் வளைசல்.

ருக்மணி மட்டும் மகனை பளபளப்பான கண்களோடு பார்த்தாள்.

நடுவில் கார் ஒன்றின் பிரவேசம்.

"அம்மாடி ராதா..." என்றபடி முன்னால் சென்றாள், ருக்மணி.

ராதாவோ ருக்மணியைப் பார்த்து, "எப்படி இருக்கீங்க அத்தை?" என்று சாதாரணமாய் கேட்டுவிட்டு மொட்டைத் தலையோடு அதிர்ச்சியளித்த சந்திரமோகனை சந்தேகத்தோடு பார்த்தாள்.

"ஐ ஆம் எக்ஸ்ட்ரீம்லி வெரி சாரிங்க. கடவுள் ரொம்ப கொடுமையானவர்!" என்றாள் நறுக்கென்று.

உமாநாத்துக்கு அவளது அணுகுமுறை இதமாக இருந்தது. அதே சமயம் அவரை ஒட்டிக்கொண்டார் போல் வந்து நின்ற சந்திரமோகன் அவர் பாக்கெட்டிற்குள் ஒரு கடிதத்தை யாரும் பார்க்காதபடி செருக ஆரம்பித்தான்.

# 10

பதட்டமும் பரிதவிப்புமாக இருந்த உமாகாந்த் பாக்கெட்டில் சந்திரமோகன் கடிதம் செருகுவதை உணர்ந்தவராக கூர்மையானார்.

அதற்குள் ராதா அவர்களை விட்டு விலகி எதிரில் வேகவேகமாக தன்னை நோக்கி வரும் சங்கவை நாச்சியைப் பார்த்துவிட்டுச் சென்றாள்.

"கண்ணு வந்துட்டியா?"

"என்ன கேள்விம்மா இது... அத்தான் இங்கதானே இருக்காரு. அவர் கிட்ட நாலு வார்த்தை ஆறுதலா பேச வேண்டாமா?" அவள் பதிலில் சற்று காட்டம்.

"சரிடா.. வாவா..." சங்கவை அதிரடியாக அந்தக் கருங்கல் மாளிகைக்குள் அவளை இழுத்துச் செல்லத் தொடங்கினாள்.

உமாநாத் முதல் தடவையாக சந்தேகமாக எதையோ உணர்ந்தார். கண்களில் உதிரப் பார்க்கும் நீரோடு நிற்கும் ராஜகாந்தத்தின் தோளை அணைத்தவர், ஒரு ஓரமாகப் போய் நின்று விட்டு சந்திரமோகனையும் பார்த்தார்.

அவனும் பார்த்தான். அந்தப் பார்வையில், 'சாரி மாமா... இங்க எதையும் காட்டிக்காதீங்க' என்னும் சமிக்ஞை.

அறைக்குள் ராஜகாந்தத்தோடு நுழைந்த உமாநாத் முதல்காரியமாக கதவை அழுந்தத் தாளிட்டார்.

ராஜகாந்தம் கேட்டாள்:

"என்னாச்சி உங்களுக்கு?"

"கொஞ்சம் பொறு ர்ராஜம். இங்க தப்புதப்பா ஏதேதோ நடந்துகிட்டிருக்கு."



"தப்புத்தப்பாவா... மாப்பிள்ளை வெடுக்வெடுக்குன்னு பேசினதைச் சொல்றீங்களா?"

"இல்ல... அவரே ஏதோ சிக்கல்ல இருக்கற மாதிரி தெரியுது. ஒரு நிமிஷம்..."

பாக்கெட்டில் கையை விட்டு கடிதத்தை வெளியே எடுத்தார்.

"என்னங்க அது லெட்டர்?"

"பொறு சொல்றேன்..." என்றபடி கண்களை கடிதத்தில் ஓடவிட்டார்.

"அன்புள்ள அங்கிள்...!

நாம் தனிமையில் நிறைய பேசவேண்டும். இங்கே அதற்கேற்ற சூழ்நிலையே சுத்தமா இல்லை. அகதா கிறிஸ்தி நாவல்களில் வருகிற மாதிரி அங்குலத்துக்கு அங்குலம் இங்கே மர்மங்கள் இருக்கின்றன. எனக்கு இதெல்லாம் மிகப் புதிது. நான் இங்கே இப்பொழுது நடித்துக் கொண்டிருக்கிறேன். இன்று இரவு நமக்கு மிகப்பெரிய பொறுப்பு இருக்கிறது. நீங்கள் சரியாக பத்துமணிக்கு புறப்பட்டு விடுங்கள். உங்கள் கார் ஆயிரம் வேலிக்காடின் எல்லையை தாண்டக்கூடாது. குறிப்பாக ஸ்ரீமதியை அடக்கம் செய்திருக்கும் சுடுகாட்டு நந்தவனம் அருகே அதை பிரேக் டவுனாக்கி நிறுத்துங்கள். (நிஜமாக அல்ல) பின் காலை காரை ரிப்பேர் பார்த்து விட்டுத்தான் எடுக்க முடியும் என்கிற மாதிரி ஒரு நிலையைச் சொல்லிக் கொண்டு திரும்புங்கள்.

காலை கார் ரிப்பேர் செய்யப்படும். அதுவும் என்னால்! பின் புறப்படுங்கள். அப்பொழுது நானும் உங்களோடு வருவேன். நாம் ஆயிரம் வேலிக்காட்டை விட்டு வெளி யேறிய பிறகு உங்களுக்கு நிறையவே அதிர்வுகள் காத்திருக் கின்றன.

எந்த நிலையிலும் இந்தத் திட்டம் பிசிறித் தட்டிவிடக் கூடாது. அப்படி ஏதாவது நடந்தால் நீங்கள் உங்கள் மகளை மட்டுமல்ல என்னையும் இழந்து விடுவீர்கள்!

-சந்திரா."

கடிதத்தைப் படித்தவர் சோபாவில் விழுந்தார்.

"என்னங்க...?"

"ஒண்ணுமில்ல ராஜம்." அவர் அப்படிச் சொல்ல அவள் கடிதத்தை அவரிடமிருந்து உருவி வேகவேகமாக வாசித்தாள். அவரோடு சேர்ந்து அவளும் சோபாவில் விழுந்தாள்!

குட்டி நந்தஸ்வாமி சன்னதி முகப்புக்கு அவர் வந்து சேர அங்கே வேலிக்காட்டு ஜனக்கூட்டம் காத்துக் கொண்டிருந்தது. குறிப்பாக நெற்றியில் பெரிய நாமத்தோடு கண்பார்வை இல்லாத கிட்டா மணியரசு கற்படி மேல் தூண் ஒன்றில் சாய்ந்தபடி கையில் கோலோடு அமர்ந் திருந்தார்.

தொம் தொம் சப்தம் தனக்கருகில் கேட்கவும் சுரங்களைக் கூப்பிக் கொண்டு எழுந்து நின்றார். முகுந்த பட்டரும் அங்கிருந்தபடியே எல்லோர் மேலும் தீர்த்தத்தைத் தெளித்துவிட்டு கலசத்தையும் சன்னதிப் படிமுன் வைத்தார். பிறகு துளசித்தட்டை கையில் எடுத்துக் கொண்டு அர்ச்சனையை ஆரம்பித்தார்.

அர்ச்சனையை முடித்த பட்டர் மணியை அசைத்து கற்பூர ஆரத்தி காட்டி விட்டு பிறகு எல்லோருக்கும் தீர்த்தத்தைத் தரத்தொடங்கினார்.

கிட்டா மணியரசுவை நெருங்கி அவருக்கு தீர்த்தம் தரும்போது சட்டென்று அவரை பதட்டம் தொற்றிக் கொண்டது.



அவசர அவசரமாக தீர்த்தமும் துளசியும் தந்துவிட்டு பெருமாளே என்றவராக சன்னதிப் படியை நெருங்கினார். அங்கே உருண்டையாக இருந்த சந்தனத்தை எடுத்து அவசர அவசரமாக அதை சப்பாத்தி மாவுபோல உருட்டினார். பின் சாவித்துவாரத்தின் மேல் காய்ந்திருக்கும் சந்தனத்தை உதிர்த்துப் போட்டுவிட்டு உருட்டிய சந்தனத்தை திரும்பச் சாற்றி அதன் மேல் நடு குங்குமப் பொட்டையும் வைத்தார்.

கூட்டத்தில் கங்காணி ஏழுமலையும் இருந்தான். அவர் பொட்டு வைப்பதையே பார்த்தவன் அதை மீண்டும் மீண்டும் பார்த்தவனாக அங்கிருந்து கிளம்பிப் போனான்.

இரவு எட்டு மணி!

பங்களா முகப்பில் பளிச் சென்று மெர்க்குரி விளக்கு எரிய ஏகத்துக்கும் பிரம்பு நாற்காலிகள் போடப்பட்டிருந் தன. அவற்றில் ராயர் உட்பட ஒரு கூட்டமே உட்கார்ந்து கொண்டிருந்தது. ராயரை ஒட்டி நெருக்கமாக அமர்ந்து கொண்டிருந்தாள் ருக்மணி. அவளுக்கு சற்றுத்தள்ளி ஏதோ சிந்தனையில் ரத்னசபாபதி.

சந்திரமோகனும் சற்றுத்தள்ளி அமர்ந்திருந்தான். ராயருக்கு வெற்றிலை மடித்துக் கொண்டிருந்தான், வேலைக்காரன் ஒருவன்.

இறுக்கம்.

"அப்புறம் மாப்பிள்ளை..." அதை ராயரே உடைக்கிற தினுசில் ரத்னசாபாதியை ஏறிட்டார்.

"அப்புறம் என்ன அப்புறம்... பேரனோ பேத்தியோ பெறாக்கணும்னு ஆசையா வந்தேன். ஆனா முதலுக்கே மோசமாயிடிச்சு..."

"அதெல்லாம் ஒண்ணுமில்லை." -வெட்டினாள் ருக்மணி.

"என்ன சொல்றே ருக்மணி நீ...?"

"பெருமூச்சு விடாதீங்க. இப்பல்லாம் புயல்ல வேரோடு சாயற மரங்களையே திரும்பவும் நட்டு அதை தழைக்க வெச்சுட்றாங்க. நம்ம சந்திராவுக்கு என்ன வயசா ஆயிடிச்சு?"

"அப்படின்னா...?"

"ராதா எதுக்கு இருக்கா?"

-மிக வேகமாக இந்திய சினிமாக்களின் திரைக்கதையில் இருக்கும் வேகத்தோடு விஷயத்துக்கு வந்தாள் ருக்மணி. சந்திரமோகனுக்குத் திம்மென்று ஒரு குத்து நெஞ்சில் விழுந்தது. ராயர் அடுத்த வெற்றிலையை வாயில் நுழைத்துக் கொண்டிருந்தார்.

"நீ என்ன சொல்றே?"

"எந்த கெட்டதுலையும் ஒரு நல்லது உண்டுங்க. நம்ம ராதாவை சந்திராவுக்கு கட்டி வெச்சுட்டா போச்சு. அண்ணே நீங்களே சொல்லுங்க..."

ராயர் கொஞ்சமாக கமறிவிட்டுப் பேசினார்:

"இதை பத்தி நாம பேசிப் பிரயோஜனமில்ல ருக்மணி. உன் மகன் என்ன நினைக்கிறான், என் மக என்ன நினைக் கிறான்னு எவ்வளவு இருக்கு இதுல?"

"அதான் ஒரு தடவை காதலிச்சு இப்ப கையை சுட்டுகிட்டு நிக்கறானே. இனி தானா என் ஆசையை நிறைவேத்தாம போயிடுவான் என் மகன்."

"பொறு ருக்மணி. ஸ்ரீமதி செத்த இடத்துல புல்லுகூட முளைக்கல, அதுக்குள்ற அவ இடத்துக்கு இன்னொருத் தியை பத்தி பேசறியே..." -இது ரத்னசபாபதி.

"அப்ப புல்லும் செடியும் முளைச்ச பிறகு பேசவா?"



"அப்படி இல்ல... எதை எப்ப பேசணும்னு இருக்கு."

"அதைத்தான் நானும் சொல்றேன். டேய் சந்திரா, நீ என்னடா சொல்றே?"

சந்திரமோகனிடம் பதிலில்லை. இடையில் நாயின் பயங்கரக் குரைப்புச் சப்தம். "அண்ணே... எதுக்கு இந்த நாய் இப்படிக் குரைக்குது?" -ருக்மணி, நாய் கத்தும் திசையைப் பார்த்தபடியே கேட்க ராயரே எழுந்து போய்ப் பார்த்தார்.

பின்னாலேயே பண்ணையாள் ஒருவனும் வந்து நின்றான்.

"டேய், அந்தப் பக்கமா எவனோ போயிருக்கான். யாருன்னு பாருடா" என்றார் ராயர். அவனும் வேகமாக அந்த இருட்டுக்குள் சென்றான்.

"யாருடாது இந்தப் பக்கம்...?" கேள்வி ராயர் காதில் விழுமளவு சத்தமாக எதிரொலித்தது. வட பாகம் முழுக்க குரோட்டன் செடிகளின் தழைப்பு. அதில் ஒன்றின் பின்னால் இருந்து பதில் குரல் வந்தது.

"வேலா... நான் கங்காணி ஏழுமலை. கடப்பாரை மண்வெட்டியை நந்தவனத்துல போட வந்தேன். நீ எப்படியாவது சமாளி..."

"சரி சரி..."

-பதில் குரலை மிக மெலிதாக கொடுத்துவிட்டு திரும்பினான், ஏழுமலையால் வேலா என்றழைக்கப்பட்ட அந்தப் பணியாள்.

ராயர், நாயின் கழுத்தை நீவி விட்டுக் கொண்டிருந்தார்.

"யாருமில்ல ஆண்டே... மரநாய் ஏதாச்சும் ஓடியிருக்கும் போல..."

"அப்படியா...?" அவர் கேட்டவிதத்தில் அவருக்கு உண்மை தெரியும் என்கிற மாதிரி ஒரு அழுத்தம்.

கேட்ட ஜோரோடு நாயின் கட்டை அவிழ்த்து விடத் தொடங்கினார்.

அதுவும் குரோட்டன் செடியை நோக்கிப் பாய ஆரம்பித்தது.

## 11

அந்த ராஜபாளையம் சீறிக் கொண்டு ஓடியதைப் பார்த்து வேலன் விக்கித்துப் போனான்.

மெர்க்குரி விளக்குக்குக் கீழ் கிடக்கும் பிரம்பு நாற்காலியில் ராயர் உட்கார்ந்த நொடி குலைப்புச் சப்தம் அடங்கிப் போனது.

வேலன் கமறிக்கொண்டு வந்து காலில் எறும்பு ஊறும் போது தடுமாறுகிற மாதிரி நெளிந்து நெளிந்து நின்றான்.

"என்னடா நின்னுட்டே... சத்தம் ஏன் நின்னுச்சின்னு போய்ப் பார்..."

"இதோ அண்டே..."

திரும்பி ஓடினான்.

"வீரப்பா... வீரப்பா..." நாயின் பெயரை ராயர் கேட்கிற அளவுக்கு உரத்த குரலில் கத்திக் கூப்பிட்டான்.

அப்படியே குரலைத் தழைத்து, "ஏழுமலை, என்னய்யா ஆச்சு?" என்றும் கேட்டான். சரேலென்று புதரை விலக்கிக் கொண்டு வந்த ஏழுமலையின் தோள்மேல் பாய்ந்து சென்ற அந்த நாய் சவமாகக் கிடந்தது.



"கொப்புரானே... கொன்னுட்டியா?"

"சரி இப்ப என்ன பண்ணப்போறே?"

"காட்டுக்குள்ள ஒரு பொட்ட நாயைப் பார்த்துட்டு ஓடிப்போயிருச்சுன்னு சொல்லி சமாளி..."

"அப்படியெல்லாம் சொல்லி சமாளிக்ககூடிய இடமா இது ஏழுமலை?"

"இப்படிப் பயந்து பயந்துதான் நாம அடிமை மாக்கானுங்களாகவே ஆயிட்டோம். இப்போதைக்கு சமாளி. அந்தப் பொண்ணு பொணத்தோட சந்திரமோகன் ஐயா கிளம்பின பிறகு மத்ததை நான் பாத்துக்கறேன்."

"சரி, இப்பவே ராயர் காது விடைச்சிருக்கும். வீரப்பா... வீரப்பா..."

திரும்பவும் அலறலோடு திரும்பினான்.

"என்னண்ணே நீ... என் கேள்விக்குப் பதில் சொல்லாம அந்தப் பக்கமே பாத்துக்கிட்டிருக்கே."

"வீரப்பன் கத்துனா அர்த்தமிருக்கும் ருக்கு..."

"அதான் சத்தம் நின்னு போச்சே... நீங்க விஷயத்துக்கு வாங்க..."

"என் மகளைச் சந்திராவுக்குத் தர்றதுல எனக்கு எந்த இக்கு இச்சும் கிடையாது. எதுக்கும் சந்திரா சம்மதத்தைக் கேளு. ஏன்னா நம்ம சங்கதி எதுவுமே தெரியாம அமெரிக்காவுலேயே இருந்துட்ட புள்ள. அங்கெல்லாம் கல்யாணத்த பண்ணிக்கிட்டு ஒரு நாலைஞ்சு நாள் கழிச்சு தான் அப்பன் ஆயிகிட்டேயே சொல்லுவாங்களாமுல்ல?"

ராயரின் பதிலால் திரும்பவும் சந்திரமோகனுக்குள் ஒரு குத்து.

"டேய் சந்திரா, நான் அப்படி இல்ல மாமான்னு சொல்லுடா..." ருக்மணி குரலோடு அவனை நோக்கி நடந்தாள். ரத்னசபாபதிக்கு தர்ம சங்கடமாக இருந்தது.

கச்சிதமாக உமாநாத்தும், ராஜகாந்தமும் உள்ளிருந்து வந்தபடி இருந்தனர்.

"வாங்க உமாநாத்... உக்காருங்க."

"இருக்கட்டும். நாங்க இப்பவே ஊருக்குக் கிளம்பிட லாம்னு இருக்கோம். அதான் சொல்லிக்க வந்தேன்..."

"இப்பவா... இந்த ராத்திரியிலையா?" -ரத்னசபாபதி கைக்கெடிகாரத்தைப் பார்த்தார். மணி ஒன்பதை நெருங்கிக் கொண்டிருந்தது.

"இனி இங்க எங்களுக்கென்ன வேலை?"

உமாநாத்தின் பதிலில் ஊசிகள் ஒளிந்திருந்து குத்தின. ரத்னசபாபதிக்கும் புரிந்தது.

ஆனால் "அதுவும் சரிதான்..." என்று அவர்கள் புறப்பாட்டிற்கு தனது ஆமோதிப்பைத் தந்தாள் ருக்மணி.

குறுக்கில், "ஆண்டே, நம்ம வீரப்பன் ஓடிட்டான் ஆண்டே..." என்று வந்து கையைக் கட்டிக் கொண்டான் வேலன்.

"ஓடிட்டானா...?"

"ஆமாம் ஆண்டே... ஒரு பொட்ட நாய் திரிஞ்சுட்டு இருக்குது. அதைப் பார்த்துடிச் சாட்டம் இருக்கு."

"அந்தப் பொட்டை நாயை நீ பாத்தியாடா?"

"அது... அது... இல்லை ஆண்டே..."

"நாளைக்குக் காலைல அது இரண்டையும் முதல்ல சுட்டுட்டு அப்புறமா நீ மறுவேலை பார்க்கறே?"



"ச... ச... சரிங்க ஆண்டே..."

"எதுக்கு தந்தியடிக்கறே?"

"ஒ... ஒண்ணுமில்ல ஆண்டே..."

"சரி சரி போ... போ..." அவனைத் துரத்தி விட்டு உமா நாத்தையும், ராஜகாந்தத்தையும் பார்த்தார். அந்த இடைவெளியில் உமாநாத் பார்வை ராயரை ஈட்டி போல குத்திக் கொண்டிருந்தது ராயருக்கும் புரிந்தது.

'இந்த அவசரப் புறப்பாட்டுக்குப் பின்னால் ஏதோ ஒரு தீர்மானம் இருக்கிறது' என்றது அவரது உள்ளுணர்வு. "நீக்கறீங்களே உக்காருங்க" என்று மரியாதை காட்டினார்.

''பரவால்ல... நாங்க கிளம்பறோம்.'' உமாநாத் கும்பிட்டுவிட்டு தவறாமல் சந்திரமோகனைப் பார்க்க அவனும் 'ஓ.கே.' என்கிற மாதிரி சமிக்ஞை தந்தான்.

உமாநாத்தும் ராஜகாந்தமும் விலகிய மறுநொடியே ருக்மணி சந்திரமோகனை சமீபித்தாள்.

"சொல்லு சந்திரா... அம்மா ஆசைப்படி நடந்துக்குவே தானே?"

"இப்ப என்னம்மா அவசரம்?"

"நீ சரின்னு ஒரு வார்த்தை சொல். கல்யாணத்தை வேணும்னா உன் விருப்பப்படி எப்ப வேணா வெச்சுக் கலாம்."

"சரிம்மா..." மிகுந்த சிரமப்பட்டு அந்த வார்த்தையைச் சொல்லவும், உமாநாத் தான் கொண்டு வந்த சூட்கேஸோடு தனது காரை நோக்கி நடக்கவும் மிகச் சரியாக இருந்தது. அவன் பதிலைக் கேட்டு அதிர்ந்துபோய் திரும்பி அவனைப் பார்த்தார். ராயரும் அதை கவனித்தார். சந்திரமோகன் சுதாரிக்கத் தொடங்கினான்.

"நான் உன்கிட்ட சரி சொன்னா அந்த ஆள் திரும்பி பார்க்கிறார் பார்" என்றான். மாமனாரை அன்னியப் படுத்தி அந்த ஆள் என்று அவன் சொன்னது ருக்மணிக்கு மிகப் பிடித்துப் போனது. ராயரும் உச்சி குளிர்ந்தவராக, "என்ன மாப்ள... உங்களுக்கும் ராதாவைப் பார்த்த உடனே எண்ணம் மாறிடிச்சா?" என்றார்.

"அதெல்லாம் இல்ல மாமா... இன்ஸ்பாக்ட் நான் சாமி நம்பிக்கை இல்லாம இருக்கவே க்ாரணம் ஸ்ரீமதிதான். தொட்டதுக்கெல்லாம் கேள்வி கேட்பா. இங்க வந்து அனுபவப்பட்ட பிறகுதான் தெரியுது, நான் எவ்வளவு தப்பு பண்ணிக்கிட்டிருந்துருக்கேன்னு."

"இப்ப மனசாற நம்ம சாமியை நம்பறீங்கள்ல."

"இனியும் நம்பலேன்னா நான் நல்லா இருக்க முடியுமா மாமா!"

"அப்படிச் சொல்லுங்க."

அவர் சந்தோஷமாய் ஆமோதிக்க உமாநாத் காரை கிளப்புமுன் திரும்பவும் பார்த்தார்.

"என்ன?" வேண்டுமென்றே கோபக்குரலில் கேட்டான் சந்திரமோகன்.

"கொஞ்சம் எங்க கூட டவுன் வரைக்கும் வந்திங்கன்னா நல்லா இருக்கும்?"

"எதுக்கு?"

'ஸ்ரீமதிக்கு ஞாபகமா ஒரு பட்டுப்புடவை வாங்கித்தர விரும்பறேன்..."

"இது என்ன புதுப்பழக்கம்?"



"புதுப்பழக்கம்தான். ஏதோ எனக்குத் தோணிச்சு சொன்னேன். இஷ்டப்பட்டா வாங்க. இல்லேன்னா பரவால்ல..."

உமாநாத் காலில் விழுந்து விடுவார் போல் இருந்தது.

"சந்திரா, முதல்ல அவங்களோட போய் அவர் ஆசையை நிறைவேத்திட்டு வா."

ரத்னசபாபதி உதவிக்கரமாக அவனை உசுப்பிவிட்டார்.

"ரொம்ப டயர்டா இருக்குப்பா." வேண்டுமென்றே நெளிந்தான் அவனும்.

"போப்பா... பாவம் அவங்க. எவ்வளவு ஆசையா கூப்பிடறாங்க."

"சரி!" என்று அரைமனதாக கிளம்புகிற மாதிரி கிளம்பினான். காரில் அசிரத்தையாக ஏறி உட்கார்ந்தான்.

காரும் புறப்பட்டது.

பார்த்தபடியே இருந்தார் ராயர்.

காருக்குள்...

"மாமா, ஐ ஆம் வெரி சாரி மாமா... வெரி வெரி சாரி. உங்க மனசை நான் ரொம்ப நோகடிச்சுட்டேன்" என்று உமாநாத்தை கட்டிக்கொண்டு அழ ஆரம்பித்தான் சந்திரமோகன்.

"மாப்ள... என்ன நடக்குது இங்கே. உங்களுக்கு என்ன ஆச்சு?"

"எனக்கே புரியல மாமா. ஸ்ரீமதி விபத்துல சாகலை. அவளை கொலை செய்துட்டாங்களோன்னு சந்தேகப் படறேன்."

"கொலையா?" டிரைவ் செய்து கொண்டிருந்த காரை சரேலென்று பிரேக்கடித்து நிறுத்திவிட்டு சந்திர மோகனைப் பார்த்தார் உமாநாத்.

"ஆமாம். விவரமா உங்களுக்குச் சொல்றேன். இப்ப இந்த கார்ல நீங்க ஸ்ரீமதியோட டெட்பாடியை கொண்டு கிட்டு போறீங்க..."

"என்ன மாப்ள சொல்றீங்க?"

"ஆமாம் மாமா. அவ பாடியை போஸ்ட் மார்ட்டம் பண்ணி கொலையா இல்லை தற்கொலையான்னு தெரிஞ்சுக்கணும் முதல்ல. அப்புறம்தான் இருக்கு வெடி, இந்த ஆயிரம் வேலிக்காட்டுக்கு. பின்னால் உட்கார்ந்திருந்த ராஜகாந்தம் விசும்பி விசும்பி அழ ஆரம்பித்து விட்டாள்.

"அத்தை அழாதீங்க... நாம இப்ப ரொம்ப சாமர்த்தியமா நடந்துக்க வேண்டிய நேரம் இது. காரை எடுங்க. நான் சொன்னமாதிரி பிரேக் டவுன்னு சொல்லி நிறுத்திட்டு என்கூட வாங்க. மிச்சத்தை ஏழுமலை பார்த்துக்குவான்."

"அது யார் ஏழுமலை?"

"இந்த மோசமான இடத்துலயும் எனக்கு உதவக் கிடைச்சிருக்கிற ஒரு நல்லவன். நீங்க காரை எடுங்க."

உமாநாத்தும் காரை கிளப்பினார்.

நந்தவன இடுகாடு அருகே வரவும் நிறுத்தச் சொன்னான். கார் வெளிச்சம் பார்த்து தென்னை மரம் ஒன்றின் பின்னால் இருந்து ஏழுமலையும் வெளிப்பட்டான்.

"வந்துட்டீங்களா தம்பி..."

"ஒண்ணும் பிரச்னை இல்லையே ஏழுமலை?"

"என்ன அப்படிக் கேட்டுட்டீங்க... இப்ப நான் நிஜமாலுமே கொலைக்காரன் தம்பி."



"ஏழுமலை..."

"அதிராதீங்க... அங்க பாருங்க."

அவன் கை காட்டிய திக்கில் நந்தவன இடுகாட்டின் மயானத்தான் ஊனக்கண்ணனின் உடம்பு பிணமாகத் தரைமேல் கிடந்தது. மேலே ஒரு தென்னை மட்டை முகத்தை தவிர எல்லா இடத்தையும் மூடியிருந்தது!

## 12

தென்னை மட்டை மூடிக்கிடந்த ஊனக்கண்ணன் பிணம், உமாநாத்தையும் ராஜகாந்தத்தையும் ஒரு உலுக்கு உலுக்கியது. சந்திரமோகன் நெருங்கிச் சென்று குனிந்து பார்த்து விட்டுத் திரும்பி வந்தான். ஏழுமலை அமைதியாக நின்று கொண்டிருந்தான்.

"ஏழுமலை..."

"தம்பி."

"எதுக்கு எனக்காக நீ இவ்வளவு தூரம் ரிஸ்க் எடுக்கறே?"

"தப்பு தம்பி... உங்களுக்காக இல்லை. இந்த வேலிக் காட்டுக்கு ஒரு விமோசனம் பொறக்கணும்னுதான் இவ்வளவும் செய்யறேன்."

இருவரின் பேச்சின் இடையில் உமாநாத் நச்சரித்தார். "மாப்ள, என்ன மாப்ள இங்கு நடக்குது... எனக்கு ஒண்ணுமே புரியலியே..." -வெலவெலத்தார் அவர்.

"உங்களுக்கு மட்டுமில்ல மாமா... எனக்குத்தான் ஒண்ணும் புரியல. இந்த நிமிஷம் ஏழுமலைதான் என்னைக்கூட காப்பாத்திக்கிட்டிருக்கான்."

"தம்பி... இது நின்னு பேசற நேரமில்ல. இந்த ஆயிரம் வேலிக்காட்டுல மரம் மட்டைக்கெல்லாம் கூட கண் உண்டு. போட்ட திட்டப்படி முதல்ல அம்மா பொணத் தைத் தோண்டி எடுப்போம். வாங்க..."

எழுமலை பேச்சோடு வேகமாக மயானம் நோக்கி நடந்தான். முன் ஏற்பாடாக ஒரு கையில் மண்வெட்டியை யும் எடுத்துக்கொண்டு நடந்தான்.

ஆயிரம் வேலிக்காட்டின் சமாதி நந்தவனம் என்பதற்கு முன்னூறு வருஷ வரலாறு இருக்கிறது. அங்கங்கே திட்டுத் திட்டாய் சமாதிகள். சில சமாதிகளுக்கு மட்டும் மண்டபங்கள்.

மிக மிகச் சன்னமான வெளிச்சத்தில் கறுப்புத் திட்டு களாக ஒருவித நவீன ஓவியம் போலத் தெரிந்த அந்த நந்தவனத்தில் ஏராளமான மனோரஞ்சித மரக்கூட்டம். டார்ச் லைட் ஒளியோடு, நடக்கும் போதும் தழைத்து வளர்ந்திருந்த ரஞ்சித மரங்களைக் கைகளால் விலக்கிக் கொண்டு நடக்க வேண்டியிருந்தது.

"மாப்ள... இப்படி திருட்டுத்தனமா ஸ்ரீமதி உடம்பை எடுத்துக்கிட்டுப்போய் என்ன பண்ணப்போறோம்" -என்றார் உமாநாத்.

அதற்குள் ஸ்ரீமதியைப் புதைத்த சமாதி வந்துவிட்டது. ஏழுமலை இருவரையும் பார்த்தபடி "ஆரம்பிக்கட்டுங் களா?" என்று கேட்டான்.

"உம்...!" என்ற சந்திரமோகன் அந்த சன்ன இருட்டில் உடம்பெல்லாம் நடுங்க, தன்னுடன் இணைந்து நிற்கும் உமாநாத்தின் கைகளைத் தேடிப் பிடித்தான்.

"அங்கிள், ஸ்ரீமதி எதனால இறந்தாங்கறது எனக்குத் தெரியணும். அவ கொலை செய்யப்பட்டதா நம்ப நிறைய இடம் இருக்கு... அது மட்டுமில்லை. உடம்பை எடுத்துக்



கிட்டு போய் திருப்தியா என் மனைவிக்குக் காரியத்தை செய்யுங்க. இங்க இரண்டு நாள்ல எல்லாத்தையும் முடிச் சுட்டாங்க. ஒவ்வொரு விஷயத்துக்குப் பின்னாலேயும் இங்க மர்மம் இருக்கு. ஒவ்வொண்ணாத்தான் கண்டுபிடிக் கணும். ப்ளீஸ் கோ ஆப்பரேட் வித் மீ. ப்ளீஸ் அங்கிள்."

சந்திரமோகன் மெல்லிய குரலில் ரகசியம் பேசுவது போல சொல்லச் சொல்ல உமாநாத்தும் பதிலுக்கு அவன் கரத்தை அழுந்தப் பற்றி, தனது ஆதரவை அவனுக்குத் தெரிவித்தார்.

ஏழுமலை மண்ணை வெட்டிக்கொண்டே இருக்க, சட்டென்று ஸ்ரீமதியின் உடல் தெரிய ஆரம்பித்தது. மஞ்சள் கோடித்துணியில் ஒரு சுமங்கலியாய் ஏராள குங்குமத் தோடு அவள் முகம் புதைக்கப்பட்டிருந்தது.

சின்ன பென் டார்ச்சினை அடித்து வட்டமாக ஓர் ஒளிச்சேர்க்கையை உருவாக்கி அதை அப்படியே ஸ்ரீமதி யின் முகத்துக்கு நேராகக் கொண்டு சென்ற சந்திரமோகன் தன்னை மறந்து 'ஸ்ரீஈஈ...' என்றபடி அவள் முகத்தை குனிந்து அள்ளி எடுத்து மார்போடு அழுத்திக் கொண் டான்.

"தம்பி... உணர்ச்சிவசப்படாதீங்க. அப்பால முதலுக்கே மோசமாப் போயிடும். சொன்னாக் கேளுங்க" என்று தேற்றிய எழுமலையையும் மீறிக் கொண்டு விம்மியழுதான். உமாநாத்தும் மகள் உடம்பைப் பார்த்து விசும்பினார்.

"நகருங்க... நகருங்க..." இருவரையும் விலக்கிவிட்டு உடம்பைத் தொட்டுத் தூக்கி அப்படியே மணற்கட்டிகள் புரண்டு விழ தோளுக்கு ஏற்றிய பின் வேகமாக நடக்க ஆரம்பித்தான்.

சந்திரமோகனும் உமாநாத்தும் பின் தொடர்ந்து ஓடினார்கள்!

காரை நெருங்கியவன் டிக்கியைத் திறக்கச் சொல்லி விட்டு அதில் ஸ்ரீமதியின் சடலத்தை கிடத்தினான். டிக்கியை மூடிவிட்டு நேராக ஊனக்கண்ணன் பிணம் கிடக்கும் இடம் அருகே சென்று அதைத் தொட்டுத் தூக்கினான். அப்படியே ஸ்ரீமதியைப் புதைத்த குழியை நோக்கி ஓடி, அதில் ஊனக்கண்ணன் சடலத்தைப் போட்டு மூட ஆரம்பித்தான்.

கார் அருகில் நின்று கொண்டு சகலத்தையும் கவனித்துக் கொண்டிருந்த ராஜகாந்தம் சந்திரமோகனை நெருங்கி, "மாப்ள, இங்க நடக்கற எதுவுமே எனக்குப் பிடிபடலை. ஸ்ரீ உடம்பை இப்படி கார்ல போட்டுட்டீங்க, ஊருக்குப் போய் நாங்க காரியம் செய்யவா?"

"ராஜம்... மாப்ள விவரமா வந்து சொல்வார். இப்ப நாம கிளம்புவோம். அவரை இப்ப எதுவும் கேட்காதே. கமான்..."

"தேங்க்யூ அங்கிள்... நான் எப்படியாவது புறப்பட்டு நாளைக்கு சேலம் வரேன். அதுவரை பத்திரமா ஸ்ரீ உடம்பை வெச்சிருங்க. சேலத்துல எனக்கு ஒரு டாக்டர் ஃப்ரெண்ட் இருக்கான். அவன் பாடியை பிரிசர்வ் பண்றதுக்கும் போஸ்ட் மார்ட்டத்துக்கும் எல்லா உதவியும் செய்வான். அவன் பேர் அருணாசலம்! அவனா தேடி வருவான். அதுக்கு நான் பொறுப்பு. மத்த எல்லா விஷயத்தையும் நேர்ல பேசிக்கலாம்."

சந்திரமோகன் சொல்லி முடிக்க, உமாநாத்தும் சூழ்நிலை பயங்கரம் புரிந்து தாமதிக்காமல் காரை எடுத்தார். சந்திரமோகன் திரும்பினான். தொலைவில் ஸ்ரீமதியின் சமாதி மீண்டும் உருவாகி முடிந்திருந்தது. ஏழுமலை வியர்வையை வழித்தபடி சந்திரமோகனை நெருங்கி வந்தான்.

"தம்பி... இந்த ஆயிரம் வேலிக்காட்டோட முன்னூறு வருஷ சரித்திரத்துல முதல் தடவையா ஒரு பெரிய நல்ல



காரியம் இந்த அர்த்த ராத்திரியில நடந்துருக்கு. இது ஒரு ஆரம்பம்தான். மத்ததெல்லாம் உங்க புத்திசாலித்தனத்துல தான் இருக்கு. இனி நான் உயிரோட இருந்தா அதுவும் ஒரு அதிசயம்தான். எனக்கு ஏதாவது நடந்தா அதுகூட உங்க சந்தேகத்துக்கு ஒரு விடையா இருக்கும். என்னைப் போல ரொம்பப் பேர் இந்த வேலிக்காட்டுல வாயைத் திறக்கமுடியாதபடி மனசு புழுங்கிக்கிட்டு இருக்கோம். அதுல ஒருத்தன் செல்வகோடி. ஒருக்கா எனக்கு ஒரு முடிவு வந்துட்டா அவன் உங்களுக்கு உதவி செய்வான். ஒண்ணு மட்டும் நிச்சயம் தம்பி. இந்த வேலிக்காட்டுக்கு ஒரு சுதந்தரத்தை வாங்கி உங்க உறவுக்காரங்க கொட்டத்தை மட்டும் அடக்காம விட்டுடாதீங்க."

புன்னகையுடன் தலையசைத்து, ஏழுமலையிடம் விடை பெற்றுச் சென்றான் சந்திரமோகன்.

**விடிந்துவிட்டது!**

குட்டி நந்தஸ்வாமி கோவிலின் 'கணீர்' என்ற மணி சத்தம் சந்திரமோகனை எழுப்பி விட்டது. கண்களைச் கசக்கிக் கொண்டு எழுந்தான்.

முதல் நாள் இரவு சம்பவங்கள் மெல்ல ஞாபகச் செல்களை நிமிண்ட ஆரம்பித்தன. 'உமாநாத் சேலம் போய் சேர்ந்திருப்பாரா?' கேள்வி பிறந்து கொத்தியது.

பற்களைக் கூட பிரஷ் பண்ணாமல் தொலைபேசியை நோக்கித்தான் சென்றான்.

மறுபக்கத்தில் ரிங் போய்க் கொண்டே இருந்தது. ஒரு வேளை இன்னமும் சேலம் போய்ச் சேர்ந்திருக்க வில்லையோ? கவலை வந்து ஆக்ரமித்தது. அறைக்கதவை திறந்து கொண்டு வெளியே எட்டிப் பார்த்தான். யாரும் இல்லை.

திரும்ப கதவை அடைத்தான்.

ஜன்னல் அருகே சென்று திரைச்சீலையை விலக்கி விட்டு வெளியே பார்க்க ஆரம்பித்தான்.

ஆயிரம் வேலிக்காட்டின் பசுமையான தோப்பும் துரவும் வயல்வெளிகளும் பாகம் பாகமாகத் தெரிந்தன. முகத்தில் வந்து அறைந்தது காற்று.

சட்டென்று பொறிதட்டியது போல் ஓர் எண்ணம். பாத்ரூமுக்குள் நுழைந்தவன் மளமளவென்று குளித்துவிட்டு ஆடை மாற்றிக்கொண்டு வெளியில் வந்தான். வராண்டா வில் நடந்து ஹாலுக்கு வந்து சேர்ந்தான்.

ஹிந்துவை மேய்ந்து கொண்டிருந்தார் ரத்னசபாபதி. வாக்மேன் கேட்டுக் கொண்டிருந்தாள் ருக்மணி.

"அம்மா, நான் கோவிலுக்குப் போய் சாமி கும்புட் டுட்டு வந்துடறேன்" என்று அவர்களிடம் சொன்னபடி நடந்தான். அப்பொழுது ராயரைத் தேடியபடி சிலர் வந்து நின்றனர். பணிவாக ஒரு ஓரமாக நின்றுகொண்ட அவர்களைப் பார்த்தபடியே வந்த கோபால் என்ன என்று கேட்டான்.

"சின்னாண்டே... நம்ம ஏழுமலையை நல்லபாம்பு கடிச்சிடுச்சுங்க. பேச்சு மூச்சு இல்லாம கிடக்கான். அதான் சொல்ல வந்தோம்" என்று அவர்களில் ஒருவன் சொல்ல வும் நரம்பறுந்த மாதிரி இருந்தது சந்திரமோகனுக்கு.

# 13

ஏழுமலையை நல்ல பாம்பு கடித்துவிட்டது என்று சொன்னவர்களை கோபல் கூட அதிர்ச்சியோடுதான் பார்த்தான்.

"எப்பய்யா... எங்க?"



"ஓரமா படுத்திருந்துருக்குங்க. கோயில் மதிலைச் சுத்தி வரும்போது தெரியாம மிதிச்சிட்டான் போல... ஒரே போடா போட்டுருச்சு..."

"உயிர் போயிடிச்சா- இல்ல, இன்னும் இருக்கா?"

"துடிச்சிக்கிட்டிருக்குங்க. வைத்தியர் அநேகமா போராடிக்கிட்டிருப்பாரு..."

"சரி சரி நடங்க..." என்ற கோபால் அவர்களைத் தொட ரத் தொடங்கினான். சந்திரமோகனும் பின்னாலேயே செல்ல ருக்மணி குரல் அவனைத் தடுத்தது.

"சந்திரா..."

"என்னம்மா..."

"நீ எங்க போறே?"

"அந்த ஏழுமலையைப் பாக்கத்தான்."

"அவன் என்ன நமக்கு ஒட்டா உறவா... அங்கெல்லாம் நீ போகாதே..." ருக்மணி அவனைத் தடுப்பதை ரத்ன சாபாதி வேடிக்கை பார்த்தார்.

"ஆமாம் தம்பி... அதைப்போய் பார்த்து நீ என்ன பண்ணப்போறே?" என்ற கேள்வியோடு ராயர் வந்து கொண்டிருந்தார்.

நெற்றியில் பரமதிவ்யமாய் நாமம். பட்டு வேட்டி, சட்டை என்று மிடுக்கான தோற்றம். சந்திரமோகனை அவரது தோற்றம் கொத்தியது. முதல் நாள் இரவில் ஏழுமலை சொன்னதும் நினைவில் முந்தியது. அநேகமாகத் தன் கதையும் முடிந்து போகலாம் என்று பயந்ததும் அதே போலவே ஆகிவிட்டதையும் நினைத்து மனது கொதித்துக் குதித்தது. ஆனாலும் முகத்தில் அதைக் காட்டிக் கொள்ளாதபடி, "நான் கோயிலுக்குப் போய்ட்டு வந்துட றேன் மாமா" -என்றவனாக சமாளித்தான்.

"கோயிலுக்குத்தான் நானும் கிளம்பிக்கிட்டிருக்கேன். என் கூடவே வந்துடு..." -என்று அவனுக்கு மேலும் சங்கடத்தைத் தந்தார் ராயர்.

"அதான் காலைலயே குளிச்சிட்டீங்களாண்ணே?" -ருக்மணி இடையிட்டாள்.

"ஆமாம் ருக்கு. அதோட இன்னிக்கு அஷ்டமி பாரு. அஷ்டமின்னா நான் தப்பாம கோயிலுக்குப் போவேன். அன்னிக்கு கோயில்ல நமக்கு மரியாதையாச்சே!"

"அப்ப நாங்களும் வரவா?"

"என்ன ருக்கு கேள்வி இது? தாராளமா வாங்க. நமக்காகத் தானே அந்தக் கோயிலே இருக்கு."

ராயர் சொன்ன ஜோரோடு நடந்தார். கண்டாங்கிப் பட்டோடு சங்கவையும் ஓடிவந்தாள். வேறு வழியில்லை. சந்திரமோகனும் அந்தக் கூட்டத்தோடு சேர்ந்து நடந்தான். ஆனால் மனம் முழுக்க ஏழுமலைதான் நிரம்பியிருந்தான்!

**கோ**யில் முகப்பு!

அரண்மனை முகப்பு போல பெரிய கதவோடு, ஸ்தூபி போல ஒரு தூணோடு தெரிந்தது. அதன் அருகே முகுந்த பட்டரும் ஒரு கூட்டமும் நின்று கொண்டிருந்தது. சற்றுத் தள்ளி ஒரு கல்மண்டபம். அதன்கீழே இடுப்பில் பட்டுத் துண்டைச் சுற்றி கொண்டு மேளக்காரர்கள்.

ராயரும் சகாக்களும் வருவதைப் பார்த்துவிட்டு முகுந்த பட்டர் கையை அசைத்து மேளக்காரனுக்குக் கட்டளை யிட, உடனே அவர்கள் மேளம் வாசிக்கத் தொடங்கினர்.

நடுவில் கொம்பூதி ஒருவன் அடிவயிறு பின் முதுகோடு ஒட்டுமளவு மூச்சிழுத்து விட்டு கொம்பை ஊதிப் பிளிற லாக சத்தம் போட்டான்.

ஒரே கோலாகலம்!



அவ்வளவும் அந்த நாளைய அரசமுறை!

ராயர் கோயில் முகப்பின் பட்டியக்கற்களைத் தாண்டி ஸ்தூபியை ஒட்டி நின்றார். அங்கே ஒரு நபர் நிற்கத்தகுந்த மேடை. அருகில் ஒரு கல் தொட்டி, அதில் சரேலென்று கோயில் ஊழியர் ஒருவர் இறங்கி நின்றுகொண்டு, "மகாராஜஸ்ரீ ஸ்ரீமான் கழுகாசல தேவராயர் திவ்ய சமூகத்திற்கு அஷ்டமி உற்வச மரியாதையும் பரிவட்டம் பிரசாதம் முதலான சகலத்தையும் சாதிக்க வேண்டியது..." என்று முழக்கமிட, முகுந்த பட்டர் ஒரு செப்புக்குடத் துடன் முன்னால் வந்தார். அதில் நீர் இருந்தது. அதை ராயரின் காலுக்கு விட்டு அதன்மேல் பூஜைத் தட்டில் இருந்து இரண்டொரு பூக்களை எடுத்தும் போட்டார். பின்னர் ஒருவர் தன் கைவசம் வைத்திருந்த மரப் பெட்டியோடு முன்வர, அதைத்திறந்து உள்ளிருந்து ஒரு நீலநிறப் பட்டு வஸ்திரத்தை எடுத்தார் பட்டர். ராயரை நெருங்கி மீண்டும் ஒருமுறை வணங்கிவிட்டு அதை ராயரின் தலைக்கு உருமா போல பரிவட்டக் கட்டு கட்டினார்.

பின் பூஜைத் தட்டை பூ மாலை தேங்காய் பழத்தோடு அவர் கையில் தர, ராயர் அங்கிருந்து சன்னதி நோக்கிப் புறப்பட்டார். கூட்டம் பின் தொடர்ந்தது.

ரத்னசபாபதிக்கே எல்லாம் பிரமிப்பாக இருந்தது. ருக்மணியிடம் தன் பிரமிப்பை வார்த்தைப்படுத்திக் கொண்டார்.

"ருக்மணி... இந்த மாதிரி ஒரு கோயில் மரியாதையை நான் எங்கேயும் பார்த்ததில்லை."

"வேலிக்காட்டு சமஸ்தானத்துக் கூட்டம்னா என்ன சும்மாவா?"

சந்திரமோகன் கேட்டபடியே பின்தொடர்ந்து கொண்டிருந்தான். அவனுக்கும் எல்லாம் பிரமிப்பாக எரிச்சலாக எல்லாமுமாக இருந்தது.

மனம் முழுக்க ஏழுமலைதான் இருந்தான்.

'ஏழுமலை, உனக்கு எதுவும் ஆகிவிடக்கூடாது. நீ பிழைத்துக்கொண்டு விடவேண்டும்.'

அவன் மனது கிடந்து தவித்தது. அலைமோதிக் கொண்டிருந்தது.

ராயர் கருவறைக் கதவு வரை போய்விட்டார். பூஜைத் தட்டை அங்கே பட்டரிடம் தர பூஜை ஆரம்பமாயிற்று. சங்கவி ஒட்டி நின்று கொண்டிருந்தாள். பயபக்தியோடு கைகூப்பியிருந்தாள். ராயரும் கைகளைக் கூப்பிக்கொண்டு சன்னதிக் கதவு மேலேயே கவனமாக இருந்தார்.

பட்டர் அஷ்டோத்ரம் சொல்லியபடி துளசியை உதிர்க்கத் தொடங்கினார்.

இதுதான் சமயம் என்கிற மாதிரி பொறுமை இழந்துவிட்ட சந்திரமோகன் நைஸாக அங்கிருந்து நழுவினான். கோயில் பிராகாரத்தில் பாய்ச்சலெடுத்து ஓடினான்.

வெளியே சென்றவன் சுற்று முற்றும் நாலாபுறத்திலும் பார்த்தான். ஒருவர் கோயிலுக்குள் நுழைந்து கொண்டிருந்தார். அவரைத் தடுத்தவன், "ஹலோ, இங்க ஏழுமலை எங்க இருக்கான்?" என்று கேட்க... அவர் தெரியாது என்கிறார் போல பார்த்தார்.

"புல்ஷிட்...!" கோபத்தில் வார்த்தை சீற்றத்தோடு வந்தது. 'ஓடு... தேடு...' என்று கட்டளையிட்டது புத்தி.

ஓடினான். கால்போன பக்கமெல்லாம் ஓடினான். அங்கங்கே குடிசைகள். அதன் முகப்பில் தூளிகட்டி ஆட்டியபடி இருக்கும் வேலிக்காட்டு ஜனங்கள். மொட்டைத்



தலையோடு ஒரு ஆவேசக் காற்றாட்டம் ஓடிவரும் சந்திரமோகனைப் பார்த்து அவர்கள் பயத்துடன் எழுந்து நின்றார்கள்.

"இங்க ஏழுமலை வீடு...?"

"ஆண்டே, அவரைப் பாம்பு கடிச்சு செத்துப் போயிட்டாரு."

"மைகாட்! எப்போ?"

"இப்... இப்பதான் ஆண்டே. பொணம் அதோ அங்கன உள்ள அவர் குடிசை ஊட்ல கிடக்குது." -ஒருத்தி கை காட்டினாள். சந்திரமோகன் தாமதிக்காமல் கைகாட்டிய திக்கு நோக்கி ஓடினான். வயல் வெளியை ஒட்டிய தெரு. ஓடுகையில் புழுதி பறந்தது.

ஓடிச்சென்று நின்ற குடிசை முகப்பில் ஏராளமான கூட்டம்.

கோபாலும் அங்கு இருந்தான்.

ஓடிவந்து நிற்கும் சந்திரமோகனை ஆச்சரியத்துடன் பார்த்தான்.

"கோபால், நீ இங்கயா இருக்கே?"

"ஏன் சந்திரா?"

"உன்னை... உன்னைக் கோயில்ல தேடறாங்க." -சந்திரமோகன் சமாளித்தபடியே கோபலைச் சமீபித்தான்.

"அதுக்காகவா நீ வந்தே?"

"அ... ஆமா!"

"அப்பாக்குத் தெரியுமா?"

"ஏன்... ஏன் கேட்கறே?"

"வேலிக்காட்டார் இருக்கும்போது நீ இப்படி ஓடி வந்தது தெரிஞ்சா கோபிப்பார்."

கோபால் பதில் சொல்வது சந்திரமோகன் காதில் விழவில்லை. பார்வை ஏழுமலை பிணத்தை நோக்கித்தான் சென்றது.

உடம்பு முழுக்க நீலம் பாரிக்கக் கிடந்தது ஏழுமலையின் உடம்பு.

அந்தப் பதற்றத்திலும் மளுக்கென்று கண்ணில் நீர் தேங்கியது. கூடவே அச்சமும் கவ்விக் கொண்டது.

"சரி சந்திரா, வா போகலாம்..." -கோபால் அங்கிருந்து புறப்பட்டான்.

"கோபால், எப்படி இப்படி ஆச்சு?"

"எப்படின்னா... பாம்பைப் பார்க்காம மிதிச்சா அது கடிக்காதா...? இடியட்! வரவர இவன் போக்கே சரியில்லாமதான் இருந்தது. அப்பாகூட இவனை என்னன்னு கேக்கணும்னு நினைச்சுக்கிட்டிருந்தார். அதுக்குள்ள பாம்பு முந்திக்கிடிச்சு" -என்று கோபால் சொல்லும்போது அதில் தூக்கலாக ஒருவித அலட்சியம்!

**கோ**யிலுக்குள் இருவரும் நுழையும் போது ராயர் காலில் ஆயிரம் வேலிக்காட்டுக் கூட்டம் விழுந்து எழுந்து கொண்டிருந்தது. அவரும் தன் காலில் விழுந்து எழும் நபருக்கு ஒரு வெற்றிலையில் பத்து ரூபாய் என்று வைத்து வழங்கிக் கொண்டிருந்தார்.

அப்படியே நிமிர்ந்து சந்திரமோகனை ஒரு பார்வை பார்த்தார். அது பார்வையாக இல்லை. மின்னல் வெட்டு போல தோன்றியது சந்திரமோகனுக்கு... நிறைய வியர்த்திருந்தவனை ரத்னசபாபதியும் ருக்மணியும் சமீபித்தனர்.



"எங்கடா போய்ட்டே? நீ எங்கேன்னு சாமி கேட்டுச்சு தெரியுமா?" -என்று ருக்மணி அதிர்ச்சியளித்தான்.

"சாமியா?"

"ஆமாண்டா... சாமி இப்ப கோயிலைச் சுத்தி வரப்போயிருக்கு. 'எங்க அந்த மேல்நாட்டுல இருந்து இந்தக் கிழ்நாட்டுக்கு வந்த என்னை நம்பாதவன்?'னு சாமி கேட்டுக் கத்தினப்போ நாங்கள்லாம் ஆடிப்போயிட்டோம்."

-ருக்மணி சந்திரமோகனுக்கு அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி அளித்தாள். அதிகம் அவன் குழம்பாதவாறு ஒருவர் சாமியாடியபடி கோயிலைச் சுற்றி முடித்துவிட்டு ஒரு புயல் காற்றைப்போல அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தார். அவர் கையில் ஒரு பிரம்பு. அதற்கு தங்கப்புண் போடப்பட்டிருந்தது. அவர் வரவும் எல்லோரும் படபடவென்று கன்னத்தில் போட்டுக்கொண்டனர்.

ராயரும் கன்னத்தில் போட்டுக் கொண்டு ஒதுங்கி நிற்க, அந்த சாமியாடி மனிதர் 'டேய்ய்...' என்றபடி சந்திரமோகனை நெருங்கி அவனைப் பிரம்பால் அடிக்க ஆரம்பித்தார்.

## 14

**ச**ந்திரமோகன் அந்த விளாசலைத் துளிகூட எதிர் பார்க்கவில்லை. பிரம்பு அந்த மனிதன் வசம் 'உய்ங்ங்... உய்ங்ங்...' என்று காற்றில் கலந்து வந்து மோதி சந்திர மோகனை நிலைகுலைய வைத்தது.

கூட்டமும் வேடிக்கைத்தான் பார்த்தேயொழிய இடையில் புகுந்து தடுக்க முடியவில்லை. ருக்மணி மட்டும் கதறினாள்.

"ஐயோ அண்ணே, என்னண்ணே இப்படி வேடிக்கை பாக்கறீங்க? என் மகனை சாமி இந்த அடி அடிக்குதே" என்று ராயரைப் போய் உலுக்கினாள்.

ராயர் தடுக்கலாம் என்று நினைத்து ஒரு அடிகூட எடுத்து வைத்திருக்க மாட்டார். பிரம்பால் அடித்த சாமி வந்த மனிதனை சந்திரமோகன் எகிறிப் பிடித்து கைகளையும் முதுகுப் பின்னால் மடக்கிப் பிடித்து அவரைத் திணறச் செய்தான்.

ராயர் அதைப் பார்த்து அலறினார். "சந்திரா, சாமியை விடு. அது உனக்கு நல்லதல்ல..." சந்திரமோகனும் தான் பிடித்திருந்த நிலையில் அப்படியே உதறுவது போல ஒரு தள்ளு தள்ளினான்.

சாமி வந்த நபர் சரிந்து கீழே விழுந்தான்.

அப்படியே ஒரு புரண்டு புரண்டு எழுந்து நின்றான். நின்ற வேகத்தில் "அஹேய்ய்..." என்று கண்கள் சிவக்க கைகளைத் தூக்கிக் கொண்டு ஒரு கத்து கத்தினான்.

அவ்வளவுபேரும் அப்படியப்படியே சிலையாக நின்று கவனித்தனர். சந்திரமோகனிடம் மட்டும் பெருமூச்சு. அதுவரை ஸ்தம்பிப்பில் இருந்த பட்டர் கத்தும் அந்த மனிதன் முன் ஓடி வந்தார்.

"இந்த மகாசன்னிதிக்கு வந்துருக்கறது யாருன்னு தெரிஞ்சுக்கலாமா... நான் கோயில்பட்டர் கேட்கறேன். ரொம்ப பணிவோட கேட்கறேன்."

-என்றபடி வெறுந்தரையில் மண்டியிட்டு கைகளையும் கட்டிக் கொண்டார். ராயரும் உடன் வந்து நின்று கொண்டார்.

"என்னையா யாருன்னு கேட்டே?... நான் அந்த ஆஞ்சநேயன் வந்துருக்கேண்டா...!" என்ற பதில் அலறலில் பட்டென்று பலரும் கன்னத்தில் போட்டுக் கொண்டனர்.



"ஸ்வாமி... நீங்களா! எதுக்கு இத்தனை ஆவேசம்?" -பட்டர் விசாரிக்கத் தொடங்கி விட்டார்.

"இங்க என்னடா நடக்குது?"

"சுவாமி... ஏதாவது தப்பு நடந்துடுத்தா?"

"என்னடா கேள்வி இது... என்ன எல்லாவிதத்துலயும் எதிர்க்கற ஒருத்தன் இங்க இருக்கான். அவன் எண்ணி பன்னிரண்டு நாழிகைல இந்தப் புனிதமான ஸ்தலத்தை விட்டு வெளியே போயிடணும். அப்படிப் போகலைன்னா இந்த ஸ்தலம் தீயில எரிஞ்சு சாம்பலாகிடும். நான் இலங்கையை எரிச்சதை விட கொடுமையா இந்த இடத்தை எரிச்சுடுவேன்!"

உச்சஸ்தாயியில் கத்திய அந்த நபர் அப்படியே சுருண்டு விழுந்தார்!

பட்டர் பதற்றத்தோடு ராயர் பக்கம் திரும்பினார். ராயர் முகம் கலங்கியிருந்தது. ரத்னசபாபதி, சங்கவை நாச்சி, ருக்மணி என்று மூவரும் மிரள மிரளப் பார்த்தனர்.

"மாப்ள..." -ராயரின் குரல் ரத்னசபாபதியைக் கூப்பிட்டது. அவரும் வந்தார்.

"தயவுசெய்து சந்திரமோகனை அழைச்சுக்கிட்டு இந்த ஊரை விட்டுப் போயிடறீங்களா?"

-அவர் மௌனமாக அதை அங்கீகரித்தார். சந்திர மோகன் அடிபட்ட இடத்தைத் தேய்த்த படியே ராயரை நெருங்கினான்.

"மாமா..." -என்றான் அழுத்தமாக. எல்லோரும் அவனைப் பார்த்தனர்.

"நான் போகமாட்டேன் மாமா... நிச்சயமா போக மாட்டேன். இதெல்லாம் என்ன மாமா கூத்து? இங்க

என்ன நடக்குது? நாம எந்தக் காலகட்டத்துல இருக்கோம்? எனக்குப் புரியலை மாமா. கொஞ்சம் கூட புரியலை."

-என்று நரம்பு புடைக்கக் கத்தினான். ருக்மணி ஓடிவந்து அவன் வாயைப் பொத்தினாள்.

"மாப்ள, அவனை எதுவும் பேசவேண்டாம்னு சொல்லுங்க... அவன் புரியாம பேசறான்." ராயர் ரத்ன சபாபதியை நெருக்கினார்.

"ஆமாம். அவரை செத்த பேசாதபடி இங்க இருந்து அழைச்சுண்டு போங்கோ... இது நெருப்பான தெய்வம். இங்க மட்டும் நல்லதோ கெட்டதோ உடனுக்குடன் பலன் தெரிஞ்சிடும்..." -என்று பட்டரும் பதறினார்.

"நோ... இது ஆயிரம் வேலிக்காடு கிடையாது. இது ஆயிரம் மர்மக்காடு. இங்க ஏதோ சதி நடக்கறது. சாமி பேரால அதை சாமர்த்தியமா போட்டு மூடப்பார்க்கிறீங்க. நான் இதை விடமாட்டேன். இந்த இடத்தை விட்டும் போகமாட்டேன்..."

-சந்திரமோகன் திரும்பவும் கத்தினான். ரத்னசபா பதிக்கு என்ன தோன்றியதோ தரதரவென்று அவனை இழுத்துக் கொண்டு நடக்கத் தொடங்கினார்! பட்டர் கோயில் கோபுரத்தைப் பார்த்துக் கன்னத்தில் போட்டுக் கொண்டார்.

ராயரைப் பார்த்து, "பெரியவாளுக்கு மரியாதை செய்யும்போது ரசாபாசமா நடக்கக் கூடாதது நடந்துடுத்து... மன்னிச்சுக்கணும்" என்று சரேலென்று அவர் காலடியில் மண்டியிட்டார்.

ராயர் பட்டரின் தோளைத் தொட்டு எழுப்பி விட்டார்.

கத்திக் கொண்டே செல்லும் சந்திரமோகனைப் பார்த்தார்.



"நான் இதை விடமாட்டேன்... விடவேமாட்டேன்!" -அவனது அலறல் வேலிக்காடு முழுக்க எதிரொலித்தது.

**க**ல் பங்களா முகப்பில் மீண்டும் சாரட்டின் தேக்கம். கைகால்களில் நடுக்கத்தோடு அதிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தார் பெரியவர் சமாதான பாண்டி. அவர் இறங்குவதைப் பார்த்துவிட்டு ராயர் ஓடிவந்தார்.

"என்னடா... என்ன நடக்குது இங்க? என் காதுல கண்டதெல்லாம் உழுந்திச்சேடா..."

-சமாதான பாண்டி ராயரைப் பார்த்துக் கத்திக் கொண்டே முன்னால் வந்தார்.

"நீங்க அமைதியாக இருங்கப்பா. ஒண்ணும் நடந்துடலை. அமைதியா இருங்க..." -என்று அவரைப்போய் அணைத்துக் கொண்டார் ராயர். சங்கவையும் ருக்மணியும் ரத்ன சபாபதியும் ஒவ்வொருவராக அதைப் பார்த்த படியே வந்தார்கள். ருக்மணி நடுங்கிக் கொண்டிருந்தாள்.

"ஒண்ணுமில்லேன்னா எதுக்குடா என் காதுக்குக் கண்ட விஷயமெல்லாம் உழுவுது. நம்ம வம்சத்து ஆளை சாமி அடிச்சிடிச்சாமே..."

-சமாதான பாண்டி ஒரு ஓரமாகக் கிடந்த மூங்கில் நாற்காலியில் உட்கார வைக்கப்பட்ட நிலையில் கேள்வி எழுப்பினார்.

"ஆமாம்பா... நம்ம சந்திரமோகனுக்கு நல்லது கெட்டது தெரியல. அந்தக்குத்தம் தான், அப்படி ஆயிடிச்சு..." -இது ராயர்.

"நல்லது கெட்டது தெரியாதவங்க என்ன மசுருக்குடா இங்க வரணும். ஏய் மாப்ளை... வாய்யா இங்க" -சமாதான பாண்டி ரத்னசபாபதியைக் கூப்பிட்ட விதத்தில் ஒரு ரெளடித்தனம் இருந்தது. அது ரத்னசபாபதியைக் குத்தியது.

தயங்கிக் கொண்டே அதே சமயத்தில் கோபத்துடன் சமாதான பாண்டியைப் பார்த்தார்.

"உன்னைத்தான்... என்ன மகனை வளர்த்து வெச்சிருக்கே? இங்க நம்ம பரம்பரைக்கு அடி விழுந்தா எவ்வளவு கேவலம் தெரியுமா?"

"........"

"அப்பா விட்டுடுங்க. அவங்க இப்ப ஊருக்கு கிளம்பிட்டாங்க."

"சுடுகாட்டுக்குக் கூட போகட்டும். இப்படியா வந்து கேவலப்படறது...?"

"இதை யாரும் எதிர்பார்க்கலப்பா. ஏதோ தெரியாம நடந்துடிச்சு."

"ஆமாம் பெரியப்பா... சந்திரமோகன் ரொம்ப நல்ல புள்ளை. அவன் பொண்டாட்டி சாவு அவனைக் கொஞ்சம் பாதிச்சிடுச்சு. அதான் தப்பா நடந்துக்கிட்டான். தயவுசெய்து பெரிசா எடுத்துக்காதீங்க பெரியப்பா" என்று ருக்மணியும் இடையில் நுழைந்து உருகினாள்.

"இப்ப சொல்றேன்... இனிமேட்டு வந்தா இந்த வேலிக்காட்டு சம்பிரதாயங்களை மதிக்கணும். இல்லாட்டி இந்தப் பக்கமே வரக்கூடாது," -என்றவர் மளமளவென்று சட்டையைக் கழற்றினார்.

"அப்பா எதுக்குப்பா சட்டையைக் கழட்டறீங்க?"

"ரொம்பநாள் ஆச்சுல்ல, அந்தக் கோயில் மண்ணுல உருண்டு..."

"அங்கப்பிரதட்சணமா?"



"பின்ன... இந்தப் பாவத்துக்கு நான் பரிகாரம் தேட வேண்டாமா? நான் உயிரோட இருக்கறவரை நான்தானே அதைச் செய்யணும்?"

-கழட்டிய சட்டையைத் தூக்கி எரிந்து விட்டு சமாதான பாண்டி கோயிலை நோக்கி நடக்க ஆரம்பித்து விட்டார்.

ராயரும் சங்கவையும் அவர் பின்னால் சென்றனர்.

ரத்னசாபதிக்கு ஒன்றுமே புரியவில்லை.

ருக்மணி கொஞ்ச நேரம் நின்று பார்த்தாள். பிறகு என்ன நினைத்தாளோ அவளும் அவர்களோடு சேர்ந்து ஓடத் தொடங்கினாள்!

**வே**லிக்காட்டு குடிசைப் பகுதியில் சமாதானபாண்டி தடுமாறிக் கொண்டு சட்டையில்லாமல் நடந்து வரவும் ஜனக்கூட்டமே மிரண்டு போனது.

'கும்புடறோம் ஆண்டே... கும்புறோம் ஆண்டே...' என்று ஒவ்வொரு வீட்டு வாசலிலும் நிற்பவர்கள் பொத் பொத்தென்று கீழே விழுந்தார்கள்.

அந்தக் கிழட்டு மனிதர் அதையெல்லாம் லட்சியமே செய்யாதபடி நடந்தார்.

புழுதிப் புயல் கூட நடப்பவர்களால் உருவாகி ஒரு வித்தியாசமான சூழலைக் காட்டியது.

**ந**கத்தைக் கடித்தபடி குறுக்கும் நெடுக்குமாய் நடந்து கொண்டிருந்தாள் ராதா.

வீடே பேரமைதியில் கிடந்தது, அவளை என்னவோ செய்தது.

மெல்ல எட்டிப் பார்த்தாள்.

ரத்னசபாபதி சூட்கேஸோடு கீழே இறங்கிக் கொண்டிருந்தார்.

எங்கே சந்திரமோகன்?

அவள் பார்வை அவனைத் துழாவியது.

அதே சமயம் தொலைபேசியும் அமட்டியது.

எடுத்துக் காதைக் கொடுத்தாள்.

அடுத்த விநாடி அவள் முகத்தில் வரிவரியாய் அதிர்ச்சி ரேகைகள்!

## 15

**தொ**லைபேசிச் செய்தி ராதாவை ஸ்தம்பிக்க வைத்திருந்தது. தடுமாற்றத்தோடு ரிசீவரை வைத்தாள். கலக்கத்தோடு அறையை விட்டு வெளியில் வந்தாள்.

"ராணிம்மா... யாரைத் தேடறீங்க?" -வேலைக்காரன் கேட்டான்.

"இங்க என் மாமா இருந்தாரே?"

"அவர் வெளிய கார்கிட்ட இருக்காரு..."

-அவளும் ஓடினாள். ரத்னசபாபதி காரின் டிக்கியில் சாமானை வைத்து மூடிக்கொண்டிருந்தார்.

"மாமா! அத்தான் எங்கே?"

"சந்திரமோகனைக் கேட்கறியா...?"

"ஆமாம்... அவரை நான் உடனே பார்க்கணும்."

"இங்கதான் இருந்தான். நீ எங்கேயும் போகக் கூடாதுன்னு இப்பத்தான் சொல்லிட்டு வந்தேன்."

"ரொம்ப அவசரமான ஒரு விஷயம் மாமா... அவரை உடனே பாக்கணும்..."



-ராதாவும் பார்வையைச் சுழலவிட்டாள்.

"என்னம்மா விஷயம்...?"

"வெரி வெரி பேட் நியூஸ் மாமா!"

"என்னம்மா...?"

"நேத்து ராத்திரி இங்க இருந்து புறப்பட்டு போன அத்தானோட ஃபாதர்-இன்-லாவும், மதர்-இன்-லாவும் கார் ஆக்சிடென்ட்ல இறந்துட்டாங்களாம்."

"வாட்?"

-ரத்னசாபதிக்கு நின்ற இடம் நடுங்கத் தொடங்கியது.

"இப்ப... ஐஸ்ட் இப்பத்தான் மாமா போன் வந்தது!"

-ராதா சொன்ன கையோடு விசும்பினாள். ரத்னசபாபதி அப்படியே காரின் மேல் தடுமாறிக்கொண்டு விழுந்தார்.

**கா**ர் நொறுங்கிப் போயிருந்தது. தார் ரோட்டை விட்டு விலகி ஒரு ராட்சதப் புளியமரத்தின் மேல் மோதியதில் அதன் நிலைமை இரண்டடிக்குப் பக்கமாக சுருங்கி விட்டிருந்தது. ஆவேசமாக வந்து சேர்ந்த சந்திரமோகன் ஆக்சிடென்ட் ஆகிக் கிடக்கும் அந்தக் காரை ஒரு பார்வை பார்த்தான். அப்படியே ஸ்தம்பித்துப் போனான். போலீஸ் தனது ஃபார்மாலிடிஸை முடித்து விட்டுப் போயிருந்தது.

"இப்ப எதுக்கு இங்க வந்தே... பாடி போஸ்ட்மார்ட்டமாகி பக்கத்து ஊர் ஜி.ஹெச்.ல இருக்காம். வா அங்கப் போவோம்..." -என்று அவன் தோளில் கை போட்டார் ரத்னசபாபதி. அவனோடு வந்திருந்த ருக்மணி காரில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். காரை விட்டு இறங்கவேயில்லை.

சந்திரமோகன் ரத்னசபாபதியின் கையைத் தட்டி விட்டான். அந்தக் காரை சுற்றி வந்தான். பின்னால் டிக்கி திறந்து கொண்டிருந்தது.

குனிந்து பார்த்தான்.

உள்ளே ஸ்ரீமதியின் சடலமில்லை!

அவனுக்கு சுருக்கென்றது. கைகள் நரம்பு புடைக்குமளவு விரைத்தன. ஓங்கி அந்த டிக்கியின் மேல் ஒரு குத்து குத்தினான்.

ரத்னசபாபதி அவனை அளவிற்கதிகமான ஆச்சரியத் தோடு பார்த்தார். அவனும், "அப்பா..." -என்று திரும்பி அவர் தோளில் சாய்ந்து அழுதான்.

"என்னப்பா...?"

"இது ஆக்சிடென்ட் இல்லப்பா- கொலை!" என்றான் உச்சஸ்தாயியான குரலில்.

"சந்திரா, என்னப்பா சொல்றே...?"

ரத்னசபாபதி அவனை அணைத்தபடியே கேட்டார்.

"இது கொலைப்பா... பயங்கரமான கொலை! என் ஸ்ரீயை மட்டும் கொல்லலை. அவ குடும்பத்தையே கொன்னுட்டாங்க. அவங்கள நான் சும்மா விடமாட் டேன்பா. சும்மா விடமாட்டேன்." -கொந்தளித்தான். ரத்னசபாபதியை அழுந்த அணைத்துக் கொண்டு அழுது குமுறினான்.

"சரிப்பா, வா போகலாம். எதுவா இருந்தாலும் கார்ல பேசுவோம். எல்லாரும் வேடிக்கை பாக்கறாங்க பாரு" -அவர் அவனை கட்டி இழுத்துச் சென்றார். சிரமப்பட்டு அவனை காருக்குள் ஏற்றினார். அதுவும் சிற ஆரம்பித்தது.



"அப்பா, அது ஆயிரம் வேலிக்காடு இல்லப்பா. ஆயிரம் மர்மக்காடு. அங்க இருக்கறவங்க மனுஷங்க இல்லப்பா. அவ்வளவு பேரும் மிருகங்க..."

-காருக்குள் கர்ஜித்தான்.

"பேசாம வா." -ரத்னசபாபதி சமாதானப்படுத்த முயன்றார்.

"ஏண்டா இப்படி பைத்தியமாட்டம் கண்டதைச் சொல்றே? உன்னை அந்த ராதாவுக்கு கல்யாணம் பண்ணி வெச்சு உனக்கு ஒரு வாழ்க்கையை அமைச்சுக் கொடுக்க ணும்னு சும்மா துடிச்சுக்கிட்டிருக்கேன்டா. நீ இப்படி ஒண்ணும் இல்லாததுக்கெல்லாம் கத்திக் கூச்சல் போடறியேடா..."

-ருக்மணி தன் பங்குக்கு சொன்னதைத் தொடர்ந்து அவளைப் பார்த்தவன், "அம்மா, நீ இப்ப சும்மா இருக்க மாட்டே?" என்று திரும்பவும் சீறினான்.

அவள் நடுங்கிப் போனாள்.

"சரிதான்... அண்ணி சொன்னமாதிரியே ஆயிடும் போல இருக்கே?" என்று புதிததாக ஒரு விஷயத்தைத் தொட்டாள்.

'என்ன ருக்மணி பேசறே... உன் அண்ணி என்ன சொன்னாங்க?"

"என்னத்தான்னு சொல்வேன். நம்ம ஊருக்கே வராம இருந்துருக்கலாம். இவன் இப்படி பைத்தியக்காரனா வான்னு தெரியாமப் போச்சே...!"

-ருக்மணி நிஜமாகவே கண்ணீர் விட்டாள்.

"ஏய்... உளறாதே..."

"உளறலீங்க. எல்லாம் சாமி கொடுத்துருக்கற தண்டனை. இவன் தப்புக்கு சாமி கொடுத்துருக்கற தண்டடைன. அது

சக்தி தெரியாம மோதினதுக்கு ஒரு உயிருக்கு மூணு உயிர் போய், இப்ப இவனும் கிறுக்குப் பிடிச்ச மாதிரி கத்த ஆரம்பிச்சுட்டான். நிச்சயமா புத்தி பேதலிச்சு போகும்னு அண்ணி சொன்னாங்க. அப்படியே ஆயிடும் போல இருக்கே..."

-ருக்மணி பேசப்பேச சந்திரமோகனுக்குள் எரிமலை வெடித்த மாதிரி ஒரு ஆக்ரோஷம் வந்து கவ்வியது.

"அம்மாாாா..." என்றான் கழுத்து நரம்பு புடைக்க. டிரைவர் அதிர்ந்துபோய் காரை சாலை ஓரமா தேக்கி நிறுத்தியபடி திரும்பினான்.

"நீ ஏம்ப்பா காரை நிறுத்தறே?"

"என்னங்க இது? இப்படி கத்தறாரு. பயமா இருக்குங்க."

"ஏய் புல்ஷிட்... வண்டியை எடுய்யா. இடியட்... நடக்கற பார்த்துட்டு பொட்டையன் மாதிரி பயப்பட நான் ஒண்ணும், உன்னை மாதிரி அடிமையில்லை. ஐ ஆம் நாட் எ கவர்ட்! காரை எடு. இப்ப எடுக்கப்போறியா இல்லையா?"

-சந்திரமோகன் எகிறி டிரைவரின் சட்டையையே பிடித்துவிட்டான்.

"சந்திரா, வாட் ஈஸ் திஸ்... ப்ளீஸ் கூல் டவுன். கொஞ்சம் அமைதியா இரு. ப்ளீஸ்... அவனை விடு. விடுடான்னா..."

-ரத்னசபாபதி சிரமத்தோடு பிடியை விடுவித்தார்.

"நீ காரை எடுப்பா..."

-டிரைவர் அரைமனதாக காரைக் கிளப்பினான்.

-ரத்னசபாபதி அவனைத் தேற்றி தோளோடு இழுத்து அணைத்தார். தட்டிக் கொடுத்தார்.

ருக்மணியின் கண்களில் தாரைதாரையாகக் கண்ணீர்.



"சாமி... என் மகனை இப்படி பண்ணிட்டியே" -என்று முனங்கினாள். அது சந்திரமோகன் காதிலும் விழுந்தது.

"அம்மா, எனக்கு ஒண்ணும் ஆகலை. எனக்கு ஒண்ணும் இல்லைம்மா..."

-திரும்பவும் நிமிர்ந்து ஒரு சீறு சீறினான். அவள் நடுங்கிப் போய் ரத்னசபாபதியை மறுபக்கத்தில் இறுக்கிக் கொண்டாள்.

"ருக்மணி, கொஞ்சம் பேசாம வர்றியா..."

-ரத்னசபாபதி அவள் வாய்க்கும் ஒரு பூட்டைப் போட்டார். அப்படியே திரும்பிப் பின்னால் பார்த்தார். ராயரும் மற்றவர்களும் கார்களில் வந்து கொண்டிருந்தார் கள்.

'கடவுளே...!' -அவர் மனதுக்குள் ஏராளமாய் பீதி.

**உ**மாநாத்தையும், ராஜகாந்தத்தையும் ஒரு சிகப்பு ரத்த பொட்டலமாய் பார்க்கவும் சந்திரமோகனுக்கு மயக்கமே வந்துவிட்டது.

ரத்னசபாபதியிடம் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர் விசாரித்துக் கொண்டிருந்தார். கூடவே ராதாவும் இருந்தாள்.

"நீங்கதான் மிஸ்டர் ரத்னசபாபதியா?"

ஆமாம் சார்... எப்படி இப்படி ஆச்சுன்னு உங்களுக்கு ஏதாவது தெரியுமா?"

"காத்தால அஞ்சு மணிக்கு ஒரு போன் கால் ஸ்டேஷ னுக்கு வந்தது. வந்து பார்த்தோம். கார் மரத்துல மோதி நசுங்கிக் கிடந்தது. யாரோ பார்த்துட்டு போன் பண்ணி யிருக்காங்க. கொஞ்சம் டிராஃபிக் வேற சிக்கலாயிடிச்சு."

"இது ஆக்சிடென்ட் தானா?"

"என்ன சார் கேள்வி இது? தூக்கக் கலக்கத்துல வண்டியை மரத்துமேல மோதிட்ட மாதிரிதான் தெரியுது."

"என் சன் வேற மாதிரி சொல்றான்..."

"என்னன்னு...?"

"யாரோ அவங்க கார் மேல மோதி இப்படி ஆக்சிடென்ட் ஆகும்படி செய்திருக்கறதா ஒரு எண்ணம் அவனுக்கு..."

"பார்த்தா அப்படித் தெரியல. எனவே டவுட் இருந்தா கம்ப்ளைண்ட் கொடுங்க. ஆனாலும் பிராக்டிகலா சொல்றேன். அப்படி ஒருக்கால் நடந்திருந்தா அந்த மாதிரி செய்தவங்களை ட்ரேஸ் பண்றது ஹைலி இம்பாசிபிள். ஆமா உங்க சன்னுக்கு யார் மேலயாவது டவுட் இருக்கா?"

–சப்-இன்ஸ்பெக்டர் கேட்கும்போது ராயர் அருகில் வந்து சேர்ந்தார்.

"சப்-இன்ஸ்பெக்டர் சார், நீங்க இதை பெரிசா எடுத்துக்காதீங்க. அந்த தம்பிக்கு இரண்டு நாளாக சித்த சுவாதீனம் இல்லை!"

சப்-இன்ஸ்பெக்டர் அதிர்ந்தார். அவரைவிட கூடுதலாக அதிர்ந்தாள் ராதா.

## 16

**ச**ந்திரமோகன் கிட்டத்தட்ட பைத்தியமாகிவிட்டான் என்கிறார் போல ராயர் சொன்னதைக் கேட்டு சப்-இன்ஸ்பெக்டர் அதிர்ச்சியடைந்தாலும், அதை அவர் நம்பி விடவில்லை என்பது அடுத்தடுத்து அவர் கேட்க ஆரம்பித்த கேள்விகளில் தெரிந்தது.



"பைத்தியம்னு எதை வெச்சு சொல்றிங்க? டாக்டர் கிட்ட காட்டினீங்களா, அவர் சர்ட்டிஃபை பண்ணியிருக்காரா?"

ராயர் கமறினார். ராதா, ராயரிடம் கிசுகிசு குரலில், "என்னப்பா சொல்றீங்க. அத்தான் நல்லாத்தானே இருந்தாரு?" என்றாள். அதற்கு அவளுக்கு பதிலைச் சொல்லாமல், "சப்-இன்ஸ்பெக்டர் சார், அவன்கிட்டயே பேசிப் பாருங்க. தெரியும்." என்று ராயர் சொல்லவும் சப் இன்ஸ்பெக்டர் அவனை நோக்கித்தான் நடந்தார்.

"ஆர் யூ மிஸ்டர் சந்திரமோகன்?"

"யெஸ்!"

"நீங்க இண்டியன் சிட்டிசனா இல்ல அமெரிக்கன் கிரீன்கார்ட் ஹோல்டரா?"

"இங்க எதுக்கு இப்ப இந்தக் கேள்வியெல்லாம்...?"

"சும்மா தெரிஞ்சுக்கத்தான்..."

"ஐ ஆம் எ க்ரீன் கார்ட் ஹோல்டர். அமெரிக்காவுல சான்சாய் சிட்டில ஒரு சாஃப்ட் வேர் எஞ்ஜினீயரா இருக்கேன். நான் இந்தியாவிலதான் பொறந்தேன். ஆனா படிச்சு வளர்ந்ததெல்லாம் வெளிநாடுதான். நான் இந்தியா வந்து பதினைஞ்சு நாள்தான் ஆகுது. ஐ ஹேவ் த்ரீ மன்த்ஸ் லீவ். அவசியப்பட்டா இன்னும் ஒரு மூணு மாசம் எக்ஸ்டெண்ட் பண்ணிக்கலாம்."

"இந்த ஆக்சிடெண்ட் ஒரு கொலையா இருக்கலாம்னு நீங்க நினைக்கறதா உங்க அப்பா சொன்னார்... எதை வெச்சு அப்படி சொன்னீங்கன்னு தெரிஞ்சுக்கலாமா?"

"நிச்சயமா... இப்பத்தான் நீங்க கேக்க வேண்டிய கேள்வியே கேட்ருக்கீங்க. என் பதிலை நான் இங்க நின்னு

பேச விரும்பலை சப்-இன்ஸ்பெக்டர். ஐ ஆம் சாரி, உங்க நேம்?"

"ரத்னவேலு..."

"மிஸ்டர் ரத்னவேலு, நான் உங்ககூட நிறைய பேசணும். இல்லேன்னா எனக்குப் பைத்தியமே பிடிச்சிடும்..."

"தாராளமா பேசலாம் அப்படி வாங்க." அவர்கள் இருவரும் அகன்றனர். ராயர் பார்த்துக்கொண்டே இருந்துவிட்டு ருக்மணியிடம் போய் நின்றார். மார்ச்சுவரிக்கு வெளியே நடந்த அந்தப் பேச்சும் விசாரணையும் ரத்னசபாபதியைக் குழப்பிக் கொண்டிருந்தது. ராதா அவரை நெருங்கி சமாதானப்படுத்தப் பார்த்தாள்.

"அங்கிள்... கவலைப்படாதீங்க. எனக்கே ஒரே குழப்பமாக இருக்கு. அப்பா எதனால அத்தானை பைத்தியம்னு சொன்னார்னும் தெரியல."

"இதை அவன்கிட்டத்தான் கேக்கணும். உங்கப்பா-அம்மா சாமி குத்தம்ங்கறாங்க. அவனோ மனுஷ குத்தம் கறான். நடுவுல ஒரு உயிருக்கு மூணு உயிர் போயிடிச்சு. எனக்குப் புரியலை. துளிக்கூட புரியலை. நாமெல்லாம் எந்த காலகட்டத்துல வாழ்ந்துக்கிட்டிருக்கோம்னும் தெரியல..."

-ரத்னசபாபதி ஒருவிதமாகப் பேச, ருக்மணி வேறு விதமாக பேசிக் கொண்டிருந்தாள்.

"அண்ணே, என்னண்ணே இப்படி ஆயிடிச்சு. பட்ட கால்ல தான் படும்னு சொல்வாங்க. அது சரியா இருக்குதேண்ணே..."

"தைரியமா இரு... நான் இருக்கேன்ல?"

"எங்கண்ணே... என் மகனுக்கு உங்க மகள்னு முடிவு பண்ணி சந்தோஷமா இருந்தேன். ஆனா இப்ப என்



மகனை நீங்களே பைத்தியக்காரனா ஆக்கிட்டீங்களே. என் ஆசைல இப்படி மண் விழுந்தா நான் என்னண்ணே பண்றது?"

"பைத்தியமா நான் ஆக்கலை ருக்மணி. அவன் கொஞ்சம் கொஞ்சமா ஆகிக்கிட்டிருக்கான். நம்ப தலைமுறைல யாருக்கும் இப்படி ஆனதில்ல. எல்லாம் படிச்ச திமிர்..."

"சரி, இப்ப இதைப் பேசவா இங்க வந்தோம்? செத்துப் போய்ட்ட இரண்டு பேரையும் எடுத்துக்கிட்டு போய் அடக்கம் பண்ணிட்டு கிளம்புவோம்."

"இரு... உன் மகன் சப்இன்ஸ்பெக்டர் ரத்னவேலு கிட்ட என்ன சொல்லிக்கிட்டிருக்கான்னு பாத்துட்டு வர்றேன்."

-ராயர் அவர்களை நோக்கி நடந்தார். ராயர் நெருங்குவது தெரியவும் சந்திரமோகனும் சொல்லிக் கொண்டிருந்ததை நிறுத்தினான்.

புரிந்தது ரத்னவேலுவுக்கு.

"நீங்க கொஞ்சம் அப்படியே இருங்க. நான் கூப்பிடறேன்" என்று அவருக்கு தடைபோட்டு விட்டு அவனைப் பார்த்தார்.

"உம்..."

"அதான் எல்லாத்தையும் சொல்லிட்டேனே. ஆயிரம் வேலிக்காடு கோவில்ல நிச்சயமா ஏதோ மர்மம் இருக்கு. அதைப் புரிஞ்சுக்கவோ, இல்லை தெரிஞ்சுக்கவோ, முயற்சி செய்யற எல்லாரும் இப்படித்தான் செத்துப் போயிடறாங்க."

"சரி... ஸ்ரீமதியோட பிணத்தை குழியில இருந்து தோண்டி எடுத்து கார் டிக்கியில போட்டு அனுப்பினதா சொன்னிங்க. இப்ப அதைக் காணோம்னும் சொல்றீங்க.

இதை எல்லாம் மிஸ்டர் ராயர்தான் செய்திருப்பார்ங்கறது தான் உங்க ஸ்டேட்மெண்ட்டா?"

"நிச்சயமா... ஏழுமலை ரொம்ப பயந்தான். நிச்சயம் தன்னைக் கொன்னுடுவாங்கன்னும் சொன்னான். அப்படியே ஆயிடிச்சு. அந்த ஆயிரம் வேலிக்காட்டுல செடி கொடிக்கெல்லாம் கூட கண் உண்டுன்னு சொன்னான். நடந்து முடிஞ்சதை எல்லாம் வெச்சுப் பார்த்தா அது உண்மைன்னுதான் தோணுது.

பிணத்தோட போய் உண்மையைத் தெரிஞ்சிக்கிட்டா என்ன பண்றதுன்னுதான் வழியிலேயே ஃபாலோ பண்ணி ஆக்சிடெண்ட் ரூபத்துல கதையை முடிச்சிட்டாங்க. என் மனைவி ஸ்ரீமதி பிணத்தையும் அழிச்சிட்டாங்க..."

"அப்படின்னா வேலிக்காட்டுல உங்க மனைவியை புதைச்ச குழியில இப்ப வெட்டியான் ஊனக்கண்ணன் பிணம்தான் இருக்குதா? இதை உறுதியா சொல்ல முடியுமா உங்களால்..."

"போட்டு மூடினதே நாங்கதானே?"

"வெல்... உங்க ஆயிரம் வேலிக்காடு எங்க கண்ட்ரோல்ல வராது. இந்தத் தகவல்களை நீங்க அங்க உள்ள போலீஸ் ஸ்டேஷன்லதான் ஒரு கம்ப்ளைண்டா கொடுக்கணும். அவங்கதான் இதை ஃபாலோ பண்ண முடியும். நான் இங்க போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்டை பிரிப்பேர் பண்ணி அனுப்பிடுவேன். எதுக்கும் கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்குங்க. ரொம்ப நெர்வஸா இருக்கீங்க நீங்க."

"இந்த சூழ்நிலையில யாரல் மிஸ்டர் ரத்னவேலு நார்மலா இருக்க முடியும்?"

"வாஸ்தவம்தான்... ப்ளீஸ்..." சப்-இன்ஸ்பெக்டர் ரத்ன வேலு அவன் தோளைத் தட்டிவிட்டு ராயரிடம் வந்தார்.



'என்ன தம்பி... என்னை ஒரு கொலைக்காரன்னு சொல்றானா சந்திரமோகன்?"

"கிட்டத்தட்ட."

"பைத்தியக்காரன் வேற எப்படிச் சொல்வான். ஆமா இங்க போஸ்ட்மார்ட்டம் முடிய நேரமாகுமா?"

"ஆமாம். மதியம் கடந்துடலாம். எதுக்கு கேக்கறீங்க?"

"அதுசரி... நீங்க என்ன சொன்னீங்க. நான் இந்த ஏரியா சப் இன்ஸ்பெக்டர். உங்க கம்ப்ளைண்டை வேலிக்காடு ஏரியால உள்ள ஸ்டேஷனுக்குப் போய் கொடுன்னு சொன்னீங்களா?"

-ராயர் பொட்டில் அடிக்கிற அடுத்தடுத்து கேட்பதில் ரத்னவேலுவிடம் பூச்சி பறந்தது.

"ஆமாம். யூ ஆர் ரைட். நான் அப்படித்தானே சொல்ல முடியும்?"

"அது எனக்கும் தெரியும். நான் அவன் ஒரு பைத்தியம்னு சொன்னேன். அதை உங்களால் நம்ப முடியல இல்ல?"

"சாரி மிஸ்டர் ராயர். அவர் டென்ஷன்ல இருக்கார். பாக்க அப்படித் தெரியுது. மத்தபடி அவர் தெளிவாதான் பேசறார்."

"தெளிவா பேசறானா... இல்லை கண்ட கற்பனையை கோர்வையா ஒப்புவிக்கிறானா?"

"நீங்க என்ன சொல்றீங்க?"

"அவன் சொன்ன அவ்வளவும் பொய். கற்பனை. அபாண்டம். அதை நான் நிரூபிக்கப்போறேன். அவன் பைத்தியமா இல்லையாங்கறதையும் உங்களுக்கு புரூஃப் பண்றேன். கொஞ்சம் என் கூட வர்றீங்களா?"

"எங்க..?"

"எங்க வேலிக்காட்டுக்குத் தான்..."

"மிஸ்டர் ராயர், டென்ஷனாகாதீங்க. இங்க எனக்கு நிறைய ஃபார்மாலிட்டீஸ் இருக்கு. அதோட நான் அங்க வர்றதால ஒரு பிரயோஜனமும் இல்லை."

"இருக்கு சப்-இன்ஸ்பெக்டர், நிறைய இருக்கு. நான் மானஸ்தன். பார்க்க கரடுமுரடா தெரிஞ்சாலும் என் மனசு பூ மாதிரி. அதே சமயம் நான் தும்பை விட்டுட்டு வாலைப் பிடிக்கிற ஜாதி கிடையாது. எப்ப ஒருத்தருக்கு சந்தேகம்னு வந்துடுச்சோ அப்ப அதை நீக்கிட்டுத்தான் மறுவேலை பாக்கணும்."

-ராயர் சொன்ன ஜோரில் வேட்டியை வரிந்துகொண்டு திரும்பினார்.

"ருக்மணி... மாப்ள எல்லாரும் இப்ப என்கூட வர்றீங்க. என் மருமகப்பிள்ளைக்கு கடவுள் நம்பிக்கைத்தான் இல்லைன்னு நினைச்சுக்கிட்டிருந்தேன். இப்ப சொந்த மனுஷங்க மேலையும் நம்பிக்கை இல்லாம போயிடிச்சுன்னு தெரியுது.

அடி மேலே அடி விட்டா சிலர் திருந்துவாங்க. ஆனா இவருக்கு பைத்தியம் பிடிக்க ஆரம்பிச்சிடுது. அந்தப் பைத்தியத்துக்கு வைத்தியம் பண்ணாட்டி அது முத்திடும். எல்லாரும் புறப்படுங்க."

-ராயரின் கட்டளைக்கு ஒருவரிடமும் எதிர்ப்பில்லை. கிளம்பினார்கள்.

கார்கள் அங்கு சென்று நின்றதும் சீறி இறங்கின ராயர், மயானத்தை நோக்கித்தான் நடந்தார். பதில் பேசாமல் எல்லோரும் பின் தொடர்ந்தனர்.



ராதா, சந்திரமோகனுடன் சேர்ந்து நடந்து கொண்டிருந்தாள்.

"என்ன சொன்னீங்கன்னு அப்பா இப்ப சுடுகாட்டுப் பக்கம் போறார்."

"வந்து பார் தெரியும்..."

அவன் பதிலுக்கு பதில் அங்கே தெரிந்தது. வாசலிலேயே வெட்டியான் ஊனக்கண்ணன் உயிரோடு உட்கார்ந்து கொண்டிருந்தான்! எல்லோரும் புழுதி பறக்க நடந்து வருவதைப் பார்த்து 'ஆண்டே' என்றபடி கைகளைக் கட்டிக் கொண்டு மண்டியிட்டான்.

அவனைப் பார்த்த சந்திரமோகனுக்குள் இதயம் நின்று விட்டார்போலிருந்தது.

## 17

**ஊ**னக்கண்ணன் கிண்ணென்று கையில் கருவேலந் தடியுடன் அங்கு இருப்பதைப் பார்க்கவும், சந்திரமோகனுக்கு யாரோ பொட்டில் குறிவைத்துச் சுட்டதுபோல இருந்தது.

சப்-இன்ஸ்பெக்டர் ரத்னவேலு அவன் யார் என்கிற மாதிரி ராயரைப் பார்த்தார்.

"இவன்தான் எங்களுக்குச் சொந்த இந்த ஆயிரம் வேலிக்காட்டோட நந்தவனச் சுடுகாட்டுக்கு வெட்டியான். சந்திரமோகன் சொன்னதா சொன்ன அதே நபர்!" -ராயர் பதிலோடு ஸ்ரீமதியைப் புதைத்த சவக்குழியை நெருங்கிச் சென்று நின்றார்.

அதைப் பார்க்கும்போதே அங்கே சமீபத்தில் யாரும் எதற்காகவும் அந்தச் சமாதியைத் தோண்டியிருக்க வாய்ப்பு

இல்லாததை சப்-இன்ஸ்பெக்டர் ரத்னவேலுவால் ஓரளவு யூகிக்க முடிந்தது.

-அவர் ஊனக்கண்ணனை அழைக்க அவன் "ஆண்டே" என்றபடி பாய்ச்சலெடுத்து முன்னால் வந்தான். "தோண்டுறா இந்தக் குழியை..."

-அடுத்த நொடி அவன் தோண்டத் தொடங்கி விட்டான். சரியாக பதினைந்து நிமிடம்... குழியை முழுவது மாகத் தோண்டி முடிக்க மெல்ல ஸ்ரீமதியின் சடலம் கண்ணுக்குத் தெரிய ஆரம்பித்தது.

மஞ்சள் புடவையில்- சுமங்கலிக் கோலத்தில்... சந்திர மோகனுக்கு நெஞ்சையடைத்தது.

"ஸ்ரீ..." என்றான் தீனமாக. அருகில் ராதா நின்று கொண்டிருந்தாள். "ப்ளீஸ் அத்தான். டென்ஷன் ஆகாதீங்க..." என்று அவனை தாங்கிக் கொண்டாள். "எடு கையை..." -அலறினார் ராயர். அவளும் தீயைத் தொட்டு விட்டது போல கையை விடுவித்தாள். "மிஸ்டர் ரத்னவேலு... பாத்துக்குங்க, இதான் இவன் சம்சாரம் ஸ்ரீமதியோட சடலம். புதைச்ச இடத்துல பத்திரமா இருக்கு. இவன் சொன்ன எதுவுமே உண்மையில்லன்னு தெரிஞ்சு போச்சா?"

-ராயர் கேட்ட கேள்விக்கு ரத்னவேலுவால் எந்தப் பதிலையும் சொல்ல முடியவில்லை. சந்திரமோகனைத் தான் பார்த்தார்.

அவன், "அப்படிப் பாக்காதீங்க ரத்னவேலு... எனக்கே எல்லாம் பயங்கர மர்மமா இருக்கு. நான் சொன்ன அவ்வளவும் உண்மை" என்று திரும்ப அதே பல்லவியைப் பாட ஆரம்பித்தான்.



"சரி சரி... முதல்ல நல்லா ரெஸ்ட் எடுத்துக்குங்க, பிறகு பேசலாம்" என்ற ரத்னவேலு, ராயர் பக்கம் திரும்பி, "ஐ ஆம் சாரி மிஸ்டர் ராயர்... வெரி சாரி" என்றார்.

"அதெல்லாம் எதுக்கு... இப்ப உங்களுக்கு மட்டுமில்ல எல்லாருக்கும் சந்தேகம் தீர்ந்திருக்கும்னு நினைக்கறேன். மாப்ள... இனியும் நீங்க சந்திரமோகன் சொல்றத கேட்டீங் கன்னா உங்களுக்குத்தான் ஆபத்து. அவனுக்கு மூளை கலங்க ஆரம்பிச்சாச்சு. இன்னும் பத்தே நாள் அவனை நீங்க ஏர்வாடியிலோ, இல்லை குணசீலத்துலேயோதான் கொண்டுபோய் சேர்க்க வேண்டியிருக்கும், ஞாபகத்துல வெச்சுக்குங்க. போய் உங்க சம்மந்தியை என்ன பண்ணணுமோ பண்ணிட்டு ஊரைப் பார்க்க போய்ச் சேருங்க. இனி நீங்க இந்த ஆயிரம் வேலிக்காட்டுப் பக்கமே வரக்கூடாது. வந்தா சந்திரமோகன் உயிரோட திரும்புவானாங்கறது சந்தேகம். குட்டி நந்தஸ்வாமிக்கு இங்க அப்படி ஒரு சக்தி. ஞாபகம் வெச்சுக்குங்க..."

-ராயர் பட்டு பட்டு என்று போட்டு உடைத்துவிட்டு அங்கிருந்து தனது கல் பங்களா நோக்கிப் புறப்பட்டார். சங்கவை பின் தொடர்ந்தாள். ராதா மட்டும் தேங்கித் தேங்கி நின்றாள்.

ராயர் பின்னால் ருக்மணி ஓடினாள். "அண்ணே... அண்ணே... இப்படி பேசிட்டு போறியேண்ணே. நான் இப்படி பேச்சு கேட்டுக்கவா வந்தேன்..."

"எதுவும் பேசாத ருக்மணி. நம்ம உறவுமுறை இதுக்கு மேல கெட்டுடாம அப்படியே தொடரணும்னா இப்போதைக்கு மகனைக் கூட்டிக்கிட்டு கிளம்பு."

-ராயர் நின்றுகூட பதில் சொல்லவில்லை. நடந்து கொண்டேதான் பேசினார்.

ரத்னசபாபதிக்கே அதற்குமேல் அவ்வளவையும் பார்த்துக்கொண்டு அங்கு நிற்கப் பிடிக்கவில்லை.

"ருக்மணி..." -என்று கத்தினார். அவளும் திரும்பிவந்தாள். "போதும்... புறப்படு! இனி ஒரு நிமிஷம் இங்க இருக்கக் கூடாது. புறப்படு..." -அவர் நரம்பு புடைக்கக் கத்துவது எல்லோர் காதிலும் விழுந்தது.

குறுக்கும் நெடுக்குமாக நடக்க ஆரம்பித்தாள் ராதா. நடந்தவைகளின் பாதிப்பு நெஞ்சுக்குழியில் கபடி விளையாடிக் கொண்டேயிருந்தது.

அப்பொழுது பார்த்து தாண்டிக் கொண்டு போனான் வீரபத்ரன்.

சில நிமிடங்களுக்குப் பிறகு அவனோடு சேர்ந்து ராயரும் போவது, அவர் பேசுவபது காதில் விழுந்தது. எட்டிப்பார்த்தாள்.

இருவரும் மல்லிகைத்தோட்டம் பக்கம் போய்க் கொண்டிருந்தனர். வீரபத்ரன் கைகளில் மண்வெட்டி!

ராதாவை ஆவல் தொற்றிக் கொண்டது. அவளும் பின் தொடர்ந்து பார்க்க விரும்பி அங்கிருந்து புறப்பட்டாள். எச்சரிக்கையாக நடந்தாள்.

தோட்டத்தில் வீரபத்ரன் ஒரு செடி நடப்பட்டிருக்கும் இடத்தைத் தோண்டத் தொடங்கியிருந்தான்.

ஐந்து நிமிஷத்தில் தோண்டி முடித்து ஏழுமலை அங்கே புதைத்த நாயின் சடலத்தை எடுத்து வெளியே போட்டான்.

ராயர் அதைப் பார்த்து விட்டு கைகளைக் குத்திக் கொண்டார்.

"எவ்வளவு நெஞ்சழுத்தம் அவனுக்குப் பார்த்தீங்களா?" -வீரபத்ரன் கேட்டான்.

"சரி சரி... அதான் அவனை போட்டுத் தள்ளிடிச்சே?"



"அவனை போட்டுத் தள்ளினது பெருசில்லீங்க. உங்க தங்கச்சி மவனை போட்டுத் தள்ளியிருக்கணும். விட்டுடுச் சிங்களே..."

"விடலைடா. ஒரு சந்தர்ப்பம் கொடுத்துருக்கு. அவன் அமெரிக்காவுக்குப் போயிட்டா தப்பிச்சுடுவான். திரும்பி வந்தா நம்ம யாராலயும் ஒண்ணும் பண்ணமுடியாது. பார்ப்போம், அவன் தலையெழுத்து எப்படி இருக்குன்னு..."

-இருவரும் சரளமாகப் பேசிக்கொள்வது அங்கே ஒரு மல்லிகைச் செடியின் பின்னால் நின்று கொண்டிருந்த ராதாவின் காதிலும் விழுந்தபடி இருந்தது.

ராதா சிந்தனையோடு அங்கிருந்து நழுவினாள். மீண்டும் அவள் அறைக்குள் புகுந்து கொண்டு குறுக்கும் நெடுக்கும் நடக்க ஆரம்பித்தாள்.

சந்திரமோகன் முகம் பரிதாபமாக அவள் மனக் கண்ணில் தோன்றித் தோன்றி மறைய ஆரம்பித்தது.

அவனுக்காக அளவுக்கு அதிகமா யோசிக்கிறோமோ என்றுகூட ஒரு கணம் தோன்றியது.

"அம்மாடி..." -நடுவில் சங்கவையின் குரல் கேட்டு நிமிர்ந்து பார்த்தாள். சங்கவை கையில் பால் டம்ளருடன் வந்துகொண்டிருந்தாள். நெருங்கவும் குடிக்கச் சொல்லி நீட்டினாள்.

"என்னம்மா இன்னைக்கு நீயே பாலை எடுத்துகிட்டு வரே?"

"ஏண்டி, நான் கொண்டுகிட்டு வரக்கூடாதாக்கும்!"

"இல்ல... பாசம் திடீர்னு பீறிடுதேன்னு பார்த்தேன்."

"போதுண்டி கிண்டல். ஆமா நீ ஊருக்கு புறப்படலை?"

"இந்த புத்தி கூப்பிடும்போது இருந்திருக்கணும்?"

"அதான் ஏதேதோ நடந்து முடிஞ்சிடிச்சே."

"நானே உன்கிட்ட கேக்கணும்தான் இருந்தேன். அத்தான் எதனால அப்பா மேல இவ்வளவு சந்தேகப் பட்டார்?"

"அவனைத்தான் கேட்கணும். உங்க அத்தை உன்னை மருமகளாக்கிக்க ரொம்ப ஆசைப்பட்டா. ஆனா எல்லாம் இப்படி கெட்டு குட்டிச் சுவராப் போச்சு. இன்னும் பத்து நாளோ... இல்லை பதினைஞ்சு நாளோ...?"

"எதுக்கும்மா?"

"உங்கப்பா சொன்னதை நீ கேக்கலியா? அவன் கொஞ்சம் கொஞ்சமா பைத்தியமாயிகிட்டு வராண்டி."

"அம்மா... என்னம்மா சொல்றே? இதெல்லாம் எந்த அளவுக்கும்மா உண்மை?"

"என்னடா கண்ணு நீ? இந்த மண்ணுலயே பொறந்து வளர்ந்தவ நீ... நீ பாக்காததா...? உனக்கு நான் சொல்லவா? எல்லாம் சாமியோட சக்திடா..."

"சாமி கொல்லுமாம்மா?"

"என்னடி சந்தேகம்... அதுக்கு எத்தனை உதாரணம் இருக்கு இந்தக் காட்டுக்குள்ளையே... புரியாம பேசிறியே?"

"சர்வசக்தி படைச்ச சாமி எதுக்கும்மா கொல்லணும். யாராவது அதை நம்பலைன்னா உடனே கொன்னுடறதா? அவங்களுக்கு அது தன்னை புரிய வைக்க வேண்டியது தானே...?"

"போதுண்டி... போய் வாயைக் கழுவு. சாமியைக் கேள்வி கேக்கவோ இல்லை அதை விமர்சிக்கவோ உனக்கும் எனக்கும் சக்தி கிடையாது. இதெல்லாம் காலகாலமாக நடந்துக்கிட்டு வர்ற விஷயங்கள். உன்னையும் படிக்க வெளியூருக்கு அனுப்பனது தப்பு. அதான் இப்படி கேள்வி



கேட்கறே... சரி சரி காலேஜுக்கு புறப்பட்ற சோலியைப் பார்..."

"ஏம்மா துரத்தறே... நான் நாலு நாள் இருந்துட்டுதான் போகப்போறேன்."

"நாலு நாளா...?" -கேள்வியோடு வாயைப் பிளந்தாள் சங்கவை.

"நீ கவலைப்படாதே- அப்பாகிட்ட நான் சொல்லிக் கறேன்..." -அம்மாவை சமாளித்துவிட்டு ராதா திரும்ப யோசிக்கத் தொடங்கினாள். சந்திரமோகன் முகம் மீண்டும் முண்டி எழுந்தது. ஒரு உயிருக்கு மூன்று உயிரை பறி கொடுத்துவிட்டான்... அவ்வளவுக்கும் சாமியா காரணம்?

ரத்னசபாபதி. பணிக்கரைப் பிடித்து போனில் வாங்கு வாங்கு என்று வாங்கத் தொடங்கியிருந்தார். "என்ன பணிக்கரே நீங்க... ஆரம்பத்துல நீங்க சொன்ன சகுனப்படி தான் எல்லாம் நடந்தது. ஆனா போகப்போக எல்லாம் மாறி இப்ப என் மருமகளே உயிரோட இல்லை தெரியுமா?"

"அறியும் ரத்னசபாபதி அறியும்..."

"அப்ப தெரிஞ்சுதான் எங்களை அங்க போகச் சொன்னீங்களா?"

"அப்படியில்லா... அது சரி உங்களோட மகன் இப்ப எங்க?"

"எங்க போவான்... இங்கதான் இருக்கான். கொலை சதின்னு எப்பப்பார் உளர்றான். அதைவிட ஒரு கொடுமை. அவன் இன்னும் பத்து பதினைந்து நாள்ல பைத்தியக்காரனாயிடுவான்னு என் மச்சினனே சொல் றாரு. எனக்கு பயமா இருக்கு பணிக்கரே. இந்த நொடி நான் உங்களைத்தான் நம்பியிருக்கேன்."

'பேடிக்காண்டா... நான் வருஊ... வந்த பின்னே பிரஷ்ணம் கண்டு அதில் சத்யம் அறியும்."

பணிக்கர் அப்படிச் சொல்லவும்தான் ரத்னசபாபதிக்கே உயிர் மூச்சே ஒழுங்கு பட்டது. ஆனால் சந்திரமோகனோ கூண்டுப்புலிபோல விடமாட்டேன்... 'விடவேமாட்டேன்' என்கிற முனகலுடன் புலம்பிக் கொண்டேயிருந்தான்.

## 18

**ப**ணிக்கர் சொன்னது போலவே அன்று மாலையே ரத்னசபாபதியைச் சந்திக்க வந்துவிட்டார்.

"வாங்க பணிக்கரே... வாங்க... வாங்க."

"எந்தா ரத்னசபாபதி... என் மேல கோபமோ?"

"ஆமாம் பணிக்கரே. நல்ல வழி காட்றேன்னு ஊருக்குப் போகச் சொல்லி இப்ப எல்லாம் போச்சு."

"நான் சில எச்சரிக்கைகளையும் செய்தல்லே...?"

"அது வாஸ்தவம்தான். குலதெய்வத்தை நம்பு- கேள்வி கேட்காதே- நம்பினா நல்ல வழி, இல்லேன்னா ஆபத்துன்னு சொன்னீங்க. நெருப்பு சுடுங்கறது எல்லாருக்கும் தெரியும். தொட்டா சாம்பலாயிடுவோம்ங்கறதும் எல்லாருக்கும் தெரியும். ஜோசியம்ங்கறது நெருப்பு சுடும்னு சொல்ற ஒரு சராசரி எச்சரிக்கையா இல்லை, அது சுட்டு நீ சாம்பலாகப் போறேடான்னு தீர்மானமா சொல்ற விஷயமா... இதுக்கு பதிலைச் சொல்லுங்க?" -ரத்னசபாபதி அழுத்தமாகவே கேட்டார்.

"இப்ப எந்தா ஆயி?"

"இன்னும் என்ன ஆகனும்? ஒரு வாரிசு வேணும்னு நான் என் பிசினஸ் விஷயங்களை எல்லாம் ஒதுக்கி ஓரம்



கட்டிட்டு சந்திரமோகனையும் கட்டி இழுத்துக்கிட்டுப் போனேன். போன இடத்துல நீங்க சொன்ன சகுனப் படியே எல்லாம் நடந்தது. ஒரு கட்டத்துல சந்திரமோகன் கூட வழிக்கு வர்ற மாதிரி தெரிஞ்சது. ஆனா தொட்டுத் தொட்டு அங்க நடந்த பல விஷயங்கள் எங்களை எல்லாம் உலுக்கிடிச்சு. இப்ப அவன் பைத்தியமானா ஆச்சரியப் படறதுக்கு இல்லை. அவ்வளவு ஏன் பைத்தியமா ஆகியே தீருவான்னு சொல்றார் என் மைத்துனர்."

-ரத்னசபாபதி ஆசுவாசத்தோடு சொல்லும்போது ருக்மணியும் வந்து சேர்ந்தாள். பணிக்கரை பரிதாபமாகப் பார்த்தாள்.

"ஆமா இப்ப சந்திரமோகன் எங்க?"

"மாடியில ரூம்லதான் இருக்கான்!" -ருக்மணி உடைந்த குரலில் சொல்லி விசும்பினாள். அடுத்த நொடி பணிக்கர் எப்பொழுதும் தன் கைவசம் வைத்திருக்கும் ஒரு சிறிய மரப்பெட்டியைத் திறந்தார். உள்ளே விதவிதமான சைஸ்களில் சோழிகள்.

அதில் ஒரு கை அள்ளியவர் எதிரில் இருந்த கண்ணாடி மோடோவில் சற்றே விசிறினார். கலகலவென்று ஓடிய அதில் சில சோழிகள் கவிழ்ந்தும் சில நிமிர்ந்தும் விழுந்தன. அவற்றைக் கணிதப்படுத்திப் பார்த்தவர் முகத்தில் ஆச்சரியமும் அதிர்ச்சியும் வந்து அலைமோத ஆரம்பித்தது.

திரும்பத் திரும்ப பலமுறை சோழிகளைப் போட்டுப் போட்டு எடுத்தவர் "விபரீதம்!" என்றார் ஒரே வார்த்தையில்.

"என்ன சொல்றீங்க பணிக்கரே...?" ரத்னசபாபதியும் அதைக் கேட்டுப் பதறினார்.

"விபரீதம் ரத்னசபாபதி. வல்லிய விபரீதம். இது சத்யமாயிட்டு தேவகோபம்."

"தேவகோபமா... அப்படீன்னா?"

"இப்போ நான் எதையும் விஸ்தாரமா சொல்ல ஏலாது."

"இப்படி பேசறதே உங்களை மாதிரி ஜோசியர்களுக்கு வழக்கமா போச்சு."

-ரத்னசபாபதி சீற, பணிக்கர் ஒரு மர்மச் சிரிப்பு சிரித்தார்.

"இந்த விளக்கமெல்லாம் இருக்கட்டும். என் மகன் பழையபடி மாறணும். கலகலப்பா இருக்கணும். அதுக்கு வழி இருக்கா...?"

"ஆமாம்... எனக்கு அதுதான் முக்கியம். அவன் தெரிஞ்சோ தெரியாமலோ கடவுளோட சண்டை போட்டுட்டான். எங்களுக்காக அந்தக் கடவுள் அவனை மன்னிச்சு அவனுக்கு இன்னொரு குடும்ப வாழ்க்கையை நல்லவிதமா அமைச்சுக் கொடுக்கணும். இதெல்லாம் நடக்கணும். நடக்குமா?" -ரத்னசபாபதியும், ருக்மணியும் மாறி மாறி கேட்டனர். பணிக்கர் அவர்கள் பேசியதைக் கேட்டபடி கண்களை மூடினார். இருவரும் ஊன்றிப் பார்த்தனர்.

"அந்த நந்தன்குட்டி ஸ்வாமியின் அனுக்ரஹத்தால் ஒரு பெண்ணால் எல்லா குழப்பங்களும் தீரும். அவள் ராதை. தர்மயுத்த நாயகி அவள். அவள் கையில்தான் இனி எல்லாமே...!" -பணிக்கர் சொன்னது இருவரையும் மௌன மாக ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளச் செய்தது.

"வந்துட்டீங்களா?" -மாடியில் இருந்து கேள்வியுடன் சந்திரமோகனும் இறங்கிக் கொண்டிருந்தான். பணிக்கர் முகம் சுண்டிச் சுருங்கியது.

"என்னப்பா திரும்ப ஆரம்பிச்சுட்டீங்களா?"

"சந்திரா..."



"என்ன சந்திரா... இவரை கேட்டுக்கிட்டுத்தான் நீங்க பொறந்தீங்களா...? எழுதப் படிக்க இவர்தான் உங்களுக்கு கத்துக் கொடுத்தாரா? உங்க பிசினஸ், அதோட வெற்றி எல்லாம் இவராலதானா...? உங்க புத்தி, உழைப்பு இதுக் கெல்லாம் அதுல இடமே இல்லையா?" -அவன் கேள்வி களை அடுக்கியபடி வந்து நின்றான்.

"டேய், எதுக்குடா இப்படி டென்ஷன் ஆகறே?"

"ஆகாம...? அந்தக் கோயில், அங்க இருக்கற மனுஷர்கள் எல்லாம் ஒரு ஃப்ராடுன்னா இவர் இன்னொரு ஃப்ராடு. எனிவே... மிஸ்டர் பணிக்கர். உங்களால நான் அந்த ஊருக்குப் போயிருக்கலேன்னா எனக்குப் பல விஷயங்கள் தெரியாமலே போயிருக்கும். நான் ஒண்ணும் இப்ப நொறுங்கிப் போயிடலை பணிக்கர். இப்பத்தான் நிறைய யோசிக்க ஆரம்பிச்சிருக்கேன். என் சாஃப்ட்வேர் பிசினசுக் காக கம்ப்யூட்டர் முன்னால யோசிச்சதைவிட அதிகமா யோசிக்க ஆரம்பிச்சிருக்கேன். சும்மா விடமாட்டேன்... அவங்களை, உங்களை உங்க ஜோசியத்தை நார் நாரா உரிக்காம விடமாட்டேன்." -கையை காலை ஆட்டிக் கொண்டு அவன் பேசப்பேச ருக்மணி மிரண்டு போனாள்.

"இப்படித்தான் பணிக்கரே இவன் இப்பல்லாம் பேசறான். எனக்கென்னவோ பைத்தியமாவே ஆயிட்ட மாதிரிதான் தெரியுது." -ருக்மணி இடையில் பேசியது அவனை வெறிகொள்ள வைத்தது.

"அம்மாாாா..." என்றான் உச்சபட்சமாக. அவளும் கோழிக்குஞ்சு போல ஒடுங்கினாள். பணிக்கர் கையை உயர்த்தி அமைதிப்படுத்தும் பாவனையோடு சிரித்தார்.

"தம்பி சந்திரமோகா... நீ உரிக்கணும். நார் நாராயிட்டு உரிக்கணும். மட்டைக்கு மூணு சீத்தாயிட்டு உரிக்கணும். அதே எனக்கும் எண்ட ஸ்வபாமிக்கும் இப்ப வேணும்.

ஆநந்தக்குட்டியிண்ட ராதை வருவாள். எல்லாம் செரியாகும்."

–மீண்டும் பணிக்கர் முகத்தில் மர்மச் சிரிப்பு!

**ஊ**ருக்குப் புறப்படுவதற்காக எல்லாவற்றையும் பேக் செய்து கொண்டிருந்தாள் ராதா. ராயர் வந்தார். "என்னம்மா புறப்படத் தயாராயிட்டியா?"

"ஆமாம்ப்பா. நாலு நாளும் இங்க எனக்கு வேஸ்ட்!"

"நீ வந்துருக்கவே வேண்டாம். உன் அத்தையும் உங்கம் மாவும் அவசரப்பட்டுட்டாங்க. போகட்டும். நீ இங்க நடந்த எதையும் மனசுல வெச்சுக்காம நல்லா படிக்கணும் என்ன...?"

"சரிப்பா..."

"பாத்து போயிட்டுவா. காரை எடுத்துக்கிட்டு போயிட்டு அனுப்பிடு."

"சரிப்பா..."

"டேய் ராமலிங்கம்..." –ராயர் நின்ற இடத்தில் இருந்து கத்தவும் கேஷியர் ராமலிங்கம் ஓடி வந்தார். "பாப்பாவை பத்ரமா கோயமுத்தூர் வரை போய் கார்ல விட்டுட்டு வர்றதுக்கு ஏற்பாடு செய்."

"உத்தரவு ஆண்டே!"

–ராமலிங்கம் ஓடினார். சற்றைக்கெல்லாம் ராதா அந்த ஆயிரம் வேலிக்காட்டின் மாளிகை முன் நின்று கொண்டிருந்த காரில் ஏறி அமர கார் புறப்பட்டது. புழுதிக் கவளத்தோடு அது செல்லும் பாதையில் குருடர் கிட்டா மணியரசுவிலிருந்து, பட்டர் வரை எல்லாரும் எதிர்பட்டு ஒதுங்கி ஓரமாக நின்று முதல்வரின் காருக்கு சல்யூட் அடித்து வழிவிடும் போலீஸ்காரர்களைப் போல நடந்து கொண்டது அவளை வழக்கம் போல கிள்ளியது.



கல்லூரி வாழ்க்கை கல்லூரிப் பாடங்களோடு மறைமுகமாக பல விஷயங்களைக் கற்றுக் கொடுத்து விட்டது.

அவள் வெளியே பார்த்தபடி வந்தாள். பசுமை கொழிக்கும் சூழ்நிலை. கண்ணுக்கு எட்டியவரையில் பச்சைப் பசேல்தான்... கிட்டத்தட்ட மூவாயிரம் ஏக்கர் நிலப்பரப்பு–அவ்வளவும் ஒரு குடும்பத்துக்கே சொந்தம்! ஆயிரம் வேலிக்காட்டின் முகப்பில் ஒரு பெரிய நுழைவாயில். அதன் வழியாகத்தான் வேலிகாட்டுக்குள் யாராக இருந்தாலும் வந்துபோகவேண்டும். அந்த நுழைவாயில் முகப்பில் ஒரு கல்வெட்டு.

'ராமனாதபுரம் சேதுபதி சமஸ்தானத்துக்கு பாத்தியப் பட்ட புலிவேலிக்காடடுப்பாக்கம் அனந்த மஹா கோடி வந்தனோபரசாரத்துடன் மஹாஜனங்களை வரவேற்கிறது."

அந்த கல்வெட்டை போகும்போதும் வரும்போதும் ராதா பார்த்திருக்கிறாள். அதன் தமிழ் அவளுக்குச் சற்று சிரிப்பைத் தரும்.

அந்த நுழைவாயில் கல்வெட்டை ஒட்டி ஒரு பெரிய பாம்புப் புற்று ஒன்றும் உண்டு.

எப்பொழுதும் அந்தப் பக்கமாக வெளியே போனாலும் இறங்கி அந்த புற்றையும் அதனுள் இருப்பதாக நம்பப்படும் புற்று மாரியம்மனுக்கும் ஒரு கும்பிடுபோட்டு விட்டுத்தான் போவாள்.

இப்பொழுதும் டிரைவர் அவள் சொல்லாமலே காரை நுழைவாயிலை ஒட்டிய புற்றை ஒட்டி நிறுத்தினான். ராதாவும் இறங்கினாள். புற்றில் எதிரில் போய் நின்றாள். கைகளைக் கூப்பி வணங்கி முடித்தாள். புற்றையும் சுற்றி வரத்தொடங்கினாள். நல்ல வெயில் அடித்துக் கொண்டிருந்தது. சற்று முன்பு வரை மழை பெய்து புற்றை ஒட்டி சில இடங்களில் செம்பழுப்பில் மழைநீர் தேங்கிக் கிடந்தது. அந்த இடத்தில் காலில் நீர் படாதபடி இருப்பதற்காக

லாங் ஜம்ப்பில் தாண்டுகிற மாதிரி தாண்ட முயன்றாள். அடுத்த நொடி அந்தத் தாண்டல் சறுக்கலில்தான் முடிந்தது! தடுமாறிக் கொண்டு புற்றுச்சரிவின் மேல் விழுந்தாள். பதறிப்போனான் டிரைவர்.

“அம்மாாா...” என்றபடி அருகே ஓடிவந்தான். புற்றும் பொலபொலவென்று இடிந்து நொறுங்கியது. அது நொறுங்கினாலும் ராதா முழுவதுமாக கீழே விழாதபடி உள்ளிருக்கும் ஒரு செவ்வக நடுக்கல் ஒன்று ராதாவை தாங்கி பிடித்திருந்தது.

ராதாவும் பயத்துடன் தடுமாறிக் கொண்டு எழுந்து நின்றாள். டிரைவரும் அருகே வந்து அவளைத் தொட்டுத் தூக்க தயங்கியபடி கைகளை உதறிக்கொண்டு நின்றான். அவன் பார்வையிலும் அந்த செவ்வக நடுகல் கண்ணில் பட்டது.

ஒரு கணம் ராதா வியர்த்துப் போய்விட்டாள். கை-கால்- தோள்- தலை என்று ஒட்டிக்கொண்டிருக்கும் புற்று மணலைத் தட்டிவிட்டபடியே அந்த நடுகல்லையும் அதன்மேல் சரசரவென்ற சில பாம்புக் குஞ்சுகளையும் பார்த்தாள்.

நடுகல்லில் ஒரு வீரனின் மீசை முறுக்கிய முகமும் கீழே மகாவீரன் புலியன் என்கிற வாசகமும் கண்ணில் பட்டது!

## 19

நெளியும் பாம்புகளும், மாவீரன் புலியன் என்ற பெயருடைய அந்த செவ்வக நடுக்கல்லும் ராதாவை ஆச்சரியப்படுத்திற்று.

யார் இந்தப் புலியன்?



டிரைவரைப் பார்த்தாள்.

“ஆமா என்ன இது புத்துக்குள்ளே கல்வெட்டு?”

“தெரியலீங்கம்மா... நானே இப்பதான் பாக்கறேன்.”

“ஐ... சீ...”

“கொஞ்சம் இப்படி வாங்கம்மா. உள்ள தாய் நாகம் இருந்தா ஆபத்து.”

-அவன் சொல்லும்போதே கை பருமனில் ஒரு ரப்பர் குழாயாட்டம் நாகம் ஒன்று உடம்பில் வளைவோடு படத்தை நிமிர்த்தியபடி எட்டிப் பார்த்தது.

“அம்மா வந்துடுங்கம்மா...” டிரைவர் பதறினான்.

“மைகாட்... இவ்வளவு பெரிய பாம்பெல்லாம் கூட இங்கே இருக்கா?” -ராதா பயத்தோடு ரசித்தாள். அது சரேலென்று நிமிர்ந்தது. எழும்பி நின்றது. என் ஏகாந்த வாழ்வைக் கெடுத்தது யார் என்கிறார் போல பார்த்தது. இரட்டை நாக்கு வினாடிக்கொருமுறை வெளியில் வந்து வந்து உள்ளடங்க உடம்பில் ஆயிரமாயிரம் கோதுமைக் கண்கள்.

ராதா சற்று தள்ளித்தான் இருந்தாள். அந்தப் பாம்பும் அதன் படமும் அபூர்வமான ஒன்றாகத்தான் இருந்தது. பார்வையை விலக்க முடியவில்லை.

அதுவும் வாலை அசைத்து உடம்பை நெளித்தது. அப்போது சன்னமாய் ஒரு சப்தம். கூர்ந்து பார்த்தபோது ஒரு பெரிய சாவிக் கொத்து உள்ளே கிடந்து அதை மண் திப்பிகள் கவ்வியிருந்தன. அதுதான் பாம்பின் வால் பாகம் பட்டு சப்தம் எழுப்பின!

“ஐய்யோ, அந்தப் பாம்புக்குக் கீழே ஒரு சாவிக் கொத்து...”

"அம்மா, அங்க வைரமேகூட இருக்கட்டும். நீங்க வாங் கம்மா. ஏடாகூடமானா அய்யா என்னைக் கட்டி வெச்சு தோலை உரிச்சுடுவாரு."

"இரு... சம்திங் ஸ்டேர்ஞ்! இது புத்துன்னு மட்டும்தான் நினைச்சுக்கிட்டிருந்தேன். உள்ள என்னென்னமோல்லாம் இருக்குதே."

-ராதாவிடம் ஆராய்ச்சி கூடிக்கொண்டே போனது. டிரைவர் நெளிந்தான். அந்தப் பாம்பும் கூடுதலாய் நெளிந் தது. பின் சரசரவென்று உள்ளடங்கி மறைந்து போனது.

சாவிக் கொத்து மட்டும் பளிச்சென்று பார்க்கும் படியாய்த் தெரிந்தது. அதை எடுத்துப் பார்க்கும் ஆசையும் ராதாவிடம் துளிர்விட்டது.

துப்பட்டாவை இழுத்துவிட்டுக்கொண்டு மழை நீரில் ஒரு ஆட்டுக் குட்டிபோலத் தாண்டினாள். சற்று பயமாய் இருந்தபோதும் அந்தச் சாவிக் கொத்தை எடுத்துப் பார்க்கும் ஆசையில் கைகளும் வேகமாய் இயங்கின.

"அம்மாம்மா...!" -டிரைவர் மீண்டும் அலறினான். நல்லவேளை. சாவிக் கொத்து கைவசப் பட்டுவிட்டது.

அவள் அந்தச் சாவிக் கொத்தை அப்படியும் இப்படியு மாகப் பார்த்தாள். சாவிகள் மொத்தமாய் ஒன்பது இருந் தன. ஒன்றுக்கொன்று இரு மடங்கு பெரிதாய் வரிசைக் கிரமமாய் இருந்து அவளை ஆச்சரியப்படுத்தின.

"அம்மா கார்ல ஏறுங்கம்மா நேரமாகு..."

-டிரைவரிடம் கெஞ்சல்.

அவளும் சிந்தனையோடு சாவிக் கொத்தைத் தூக்கிப் போட்டபடி காரில் ஏறினாள்!

**வே**ளச்சேரி!



ஒரு அழுக்கு ஜீன்ஸையும், ஸ்டோன்வாஷ் சட்டையை யும் எடுத்து மாட்டிக்கொண்டு தாடையைத் தேய்த்தபடி கிளம்பிக்கொண்டிருந்தான் சந்திரமோகன். ருக்மணி பார்த்துவிட்டு அருகில் வந்தாள்.

"எங்கப்பா கிளம்பிட்டே?"

"சும்மா வெளிய போய்ட்டு வரேன்."

"சும்மான்னா... எங்கே?"

-அவன் முறைத்தான். பின், "சும்மான்னா சுடுகாட் டுக்கு" என்று கத்தினான்.

"அட ஏம்ப்பா இந்த கத்து கத்தறே?" -அவள் பயந்து பதறினாள். கச்சிதமாய் குறுக்கீடு செய்தது தொலைபேசி. போய் காதைக் கொடுத்தாள்.

"யாரு ருக்மணியா... நான் சங்கவை பேசறேன்" என்று பதில் குரல்.

"அண்ணி ஈஈ..." -ருக்மணியும் குரலை நீட்டினாள்.

"எப்படி இருக்கான் உன் மகன்?"

"நல்லா இருக்கான் மதனி..."

"கிறுக்கு ஒண்ணும் கூடிடலையே..."

"அண்ணி கொஞ்சம் மெள்ளப் பேசுங்க. கிட்டதான் இருக்கான். கோபத்துல வேற இருக்கான்."

"பாத்து ருக்மணி... வெளிய விட்றாதே. தப்பி தவறி இந்தப் பக்கம் வந்தா சாமி விடாது. அதைச் சொல்லத் தான் போன் பண்ணேன்."

"நானும் கண்கொத்திப் பாம்பாதான் பாத்துக்கிட்டிருக் கேன். அவரு என்னடான்னா ஆபீசு, பிசினசுன்னு போயிட்டார்."

"ஜாக்ரதை... இதை நான் கூட சொல்லலை. உன் அண்ணன்தான் சொல்லச் சொன்னார். அதான் போன் பண்ணேன். வெச்சிரட்டா..."

"சரி அண்ணி... நான் முடிஞ்சமட்டும் பாத்துக்கறேன்."

"அவள் ரிசீவரை வைத்துவிட்டுத் திரும்பினாள். சந்திர மோகனைக் காணவில்லை. பகீரென்றது. வெளியே கார் கிளம்பும் சப்தம். பக்கமாகத்தான் இருந்தது பால்கனி. ஓடிச் சென்று பார்த்தாள்.

கார் புழுதியைக் கிளப்பியபடி அசுரச் சீற்றத்தோடு கிளம்பி விட்டிருந்தது.

"சந்திரா... நில்லுடா..." -அலறினாள்! ஊஹூம்... பிரயோஜனமில்லை.

**க**ல்லூரி ஹாஸ்டல் முகப்பு.

காரை நிறுத்திவிட்டு பணிவாக கதவைத் திறந்து விட்டான் டிரைவர். பின் டிக்கியைத் திறந்து வரிசையாக லக்கேஜை இறக்கினான்.

சங்கவை ஒரு மாதத்திற்கு அவள் தோழிகளோடு குலாவியபடி சாப்பிட ஏகத்துக்கும் நொறுக்குத் தீனியை மூட்டைகட்டிக் கொடுத்திருந்தாள்.

எவ்வளவு தடுத்தாலும் கேட்கமாட்டாள்.

ராதாவும் விட்டு விட்டாள்.

இதனாலேயே ராதா வருகிறாள் என்றால் ஹாஸ்டல் வாட்ச் மேனிலிருந்து ஆயாம்மா வரை ஒரு பளபள பார்வையை அவள்மேல் வீசுவார்கள்.

அவள் ரூமுக்குள் அடங்கிய அரை மணியில் டெஸ்பாட்ஸ் ஆரம்பமாகிவிடும்.



டிரைவரும் அவள் அறை வரை வந்து சகலத்தையும் வைத்துவிட்டு ஒரு நோட்டை எடுத்து நீட்டினான்.

"என்ன இது, ட்ரிப் ஷீட்டாட்டம்...?"

"ஆமாம்மா... உங்களை எத்தனை மணிக்கு இறக்கி விட்டேன்னு எழுதி கையெழுத்துப் போட்டுக் கொடுங்க. ஐயா உத்தரவு."

"தலை எழுத்து..." -சலித்துக்கொண்டு தன் கோல்ட் ஸ்ட்ராப் டைட்டனைப் பார்த்துவிட்டு நேரம் குறித்து கையெழுத்துப் போட்டுக் கொடுத்தாள்.

அறைக்குள் கட்டிலில் விழுந்தாள்.

"ராதா..." -தோழிகள் குரல் வந்து முட்டியது. மளமள வென்று நான்கைந்து பேர் வந்து அவளை முற்றுகை யிட்டார்கள்.

"என்னடி அவசரமா புறப்பட்டுப் போனே போல இருக்கு."

"ஆமாண்டி... ஒரே போர்."

"போரா... இல்ல கல்யாண அக்கப்போரா?"

ஒருத்திக்கு சிலேடை உணர்வு அதிகம்.

"கல்யாண அக்கப்போரா... என்னடி கேள்வி இது?"

"இல்ல... உனக்குக் கல்யாணம் நிச்சயம்- அதுக்குத்தான் போனேன்னு கேள்விப்பட்டேன்."

"யாருடி இப்படி எல்லாம் கிளப்பிவிட்டது?"

"சும்மா சொல்லுடி... எப்ப டும்டும்..."

"நான்சென்ஸ்... நடந்ததே வேற -தெரியுமா உங்களுக்கு?"

"என்ன உன் அமெரிக்க அத்தான் கல்யாணமே பண்ணி தாலிய கட்டிட்டாராக்கும்." -அவள் அமெரிக்க அத்தான் என்று சொன்ன நொடி, சட்டென்று சந்திர மோகன் அவள் மனதில் நிமிர்ந்தான்.

பாவம்... இப்பொழுது எப்படி இருக்கிறானோ? அவன் ஞாபகம் அவள் பேச்சை நிறுத்தியது.

"டீ... என்ன... அத்தான் ஞாபகமா?"

"சும்மா இருங்கடி... என் அத்தான் நிலையைக் கேட்டா இப்படி பேசமாட்டீங்க... என்னென்னமோ நடந்து போச்சு..."

"என்னடி... என்ன இது புதுக் கதை?" -ஒருத்தி கேட்டபடி தன் அறைச் சாவியைத் தூக்கிப் போட்டாள். சட்டென்று புற்றிலிருந்து எடுத்த சாவிக் கொத்தின் நினைவு வந்தது.

மளமளவென்று ஹேண்ட் பேக்கைத் திறந்து பார்த்தாள். உள்ளே சாவிக் கொத்து. வெளியில் எடுத்தாள். "என்னடி இது சாவிக் கொத்து? ஏதோ கஜானா சாவி மாதிரி இருக்கே...?"

-ஒருத்தி அடித்த கமென்ட் ராதாவுக்குள் கற்பனையை சுழற்றி அடித்தது.

'கஜானா சாவி... கஜானா சாவி... ஒருவேளை இது கஜானா சாவி தானோ...? எப்படி பாம்புப் புற்றுக்குள் வந்தது?'

-மௌனத்தில் கேள்விகள் உள்ளோடின. அப்போது அட்டெண்டர் வந்தான். "ராதா மேடத்துக்கு போன்..." என்றான். யாராக இருக்கும்?



## 20

**யா**ரிடமிருந்து போன்?

"ஹலோ..." -எடுத்துப் பேசினாள் ராதா.

"அம்மாடி, நான் அப்பா பேசறேன்..." -மறுமுனையில் ராயர்.

"சொல்லுங்கப்பா..."

"ஜாக்ரதையா போய்ச் சேர்ந்தியா...?"

"வந்து சேர்ந்துட்டேன்பா..."

"சந்தோஷம்... ஆமா நம்ம வேலிக்காட்டு எல்லைப்புத்துக் கோயில்ல சாவிக் கொத்து ஒண்ணு உனக்கு கிடைச்சிச் சாம்ல?"

"ஆமாம்ப்பா... ஆமாம். நானே அதை எதிர்பார்க்கல."

"அது சரி... ஆமா இப்ப அது எங்க இருக்கு?"

"என்கிட்ட... என்கிட்டதாம்ப்பா இருக்கு."

"அதை நீ வெச்சுக்கிட்டு என்ன பண்றே...? டிரைவர் கிட்ட அதைக் கொடுத்துவிடு..."

"அப்பா... டிரைவர் கிளம்பிப் போயிட்டான்."

"தெரியும்... திரும்பி வருவான்... அதைக் கொடுத்துவிடு."

"ச... சரிப்பா..."

"வெச்சுடறேன்!" -ராயர் போனை துண்டித்தார். ராதாவும் ரிசீவரை வைத்துவிட்டு நிமிர்ந்தாள். ராயரின் வேகம் ஆச்சரியம் தந்தது.

திரும்பி அறைக்கு வந்தாள்.

"என்னடி... யார்கிட்ட இருந்து போன்?"

"அப்பாகிட்ட இருந்து..."

"எங்க சாவிக் கொத்தை கொண்டா பார்ப்போம்..." -ஒருத்தி ராதாவிடம் இருந்து கொத்தைப் பிடுங்கினாள். உற்றுப் பார்த்தாள்.

சாவியின் தலைப்பாகம் நன்கு கனமாய் துவராமின்றி இருந்தது. சாவிகளும் மோல்டிங்கில் உருவாக்கினதுபோல் வித்தியாசமான பற்களோடு காணப்பட்டது.

"நிச்சயமா இது இந்தக் காலத்து பூட்டுக்களுக்கான சாவி இல்லை" என்றாள் ஒரு மெக்கானிக்கல் என்ஜினீயரிங் ஸ்டூடண்ட்.

"இது எப்படிடீ உன் கைல?"

"அது ஒரு பெரிய கதை... எங்க ஊரை நினைச்சாலே எனக்கு ரொம்ப ஆச்சரியமாவும், அதிர்ச்சியாவும் இருக்கு."

-அப்பொழுது திரும்பவும் அட்டெண்டர் வந்தான்.

"அம்மா உங்களுக்குத் திரும்ப போன்..."

திரும்பவும் ராதா சலிப்போடு ஆபீஸ் ரூம் நோக்கி நடந்தாள்.

"ராதா..."

"யெஸ்..."

"நான் சந்திரமோகன்!"

"ஆங்... சொல்லுங்க அத்தான். எப்படி இருக்கீங்க?"

"ஏதோ இருக்கேன்..."

"எப்படி உங்களுக்கு என் போன் நம்பர் தெரியும்?"

"எப்படியோ கண்டுபிடிச்சேன். நான் உன்கூட பேசணும்..."



"சரி பேசுங்க..."

"போன்ல பேசற அளவு இது சின்ன விஷயமில்ல. உன் ஹாஸ்டலுக்கு வரலாமா?"

"தாராளமா அத்தான்... எப்ப வர்றீங்க?"

"தேங்க்யூ... நான் இப்ப கோயமுத்தூர்தான் வந்துகிட்டிருக்கேன்."

"ஓ... ஆன் த வேயில இருந்து தான் பேசறீங்களா... ஓ.கே. வாங்க..."

-ரிசீவரை வைத்துவிட்டு வெளியே வந்தபோது எதிரில் டிரைவர்.

"வாய்யா... ஆமா நீதான் அப்பாக்கு போன் பண்ணியா?"

"அது... ஆமாங்கம்மா... அவர்தான் உங்களை விட்ட உடனேயே போன் பண்ணச் சொல்லியிருந்தார்."

"அப்ப நான் வந்து சேர்ந்து விட்டதை மட்டும்தானே சொல்லணும்? எதுக்கு சாவிக் கொத்து கிடைச்சதை எல்லாம் அவர்கிட்ட போட்டுவிட்டே?"

-டிரைவர் அந்தக் கேள்வி முன் மடங்கினான்.

"ம் சொல்லு... என்னைப்பத்தி இன்னும் என்னவெல்லாம் சொன்னே?"

"மன்னிச்சுக்குங்கம்மா... உங்களைன்னு இல்ல, நம்ம வேலிக்காட்டுல யார் எது பண்ணாலும் அது அவருக்குத் தெரிஞ்சாகணும். அவரும் போய் பெரியவர்கிட்ட எல்லாத்தையும் ஒப்புவிச்சாகணும்மா...!"

-டிரைவர் புதிதாக ஒரு தகவலைச் சொன்னான்.

"என்னது... அப்பா போய் பெரியவர்கிட்ட சொல் வாரா?"

"ஆமாம்மா... குளத்து பங்களாவுக்குப் போய் தினசரி அவர் ஒப்புவிச்சாகணுமுல்ல. நீங்க படிப்பு படிப்புன்னு ஹாஸ்டல்லையே இருந்துட்டதால உங்களுக்கு இதெல் லாம் எதுவுமே தெரியாம போயிடிச்சு."

-டிரைவர் தாராளமாய் ராதாவுக்கு அதிர்ச்சியை அளித்தான்.

"சரி இரு... வரேன்." -அவனை உட்காரச் சொல்லி விட்டுத் திரும்ப அறைக்கு வந்தாள் ராதா.

நுழையும் போதே ஒருத்தியிடம் இருந்து பரபரப்பு மிகுந்த ஒரு அபிப்ராயம்.

"ஏய் ராதா... இந்த சாவில ஃபிபினாப்ஸி தியரி அப்ளை ஆகுதுடி..." என்றாள் அவள்.

"என்ன அது?"

"ஒரு மரத்துல கோடிக்கணக்கான இலைகள் இருக்கும். ஒரு இலைக்கும் அடுத்த இலைக்குமான இடைவெளி எல்லா கிளையிலையும் எல்லா நரம்புலையும் மைக்ரோன் சுத்தமா சரியா இருக்கும். அது மாதிரி இந்த சாவிகள் ஒரே பெட்டிக்கோ இல்லை ஒரே கதவுக்கோதான் பொருந்தும். ஒன்பதையும் ஒரே சமயத்துல ஃபிக்ஸ் பண்ணி ஒரே மாதிரி ஃபோர்ஸ் கொடுத்து திறக்கணும். ரொம்ப பிரில்லியண்டான ஒரு விஷயம் இது. ஹிஸ்ட்ரில இந்த மாதிரி சாவிகளுக்கு தனியா ஒரு பேரே இருக்கு. பெரிய பெரிய சீக்ரெட் உள்ள லாக்குக்கு தான் இதைப் பயன்படுத்துவாங்க. இதுல ஒரு சாவி தொலைஞ்சாலும் நோ யூஸ்."

ராதாவுக்குள் பூச்சி பறந்தது.



அடுத்த நொடி வேகவேகமாக தன் சூட்கேஸைத் திறந்து கேமரா ஒன்றை எடுத்தாள். 'Yashica Zoomate 115' என்கிற ஜப்பானிய க்யோசிரா கேமரா ஒன்று அவள் வசம் நீண்ட Zoomerஐ குழல் குழலாக உருட்டி நீட்டியது.

"கமான், அதை இப்படி இந்த வெள்ளைத் துணி மேல வை..."

"எதுக்குடி இப்ப போய் இதை போட்டோ எடுக்கறே?"

"எல்லாம் ஒரு இன்ட்ரஸ்ட்தான். இந்த போட்டோவை வெச்சு இதேமாதிரி சாவியை நீ நம்ம ஒர்க்ஷாப்ல செய்யறே. ஏன்னா இது இப்ப திரும்பவும் எங்க வீட்டுக்குத் திரும்பப் போகுது." -என்றபடி அதை எடுத்துக் கொண்டு வெளியேறினாள். காத்துக்கொண்டிருந்த டிரைவரிடம் கொடுத்தாள்.

"சரிம்மா நான் அப்ப கிளம்பறேன்" -என்றான்.

"ஓ.கே..."

-அவனும் சிறிது தூரம் சென்று விட்டு பின் திரும்பி வந்தான்.

"அம்மா..."

"என்ன?"

"நான் உங்ககிட்ட பேசினதை தயவு செய்து மறந்துடுங்கம்மா. ஐய்யாவுக்கு தெரிஞ்சா..." -மென்று விழுங்கினான்.

"நீ என்ன பேசினே... எதுவுமே பேசலையே..."

"நல்லதும்மா நான் வரேம்மா..."

-அவன் காரில் ஏறி மறைவது வரை பார்த்துக் கொண்டிருந்தாள்.

பின் பெருமூச்சோடு திரும்பினாள்.

குளத்து பங்களா!

மங்கலாக ஒரு பல்ப் மட்டும் எரிந்து கொண்டிருந்தது. அப்பொழுது சதங்கை சப்தம் கேட்டது. பார்த்தபோது கைத்தடியில் சதங்கை சப்தம் போட ஊனக்கண்ணன் வந்து கொண்டிருந்தான்.

பங்களா முகப்பில் பச்சை நிறத் தேக்கம்போல் குளம். அதன் கரைப்படிகள் சீராக வெட்டப்பட்டிருந்தன. அதில் ஒரு படியில் அமர்ந்து கொண்டு குளத்து மீன்களுக்கு பொரி போட்டுக் கொண்டிருந்தார் பெரியவர் சமாதான பாண்டி.

ஊனக்கண்ணன் வந்து நிற்கவும் நிமிர்ந்து பார்த்தார். அவன் உடனே மண்டியிட்டான்.

"என்னடா...?" -கேட்டார்.

"ஆண்டே வரச் சொன்னீங்களாமே...?"

"யார் சொன்னா?"

"கணக்குப்பிள்ளை சொல்லிவிட்டார்..."

"கணக்குப் பணம் கொடுத்தானா...?"

"கொடுத்தாருங்க..."

"எவ்வளவு?"

"பத்தாயிரம்..."

"நாயி... நாயி... உன் விசுவாசத்துக்கு அம்பதுல்ல கொடுக்கச் சொல்லியிருந்தேன். சரி போ... மீதி உன்னைத் தேடி வரும்."

"நல்லது ஆண்டே... ஆனா ஒரு விண்ணப்பம்!"

"என்ன?"



"பணம் காசை விட நம்ம வேலிக்காட்டுல ஒரு மூலைல ஒரு கால் காணியோ, இல்ல அரைக்காணியோ, கொடுத்தா நல்லாருக்குங்க..."

"அப்படியா?"

"ஆமாங்க ஆண்டே. பணத்தை வெச்சுக்கிட்டு இந்த வெட்டியான் எங்கங்க போய் என்ன செலவுங்க பண்ண? எல்லாம்தான் நம்ம ஊட்ல இருந்து வந்துடுதே..."

"அப்ப நிலமா வேணுமா உனக்கு?"

"ஆமாங்க... கோவில் பட்டருக்கு கொடுத்த மாதிரியே ஒரு அரை காணி போதுங்க..."

"பட்டருக்கு யார் கொடுத்தா?"

"ஆண்டே அது எனக்குத் தெரியாதுங்க. கேள்விப் பட்டேங்க."

"கேள்விப்பட்டியா...?"

-ஊனக்கண்ணன் தலை ஆடியது.

"சரி சரி போய் கணக்குப்பிள்ளையை வரச் சொல்லிட்டுப் போ..."

"மன்னிக்கணும் ஆண்டே. இந்த நேரம் நான் நம்ம பங்களா பக்கம்லாம் போவக் கூடாது. போனா சின்ன ஆண்டே காலை வெட்டிப்புடுவாரு..."

"சரி நீ போ... பார்த்துக்கறேன்!"

-சட்டென்று என்ன நினைத்தாரோ, "டேய் ஊனா..." என்றார். அவனும் நின்று திரும்பினான்.

"நீ நல்லா மூச்சு கட்டுவேதானே?"

-அவன் தலை அசைந்தது.

"நீச்சல் தெரியுமா?"

"தெரியும் ஆண்டே?"

"அப்ப ஒண்ணு பண்ணு - இப்படி வா!"

"ஆண்டே!"

"மீனுக்கு பொரி போடும்போது என் மோதிரம் ஒண்ணு கழண்டு குளத்து உள்ற விழுந்திடிச்சு, அதை தேடி எடுத்துத் தா..."

"உத்தரவு ஆண்டே..."

-அடுத்த நொடியே குளத்துக்குள் பாய்ந்தான் ஊனக் கண்ணன்.

தண்ணீருக்குள் கண்ணைச் சரிக்கும் இருட்டு.

முத்துக்குளிப்பவனைப் போல உள்ளே போனவன்தான். வெளியே நீர்ப்படுகை உள்ளே ஒரு மனிதன் இருப்பதே தெரியாதபடி சலன வட்டங்கள், குமிழ்கள் நீங்கி உறைந்தது போல் ஆனது. சமாதானபாண்டி பார்த்துக் கொண்டே இருந்தார். அப்பொழுது அங்கே அரிக்கேன் விளக்கும் தலையில் ஒரு மூங்கில் கூடையுமாய் இளம்பெண் ஒருத்தி வந்து கொண்டிருந்தாள்.

"யாரு தேனம்மாவா?"

"ஆமாம் ஆண்டே...?"

"உள்ள போய் வெச்சுட்டு காத்திரு. எண்ணெய் எல்லாம் எடுத்து வை. வந்துடறேன்."

"சரிங்க ஆண்டே..."

-திரும்பவும் சமாதானபாண்டி குளத்தையே பார்த்தார். உள்ளே ஒருவன் அதனுள் இருக்கிறான் என்றால் யாரும் சத்தியம் செய்து சொன்னாலும் நம்பமாட்டார்கள்.



வினாடிகள் கரைந்து கொண்டிருந்தது.

கிட்டத்தட்ட ஐந்து நிமிடத்தை தாண்டிவிட்டது. ஊனக் கண்ணன் இந்த அளவுக்கு மூச்சுக் கட்டுபவன் என்பது அவருக்குத் தெரியாது. இந்தப் பழக்கம்தான் அவனைப் புதைத்தபோதும் கைகொடுத்து மீண்டு வெளியில் வர உதவியது.

இப்போது?

## 21

பச்சை நிறத்தில் தளதளக்கும் அந்த தண்ணீர்க் குளத்தில் மேல்படுகையைக் கிழித்தபடி வெளிப்பட்ட ஊனக்கண்ணன், "ஆண்டே!" என்றான் உக்ரமாக. அப்படியே படிக்கல் அருகே வந்து மூச்சிரைபட 'புஸ்ஸ் புஸ்ஸ்' என்று செருமியவனாய் மெல்லச் சமாளித்து நிமிர்ந்து, "உள்ள ஒரு பெட்டி கிடக்குது ஆண்டே!" என்றான் பலமான குரலில்.

சமாதானபாண்டி உடனே தன் நரைத்த புருவத்தில் வில்லின் வளைவைக் கொடுத்தார்.

"பெட்டியா... என்னடா சொல்றே?" என்றார்.

"ஆமாம் ஆண்டே! நல்ல தடிச்ச பெட்டி. பச்சையும் பாசியுமா கையால பிடிச்சு தூக்கமாட்டாம கெடக்கு... உள்ள பாச வெள்ளாமை. எப்புட்டு தேடியும் மோதிரம் தட்டுப்படலை!"

"சரிலே... அந்தப் பெட்டியை இப்ப மேலே எடுத்துப் போடுறியா...?"

"முடியாது ஆண்டே. சங்கிலியை கட்டி நாலுபேர் இழுக்கணும். அப்பதான் அது மேல் வரும். ஆனை மாதிரி அம்புட்டு கனம்!"

"சரி... இப்ப போய்ட்டு காலைல வா. நாலுபேர் தயாரா இருப்பாங்க. அத என்னான்னு பார்த்துடலாம்" என்றார் சமாதானபாண்டி.

ஊனக்கண்ணன் விலகத் தொடங்கினான்.

சமாதானபாண்டி குளத்தை திரும்பிப் பார்த்தார்.

அந்த நாளில் சமஸ்தானத்து ராணிப் பெண்கள் வந்து குளிக்க வேண்டும் என்பதற்காகவே வெட்டப்பட்ட குளம். அதில் பெட்டி. உள்ளே என்னதான் இருக்கும்?

ஒரு ரெஸ்ட்டாரண்டின் இரவு நேரச் சூழல் அங்கே எதிரெதிரில் ராதாவும்- சந்திரமோகனும்!

"ராதா... உன் ஊரும் வீடும் ஒரு மர்ம தேசம். இல்லேன்னு மட்டும் சொல்லிடாதே."

"ஒத்துக்கறேன் சந்திரா... ஆனா நீங்க சொல்றதுதான் எனக்கு இடிக்குது!"

"நான் சொன்ன அவ்வளவும் நூறு சதம் உண்மை. ஏழுமலை சாவு, என் ஸ்ரீமதியோட சாவு, அவளோட அப்பா, அம்மா சாவு எல்லாமே கொலை! படுகொலை."

"அப்ப அந்த ஊனக்கண்ணன் விஷயம்?"

"அதுல ஏதோ சூழ்ச்சி இருக்கு. ஊனக்கண்ணனை புதைக்கும்போது நான் இருந்தேன். என் இரண்டு கண்ணால பார்த்தேன்."

"லுக் சந்திரா... ஊனக்கண்ணனுக்கு அவனைப் போலவே அண்ணனோ, தம்பியோ யாரும் கிடையாது.



செத்துப் புதைச்ச பிறகு திரும்ப உயிரோட வர அவன் என்ன ஜீசஸா...?"

"தெரியலை. ஆனா அதுக்குப் பின்னால ஒரு பெரிய மர்மம் இருக்கு. ஆமா இத்தனை வருஷத்துல நீ விபரீதமா எதையும் அங்க ஸ்மெல் பண்ணதில்லையா?"

"இதுக்கு என்ன பதிலை நான் சொல்ல முடியும்? இந்த ஹைடெக் யுகத்துலயும் துளியும் வாடாத ஒரு அடிமைக் குணத்தை அங்க நான் எல்லார்கிட்டேயும் பாக்கறேன். கேட்டா விசுவாசம் பண்றேன்னு அதுக்கு ஒரு பொழிப் புரை சொல்றாங்க. அதுக்கு மேல நான் விபரீதமா எதையும் பார்த்ததில்லைன்னு தான் சொல்வேன்."

"அதுக்கு பேர் விசுவாசம் இல்ல, பயம்! பணிவு இல்லை, தயக்கம். அதனாலதான் அந்த ஏழுமலை எனக்கு தானா வந்து உதவி செய்தான். இப்பகூட அங்க பலர் எனக்கு உதவி செய்யத் தயாரா இருக்காங்க..."

"இருக்கலாம். இதுக்கெல்லாம் எது காரணமா இருக்க முடியும்னு நீங்க நினைக்கிறீங்க?"

"அது தெரிஞ்சா நான் உன்கிட்ட பேசிக்கிட்டா இருப்பேன்? ஆனா ஒண்ணு... நிச்சயமா ஒரு பலமான காரணம் இருக்கு. அந்தக் காரணத்துக்கும் அந்தக் கோவிலுக்கும் தொடர்பு இருக்கு."

"கோவில் கதவு மூடியிருக்கறதால இந்த சந்தேகமா?"

"ஆமாம். அதை நெருங்கினா ஆபத்து, தப்பா சந்தேகப் பட்டாலே தண்டனைங்கறதெல்லாம் சூப்பர் பேத்தல். பாவம் சாமி. உங்க ஃபேமிலிகிட்ட மாட்டிக்கிட்டு முழிக்குது."

"அப்ப சாமி பேரால நடக்கற தப்புகளுக்கு என் ஃபேமிலிதான் காரணமா?"

"நிச்சயமா. உன் அப்பா... அந்த வீரபத்ரன்... தாத்தா சமாதானபாண்டி எல்லாருமேதான் காரணம். கையை கட்டிக்கிட்டு வயை மூடிக்கிட்டு இருந்துட்டா ஒரு ஆபத்தும் இல்லை.

துளி சந்தேகப்பட்டாலும் அதை முளையிலேயே கிள்ளி எறியப் பார்க்கறாங்க. எழுதிக்கோ... கோவிலுக்குள்ளதான் ஏதோ மர்மம் இருக்கு."

"அப்ப ஒரே வழி... கதவைத் திறந்து பார்க்கறதுதான்!"

"ஆமாம்... நான் அதை செய்யாம விடப்போறதில்ல. ஒரு உயிருக்கு மூணு உயிரை இழந்துட்டேன். இதை விடமாட்டேன்."

"அவசரப்படாதிங்க சந்திரமோகன். நீங்க அங்க வந்தா உங்களுக்கும் எது வேணும்னாலும் நடக்கலாம். இப்ப வேகத்தை விட விவேகம்தான் பெருசு."

"அதனாலதான் உன்னை இந்த கோயமுத்தூர் வரை தேடி வந்து விசாரிச்சுக்கிட்டிருக்கேன். உன் மூலமா ஏதாவது க்ளூ கிடைக்காதான்னும் துடிச்சுக்கிட்டிருக்கேன்."

"ஏதாவது கிடைச்சுதா...?"

"இந்த நொடி வரை இல்லை. ஆனா நீ உதவி செய்தா நான் நிச்சயம் கண்டுபிடிச்சுடுவேன்."

"நானும் அந்தக் கூட்டத்தை சேர்ந்தவதானே... எதை வெச்சு என்னை மட்டும் நம்பறீங்க?"

"ஸ்ரீமதியோட சாவைப்பத்தி தெரிஞ்சுக்கிட்ட நீ அங்க வந்த உடனே உன் அப்பா -அம்மாகிட்ட கூட போகலை. என் அங்கிள்- ஆன்ட்டியைத்தான் போய்ப் பார்த்தே. ஒரு கர்ட்டசியை உன்கிட்ட பார்த்தேன். அதோட உன் படிப்பு மேல எனக்கு ஒரு நம்பிக்கை. எல்லாத்துக்கும் மேலா அந்த பங்களாவுல உன்னையும் உன் அப்பா ஒரு மூணா



வது மனுஷியைப் போலத்தான் ட்ரீட் பண்ணினார்... இதெல்லாம் எனக்கு கொஞ்சம் நம்பிக்கையைக் கொடுத்தது."

சந்திரமோகன் சொன்னதை அமைதியாகக் கேட்டுக் கொண்ட அவள், உணர்ச்சியோடு பிசைந்து கொண்டிருந்த அவன் கரங்களை சற்று இழுத்துப் பிடித்தாள்.

"தேங்க்ஸ்..." என்றாள். அவன் வேகமாய் கைகளை விடுவித்துக் கொண்டான்.

"ஒரு ஃப்ரெண்ட்லி நெஸோடதான் இப்ப உங்க கையைப் பிடிச்சேன் சந்திரா, அதுக்கு மேல இதுக்கு வேற எந்த அர்த்தமும் கிடையாது."

அவள் பதில் அவனை சற்று தர்மசங்கடப்படுத்தியது.

"சரி, இப்ப என்ன செய்யறதா உத்தேசம்?"

"அந்தக் கதவை திறந்து பாக்கணும். எப்படியாவது அதை செய்துடணும்."

"ஆமா, அதை நீங்கதான் செய்யணுமா?"

-ராதா அப்படிக் கேட்ட நொடி சந்திரமோகன் அவளைக் கூர்மையாகப் பார்த்தான்.

"அப்படீன்னா... அதை நீ செய்யறேங்கறியா?"

"யெஸ்... உங்களுக்காக அதை நான் செய்யறேன்."

"நிஜமாவா...?"

"இதை நான் உங்களுக்காக மட்டும் செய்யல சந்திர மோகன், வேறு ஒரு காரணமும் இருக்கு."

"என்ன ராதா அது?"

-அடுத்த நொடி அவள் தனது ஹேண்ட் பேக்கைத் திறந்து உள்ளே இருந்து சில போட்டோக்களை எடுத்து அவனிடம் நீட்டினாள்.

அவை அந்தப் பாம்புப் புற்றில் கிடைத்த சாவிகளின் புகைப்படங்கள்!

"என்ன இது?"

-அவள் விவரித்தாள்.

"சரி, இந்த சாவிக் கொத்துக்கும், உங்க வேலிக்காட்டு மர்மத்துக்கும் தொடர்பு இருக்குன்னு நினைக்கிறியா?"

"நிச்சயமா... பாம்புப் புத்துங்கறது பேங்க் சேஃப்டி லாக்கரை விட ஒரு பாதுகாப்பான இடம். அதுக்குள்ள ஒரு சாவிக் கொத்து இருந்துருக்குன்னா என்ன அர்த்தம்?"

"அந்தப் புற்றுல இது மட்டும்தான் இருந்ததா?"

"ஆமாம்... கூடவே நான் பார்த்த அந்த கல்வெட்டுச் செய்தி. மாவீரன் புலியன்கற பெயருக்கும் புலியன்கற அந்த மீசை முறுக்கிய முகத்துக்கும் ஏதோ தொடர்பு இருக்கு."

"யார் இந்தப் புலியன்?"

"கதவைத் திறந்து பார்க்கறதுக்கு முந்தி நான் தெரிஞ்சுக்க வேண்டிய விஷயம் இந்தப் புலியன்கற நபர் யாருன்னு தான்!"

"நீ சொல்றத பார்த்தா அதுக்கு பின்னால ஒரு ஹிஸ்டரியே இருக்குமோ?"

"ஆமாம். அந்த நடுகல் எதுக்காக... அந்த பாம்புப்புத்து இயற்கையா வந்து மூடிக் கொண்டதா? இல்லை செயற் கையா மூடி யாராவது மறைச்சாங்களா? விடை தெரிய ணும் சந்திரா."



"ராதா... உடனே புறப்படு. இப்ப நீ என் க்யூரியா சிட்டியை அதிகமாக்கிட்டே."

"அதுவும் அவ்வளவு சுலபமில்லை சந்திரா... அப்பா நான் கூப்பிடாம நீ கிளம்பி வரக்கூடாதுன்னு ஒரு உத்தரவோட தான் என்னை அனுப்பி வெச்சுருக்கார்."

"அப்ப நீ எப்பத்தான் கிளம்புவே?"

"கவலைப்படாதீங்க. கொஞ்சம் கூட தாமதிக்காம நாளைக்கே புறப்படுறேன். அதுக்கு ஒரு வழி இருக்கு."

"என்ன வழி?"

"எவ்வளவு சினிமா பாத்துருக்கேன். எவ்வளவு நாவல் படிச்சிருக்கேன். அந்த வழியை உருவாக்கறது தானா கஷ்டம். நாளைக்குப் பாருங்க."

"என்ன பண்ணப்போறே... அதுவரை நான் என்ன பண்ணட்டும்?"

"இப்போதைக்கு இந்த ரெஸ்டாரெண்ட்டை ஒட்டி இருக்கற இந்த ஹோட்டல்லையே தங்குங்க. நாளைக்கு உங்களை சந்திக்கும்போது மற்ற விஷயங்களை சொல்றேன். அப்ப இந்த போட்டோவுல உள்ள சாவிகளை நான் காலேஜ் ஒர்க்ஷாப்ல என் ஃப்ரெண்ட்ஸ் உதவியோட புதுசா தயாரிச்சு முடிச்சிருப்பேன். அதன் பிறகு பார்த்துடுவோம் ஒரு கை!"

-ராதா துளியும் பயமின்றி உற்சாகத்துடன் கை கட்டை விரலை உயர்த்தினாள்.

சந்திரமோகன் அந்தக் கையைப் பற்றி நன்றியோடு கண்களில் ஒற்றிக்கொள்ளப் போனான்.

அவள் தடுக்கவில்லை!

# 22

பஸ்ஸர் ஒலி சந்திரமோகனைத் தட்டி எழுப்பியது. கண்களைக் கசக்கிக் கொண்டு போய் கதவைத் திறந்தான். வெளியே சூட்கேசும் கையுமாய் ராதா!

"ஏய் வெல்கம்... கமான்... கமான்..." என்றான். சந்திர மோகன் கதவைத் திறந்து வைத்த நிலையில் திரும்பினான். ராதா எழுந்து போய் கதவைச் சாத்தினாள்.

"திறந்திருக்கட்டுமே... ஒரே புழுக்கமாக இருக்கு" என்றான்.

"ஏ.சி. ரூம் கிடைக்கலியா?" என்றாள்.

"எல்லா ரூமும் ஃபுல். கடைசியா இந்த குடோன் தான் கிடைச்சுது. சரின்னு செட்டிலாயிட்டேன்."

"ஷேவ் பண்ணிக்கக் கூடாதா... எதுக்காக இப்படி இருக்கீங்க, பொண்டாட்டிய பறிகொடுத்தவன் மாதிரி?" கேட்ட வேகத்தில் நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

"ஐ ஆம் சாரி... வெரி சாரி...!" என்றாள். அவன் கண்களில் மளுக்கென்று கண்ணீர்!

"ஸ்ரீமதி நினைப்பு உங்க மனசுல ரொம்ப ஆழமாகவே இருக்கறத நினைச்சா எனக்கு ரொம்ப பெருமையா இருக்கு சந்திரா" என்றாள் கனத்த குரலில்.

"ரொம்ப சந்தோஷமா இந்தியா வந்தோம். நிச்சயம் குழந்தை பிறக்கும். கர்ப்ப வயிறோடதான் நான் ஃப்ளைட் ஏறுவேன்னு என்கிட்ட சொன்னா ஸ்ரீமதி. ஆனா இப்ப அவ மட்டும்மல்ல... அவளை எனக்குக் கொடுத்த என் மாமனார்- மாமியார் கூட இல்லை. வாழ்க்கை ஒரு க்ஷணத்துல திரும்பிடும்னு பலர் சொல்லி கேள்விப்பட்டிருக்கேன். ஆனா இவ்வளவு மோசமா அது என் வரைல



35846
532935

திரும்பக் கூடாது ராதா..." என்றவன் கண்ணீரைச் சுண்டி எறிந்தான்.

"கவலைப்படாதீங்க... உங்களைப் பார்க்கப் பார்க்க எனக்குள்ள யாரும் தீ மூட்டாமலே மனசெல்லாம் பத்தி எரியுது. ஸ்ரீமதியும் அவங்க அப்பாவும் அம்மாவும் எப்படி செத்தாங்க? அது அந்தக் கடவுளோட கோவத்தாலயா? இல்லை, மனுஷங்களோட சதி வேலையாங்கறதை கண்டுபிடிக்காம நான் விடமாட்டேன்."

"அது சரி... எப்படி உங்க ஊருக்குப் போகப்போறே? அப்படியே போனாலும் தனியா சமாளிச்சிடுவியா?"

"சமாளிக்கணும். சமாளிச்சுதான் வரணும். எப்பவும் நிர்ப்பந்தங்களும், கட்டாயங்களும்தான் மனிதர்களை செயல்வீரர்கள் ஆக்குது."

"நீ என்னென்னமோ சொல்றே... நான் துடிச்சுக்கிட்டு இருக்கேன். உன்னை இந்த விஷயத்துல தனியா ஈடுபடுத்த எனக்கு மனசே வரமாட்டேங்குது ராதா..."

"அப்படின்னா...?"

"உன் திட்டத்தைச் சொல்லு. உன்கூட நானும் வரேன்."

"நீங்களா... வேண்டாம் சந்திரா... இந்த விஷயத்துல சினிமா ஹீரோ மாதிரி யோசிக்காதீங்க... விவேகம் மட்டும் தான் உங்களுக்கு வேலிக்காட்டு ரகசியங்களைப் புரிய வைக்கும்."

"அதே விவேகம்தான் ஒரு பொண்ணை மட்டும் நம்பி எனக்கென்னன்னு இருக்காதேன்னும் சொல்லுது."

"உங்க ஆண்மைத் துடிப்பு எனக்குப் புரியுது சந்திரா. ஆனா நீங்க அங்கே வந்தா உங்களால செயல்படவே முடியாது. அப்படி எதையாவது செய்துடுவாங்க."

"வாஸ்தவம்தான். ஆனா நான் இப்படியே வரப் போறதில்லை."

"வேற எப்படி?"

"மாறு வேஷத்துல..."

"ஒரு சர்தார்ஜி வேஷம் போட்டு முகத்துல முக்காடை மறைக்கறீங்கன்னே வையுங்க, குரல் காட்டிக் கொடுத் திடுமே...?"

"மாத்திப் பேச முடியுதுங்கறியா?"

"வேண்டாம். வேஷம் அங்கே ஜெயிக்கும்னு எனக்குத் தோணலை. நீங்க தைரியமா இருங்க. முதல்ல இவ்வளவு சதிக்கும் காரணமா இருக்கற அந்தக் கோவில் ரகசியத்தை நான் தெரிஞ்சுக்கறேன். அப்புறமா நாம திட்ட மிடுவோமே."

ராதா விடவில்லை. அவன் மீற மீற கட்டிப்போட்டாள். அவனும் தத்தளித்தான். தடுமாறினான். பிறகு இறுதியாக, "உனக்கு ஒரு வாரம் டயம் தரேன்... உன்கிட்ட இருந்து எனக்குச் சரியான பதில் வரலைன்னா நான் அங்கே வந்துடுவேன். எனக்கு என்ன ஆனாலும் கவலையில்லை. ஓ.கே.யா?" -தீர்மானமாய்க் கேட்டான். அவளும் அரை மனதாய் தலையை ஆட்டினாள்.

சந்திரமோகன் பார்வையில் நன்றியை நெய்தபடி அவளை வெறித்தான்.

"பார்க்கறத பார்த்தா 'உனக்கு எப்படி நன்றி சொல்ற துன்னே எனக்குத் தெரியலை'ன்னு டயலாக் பேசப் போறீங்க போல இருக்குதே?"

அந்தக் கேள்வி சந்திரமோகனை நிஜமாலுமே சற்று மென்மைப்படுத்தி அர்த்தப்பூர்வமான ஒரு சிரிப்பையும் அவன் வாயில் இருந்து பிடுங்கியது.



"இனி இப்படியே சிரிச்சுக்கிட்டே இருங்க. இந்தாங்க உங்க செல்ஃபோன். இந்தாங்க என் கார்டும் நம்பரும். நானே உங்களை கான்டாக்ட் பண்றேன். அவசரப்பட்டு நீங்க என்னை கூப்ட்டுடாதீங்க."

-அவள் அவன் கையில் செல்ஃபோனை இழுத்து வைத்து திணித்தாள். அவன் வெறித்தபடியே இருந்தான். "இன்னொரு விஷயம். இனி நீங்க இங்கே இருக்க வேண்டாம். உங்களோட இடம் இனி பிருந்தாவனம்!"

"பிருந்தாவனமா?"

"ஆமாம். என் ஃபிரெண்ட் பிருந்தாவோட வீடுதான் பிருந்தாவனம். அங்கே அஷோக்னு ஒரு ஷோக்குப் பேர்வழி கூட இருக்கான். எதிர்காலத்துல என்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போறதா சொல்லி ஜொள்ளு விட்டுக் கிட்டிருக்கற ஒரு எம்.பி.ஏ. மடையன். அவன் உங்களுக்கு நல்ல கம்பெனி தருவான்!"

"அஷோக் உன் உட்பீயா?"

"அப்படின்னு அவன் நினைச்சுக்கிட்டிருக்கான். ஆனா நான் இன்னும் நினைக்கல..."

"ராதா..."

"என்ன சந்திரா, சத்தமில்லாம அணுகுண்டு வெடிக் கறேனேன்னு பாக்கறீங்களா? எனக்குக் காதல்ல நம்பிக்கை இல்லை. அதனாலதான் அப்படிச் சொல்றேன்."

"காதல்ல நம்பிக்கை இல்லையா?"

"ஒரு பொண்ணு, ஒரு ஆணோட கேரக்டர்ல மயங் கினா அது காதல். ஒரு ஆண், ஒரு பெண்ணோட குணத் துல மயங்கினா அது காதல். உடம்பு நடுவுல குறுக்கிடவே கூடாது."

"Is it Possible?"

"அது எனக்குத் தெரியாது. ஏன்னா நான் இன்னும் அனுபவப் படலை. ஓ.கே. நான் ட்ராக் மாறிப் போறேன்னு நினைக்கறேன். லெட் அஸ் மூவ்... நாம புறப்படுவோமா?"

ஜீன்ஸ் பேண்ட்டின் தொடை பாகத்தை ஒரு தட்டு தட்டியபடி தனது ஹோல்டான் பேக்கை எடுத்து தோளுக்கு ஏற்றிக் கொண்டான் சந்திரமோகன். அவளைத் தொடர ஆரம்பித்தான்!

**கு**ளத்து வீடு!

வெளியில் பிரம்பு நாற்காலிகளின் அணிவகுப்பு. அதில் ஒன்றில் பெரியவர் சமாதான பாண்டி அமர்ந்திருக்க, சுற்றிலும் ராயரும் அவரது சகாக்களும்.

கல் குளத்தின் கரைமேல் சங்கிலி சகிதம் ஊனக் கண்ணன்.

ராயருக்கே அந்த இறுக்கமான அமைதியை உடைக்க தைரியமில்லை. ராயரின் கையில் அந்த சாவிக் கொத்து இருந்தது. ராதா புற்றில் இருந்து கண்டெடுத்த சாவிக் கொத்து.

ராயர் சற்றே அசையும் போது அது சற்றே சிணுங்கி சப்தம் போட்டது.

சமாதானபாண்டிக்கு அந்தச் சப்தம் எரிச்சலைத் தந்தது.

"எலேய் போய் அந்த துப்பாக்கியை எடுத்தாடா..." என்றார் ஒரு வேலைக்காரனைப் பார்த்து. அவன் உள்ளே ஓடினான். ராயருக்கு 'ட்ர்ர்ர்' ஆகிவிட்டது. அப்பா ஒருவேளை தனக்குத்தான் குறிவைக்கப்போகிறாரோ என்கிற பயம் முகத்தில் திப்பித் திப்பியாய் தெரிந்தது.

அங்கே வந்த உடனேயே அவர் கேட்ட முதல் கேள்வியே, "கோவில் ஐயருக்கு நிலம் கொடுத்தியாமே?" என்பதுதான். அடுத்த நொடியே பார்வை ஊனக்கண்ணன் பக்கம்தான் போனது. பின், "அது வந்துங்கப்பா- ஒண்ணும் எழுதிக் கொடுத்துடலை. ஒரு ஓரமா ஒரு அரைக் காணியை பயன்படுத்திக்கச் சொன்னேன்" என்று மென்று விழுங்கியிருந்தார்.



"சரி... நாளைக்கே எனக்கு பட்டா போட்டுக் கொடுன்னா கொடுத்துடுவியா?" -இது சமாதான பாண்டியின் கேள்வி.

"ஆசைப்பட்றார்... தலைமுறை தலைமுறையா நமக்கு சேவகம் செய்துக்கிட்டிருக்கார். கொடுக்கறதுல ஒண்ணும் தப்பு இலலைன்னு தான் தோணுது" என்று ராயரும் மென்று துப்பிவிட்டார்.

"எலேய் வேருக்கே நெருப்பு வைக்கறடா நீ. இது யார் சொத்துன்னு நினைச்சே?" என்று ஆக்ரோஷமாய் ஒரு எகிறல். அவ்வளவுதான். அத்தனே பேரும் கப்சிப்!

அந்த நொடியிலிருந்து இதோ இந்த நொடி வரை பெரியவர் வாயைத் திறக்கவில்லை. ஒரே நெஞ்சுக் குமுறல்தான்.

ஆயிரம் வேலி நிலத்தில் ஒரு கையளவைக் கூட கொடுக்க விரும்பாத அந்த ஆக்ரோஷம் ராயரைக் கூட துவட்டிக் கொண்டிருந்தது.

இந்த மாதிரி கோபம் சந்திரமோகன் கோவிலைப் பழித்தபோது கூட வரவில்லை. ஏன்? ராயருக்கே புரிய வில்லை.

ராயர் மண்டையைப் பிய்த்துக் கொள்ளும்போது, உள்ளே ஓடிய வேலைக்காரன் துப்பாக்கியோடு வந்தான். அதிகபட்ச பணிவோடு முதுகை வளைத்து துப்பாக்கியை சமாதானபாண்டியிடம் நீட்டினான்.

அதை ஒரு கரத்தால் வாங்கிக்கொண்ட சமாதான பாண்டி அடுத்த கரத்தை பயன்படுத்தாமல் அதை தூக்கித்

தூக்கிப் போட்டுப் பிடித்து அப்படியே தோள் பட்டைக்கு தூக்கி அழுத்திக் கொண்டார். சுமாராக கையும் உடம்பும் நடுங்கும்போது துப்பாக்கியின் பிடிக்கட்டையில் கன்னத்தை சாய்த்துப் படுத்துக் கொண்டு தனது பூனை விழிகளால் குறிபார்க்க ஆரம்பித்தார். ஆள்காட்டி விரல் ட்ரிக்கரில் போய் அழுத்தம் கொடுக்கத் தயாரானது.

சமாதானபாண்டியின் பார்வையோ ஊசி போல குத்தி ஊடுருவியது.

"எலேய் ஊனா, நீ கிணத்துல இறங்கி அந்தப் பொட்டியை வெளிய எடுத்துப் போடுடா..." என்றவர், அப்படியே திரும்பி அருகாமை மரத்தின் கிளையில் ரவுசு பண்ணிக் கொண்டிருந்த கரிக்குருவியைப் பார்க்க ஆரம்பித்தார்.

'ப்ளக்க்..!' -குளத்துக்குள் ஊனக்கண்ணன் பாயும் சப்தம் காதில் விழ, அடுத்த நொடி ட்ரிக்கரில் அழுத்தம் கொடுக்கப்பட, துப்பாக்கித் தோட்டா சீறிக்கொண்டு மரத்தை நோக்கிச் சென்றது.

சப்தத்தின் எதிரொலிக்கு நடுவே மரக்கிளையில் இருந்து ஒரு மனித உடலும் 'பொதேல்' என்று விழுந்தது.

அது...!

## 23

மரத்தில் இருந்து விழுந்தவனைப் பார்த்து மொத்தப் பேருமே விக்கித்துப் போனார்கள்.

வீரபத்ரன் விழுந்தடித்துக் கொண்டு செத்து விழுந்தவன் அருகில் போய்ப் பார்த்தான். அது செல்வகோடி! பாம்பு கடித்து செத்துப்போன ஏழுமலையின் சினேகிதன். மார்



பில் தோட்டா பாய்ந்திருந்த நிலையில் செல்வகோடியின் உயிர் மூச்சு ஓடிவிட்டிருந்தது.

பெரியவர் சமாதானபாண்டியும் துப்பாக்கியை எறிந்துவிட்டு வந்து அவனைப் பார்த்தார்.

"களவாணிப் பயலே... ஒளிஞ்சிருந்தா பாக்கறே!" -கறுவலோடு ராயர் பக்கம் திரும்பினார்.

"என்னத்தடா நீ நாட்டாமை பண்றே? இதான் உன் நாட்டாமை லட்சணமா?" -அலறினார்.

"பெரியப்பா... அது வந்து..."

"வாயத் தொறக்காதே. மொத மூடு! அடக்கி ஆளத் துப்பு இருந்தா இந்த வேலிக்காட்டுல இரு. இல்லாட்டி நடையைக் கட்டு. உனக்கெல்லாம் வரலாறு தெரியாது. அதான் பயாஸ்கோப்புல வர்ற மாதிரி இந்த சொத்தப்பயல எல்லாம் கூட வெச்சுக்கிட்டு உதார் கொடுத்துக்கிட்டு திரியறே" என்றபடியே வீரபத்ரனைப் பார்த்தார்.

அவனும் தலை குனிந்திருந்தான்.

"என் மனசுல இருக்கற நெருப்பு உங்ககிட்டயும் இருக்கணும்டா. அப்பத்தான் இந்த ஆயிரம் வேலிக்காடு நம்ம காடா இருக்கும். இல்லாட்டி பங்குபோட்டுக் கொடுத்துட்டு ஒரு காலத்துல விறகுவெட்டி வயல்ல எலி புடிச்சுத் தின்னோமே... அந்த வாழ்க்கைதான்!"

அவர் பேச்சில் இனம்புரியாத தடயங்கள். ஆத்மார்த்தமாய் ஒரு வலி.

அதேசமயம் குளத்து நீரில் இருந்து ஊனக்கண்ணன் வெளிப்பட்டிருந்தான். பெருமூச்சோடு நீர்க்கோடுகளோடு கல்படிக்கட்டில் அமர்ந்தான். தண்ணீருக்குள் சங்கிலிகள் இறங்கியிருந்தன. உள்ளே அது அந்தப் பெட்டியோடு கட்டப்பட்டிருக்க வேண்டும். கரைமேல் தென்னை

மரத்தடியில் நாலு மாடுகளும், யானை ஒன்றும் நின்று கொண்டிருந்தன.

"எலேய், இந்த நாயை தூக்கிப் போட்டுக் கொளுத்திட்டு வா. போ... அதையாவது ஒழுங்காச் செய். இவன் சாம்பல கலயத்துல எடுத்துக்கிட்டு வந்து என்கிட்ட காட்டணும். இல்ல நீ கலயச் சாம்பல் ஆயிடுவே. ஞாபகமிருக்கட்டும்."

சமாதானபாண்டி வீரபத்ரனை உசுப்பேத்தி அனுப்பி விட்டு குளத்தங்கரைக்கு வந்தார். எல்லோரும் மௌன மாய் பின்தொடர்ந்து சென்றனர்.

பார்வையே 'உம் நடக்கட்டும்' என்றது. அடுத்தடுத்து சங்கிலிகள் யானையால் இழுக்கப்பட குளத்து நீரில் 'தளக் புளக்' என்று தண்ணீர் முட்டை வெடிப்புகள்.

எல்லோர் பார்வையும் அந்த நீர்த்தளத்தின் மேல் குவிய, யானை சற்றே பிளிறியபடி சிரமப்பட, பாகனும் அங்குசத்தால் அதன் தொடையைக் குத்த, தடதடவென்று ஊனக்கண்ணன் தண்ணீருக்குள் பார்த்த பெட்டி தண்ணீர் மட்டத்தைத் தாண்டி சேறும் பாசியுமாக வெளிப் பட்டது.

உடனேயே பாய்ந்து பெட்டியைப் பிடித்து ஊனக் கண்ணனும் மற்றவர்களும் இழுத்துப் போட்டனர். பெட்டி இடுப்பு உயரத்தில் ஐந்தடி அகலத்தில் ஒரு மனிதனை மடக்கி உள்ளடக்க முடிந்த கொள்ளளவில் மிரட்டியது. உள்ளடக்கமான பூட்டு. சாவித் துவாரம் தெரிந்தது. ராயர் ஊன்றிப் பார்த்தார். தனக்கு பாம்புப் புற்றில் இருந்து கிடைத்த சாவிகளுக்கும், இதற்கும் ஏதாவது தொடர்பு இருக்கிறதா என்கிற மாதிரி. அப்படி ஒன்றும் தெரிய வில்லை.

"என்னடா பார்வை, உடைக்கப் பாருங்கடா..."



-ராயர் கட்டளையிட்டார். எப்படி உடைப்பது என்பது தெரியாமல் சுற்றிச் சுற்றி வந்தனர்.

"டேய்... விட்ருங்கடா. இதைக் கொண்டு போய் உள்ள வைங்க. நான் பாத்துக்கறேன்." என்று பெரியவர் சொல்ல வும் அமைதியாக ராயரைப் பார்த்துவிட்டு அதை நகர்த்தத் தொடங்கினர்.

பெரியவர் ராயரை தனியே அழைத்தார். அவரும் ஒதுங்கினார்.

"நல்லா கேட்டுக்க... நடக்கக்கூடாதது எல்லாம் நடக்க ஆரம்பிச்சிடிச்சு. நம்ம காட்டு ஊழியக் குடிங்களுக்குள்ளே மீறல் வந்துக்கிட்டிருக்கு. இது நல்லதுக்கில்ல. இப்ப எத்தனை ஊழியக்குடியனுங்க இருக்காங்க. அதுல எவன் எசனைக்கு மொசனன்னு எனக்குத் தெரிஞ்சாகணும். இன்னும் ஒரு வருஷம் தான் இருக்கு. கோவில் கதவைத் திறந்து மூடுற அந்தச் சடங்கு வேற வரப் போகுது. பஞ்ச குடியனுங்க வந்துட்டா ஒண்ணும் பண்றதுக்கில்ல. அதுக் குள்ள ஊழியக் குடியன்களுக்கு ஒரு வழி பண்ணனும். இல்ல இத்தனை நாள் காத்திருந்தது வீண் போயிடும். அடக்கியாண்டதும் அடிபட்டுப் போயிடும். போ... போய் வேலையைப் பார்."

**ச**ங்கவை ஏக அமளியில் இருந்தாள்.

சிடுசிடுவென்று உள்ளே நுழைந்த ராயரைப் பார்த்து 'என்னங்க' என்று ஏகாட்டியமாய் குரலெடுத்தாள்.

"என்ன புள்ள?"

"நம்ம ராதாப் பொண்ணு போன் போட்டுச்சு."

"என்னவாம்?"

"அது ஓர்க்ஷாப்புல ஏதோ பிராக்டிகலோ, கிராக்டிகலோ பண்ணும்போது கைல அடிபட்டு எலும்பு முறிஞ்சு போச்சாம்."

"அப்படியா?"

"ஆமாம்... மாவுக்கட்டு போட்ருக்காங்களாம். காலேசுலயும் 40 நாளைக்கு ஒரு சோலியும் பாக்க முடியாதாம். கிளம்பி வந்துக்கிட்டிருக்கேன்னா..."

சங்கவை சொல்லி முடிக்க, ராயர் புருவம் ஒரு மாதிரி இடுங்க சரியாக இருந்தது. காதில் கோவில் மணி அடிக்கும் சப்தமும் கேட்டது.

"சரி வரட்டும். நான் கோவில் வரை போய்ட்டு வரேன்." -புறப்பட்டார்.

**கோ**வில் பகுதி!

உள்ளே பெரிதாய் கூட்டமில்லை. பட்டர் பூஜையை முடித்து பிரசாதத்தைத் தந்தபடி இருந்தார்.

அங்கே ஊழியக் குடிகளின் மூத்த குடியனான கன்னையன் கண்ணில் பட்டான். ராயரைப் பார்க்கவும் பிரசாதத்தை அவசர அவசரமாக விழுங்கி விட்டு, "கும்புட்றேன் ஆண்டே" என்று எச்சில் கைகளைக் கூப்பினான்.

"என்னலே... துண்டு தோள்ள கிடக்காப்புல இருக்கு?" -ராயர் குத்தவும் தான் தோள் துண்டை எடுத்து இடுப்பில் வேக வேகமாய்க் கட்டினான்.

பட்டரைப் பார்த்தார்.

"ஆமா, உங்களுக்கு நான் நிலம் தர்றேன்னு சொன்னதை நீங்க யார் யார்கிட்டல்லாம் சொன்னீங்க?"

"நா... நான் யாரண்டையும் சொல்லலையே..."



"பொய் சொன்னா எனக்குப் புடிக்காது பட்டரே. உங்களுக்கும் தெரியும் தானே?"

"பெரியவாளண்ட நான் எப்பவும் பேசினதே இல்லை. இப்பவும் சொல்றேன். நான் எந்தத் தப்பும் பண்ணல. யாரண்டையும் பேசலை. என் பிள்ளையாண்டானுக்கு விஷயம் தெரியும். அவன் ஒருவேளை யார்கிட்டயாவது பேசி அது உங்க காதுக்கு வந்து..." பட்டர் மென்று விழுங்கினார்.

"அப்படியா சேதி... சரி இனி உங்க புள்ளகிட்ட கூட நீங்க எதையும் பேசாதீங்க" என்றவர் சுற்றி ஒரு பார்வை பார்த்தார்.

"வேற ஒண்ணும் பிரச்னை இல்லையே...?"

"பிரச்னையா, அதெல்லாம் ஒண்ணும் கிடையாது."

"நிஜமா வேற ஒண்ணுமில்லையா...?" -ராயர் குரலில் சுருதி கூடியது.

"நீங்க கேக்கறத பார்த்தா ஏதோ இருக்கற மாதிரி தெரியறதே..."

"இருக்கற மாதிரி இல்ல, இருக்கு. பெரியப்பா கூப்பிட்டு என்னை உண்டு இல்லைன்னு பண்ணிட்டார். எல்லாருக்கும் பயம் விட்டுப் போச்சு. முதல்ல அந்த ஏழுமலை கோடு தாண்டினான். இன்னிக்கு செல்வகோடி!"

"ஐயய்யோ! செல்வகோடிக்கு என்னாச்சு?"

"சுடுக்காட்டுக்குப் போய்ப் பாரும் தெரியும்."

"போய்ச் சேர்ந்துட்டானா?"

"பின்ன... மரத்துல ஒளிஞ்சுக்கிட்டு உளவு பாக்கறான் அவன் உளவு பாத்து என்ன பண்ணப் போறான். யாரா

வது இங்க பாக்கச் சொன்னாங்களா... இல்ல அவனுக்கே வந்த தைரியமா?"

"எனக்கு எல்லாமே ஆச்சரியமாயிருக்கு. ஏழுமலை செத்ததையே இங்க சிலர் நம்பலை. பாம்பு கடிச்சு சாகலை. பாம்பை விட்டு கொன்னதாகத்தான் பேசிக்கிறா. அதுல இருந்தே ஒரு சின்ன சலசலப்பு நம்ம ஜனக் கூட்டத்துக்கு வந்தாச்சு..."

"முதல்ல கேட்டப்போ ஒண்ணுமில்லைன்னீங்க. இப்ப இவ்வளவு விஷயம் சொல்றீங்களே..."

"அது... அது..."

"பட்டரே... உம்ம விசுவாசத்துக்காகத்தான் நீர் நிலத்த கேட்டப்போ என் பெரியப்பாகிட்ட கூட நான் கலந்துக் காம நிலத்தை எடுத்துக்கச் சொன்னேன். ஆனா நீர் இவ்வளவு தெரிஞ்சிருந்தும் மறைச்சு வெச்சுக்கறது சரியாய்யா..."

"அது... அது என்னை மன்னிக்கணும்." -பட்டர் பார்வை சுற்றி வட்டமிட, தொண்டையில் மிடறுகட்ட அவர் பார்வையில் கோயிலுக்கு வெளியே கையில் கருமருத மரத்து தடியுடன் கள்ளவேலன் என்பவன் பார்த்தபடி வந்து நின்றான். அவனைப் பார்க்கவும் மேலும் பதற்ற மாகிப் போனது. அதற்கு நடுவிலும் சமாளிக்கத் தொடங் கினார்.

"நான்... நான்... இனி எதையும் மனசுல வெச்சுக்காம வந்து சொல்லிட்றேன். என்னை மன்னிச்சுடுங்கோ" என்றார்.

ராயரும் அதைக் கேட்டு ஒரு மாதிரியான முகத்தோடு திரும்பினார். ஆனால், கள்ளிவேலன் அங்கே இல்லை. ராயர் போன பின்பு வியர்வையை வழித்துக் கொண்டே



நிமிர்ந்த பட்டர் எதிரில் எகத்தாளமான ஒரு பார்வை யோடு வந்து நின்றான் கள்ளவேலன்.

"என்ன பட்டரே... ராயர் எங்களைப் பத்தி எதுவும் கேட்டாரா?"

"அ... ஆமாம். ஆனா எனக்கு எதுவும் தெரியாதுன்னு சொல்லிட்டேன்."

"என்னன்னு கேட்டார்?"

"அது... அது... இப்பல்லாம் நீங்க மாறிட்டீங்கன்னார். நீங்கன்னா உங்க ஊழியக் குழு கூட்டத்தைச் சொன்னேன். நீங்கள்லாம் இப்ப முன்போல இல்லேங்கறது தெரிஞ்சு போச்சு அவங்களுக்கு."

"அப்புறம்?"

"இப்படிக் கேட்டா எப்படிப்பா. எனக்கு படியளக்கறவர் அவர். உன் கூட நான் இவ்வளவு நாழி பேசிண்டிருக்கறதே தப்பு. பார்த்தா நீயும் சுடுகாட்ல போகவேண்டியதுதான்."

"இப்படி அடங்கி நாத்தமெடுத்து வாழறதுக்கு அப்படி செத்துடலாமே பட்டரே."

"அநியாயமா சாகப்படாது. போ... போய் பெருமாளை சேவிச்சுட்டு போ. வாயை அடக்கிக்கோ. நல்ல காலம் நிச்சயமா பொறக்கும்."

"பார்ப்போம்... பார்ப்போம்... இன்னொரு விஷயம் பட்டரே."

"என்ன?"

"எங்க செல்வகோடியை அந்தக் கிழவன் சுட்டதுக்கு ஒரு பதிலடியைத் தரப்போறோம்."

"வேண்டாம் கள்ளிவேலா... அது ஆபத்து."

“வாயை மூடிக்கிட்டிருந்தா மட்டும் என்னவாம். இப்பவும் ஆபத்துதானே?”

“சரி, என்னத்த பண்ணப் போறே?”

“பொறுத்திருந்து பாருங்க. ஊர்ல இருந்து ராயர் மவ வப்போறாளாமில்ல. அவதான் இப்ப என்னோட குறி!”

–கள்ளவேலன் சொல்லிவிட்டு அகன்றான். பட்டருக்கு நின்ற இடம் நடுங்கியது.

## 24

ஆயிரம் வேலிக்காட்டின் முகப்பு!

ராதாவின் கார் நுழைந்து கொண்டிருந்தது. வரவேற்பு வளைவு அருகிலேயே இறங்கியவள் அந்த வாடகைக் காரை விட்டு கீழே இறங்கினாள். இடது கையில் மாவுக்கட்டு, அது கழுத்தோடு கிடந்த மாலைபோன்ற துணிக்கட்டுக்குள் நுழைந்து படுத்தபடி இருந்தது. சல்வார் கம்மிஸ் துப்பட்டாவை வலது கையால் சரி செய்தபடியே புற்று அருகில் வந்து ஒரு பார்வை பார்த்தாள்.

போகும்போது இடிந்து போயிருந்த புற்றின் இடத்தில் அந்த நடுகல்லோ, கல்வெட்டுச் செய்தியோ துளியும் இல்லை.

அதை திட்டமிட்டு யாரோ அகற்றியது துல்லியமாகத் தெரிந்தது. சற்றுத் தள்ளி இரண்டொரு பாம்புகள் அடிபட்டு நசிந்து சவமாய்க் கிடந்தன.

ராதாவின் முகம் அதிர்வோடு மாறிப்போனது.

முகத்தைச் சுழித்தபடியே திரும்பவும் காருக்கு வந்தாள். டிரைவர் வியப்பாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.



“இது என்னம்மா புத்து… எதுனா சாமிப் பாம்பு இதுல இருக்குதா?”

“சாமிப் பாம்பா?”

“ஆமாம்மா… இந்த மாதிரி புத்துப் பாம்புகளை அப்படித்தான் சொல்வாங்க.”

“அப்படியா… அப்ப இதுவும் சாமிப் பாம்பு புத்துதான்…”

“அப்ப பாம்புங்களை யாரோ அடிச்சு போட்டிருக்காங்களே…?”

“தெரியலை…”.

“சாமிப்புத்துல கை வைக்கறது ஆபத்தும்மா. ஒரு பாம்பு தப்பினாலும் போதும், கை வெச்சவங்களை விடாது துரத்தியடிக்கும்.”

–அவன் பாமரத்தனமாய் பயமூட்டினான். “சரி சரி காரை எடு…”

பின்சீட்டில் ராதாவும் ஏறி அமர்ந்தாள்.

அவள் பார்வை வேலிக்காட்டுப் பசுமையைப் பார்க்கத் தொடங்கியது. அவளது கார் அகன்ற சில நொடிகளில் அது நின்று கொண்டிருந்த இடத்திற்கு அருகில் உள்ள ஒரு மரத்தின் பின்னால் இருந்து கள்ளவேலன் வெளிப்பட்டான். அவன் கையில் பாம்புகள் அடங்கிக் கிடக்கும் தட்டையான மூங்கில் பிரம்புக்கூடை. முகத்தில் பழிவாங்கி விட்ட ஒருவித குரூர பவனை!

மண்பாதையில் கார் குலுங்கியபடி விரைந்து கொண்டிருந்தது.

ஒரு வளைவில் திரும்பிய நிலையில் ரியர் மிர்ரரைப் பார்த்தவனுக்கு குப்பென்று நெஞ்சையடைத்தது. ராதாவின் தலைக்குப் பின்னே படம் விரித்த நிலையில் ஒரு நாகம்.

டிரைவருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. 'அம்மா_ பாம்பு_" -என்று கத்தக்கூட திராணியற்றுப் போய் பயத்தில் சப்தம் தொண்டைக் குழியிலேயே திரும்பி வயிற்றுக்குள் உள்ளிறங்கியது.

கால்கள் சரக்கென்று பிரேக் போட்டு காரையே ஒரு குலுக்கு குலுக்கியது. அந்தக் குலுக்கலில் ராதாவும் முன்சீட்டில் மோதி அப்படியே பக்கவாட்டில் விழுந்தாள். விழுந்த வேகத்தில் நிமிரப் பார்த்தவள் சீற்றத்துடன் நெளிந்த பாம்பையும் பார்த்தாள்.

"மை காட்!" -அதிர்ச்சியில் கண்களிரண்டும் விரிய, அரள ஆரம்பித்தவள் பல நொடிகள் அப்படியே வெறித்தாள்.

டிரைவர் தப்பித்தால் போதும் என்று கதவைத் திறந்து கொண்டு வெளியேறி பின்கதவைத் திறந்து இரு சீட்டின் இடைவெளியில் கிடந்த ராதாவை துளியும் லஜ்ஜையின்றித் தொட்டு மளமளவென்று பின்னால் இழுத்தான். உடனேயே கதவையும் அடைத்தான்.

அந்தப் பாம்பு படம் எடுத்தபடியே அவ்வளவையும் பார்த்துக் கொண்டிருந்தது. காரின் கண்ணாடிகள் அடைபட்டிருந்ததால் அதனால் வெளியே வரமுடிய வில்லை.

"அம்மா, நல்ல வேளம்மா... தப்பிச்சோம்!" -அவன் பெருமூச்செறிய- ராதாவும் தொண்டைக் குழியில் வியர்வை தேங்க ஆமோதிக்கிற ரகமாய் அவனைப் பார்த்தாள்.

"நான் சொன்னமாதிரியே ஆயிடிச்சு பார்த்தீங்களா? இது புத்துக் குழியில தப்பின பாம்பும்மா. பழி வாங்கத்தான் அலையுது. இப்ப வசம்மா காருக்குள் மாட்டிக்கிச்சு."



"சரி இப்ப என்ன பண்ணலாம்?"

-அவள் கேட்கும்போதே தடதடவென்று மோட்டார் பைக்கின் சப்தம். வீரபத்ரன் வந்து கொண்டிருந்தான். கார் அருகே வந்தவன் ராதாவையும், டிரைவரையும் பார்த்து ஆச்சரியத்தோடு பைக்கை நிறுத்தினான்.

"தாயி நீங்களா?" -இறங்கியபடியே கேட்டான்.

"அ... ஆமாம் வீரபத்ரா... காருக்குள் பார், பாம்பு!"

-அவள் கைவிரல்கள் நடுக்கத்தோடு காரைச் சுட்டிக் காட்டின. அவனும் பார்த்தான்.

"எப்படி தாயி... எப்படி?"

"தெ... தெரியல. நல்லவேளை டிரைவர் காப்பாத்தி என்னை வெளிய இழுத்துட்டாரு..."

"ஆமாங்கய்யா. உள்ளார நுழையும்போது அங்கே இருக்கற பாம்புப் புத்தாண்ட அம்மா காரை நிறுத்திட்டு இறங்கி புத்துகிட்ட போய் பாத்தாங்க. அப்ப அங்கே சில நல்ல பாம்புங்க செத்துக் கிடந்துச்சுங்க. அப்பவே நான் சந்தேகப்பட்டேன். சரியாப் போச்சுங்க. அப்பத்தான் திறந்திருந்த கதவு வழியா எப்படியோ அந்த பாம்பு உள்ள ஏறியிருக்கணுங்க." -மளமளவென்று தனக்குத் தோன்றியதைச் சொல்லிவிட்டு வீரபத்ரனைப் பார்த்தான், டிரைவர்.

வீரபத்ரனும் அதைக் கேட்டு யோசனையோடு காரை நெருங்கியவன் சில நொடிகள் எதையோ யோசித்துவிட்டு சட்டென்று கார் கதவைத் திறந்தான். அவன் திறக்கவும் உள்ளிருந்த பாம்பு சீறியபடி அவனைக் கொத்த முன்னால் வந்தது. அதேசமயம் லாகவமாய் ஒரு பாம்பாட்டி போல அந்தப் பாம்பின் கழுத்தைப் பிடித்தான் வீரபத்ரன்.

ராதாவும், டிரைவரும் குலைநடுங்கிப் போனார்கள்.

"ஐய்யோ... பாத்துங்க." -டிரைவர் அலறிவிட்டான். "பாத்தாவது... பேத்தாவது..." -உச்சமாக முமுணுத்த வீர பத்ரன் பாம்பை இறுக்கிப் பிடித்தபடியே கையை வேகமாய்ச் சுழற்ற அதன் உடம்பு அவன் கையில் இருந்து விடுபட்டு ஒரு கயிறுபோல சுழல ஆரம்பித்தது.

பக்கத்தில் ஒரு பருத்த மரத்தண்டு. சுழற்றிய வேகத்தில் சவுக்கால் அடிப்பதுபோல் அந்த மரத்தண்டில் பாம்பின் உடலை அடிக்கவும், அதன் நான்கைந்தடி நீள உடம்பும் சல்லி சல்லியாக தெறிக்க ஆரம்பித்தது.

அடுத்த சில நொடிகளில் அது ஜீவனை விட்டு நார் நாராக கிழிந்து ஒரு புதரின் மேல் போய் விழுந்தது.

ராதாவின் பக்கம் திரும்பினான்.

"என்ன தாயி கைல கட்டு..."

"அது... அது... ஃப்ராக்சர்!"

"இப்ப நான் உனக்கு பதில் சொல்ற நிலையில் இல்ல. காருக்குள்ள இன்னும் ஏதாவது பாம்புங்க இருக்கா பார்" என்றாள்.

வீரபத்ரனும் உள்ளே எட்டிப் பார்த்தான்.

அவன் காரை நோட்டம் போடும் போது தொலைவில் ஒரு மரத்தின் பின்னால் இருந்து கள்ளவேலனும் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் முகத்தில் பயங்கர ஏமாற்றம்.

"உள்ளே எதுவும் இல்லம்மா... நீங்க ஏறலாம்" என்று வீரபத்ரன் சொல்ல, தயங்கியபடியே ராதா காரில் ஏறப் போனாள். அப்போது அவள் பார்வையில் கள்ளவேலன் பட, ஒரு கணம் நின்று அவனைக் கூர்மையாகப் பார்த்தாள். அவள் பார்ப்பது தெரிந்து கள்ளவேலன் மரத்தின் பின் மறைய,



"யாரத் தாயி பாக்கறீங்க?" -வீரபத்ரனும் அவள் பார்த்த திக்கைப் பார்த்தபடியே கேட்டான்.

"இல்ல... யாரையும் இல்ல..." -ராதா சமாளித்தாள். காரில் ஏறி அமர்ந்தாள். காரும் புறப்பட்டது.

சற்று தூரம் போன நிலையில் மீண்டும் திரும்பிப் பார்த்தாள். முகத்தில் கேள்விக்குறி. வீரபத்ரனும் காரின் பின்னே ஒரு பாதுகாவலன் போல வர ஆரம்பித்திருந் தான்.

தொலைவில் கள்ளவேலன் தலை மீண்டும் தெரிந்தது.

பெரியவர் சமாதானபாண்டியின் பார்வை குளத்து பங்களா முற்றத்தில் அந்த பாசிகள் காய்ந்த பெட்டியை அளந்து கொண்டிருந்தது.

பெட்டியைச் சுற்றி வந்தவர் உள்ளே போய் ஒரு இரும்புச் சுத்தியலை எடுத்து வந்தார். பெட்டியின் பூட்டை உடைக்க ஆரம்பித்தார்.

சத்தம் குளத்து பங்களாவுக்கு வெளியே நெடுந்தூரம் வரை கேட்க ஆரம்பித்தது.

குளத்து பங்களாவைச் சுற்றிலும் நிறைய தென்னைகள். அவற்றில் தென்னங்கள் இறக்குவதற்காக உரிப்பானை யுடன் மேலேறிக் கொண்டிருந்த சிலர் கூட சப்தம் கேட்டு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"என்னடா சப்தம்?"

"தெரியலியே... பெரியவர் உள்ளே இருக்குறாரா... இல்ல எவனாவது ஏதாவது பண்றானா?"

"போய் எட்டிப் பாப்பமா?"

"வா போய் பாப்போம். பொறவு எசகுபிசகா ஏதாவது இருந்து பெரியவர், 'சத்தம் எவன் காதுலயும் உழுவலையா,

எங்கடா போய்ட்டீங்க?'ன்னு கேட்டா நம்ம முதுகுத் தோல்தான் உரியும். வா, வா போய்ப் பார்ப்போம்."

–மரத்தண்டின் பாதியில் தவளை போல் கால் மடக்கி அமர்ந்திருந்த இரண்டு ஊழியக்குடி ஆட்களும் சர்ரென்று மரத்தை விட்டு இறங்கினர். வேகவேகமாய் குளத்து பங்களா வாசலை அடைந்து உள்ளே எட்டிப் பார்த்தனர்.

பெரியவர்தான் தனியாளாகப் பெட்டியைத் தட்டிக் கொண்டிருந்தார்.

'டம்டம்' என்று சத்தம் காதைப் பிளந்தது. எட்டிப் பார்த்தவர்கள் முகத்தில் வியப்பு. பெரியவரும் வியர்வையை வழித்தபடி திரும்பினார்.

ஊழியக்குடி குடியன்களைப் பார்த்துவிட்டு, "என்னடா... எங்க வந்தீங்க?"

"ஆண்டே... சத்தம் கேட்டுச்சு. அதான் எட்டிப் பார்த்தோம்."

"பார்த்துட்டீங்க தானே... திரும்பி ஓடுங்கடா."

"ஆண்டே... நாங்க வேணா அதைத் திறந்து தரவா?"

"நான் உங்ககிட்ட கேட்டேனாடா மசுரு. ஓடுங்கடா..."

ஒரு கும்பிடு போட்டுவிட்டு இடுப்பில் தொங்கும் பாளைக் கூம்புடன் திரும்பி நடந்தனர்.

மீண்டும் சத்தம் கேட்க ஆரம்பித்தது.

இருவரும் மெல்லத் திரும்பிப் பார்த்தபடியே முணுமுணுத்தனர்.

"பெட்டியில் ஏதோ புதையல் இருக்கோணும். இல்லாட்டி பெரியவர் இப்படி நம்மைத் துரத்துவாரா?"

**ரா**தாவைப் பார்த்து சங்கவை புலம்பிக் கொண்டிருந்தாள்.



"கையை ஒடிச்சிக்கிட்டு வந்து நிக்கறியே கண்ணு. இதுக்கா நாங்க உன்னைப் படிக்க அனுப்புனோம்."

"சரிம்மா புலம்பாதே. டிரைவருக்கு பணத்தைக் கொடுத்து அனுப்பு."

"அதையெல்லாம் கணக்குப் பிள்ளை பார்த்துக்குவாரு. கார்ல வர்ற வழியில பாம்பு வேற கொத்தப் பாத்துச்சுன்னு வவுத்துல புளியைக் கரைக்கறியே கண்ணு. உங்கப்பாருக்கு தெரிஞ்சா துடிச்சுப் போயிடுவாரு. ஏற்கெனவே உங்க தாத்தா அவரை கூப்பிட்டு காறித் துப்பாத குறை."

"எதுக்கு?"

"என்னடா கேள்வி இது... நம்ம ஊழியக் குடிங்க இப்ப முந்தி மாதிரி இல்லியாம். பாத்தாலே ஒண்ணுக்கு போற பசங்க. இப்ப எகத்தாளமா நடந்துக்கறாங்களாம் அந்த கோபம்..."

–சங்கவை சொல்லச் சொல்ல ராதா முகத்தில் ஆச்சரிய ரேகைகள்!

## 25

**ச**ங்கவை சொன்னதன் எதிரொலி ராதாவின் முகத்தில் சலன ரேகைகளாய் ஓடியது.

"உனக்கே ஆச்சரியமாயிருக்குதுல்ல...?" –சங்கவையும் அதை உணர்ந்து கேட்டாள்.

"ஆச்சரியமாவா, அதிர்ச்சியாவும் இருக்கு. நம்ம நிழலை மிதிக்கறத கூட ஒரு பெரிய பாவமா நினைக்கற அவங்களா மாற ஆரம்பிச்சுட்டாங்க?"

"ஆமாண்டி... உங்க பெரிய தாத்தாவும் உங்கப்பாவைக் கூப்பிட்டு உண்டு இல்லைன்னு பண்ணிட்டார்."

"சரி, மாறிட்டாங்கன்னா எப்படிம்மா... எப்படி மாறிட்டாங்க?"

"இப்படி கேட்டா எப்படிடி... எனக்கு சொல்லத் தெரியல. சுருக்கமா சொல்றேன். பயம்விட்டுப் போச்சு. அவ்வளவு ஏன்? உன் அத்தை மகன் சந்திராமோகன் பைத்தியக்காரனா மாறவே, இந்த ஊழியக்குடில ஒருத்தன்தான் காரணம்."

"யாரும்மா அது?"

"அதான் பாம்பு கடி பட்டுச் செத்து வெச்சானே ஏழுமலை, அவன்தான்."

"அவனா... அவன் ரொம்ப நல்லவனாச்சே!"

"யார் இங்க கெட்டவங்க. எல்லாரும் நல்லவங்கதான். என்னமோ அவன் புத்தி திடீர்னு நமக்கு எதிரா வேலை செய்ய ஆரம்பிச்சிச்சு. அழிஞ்சும் போயிட்டான்."

"அது எப்படிம்மா ஒருத்தர் திடீர்னு மாற முடியும்? ஏதாவது காரணம் இருக்கணும் இல்லையா?"

"அது எனக்கு தெரியாது. ரொம்ப நெருக்கிக் கேட்டா இங்கே கூலிகளா இருக்கப் பிடிக்கலை. வெளியே போகணும்னு சொல்வாங்க."

"சரி போகட்டும்னு விட்டுத் தள்ள வேண்டியதுதானே?"

"நான்கூட உங்கப்பாகிட்ட சொல்லிப் பார்த்தேன். ஆனா அவர் என்னைப் பாத்து முறைச்சிட்டு பதிலுக்கு ஒரு கேள்வி கேட்டார். நான் அப்படியே ஆடிப்போயிட்டேன்."

"என்னம்மா கேட்டார் அப்படி... கமான் சொல்லு..." -ராதா ஏதோ ஒரு ரகசியத்தை நெருங்கிவிட்டது போல பரபரத்தாள்.



"வேண்டாம் கண்ணு... உனக்கு அதெல்லாம் எதுவும் தெரிய வேண்டாம். நீ படிக்கிற பொண்ணு. கைய வேற உடைச்சிகிட்டு வந்து நிக்கறே. வர்ற வழியில பாம்பு கிட்ட இருந்து நீ தப்பி வந்ததே எனக்கு பெரும்பாடா தெரியுது. நீ போய் பேசாம ஒரு ஓரமா உக்காரு. ஆங்... புதுசா ஒரு ஆன்டனா போட்டு நீ டி.வி. பாக்க எல்லா ஏற்பாடும் செய்து வெச்சுருக்கேன். போ... போயி ஓய்வெடு."

சங்கவை பெரிதாக பீடிகை போட்டுவிட்டு புசுக்கென்று முடித்தாள். ராதாவின் முகத்தில் ஏமாற்றம். சங்கவையும் பேசிய வேகத்தில் நகர்ந்து கொண்டாள். சிறிது நேரம் அமர்ந்திருந்தவள் எழுந்து மொட்டை மாடிக்குச் சென்றாள்.

சங்கவை சொன்னது உள் ஓடிக் கொண்டே இருந்தது. ராயர் அப்படி என்ன கேட்டிருப்பார் என்கிற கேள்வியே பிரதானமாக இருந்தது.

நடுவில் கலைக்கிற மாதிரி கோவில் மணிச் சப்தம் காதில் வந்து மோதியது. பார்வையும் மணி சப்தம் வந்த திசைப்பக்கம் சென்றது.

கோவில் கோபுரம் வெகு தொலைவில் இடைப்பட்ட மரங்களின் கிளைகளுக்கு நடுவில் சுமாராகத் தெரிந்தது. அப்படியே கிலேசத்துடன் பார்வையை சுழல விட்டாள். பசுமை கொஞ்சும் ஆயிரம் வேலிக்காட்டின் இயற்கையான சூழல். காற்றில் கூந்தல் கலைந்து பறந்தது. அந்த நொடியில் ஒரு நூறு அடி தூரத்தில் வேம்பு ஒன்றின் பின்னால் கள்ளவேலன் ஒரு விநாடிக்கும் குறைவான அவகாசத்தில் அவள் கண்களில் பட்டு மறைந்து போனான்.

சுருக்கென்றது.

காரில் இருந்து பார்த்தபோதும் இதே வேகத்தில் தோன்றி மறைந்தான். இப்பொழுதும்...? ராதா அந்த மரத்தையே பார்த்தபடி நின்றாள். பின் என்ன நினைத்தாளோ

அங்கிருந்து உள்ளே செல்வதுபோல் நடந்து ஒரு ஓரமாக ஒதுங்கி மறைவாக நின்று கொண்டு மீண்டும் அந்த மரத்தையே நோட்டமிட்டாள். அவள் புத்திசாலித்தனம் வீண் போகவில்லை. மரத்தண்டின் மறைவில் பதுங்கிய கள்ளவேலன் ஒரு பெருமூச்சுடன் வெளிப்பட்டான். ராதா நின்று நோட்டம் போட்ட மாடி கைப் பிடிச்சுவர் பகுதியையே ஒருமுறை உற்றுப் பார்த்தான். பின் திரும்பி நடக்க ஆரம்பித்தான்.

ராதாவின் உள்மனது இவனை விடக்கூடாது என்று தனக்குள் சொல்லிக் கொண்டது.

உச்சிக்கால பூஜை முடிந்து பட்டர் வீட்டிற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். எதிரில் வீரபத்ரன்.

"வா வீரபத்ரா... ஏதாவது முக்கியமான விஷயமா?"

"ஒண்ணுமில்ல பட்டரே. இனிமே நீங்க இல்லாதப்ப நான் கோயில்ல இருக்கணும்கறது ஆண்டே உத்தரவு. அதான் வந்தேன்..." -வீரபத்ரன் உதட்டில் கொட்டாவி பிரிய சொல்லிக்கொண்டே வாசலின் கல் படியில் போய் உட்கார்ந்தான்.

பட்டருக்கு அவன் செய்கை சலனத்தைக் கொடுத்தது. "எதனால இப்படி ஒரு முடிவுக்கு ராயர் வந்தார்?" -என்று கேட்க மனசு நினைத்தாலும் தைரியம் வரவில்லை. எதற்கு வம்பு என்கிறார்போல் நின்று ஒரு பார்வை பார்த்துவிட்டு நடக்க ஆரம்பித்தார்.

கோயிலுக்குப் பக்கத்திலேயே சிறியதாய் ஒரு ஓட்டு வில்லைகள் வேய்ந்த வீடு. வீட்டுக் கூரை மேல் அவரைக் கொடிகளின் பரவல். முகப்பில் பிரம்புத் தட்டியின் அடைப்பு. அடைப்பைக் கடந்தால் வாசலுக்கு நேராகச் சிறிய துளசி மாடம். மாடம் கடந்தால் வீட்டுக் கூரைக்குக் கீழான சிமெண்ட்டுத் தளம் போட்ட திண்ணை.



அந்தத் திண்ணை மேல் பட்டரின் மனைவி பங்கஜம் உட்கார்ந்தபடி இருந்தாள். பட்டர் வரவும் அவரைப் பார்த்தாள்.

"ஏன் ஒரு மாதிரியா இருக்கேள்?"

"ஒண்ணுமில்ல... உள்ளே வா சொல்றேன்?"

-அவர் உள்ளே நுழைய அவளும் பின் தொடர்ந்தாள். சிறிய தாழ்வாரமும் கடந்தால் கூடத்தில் கட்டில் கிடந்தது. அதில் போய் அமர்ந்தார். பின் தொடர்ந்து வந்த பங்கஜம் அருகே சென்று நின்றவளாய் அவர் முகத்தை ஏறிட்டாள்.

"பங்கஜா... மனசே சரியில்லடி."

"ஏன்.. என்ன நடந்தது?"

"என்னத்த சொல்வேன். இந்த ஆயிரம் வேலிக்காட்டுக்கு கஷ்டகாலம் ஆரம்பிச்சாச்சு."

"எப்ப கோவில் கதவை மூடினாளோ அப்பவே அது ஆரம்பிச்சாச்சு. இப்ப என்ன சிக்கல். அதைச் சொல் லுங்கோ."

"மூடியிருக்கற கதவை யாராவது திறந்துடுவாளோன்னு ராயர் குடும்பம் பயப்பட ஆரம்பிச்சிடிச்சு."

"நிஜமாவா... அவ்வளவு துணிச்சல் யாருக்குன்னா இருக்கு?"

"அடிமேல் அடிப்பட்டா புழுகூட புலியா மாறும்னு சொல்வா. நீ கேள்விப்பட்டதில்லையா?"

"ஊழியம்பாடிகளைச் சொல்றேளா?"

"ஆமாம்... கொஞ்சம் நாளாவே நிலைமை சரியில்லை. அதுலையும் ராயர் குடும்பத்து பொண்ணே செத்துப் போகவும் ரொம்ப மோசமாக மாற ஆரம்பிச்சிருக்கு."

"அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்?"

"மெட்ராஸ்ல இருந்து வந்த சந்திரமோகன் இங்கே ஏதோ தப்பு நடக்கறதுன்னு கத்தினான்தானே?"

"ஆமாம்..."

"அது இங்கே அடங்கிக் கிடந்தப் பசங்களை நன்னாவே அசைச்சிருக்கு. நாங்க சந்தேகப்பட்றதுதான் உண்மை. பாத்தீங்களா ராயர் குடும்பத்துலையே எங்களுக்கு சாதகமா கேள்விகள் கேட்க ஆரம்பிச்சுட்டாங்கன்னு கள்ளவேலன்ல இருந்து எல்லாரும் கேட்க ஆரம்பிச் சுட்டாங்க."

"நீங்க என்ன நினைக்கிறேள்?"

"நான் நினைக்க என்ன இருக்கு. நம்ம பெரியவா போன பாதைல போயிண்டிருக்கேன். நம்ம பய சொன்ன மாதிரி எங்களுக்குன்னு கொஞ்சம் நிலம் கொடுக்கக் கூடா தான்னு நான் ராயர் கிட்ட கேட்டது கூட பெரிய குத்தமா ஆயிடுத்து பங்கஜா. பெரியவர் சமாதானபாண்டி ராயரைப் போட்டு புரட்டி எடுத்துப்புட்டார்."

"அப்ப எல்லாரும் சந்தேகப்படற மாதிரி நிலத்துலதான் சிக்கல் இருக்கா?"

"தெரியல பங்கஜா. இதுக்கெல்லாம் பதிலை பெரியவர் தான் சொல்ல முடியும்."

-பட்டர் ஆழ்ந்த கவலையில் புதைந்து போல ஈன சுரத்தில் பேசினார்.

"பேசாம இந்த கோவிலே வேண்டாம்னு கிளம்பிப் போயிடலாம்னா, நீங்களும் கேக்க மாட்டோங்கறேள்."

"அப்படியெல்லாம் சாவியை விட்டெறிஞ்சுட்டு போய்ட முடியாது. அப்புறமா அந்தக் குட்டிநந்தன் நம்மைச் சும்மா விட மாட்டான். அவன் கோபம்தான் நமக்குத் தெரிஞ்ச ஒண்ணாச்சே?"



-பட்டரின் கேள்வியை கேட்டு சிரித்தபடியே உள்ளே நுழைந்து கொண்டிருந்தான் அவர் மகன் பட்டாபி. பங்கஜமும் அவன் சிரிப்பதைப் பார்த்தாள். "உங்க பிள்ளை வந்துட்டான். பெருமாளப் பத்தி சொன்ன உடனே நக்கலா சிரிக்கவும் ஆரம்பிச்சுட்டான். ஒண்ணு தெரிஞ்சுக் கோங்கோ.. இந்த காலத்துப் பசங்கள்ளாம் உங்களை மாதிரி கிடையாது." -பங்கஜம் சுருதி கூட்டினாள். பட்டாபி அதற்கு இசைவாகப் பேச்செடுத்தான்.

"அப்பா.. போறும்ப்பா! இப்படியே பயந்து பயந்து தான் உங்க வாழ்க்கையே ஒண்ணுமில்லாமப் போய் இப்ப என் வாழ்க்கையும் ஒண்ணுமில்லாமப் போயிண்டிருக்கு. நாம ஒண்ணும் கம்சனோ இல்லை. சிசுபொலனோ இல்லை. அந்தப் பெருமாள் நம்மளை வதாம் பண்றதுக்கு. துணிஞ்சுத்தான் வாழ முடியும். எனக்கு அந்த பெருமாள் சாமி மேல பயமில்லை. இங்க இருக்கற சில ஆசாமிகள் பேர்லதான் பயம். நீங்க மட்டும் என்னைக் கட்டிப் போடாம இருங்கோ. இந்த வேலிக்காடு ஏன் இப்படி பழம் பெட்டியா பயத்துல புதைஞ்சு கிடக்குங்கறதுக்கான பதிலை நான் கண்டு பிடிச்சு சொல்றேன்."

பட்டாபியின் ஆவேசத்தைப் பார்த்து பட்டர் மிரள ஆரம்பித்தார்.

"போறும்டா... சத்தம் போட்டு பேசாதே. நானே ஏற்கெனவே குழப்பத்துல இருக்கேன். எங்களுக்குன்னு நீ ஒருத்தன்தான் இருக்கே. உனக்கு ஒண்ணு ஆனா அப்புறம் எங்களுக்கு யார்டா இருக்கா?"

"இப்படி இருக்கறதுக்கு இல்லாமலே போயிட லாம்ப்பா... நாம எந்தக் காலத்துல இருக்கோம்னே எனக்குத் தெரியல. யார் செஞ்ச புண்ணியமோ எனக் கொரு அத்தை இருந்ததால அவ புண்ணியத்துல நான் அவ இருக்கற ஊர்ல இருந்துண்டு டிகிரி முடிச்சேன். இங்க

இருந்திருந்தா உங்களோட வாரிசா மணி ஆட்ட வெச்சிருப்பேள்."

"பட்டாபி... நீ அதிகம் பேசறே. நான் ஏற்கெனவே கலங்கிப் போயிருக்கேன். செத்த சும்மா இருக்கியா?" -பட்டர் அவனை சற்று அதட்டி அடக்கினார். அவனுக்கும் அதற்கு மேல் அங்கு இருக்கப் பிடிக்கவில்லை. வந்தவழியே வெளியே சென்றான்.

வெளியே திண்ணையில் கள்ளவேலன்.

"போலாமா?" -என்று பட்டாபியைப் பார்த்துக் கேட்க, "மொள்ள... அப்ப காதுல விழுந்தா அப்புறம் இதுக்கும் சேர்த்து கத்துவார். நைஸா நழுவிடுவோம். கமான்..." -இருவரும் வீட்டை விட்டு வெளியேறி வேலிக்காட்டின் அடர்ந்த புளியங்காட்டுப் பகுதிக்குள் நுழைந்தனர்.

"முதல் பிளான்ல அவ தப்பிச்சுட்டா. இரண்டாவதுல அவசரப்படக்கூடாது. நல்லபடியா ஒரு ஐடியா கொடு பார்ப்போம்." -என்ற கள்ளவேலனை பட்டாபி தாடையைத் தடவியபடி பார்த்து விட்டு கைகளைச் சொடுக்கியபடி 'ஒரு ஐடியா' என்றான்.

"என்ன?"

-பட்டாபியும் சொன்னான். கள்ளவேலன் முகத்திலும் அதன் எதிரொலியாக உற்சாகம்!

## 26

கள்ளவேலனின் முகம் மகிழ்ச்சியால் செம்பருத்திப் பூவைப்போல மாறியது.

"பட்டாபி... நிஜமா சொல்றேன் உங்களுக்கு மூளை அதிகம்கறது வாஸ்தவம்தான்" என்றான் அதன் எதிரொலியாய்.



"பாராட்டு அப்புறம். இந்த தடவையாவது காரியத்தை கச்சிதமா முடி. தப்பித்தவறி கூட இது நாம கொடுத்த பதிலடிங்கறது ராயருக்கு தெரிஞ்சிடக்கூடாது. தெரிஞ்சா அவ்வளவுதான்..."

"நிச்சயமா... இந்த நிமிஷம் நான் ரகசியமாத்தான் எல்லாத்தையும் செய்துகிட்டு வரேன். கவலைப்படாதே துளிகூட பிடி கொடுக்கமாட்டேன்..."

-கள்ளவேலன் சொல்லிவிட்டு போட்ட திட்டப்படி நடப்பதற்காகக் கிளம்பினான். பட்டாபி நகத்தைக் கடித்தபடி நாலாபுறமும் பார்த்துவிட்டு அவனும் புறப்பட்டான்.

நாலு எட்டு போட்டிருப்பான்.

இருமல் சப்தம் கேட்டது. தோளில் மண்வெட்டியோடு எதிரில் ரங்கசாமித் தாத்தா வந்து கொண்டிருந்தார். இருமுகின்ற இருமலில் இதயம் வாய் வழியே வெளியே வந்துவிட்டு திரும்ப உள்ளே போகிற மாதிரி தோன்றியது பட்டாபிக்கு... தாத்தாவும் அவனைப் பார்த்துவிட்டு இருமலுக்கு நடுவில் பேசமுயன்றார்.

"யாரு சின்ன அய்யரா?"

"என்ன தாத்தா... எங்க இவ்வளவு தூரம்?"

"தோட்டத்துக்குப் போய் தண்ணி பாச்சிட்டு வர்றேன். ஆமா நீங்க எங்க அய்யரே இங்க...?"

"தாத்தா... தப்பா எடுத்துக்காம என்னை பட்டாபின்னு பேரச் சொல்லிக் கூப்பிடுங்க..."

-பட்டாபி இப்படி அடிக்கடி சொல்வது வழக்கம்தான். தாத்தா பதிலுக்குச் சிரித்தார்.

"நாக்குக்கு அப்படி கூப்ட்டே பழகிப் போச்சு அய்யரே!" என்றார் திரும்பவும்.

"பழக்கத்த மாத்துங்க. ஆமா, இந்த இருமலுக்கு நடுவுல தண்ணி பாய்ச்சப் போகணுமா?"

ஆமா... போய்த்தானே தீரணும். போகாட்டி வயல் எங்க இருந்து விளையும்? விளையாட்டி வயிறு எங்க இருந்து நிரம்பும்?"

"ஆமா... என்னமோ உங்க சொந்த வயல்ல வேலை பார்த்து பொழைக்கற மாதிரி பேசறீங்களே. உடம்பு முடிய லைன்னு படுத்தா ராயர் என்ன தலையை வெட்டியா போட்டுருவாரு."

-பட்டாபி தெரிந்து கேட்கிறானா, இல்லை தெரியாமல் அப்படி கேட்கிறானா என்றே தெரியவில்லை. தாத்தா அவனை ஒரு மாதிரி முறைத்துவிட்டு, "சொன்னாலும் சொல்லாட்டியும் அதான் நடக்கும். இந்த ஊழியம்பாடிக் கூட்டமே ஆயிரம் வேலிக் காட்டுக்கு கடமைப்பட்டிருக்கு. காலம் பூரா நாங்க உங்க அடிமைன்னு எழுதியும் கொடுத்திருக்கு -தெரியும்தானே?" என்று கேட்டார். பட்டாபிக்கு பகீர் என்றது.

"என்ன தாத்தா இது... புதுசா ஏதேதோ சொல்றீங்க?"

"உங்க தலைமுறைக்கு இது புதுசுதான். ஆனா, எங்களுக்குத்தானே விஷயம் என்னன்னு தெரியும்?"

"அது என்ன விஷயம் தாத்தா...?"

"வேண்டாம் அய்யரே. இப்ப நிலைமை சரியில்ல. நான் கிளம்பறேன்." -தாத்தா வேகமாய் நழுவினார். ஆனால் இத்தனை வருஷத்தில் அவன் கேள்விப்பட்டிராத ஒரு ரகசியத்தின் முக்கியமான ஷரத்து ஒன்றைச் சொன்னவ ராக.

பட்டாபிக்குள் பட்டாம்பூச்சிகள் பறக்கத் துவங்கி விட்டன.



**பு**த்தகம் படித்துக் கொண்டிருந்தாள் ராதா. மாத நாவல். பார்வைதான் புத்தகத்தின் மேல் இருந்தது. ஆனால் புத்தி எப்படியாவது வீட்டை விட்டு வெளியே கிளம்பி அந்தக் கள்ளவேலன் முன்னால் போய் நிற்கத்தான் திட்டமிட்டுக் கொண்டிருந்தது.

'அவன் எதற்காக தன்னைக் குறிவைத்து துரத்தி வந்தான்?' -கேள்வி பிடுங்கி எடுத்தது. என்ன செய்தால் இந்தக் கட்டுப் போட்ட கையோடு வெளியே போய்வர முடியும்?

தீவிரமாக யோசித்தவள் சட்டென்று ஒரு ஐடியா கிடைத்ததுபோல எழுந்து சென்று சூட்கேஸைத் திறந்தாள்.

அதில் டாக்டர் சர்ட்டிபிகேட் ஒரு கவரில் மடங்கிக் கிடந்தது. புத்திசாலித்தனமாக தினம் 3 கி.மீ. தூரம் கட்டாயம் வாக் போக வேண்டும் என்று டாக்டரிடம் எழுதி வாங்கிக் கொண்டதை ஒருகணம் திரும்பப் படித் தாள். அந்த சர்ட்டிபிகேட்டோடும் மாத்திரைகளுக்கான பிரிஸ்க்ரிப்ஷனோடும் அறையை விட்டுக் கிளம்பினாள்.

ஹாலில் ராயர் கணக்குப்பிள்ளை ராமலிங்கத்துடன் பேசிக் கொண்டிருந்தார்.

"இந்த வட்டம் நல்ல மகசூலுங்க. கிட்டத்தட்ட நூறு டன்னுக்குப் போயிடிச்சு..."

"நல்லது... குடோன்ல ஸ்டாக் பண்ணாம அதுல ஒரு நூறு மூட்டையை எடுத்து ஊழியம்பாடிங்களுக்கு தலைக்கு ஒரு மூட்டை கொடுத்துருங்க..."

"ஏற்கெனவே கொடுத்தாச்சுங்களே..."

"திரும்பவும் ஒரு மூட்டை போட்டு விடு. கேட்டா போனஸ்னு சொல்லு..."

"நல்லதுங்க... எதுக்கும் பெரிய ஆண்டே கிட்ட ஒரு வார்த்தை..." -ராமலிங்கம் இழுத்தபடி இருந்தார். ராயரும் பதிலுக்கு ஒரு பார்வை பார்த்தார். பார்வையா அது? அனல் பறந்தது.

"ஆண்டே நான் ஒண்ணும் தப்பா சொல்லலீங்க. பெரிய ஆண்டேக்கு தெரிஞ்சா இரைவாரு -அதான் சொன் னேன்."

-ராயர் சினந்து பொரிவது ராதாவுக்கு கூட ஆச்சரிய மாய்த்தான் இருந்தது. அவள் வருவதைப் பார்க்கவும் ராயர் உடனே பேச்சில் சுருதியைக் குறைத்துக் கொண்டார்.

"வாம்மா... வா!" -என்று மென்று விழுங்கினார்.

"என்னப்பா... ஏதாவது தப்பான நேரத்துல நான் வந்துட்டேனா?"

"அதெல்லாம் ஒண்ணுமில்ல. நானே உன்னை வந்து பாக்கணும்னு இருந்தேன். நீ வந்துட்டே எப்படி இப்படி ஆச்சு?"

"அது வந்துப்பா... ஓர்க்ஷாப்ல மெஷினுக்குக் கீழே ஆயில் சிந்தியிருந்துச்சு. நான் கவனிக்காம காலை வெச்சுட்டேன். வழுக்கி ஓடிக்கிட்டிருக்கிற மெஷின் மேல விழுந்துட்டேன்." -ராதா அழகாகவே அந்தப் பொய்யைச் சொன்னாள்.

ராயரும் அதை நம்பிவிட்ட மாதிரி முகபாவங்களைக் காட்டிவிட்டு அவள் கையில் இருந்த தாளைப் பார்த்தாள்.

"என்ன பேப்பர்மா அது?"

"ஒண்ணு டாக்டர் சர்ட்டிபிகேட். இன்னொண்ணு மாத்திரை பிரிஸ்கிரிப்ஷன்."

"மருந்து வாங்கணுமா?"



"ஆமாம்ப்பா... அப்படியே தினமுதும் ஒருமணிநேரம் கட்டாயம் வாக் போகணும்னும் சொல்லியிருக்கார்."

"வாக் போகணுமா? எதுக்கு...?"

"அப்பத்தான் ரத்த ஓட்டம் நார்மலா இருக்கும் கைல அடிபட்ட இடத்துல ஃப்ராக்ச்சர் சரியாகும்னு சொன் னார்."

"புதுமையாக இருக்கே... உடம்பு இளைக்கத்தானே நடப்பாங்க...?"

"கரெக்ட்ப்பா... கரெக்ட்! நான் அஞ்சு கிலோ கூட இருக்கேனாம். அதனால இப்ப சாப்பிடற மருந்தால சதை போட்ருமாம். ஸோ நடக்கச் சொல்றார்."

"நல்லது... காசா பணமா? நடந்துட்டு வா. கூட நம்ம ஊழியம்பாடி எவனையாவது கூட்டிக்கோ!"

'சரிப்பா..."

-காரியம் சுலபமாய் முடிந்த பெருமூச்சோடு பிரிஸ்கிரிப் ஷனைக் கொடுத்துட்டு நகர முயன்றாள். ராயரும் ராம லிங்கத்தை குடைய ஆரம்பித்துவிட்டார்.

"ஆமா... குளத்துல இருந்து எடுத்த அந்தப் பொட்டில என்ன இருக்குது பாத்தியாய்யா நீ?"

"இல்லீங்க... பெரிய ஆண்டே இப்ப யார் வந்தாலும் குளத்து பங்களாவுக்கு வெளியவே நிறுத்திப் பேசி அனுப்பிடறாரு."

"அப்ப அதுல ஏதோ பெருசா இருக்குன்னுதானே அர்த்தம்?"

"தெரியலீங்க. ஆனா எப்பப்பாரு அதை திறக்கறதுக்காக உசுரைக் கொடுத்துக்கிட்டிருக்காருங்க."

"அப்ப இன்னும் திறக்கலையா?"

"சத்தம் காதுல உழுவறத பார்த்தா அப்படித்தாங்க தெரியுது."

"அப்படியா விஷயம்... அப்ப நான் போய்ப் பாக்கறேன்."

-ராயர் கிளம்பிவிட்டார். ராதாவோ 'அது என்ன பொட்டி?' என்கிற புதிய கேள்வியிலும் விழுந்துவிட்டிருந் தாள். கேள்வி நெளிய நடை தொடர்ந்தது. ஞாபகமாக கையைக் கழுத்துக் கட்டுக்குள் நுழைத்துக் கொண்டாள்.

நல்லவேளை சங்கவை பார்க்கவில்லை. பார்த்திருந்தால் பிலுபிலுவென்று பிடித்துக் கொண்டிருப்பாள். கல் மாளிகைக்கு வெளியே தோட்டத்துப் பாதை நீண்டிருந்தது. ஓரமாய் தென்னைகள். வானத்துக்கு ஒட்டடை அடிக்கிற மாதிரி உயரத்தோடு காற்றிலாடியபடி இருந்தது. ராதா பார்த்துக் கொண்டே நடந்தாள்.

முதலில் கள்ளவேலனை எங்கே என்று கண்டுபிடிக்க வேண்டும். அவனைப் பிடித்தால் ஆயிரம் வேலித் தோட் டத்தின் பிரதான ரகசியத்தையும் பிடித்து விட்டதாகத்தான் பொருள்!

கள்ளவேலன் அரிவாளைத் தீட்டிக் கொண்டிருந்தான். நடுநடுவே கூர்மை போதுமாக என்கிற மாதிரி ஒரு பார்வை வேறு. அது தென்னங்குலையை வெட்டப் பயன் படும் அரிவாள். ஏகத்துக்கும் செயல்பட்டிருக்க வேண்டும். பழைமை தெரிந்தது. பளபளப்பு இல்லை.

அதே சமயம் அவனது குடிசைக்கு நான்காவது குடிசையில் குந்தியிருந்த பெண்ணைப் பார்த்தபடி ராதா அவளோடு பேசிக்கொண்டிருந்தாள்.

அவள் ராதாவைப் பார்த்து விட்டு தெய்வத்தின் முன் நிற்க அச்சப்படும் ஒரு பக்தனைப் போல நிற்படியே பதில் சொல்லிக் கொண்டிருந்தாள்.



"ஆமா, எங்க யாரையுமே கண்ணுல பார்க்க முடியல."

"தாயி... யாரைத் தாயி சொல்றீங்க?"

"எல்லாம் உங்க வீட்டுக்காரர், கொழுந்தன், மச்சினன், இவங்கள்தான் சொன்னேன்."

"எல்லாம் வயல் வேலைக்குப் போயிட்டாங்க."

"அப்படியா. ஆமா ராத்திரி இங்க கொசுக்கடி இல்லையா?"

"ஐயோ அம்மா... கொசுக்கடிக்கு இங்க பஞ்சமே இல்லீங்க..."

"எப்படி இருக்கீங்க?"

"கொஞ்சம் போல வேப்ப இலையால மூட்டம் போடு வோம். அம்புட்டு கொசுவும் ஓடிப்போயிடும்ல."

"ஆச்சரியமாயிருக்கே..." -பேசவேண்டும் என்று ராதா பேசியதை அந்தப் பெண்ணால் புரிந்து கொள்ள முடிய வில்லை.

"இப்பகூட மூட்டம் போட்டா இந்த இடத்துல ஒரு கொசு இருக்காது. போட்டுக் காட்டட்டுங்களா?"

"பரவாயில்லை பரவாயில்லை..." -ராதா அவளை சமா ளித்தவளாக பார்வையை சுழலவிட்டபடியே இருந்தாள்.

யாரையும் காணவில்லை. கள்ளவேலனின் முகம்தான் ஞாபகத்தில் உள்ளது. ஆனால், பெயர் தெரியாது. தெரிந்து கொள்ள அவசியமும் ஏற்படாமல் போய்விட்டது. அந்த அளவு வெளியில் கல்லூரி வாசம்.

கழுத்தில் கட்டோடு அந்தப் பெண் சொன்னதை அசை போட்டப்படியே நடந்தாள். எங்கே அவன்? பார்வை தேடியபோது காதில் கத்தியை கள்ளவேலன் பட்டை தீட்டும் அரவம் கேட்டது.

"ஆமா, என்ன அங்கே சப்தம்?"

"ஒண்ணுமில்லம்மா. கள்ளன் கத்தியை தீட்டிக் கிட்டிருக்கான்."

"என்னது கள்ளனா?"

"ஆமாம்மா. நம்ம கள்ளவேலன் மரம் ஏறியாச்சே. அதான் அரிவாளை தீட்டிக்கிட்டிருக்கான்."

-அவள் சொல்ல ராதாவுக்கு பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல ஆயிற்று.

"மகனே உன்னைத்தாண்டா தேடிக்கிட்டிருக்கேன்' -என்றபடி அவளும், 'மகளே உன்னைத்தாண்டி தேடிக்கிட் டிருக்கோம்' என்று அவனும் அரிவாளைத் தீட்டியபடி இருக்க, "எக்ஸ்யூஸ்மீ..." என்றபடி கள்ளவேலனின் எதிரில் போய் நின்றாள். வேலன் திணறிப் போனான்.

## 27

ராயர் மகள் ராதா கையில் கட்டோடு தன்னையே தேடி வந்து எதிரில் நிற்பதைப் பார்த்த கள்ளவேலனுக்கு ஒரு வினாடி மூச்சுத் திணறியது. மிக ஊடுருவிய அவளது பார்வை அவனைத் திகைக்க வைத்தது.

"ஹாய்..." என்றாள் ராதா.

குடிசை வாசலில் ஊழியம்பாடிகள் சிலர் ஆச்சரியத் துடன் வந்து குவிந்துவிட்டார்கள்.

"எலேய் கள்ளவேலா... அம்மா வந்துருக்குறாங்க. வாங்க உக்காருங்கன்னு கூட சொல்லாம என்னடா பேந்தப் பாக்கறே" என்று கள்ளவேலனை அதட்டினான் கடம்பன். கள்ளவேலன் சுதாரிக்கத் தொடங்கினான்.



"வாங்கம்மா... உக்காருங்க..." என்று ஒரு கிழிசல் பாயை எடுத்து விரித்தான்.

"நான் உட்கார வரலை. நீதான் இனிமே எனக்கு எஸ்கார்ட். அதான் சொல்லிட்டுப் போக வந்தேன்," என்ற ராதா அவனுக்குச் சற்று அதிர்ச்சியளித்தாள். அவள் எஸ்கார்ட் என்று சொன்னது அவனுக்குப் புரியவில்லை. திருதிருவென மேலும் விழித்தான். தன்னை ஒரு குற்றவாளி என்று அவள் சொல்வதாக நினைத்துக்கொண்டு, "வேண்டாம்மா... நான் செல்வகோடி கிடையாது, உங்க குடும்பம் கையால அடிபட்டுச் சாவறதுக்கு. நான் கள்ள வேலன்" -என்றான் சற்று உஷ்ணமான கோபத்தோடு.

அவள் சிரித்துவிட்டாள்.

"நான் ஒண்ணு சொன்னா நீ ஒண்ணு சொல்றியே கள்ளவேலா. இனிமே நீதான் எனக்கு காவல்னு சொன் னேன். இது என் விருப்பம் இல்ல. அப்பாதான் ஒரு ஊழியம்பாடியை காவலுக்கு வெச்சுக்கோன்னு சொன் னார்" -என்று ஒரு விளக்கமும் கொடுத்தாள்.

அதைக் கேட்ட கள்ளவேலன் உள்ளுக்குள் உதற ஆரம்பித்தான். இருந்தும் சமாளித்தான்.

"என்னம்மா நீங்க... இந்தக் கூட்டத்துல எவ்வளவோ பேர் இருக்கும்போது என்னை எதுக்காகம்மா உங்க காவலுக்கு கூப்பிடறீங்க. நான் கோபக்காரன், முரடன். அதோட பொம்பளைங்கன்னாலே எனக்கு ஆகாதும்மா..." மீண்டும் சிரித்தாள் ராதா.

"அதனாலதான் உன்னைத் தேர்ந்தெடுத்தேன். எனக்கு, என்னைப் பார்த்து மயங்கறவனைவிட உன்னைமாதிரி திடமான கோபக்காரனைத்தான் பிடிக்கும்" என்றாள்.

"இல்லம்மா... நீங்க வேற ஏதோ எண்ணத்தோட வந்துருக்கீங்க. எனக்கு பிடிக்கல. விட்டுடுங்க..." என்று

அவன் அங்கிருந்து விலக முயற்சிக்கவும் கடம்பனிடமிருந்தே மீண்டும் எதிர்க்குரல் ஆரம்பமாயிற்று.

"எலேய்... அவுக ராணிடா. எதுத்தா பேசறே. அப்பால அதுக்கும் சேர்த்து அனுபவிப்பே தெரிஞ்சுக்கோ. தாயி... அவன் எப்பவும் இப்படித்தான். நீங்க மனசுல வெச்சிக்கிடாதீங்க. நீங்க போங்க தாயி. அவனை நான் அனுப்பி வைக்கறேன்" என்ற கடம்பனை ராதா அர்த்த புஷ்டியோடு பார்த்தாள். பின், "இன்னும் ஒரு மணிநேரம் டயம் தரேன். அதுக்குள்ள கள்ளவேலன் என் வீட்டுக்கு வரணும். வரலே..." என்று இழுவையாகப் பேசிவிட்டு அங்கிருந்து புறப்பட்டாள்.

கள்ளவேலன் முகத்தில் வசமாக மாட்டிக்கொண்டு விட்ட ஒரு பீதி!

**கு**ளத்து வீட்டுமுன் நின்று கொண்டிருந்தார் ராயர். மனம் முழுக்க அந்தப் பெட்டியில் என்ன இருந்திருக்கும் என்கிற கேள்வியே பிரதானமாக இருந்தது. உள்ளே நுழைந்தார். வீட்டினுள்ளும் நிசப்தம். பெரும்பாலும் வீட்டுக்குள் விளக்கெரியாது. ராயர், இருட்டில் பெரியவரைத் தேடினார்.

"ஆரு...?" -எங்கிருந்தோ பெரியவரின் குரல் ராயரை இடித்தது.

"பெரிப்பா... நான் கமுகாசலம் வந்துருக்கேன்."

"எங்க வந்தே?"

"சும்மா பாத்துட்டுப் போவலாம்னுதான்..."

"என்னியா... இல்ல பொட்டியவா?"

பெரியவரின் மடக்கலில் ராயரிடம் தடுமாற்றம்.

"உங்களத்தான் பெரியப்பா..."



"சரி.. விஷயத்தச் சொல்லு.."

"நீங்கதான் பெரிப்பா சொல்லணும்?"

"என்னாலே... நானா உன்னை வான்னு கூப்ட்டேன். வந்தவன் நீ. நோக்கத்தோட வந்துருந்தா விஷயத்துக்கு வந்துருப்பே. நோட்டம் போட வந்தா தடுமாறத்தானே செய்வே?"

"அப்படி இல்ல பெரிப்பா... உங்ககிட்ட கொஞ்சம் மனசு விட்டுப் பேசலாம்னு..."

"அப்ப பேசு..."

"அக்கறையா கேட்டாத்தான் பெரிப்பா பேச்சு வரும். இப்படி எடக்கு மொடக்கா பேசினா எப்படி?"

"செரி... மொணங்காம சொல்லு. என்னா சங்கதி?"

"எல்லாம் நம்ம வேலிக்காட்டப் பத்தித்தான்..."

"அதுக்கென்ன இப்போ?"

"உங்களுக்குப் பொறாவு அது எனக்கும் என் குடும்பத்துக்கும்தானே?"

"தெரியாது..."

"இப்படிச் சொன்னா எப்படி பெரிப்பா?"

"வேற எப்படிச் சொல்லணும்?"

"உண்டு இல்லைன்னு சொல்லுங்க..."

"சரி உண்டுத்தான். பொறவு."

"அதுபோதும் பெரியப்பா... நான் புறப்படறேன்."

"அப்ப நான் இல்லன்னு சொல்லியிருந்தா என்ன பண்ணுவே?"

"என்னத்த பண்ணுவேன்... என் மகன் -மகளோட இந்த வீட்டை விட்டுப் போய் உடம்பு தெம்பு இருக்கும்போதே நாலு காசு சம்பாதிக்கப் பார்ப்பேன்."

"அப்ப அப்படியே செய்... பொறப்படு!"

பெரியவர் அதிர்வளித்தார். மிக அதிகபட்ச அதிர்வு. ராயரும் நின்று பார்த்தார். பார்வையா அது...?

"என்னலே பாக்றே?"

"உங்கள என்னால புரிஞ்சுக்கவே முடியலை பெரிப்பா..."

"அங்கதான் இந்த சமாதானபாண்டி நிக்கறான். ஆமா உனக்கு ஏன் இப்ப இம்புட்டு சந்தேகம்?"

"காரணமாத்தான்..."

"என்ன புடலங்கா காரணம்?"

"அய்யருக்கு நான் ஒரு அரை காணி கொடுத்தது உங்களுக்கு பொறுக்கலையே. நான் என்ன வீதியில் போறவனா?"

"அப்படித்தான் இப் நீ பேசறே."

"இல்ல பெரிப்பா. உங்களுக்குள்ள ஏதோ இருக்கு. நீங்க சொல்ற மாதிரிதான் நான் நடக்கேன். துணிச்சலா எம்புட்டு கொலைங்க. இப்ப வரும்போதுகூட கங்காணி பொஞ்சாதி கரு உண்டாகியிருக்கான்னு தெரிஞ்சு அதை கர்ப்பத்துலையே கலைக்க மருந்து கொடுத்துப் போட்டு தான் வர்றேன். நீங்க சொன்னீங்க, நான் செய்யறேன். ஏன் எதுக்குன்னு இத்தினி நாள் கேட்டிருப்பேனா?"

"இப்ப மட்டும் ஏன் கேக்கே?"

"என்னிக்காவது ஒருநாள் கேட்கத்தானே வேணும்?"



"அப்படிக் கேட்டு உண்மை தெரிஞ்சா நீ நீயா இருக்கமாட்டாலே. அதான் சொல்லாம இருக்கேன். தெரிஞ்சுக்கா."

"இது என்ன பெரிப்பா புதுக் கதை."

"புதுக்கதை இல்ல... பழைய கதை. ஊழியம்பாடில சோணையனுக்கும் எனக்கும் மட்டுமே தெரிஞ்ச கதை."

"அது என்னன்னுதான் சொல்லுங்களேன்."

"ஒரு அஞ்சாறு வருஷம் பொறு. ஊழியம்பாடிக் கூட்டமே காலாவதி ஆகட்டும். அப்ப சொல்றேன்."

"இப்ப சொன்ன என்னாயிடும்?"

"தப்பாயிடும். எல்லாமே தப்பாயிடும். போ... போய் சோலி மசுரைப் பாரு."

-பெரியவர் புதிர் போட்டு கத்தரித்தார்.

ராயர் ஏமாற்றத்துடன் திரும்பத் தொடங்கினார்.

சட்டென்று பெரியவர் பாத்ரூமுக்குள் நுழைந்ததை உத்தேசித்து பெட்டியைப் பார்க்க விரும்பி அது எங்கே என்று பார்வையை அலைய விட்டார். பெட்டியும் கண்ணில் பட்டது. அருகே சென்றபோது அது திறக்கப் பட்டிருப்பது தெரிந்தது. ராயரும் ஆவலோடு பெட்டியின் மூடியை தம் கட்டியபடி தூக்கிப் பார்த்தார். உள்ளே எதுவுமில்லை. அதிர்ச்சியாக இருந்தது.

"பொட்டிய நோட்டம் போட்டது போதும். போடா வெண்ணை" -பாத்ரூமிலிருந்து பெரியவர் கத்தினார்.

ராயருக்கு உடம்பு வெலவெலத்து விட்டது!

**கல்** பங்களா!

சரியாக ஒரு மணி நேரத்தில் கள்ளவேலன், ராதா இருக்கும் மாடி அறையில் அவள் முன் வந்து நின்றான். மிக டென்ஷனாக இருந்தான்.

"வந்துட்டியா... குட்!" -ராதா வரவேற்றவளாக தன்னிடம் உள்ள செல்லை காதில் வைத்து சந்திரமோகனிடம் பேசத் தொடங்கினாள்.

"சந்திரா... நான் ராதா பேசறேன். நான் இங்கே செட்டிலாயிட்டேன். கள்ளவேலன்னு எனக்கு ஒரு எஸ்கார்ட்டையும் ரெடி பண்ணிக்கிட்டேன். ஆனா இந்த கள்ளவேலன் என்னை ராயர் மகளாகத்தான் பார்க்கறான். நானும் அவர் எதிரிங்கறது இவனுக்குத் தெரியல..." -அவள் அப்படிச் சொன்னதுதான் தாமதம். கள்ளவேலன் அறை விழுந்து சிலர்த்த மாதிரி சிலிர்த்துப் போனான். ராதாவை அதிர்ச்சி விலகாமல் பார்த்தான். ராதா தொடர்ந்தபடி இருந்தாள்.

"டோன்ட் ஒர்ரி சந்திரா... கள்ளவேலன் மட்டும் என்னைப் புரிஞ்சுக்கிட்டு கோ-ஆபரேட் பண்ணினா நாங்க இரண்டு பேர் மட்டும் போதும் அந்தக் கோவில் கதவை திறந்து பார்த்துட...!" கள்ளவேலனிடம் அடுத்த கட்ட திணறல்.

"சந்திரா... நீ போன் பண்ணாதே. மாட்டிக்காதே. நான் பண்றேன். இனி தானே எல்லாமே இருக்கு?"

-அவள் செல்ஃபோனை முடக்கி விட்டுத் திரும்பினாள். எதிரில் கள்ளவேலன் மிரள மிரளப் பார்த்தபடி...

"என்ன... அதிர்ச்சியா இருக்கா?"

"ஆமாம்மா..."

"ஆமாம் ராதான்னு கூட சொல்லலாம். என்னைவிட நீ பெரியவன்தானே...?"



"அம்மா..."

"இதோ பார்... நான் உன் தோழி. இந்த ஆண்டான் அடிமை மனப்பான்மையை தூக்கி தூரப்போடு. சகஜமா பேசு. உண்மையாப் பேசு. எதுக்காக என்னை ஃபாலோ பண்ணினே?"

"அம்மா அது வந்து..."

"என் அப்பா மேல உள்ள கோபத்தை என் மேல காட்டவா?"

"அம்மா..."

"உண்டு இல்லைன்னு சொல்."

"அ... ஆமாம்மா..."

"எனக்கும் என் அப்பா, தாத்தா பேர்ல கோபம் இருக்கு. இதை நீ நம்பணும். அப்பத்தான் என் அசைன்மென்ட் நல்லபடி முடியும்."

"அப்படின்னா..."

"பாசம், பரம்பரைன்னு நான் நியாமில்லாம நடந்துக்கறவ கிடையாது. எனக்கு இவங்க போக்கு பிடிக்கல. இவங்க இப்படி இருக்க ஒரு காரணம் இருக்கு. நீங்க பயப்பட்டு அடிமையா நடந்துக்கவும் ஒரு காரணம் இருக்கு. அது எனக்குத் தெரியணும். நீ மனசு விட்டுப் பேசு. சொல்! என்னைக் கொலை செய்ய நீ நினைச்சதுக்கு காரணம் என்ன?"

"என்னம்மா கேள்வி இது. பழிக்குப் பழிம்மா..."

"நான் செத்துட்டா உங்க பிரச்னை தீர்ந்துடுமா?"

"தெரியாது. ஆனா பட்டாபி இருக்காரு. அடுத்தடுத்து வழி காட்டுவார்."

“ஓ... பட்டாபிதான் உங்க தலைவனா?”

“கிட்டதட்ட அப்படித்தான்.”

“அப்ப நான் பட்டாபியை பாக்கணுமே...”

“பாக்கலாம். இது ஒண்ணும் நடிப்பில்லையே...”

“இந்த கைகட்டுதான் நடிப்பு. நான் சொல்றது நடிப்பில்ல...”

“சத்தியமா...?”

“சத்தியமாத்தான் சொல்றேன்...”

“அப்ப புளியங்காட்டுக்கு வாங்க போவோம். பட்டாபியை கூட்டிக்கிட்டு வரேன்.”

“குட்... இப்ப நீ கிளம்பு. இன்னிக்கு இதுக்கு மேல நான் வெளில வந்தா விபரீதமாயிடும். நாளைக்கு காலைல வா. போவோம்.”

“நல்லதும்மா... அப்ப நான் வரேன்!”

கள்ளவேலன் புறப்பட்டான். ராதா மெலிதாகச் சிரித்தாள். முதல் கட்டத்தை பிழைகளின்றி கடந்தாகி விட்டது. அடுத்து...?

## 28

**வி**டிந்துவிட்டது. குட்டி நந்தஸ்வாமியின் கோவில் மணி சப்தம்தான் ராதாவையே தட்டி எழுப்பியது. எழுந்த வேகத்தில் ஜன்னலை விலக்கி வெளியே பார்த்தாள். மிக ரம்யமாக இருந்தது. இப்படி ஓர் இடத்தில் அடாத மர்மம் இருக்கிறது என்றால் யார்தான் நம்புவார்கள்? வெளியே பார்க்கும்போது உள்ளுக்குள் விளைந்த கேள்வியை ராதாவால் தவிர்க்க முடியவில்லை. சிறிது நேரம்



இயற்கையை ரசித்தபடி நின்றவள் கள்ளவேலனையும், பட்டாபியையும் புளியந்தோப்பில் சந்திப்பதாகச் சொன்னதை ஒருமுறை நினைத்துப் பார்த்தாள்.

“**வா**ங்கோ...”

கைகூப்பி வரவேற்பு சொன்னான் பட்டாபி. பளிச்சென்று வேட்டி- சட்டை. நெற்றியில் ஸ்ரீ சூரணம். ஆனால் கண்ணில் ஒருவித வெறி. ராதாவும் அதை அளந்தபடியே சுற்றிலும் ஒரு பார்வை பார்த்தாள். அடர்வாய் புளிய மரங்கள், தழைவாய் அதன் கிளைகள்.

“என்ன புதுசா பார்க்கற மாதிரி பாக்கறீங்க?” –பட்டாபி பேச்சை ஆரம்பித்தான்.

“இந்த இடத்துக்கு நான் புதுசுதானே?”

“எங்களுக்கு உங்ககிட்ட எல்லாமே புதுசாத்தான் இருக்கு...” –அவனது மடக்கலான பதிலில் நல்ல புத்திசாலித்தனம். ராதாவும் அதை ரசித்தாள்.

“சரி விஷயத்துக்கு வருவோமா?”

“தாராளமா.”

“உங்களுக்கு இந்த ஆயிரம் வேலிக்காட்டை பத்தி தெரிஞ்ச அளவுக்குக்கூட எனக்கு எதுவும் தெரியாது. நீங்கதான் பேசணும்.”

“எதைப்பத்தி பேசணும்?”

“ஏன் நீங்க எங்களை வெறுக்கறீங்க?”

“எந்த அடிமை தன் எஜமானனை நேசிப்பான்?”

“அடிமையா இருக்க இஷ்டமில்லைன்னா போயிட வேண்டியதுதானே?”

“அப்படி போய்ட்டா உங்களுக்கு ரொம்ப சௌகர்ய மாயிடுமே.”

"எப்படி?"

"நாங்க எந்த விதத்துலையாவது அழியணும். இல்லேன்னா விட்டா போதும்னு ஓடணும். இதுதானே இந்த வேலிக்காட்டு ஜமீனோட எதிர்பார்ப்பு."

"அப்படி எதிர்பார்க்க எது காரணமா இருக்க முடியும்?"

'தெரியலை. அதைத்தான் கண்டுபிடிக்கத் துடிக்கறோம்."

"அம்மா... இது மட்டும் காரணமில்லீங்க. எனக்குத் தெரிஞ்சதை நான் சொல்றேன். நாங்க வெளியே ஓடிப் போனா கூட பொழைக்க முடியாதுங்க. எப்படின்னு கேக்கறீங்களா?"

"எப்படி?"

"ஒரு நாலு வருஷத்துக்கு முந்தி இந்தக் காட்டை விட்டு ராஜ பாண்டிங்கறவன் ஓடிப்போனான். ரொம்ப நாள் அவன் எங்க இருக்கான், என்ன பண்றான்னே தெரியலை. அப்பால ராமேஸ்வரம் கடல்ல கடலாடியா மீன் பிடிச்சுக் கிட்டிருக்கறதா தெரிய வந்துச்சு. அவ்வளவுதான். தகவல் தெரிஞ்ச ஒரு பத்து நாள்ல இங்க இருந்து வீரபத்ரன் போய் அவனை குடும்பத்தோடு கொன்னுப்புட்டு வந்துட்டான்!"

"இதெல்லாம் எப்படி உங்களுக்குத் தெரியும்?"

"ராஜபாண்டியே ஒரு நா எங்களைப் பாக்க ஒரு ராத்திரியில வந்து போனான். அப்பத்தான் அவன் ராமேஸ்வரத்துல கடலாடற விஷயம் தெரிஞ்சது. அதை யாரோ உங்கப்பாகிட்ட போட்டுவிட, வீரபத்ரன் போய் கொன்னுப்புட்டு வந்துட்டான். ராஜபாண்டியோட குடிசைக்குத் தீ வைச்சுட்டேன்னு வீரபத்ரன் உங்கப்பா கிட்ட சொன்னதை காதால கேட்டவங்கள்ல நானும் ஒருத்தன்."



"அப்படின்னா நீங்க இங்க இருந்து வெளிய போனாகூட தலைமறைவா இருந்தாத்தான் வாழமுடியும். இல்லேன்னா அழிக்கப்படுவீங்க. அப்படித்தானே?"

"அப்படியேதாம்மா..."

"அது மட்டுமில்ல மேடம்... இங்கயும் இவங்க குடும்பம் விருத்தியே ஆகலை. நல்லா யோசிச்சுப் பாருங்க. இங்க யாருக்காவது கடந்த ஒரு பத்துப் பதினைஞ்சு வருஷத்துல குழந்தை பிறந்திருக்கான்னு..."

"ஏன் அப்படி?"

"சுருக்கமா சொல்றேன். இந்த வேலிக்காட்டு ஊழியம் பாடிக் கூட்டம் பூண்டோடு அழியணும். அதுதான் உங்க குடும்பத்தோட விருப்பம்."

"உங்களை பூண்டோட அழிக்கறது இந்த வேலிக்காட்டு குடும்பத்துக்கு ஒரு பெரிய விஷயமா? இங்க உங்க குடும்பங்களுக்கு தீ வைக்க எவ்வளவு நேரமாயிடும்?" -ராதாவும் அழகாகவே மடக்கினாள்.

"அப்புறம் இங்க இந்தக் காட்டுல யார் வேலை செய்வாங்க?"

"ஏன் வெளிய இருந்து யாரும் வந்து வேலை செய்தா இந்தக் காடு விளையாதா?"

"அவங்களுக்கு கூலி தரணுமே. அது மட்டுமில்ல. இந்த வேலிக்காட்டு கட்டுதிட்டங்களுக்கு உட்பட்டு வேலை செய்ய யாரும் தயாரா இல்லம்மா."

"அப்ப ஊழியம்பாடிகள் காலத்தால அழிஞ்சு போகணும். அதுதான் எங்க ஜமீன் நோக்கம். அப்படின்னு சொல்ல வர்றீங்களா?"

"ஆமாம்... அதுல எங்களுக்கு சந்தேகம் இல்லை."

"சரி இதுக்கும் கோவில் கதவு பூட்டியே இருக்கறதுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கா?"

"அதுக்குப் பின்னால ஒரு கதை இருக்குன்னு சோணை முத்து தாத்தா சொல்வார். ஆனா என்னன்னு கேட்டாத்தான் சொல்ல மாட்டேங்கறார். வேளை வரட்டும் சொல்றேங்கறார்."

"இப்ப எங்க தாத்தா?" -ராதா கேட்க "வணக்கம் தாயி..." என்ற படி, தாத்தாவே வந்துகொண்டிருந்தார்.

"வணக்கம் தாத்தா... நீங்க இங்கதான் இருந்தீங்களா... சாரி, நான் உங்களை கவனிக்கலை."

"இல்லம்மா. நான் இப்பத்தான் வந்தேன். நீ ரகசியமா பேசணும்னு ஆசைப்பட்டதா கேள்விப்பட்டேன். சந்தோஷம்மா."

"ஆமாம் தாத்தா... எனக்கே இங்க இருக்கற மர்மம் பிடிபடலை. அது என்னன்னு தெரிஞ்சுக்கணும். அதுதான் இப்ப என் நோக்கம்."

'ரொம்ப ஆச்சரியமா இருக்கு. ராயர் குடும்பத்துல இப்படி ஒரு பொண்ணான்னு."

"ஆச்சரியத்தை தள்ளி வையுங்க. கோயில் மூடி இருக்கறதுக்கு பின்னால் ஏதோ கதை இருக்கறதா இவங்க சொல்றாங்க. உங்களுக்கும் அது தெரியுமாமே?"

"தெரியும்தான். ஏன்னா நான் அப்ப சிறுபுள்ளையா இங்க இருந்தவன்தானே... என் கண் எதுக்கத்தானே அதெல்லாம் நடந்துச்சு."

"முதல்ல அது என்னன்னு சொல்றீங்களா?" -கேள்வி யோடு தன்வசம் உள்ள பாக்கெட் டேப் ரிக்கார்டரை ஆன் செய்தாள் ராதா.

"இது என்னம்மா?"



"டேப்ரிக்கார்டர். நீங்க சொல்றதை பதிவு செய்துக்கப் போறேன்."

"மனசுல பதிச்சுக்கிட்டா போதாதா... இதுவெல்லாம் எதுக்கும்மா?"

"இது எனக்கு மட்டுமில்லை. என் அத்தைப் பையன் சந்திரமோகனும் நீங்க சொல்றதை தெரிஞ்சுக்கணும்- அதுக்காகத்தான்!"

"பாவம் அந்தத் தம்பி... இங்க எதுக்கோ வந்து அது என்னவெல்லாமோ ஆயிப்போச்சு."

"அதுதான் தாத்தா என்னையும் இப்ப உங்ககூட பேச வெச்சுக்கிட்டிருக்கு. நீங்க என்ன நடந்ததுன்னு சொல் லுங்க."

"சொல்றேன். அதுக்கு முந்தி இடத்தை மாத்திக்கு வோமா?"

"ஏன்... இது பாதுகாப்பான இடம்தானே?"

"இந்தக் காட்டுக்குள்ள எந்த இடமும் பாதுகாப்பான இடம் கிடையாது. இப்பக்கூட நாம இப்படி கூடிப்பேசறத யாராவது தொலவுல இருந்து நமக்கே தெரியாம பாத்துக் கிட்டிருக்கலாம். அப்படிப் பாக்கறவங்க ஏமாறணும்னா நீங்க இப்ப இங்கே புளியங்கா அடிச்சு சாப்பிடணும். நானும் பட்டாபியும் உங்க கால்ல உழுந்தும் எழுந் திரிக்கணும்."

"அப்படி எல்லாம் செஞ்சு என்னை தர்மசங்கடப் படுத்திடாதீங்க."

"வேற வழி இல்லம்மா... டேய் வேலா ஏறுடா மரத்துமேல. பட்டாபி வா இப்படி. கைகட்டி என் பக்கத்துல நில்லு. அம்மா நீங்க கல்லால புளியங்காய் அடிங்க பார்ப்போம்."

-தாத்தா சொல்லவும் ராதாவும் ஒரு கல்லை எடுத்து மரத்தின் மேல் எறிந்தாள். அப்படியே நாலாபுறமும் நகர்ந்து நகர்ந்து சென்று பார்த்தாள். தாத்தா சொன்னது வாஸ்தவம்தான். வெகு தூரத்தில் ஒருவன் கறுப்பு போர்வை யில் உடலை மூடியபடி கையில் தடியோடு மரக்கிளை ஒன்றின் மேல் அமர்ந்தவனாக பார்த்துக் கொண்டிருந் தான்.

***1922!***

ஆயிரம் வேலிக்காட்டுக்குள் ஒரு புலி நுழைந்துவிட்டது. தமுக்கு போட்டுக் கொண்டும், தீப்பந்தத்தோடும் அதைத் தேடி ஒரு கூட்டமே அலைந்து கொண்டிருந்தது.

"எவன் அந்தப் புலியைப் பிடிச்சுக்கிட்டு வந்தாலும் சரி, உசுரோடுதான் கொண்டாரணும். அப்படி கொண் டாந்துட்டா அவனுக்கு அஞ்சு வேலி நிலத்தை அவன் கேட்கற இடத்துல தந்துடறேன்" -என்று ஜமீன்தார் உடையப்ப ராயர் சொன்னதன் எதிரொலி அது... எல்லோரும் கூட்டம் கூட்டமாக அலைந்து கொண் டிருக்க, புலியன் மட்டும் தனியாக கொச்சக் கயிறு, சுருக்குக்கம்பி, மிளகாய்ப் பொடி என்று அல்பபொருட்கள் சிலவோடு அந்தப் புலியைப் பிடிக்கக் கிளம்பிவிட்டான்.

அவன் புறப்பட்ட நேரம் எதிரில் செங்கம்மா பானை நீரோடு வந்தபடி இருந்தாள். ஊழியம்பாடி கூட்டத்தின் தேவதையான அவளே எதிரில் வந்ததில் புலியனுக்கு குஷி தாளவில்லை. அவளிடம் விபூதி வைத்துவிடச் சொல்லி நெற்றியைக் காட்டினான். செங்கம்மாள் அவர்களுக்கெல் லாம் சாமிப்பெண். நவராத்திரியின் கடைசி நாளில் குட்டி நந்தஸ்வாமி கோயிலில் வடக்கு பார்த்த நிலையில் உள்ள விஷ்ணு துர்க்கை முன்னால் அவள் தாய் வணங்கி நிற்கும்போது துளிக்கூட வலியின்றி க்ஷணத்தில் பிறந்து தரையில் விழுந்தவள்! அவள் விழுந்த இடத்தில் ஸ்ரீ சக்கர



கோலம் போடப்பட்டிருந்தது. அதன்மேல் பனிக்குட நீரோடு விழுந்த குழந்தையாக அவள் இருக்கவும், ஆயிரம் வேலிக்காடே அவளை அந்த துர்க்கையாகத்தான் பார்க்கத் தொடங்கியது. அதன்பின் அவளைப் பார்த்துவிட்டு போனாலே அந்தக் காரியம் வெற்றி என்றாகிவிட்டது. இது ஜமீன் வரை போய் ஜமீன்தாரும் அவளை தெய்வப் பெண்ணாக கருதத் தொடங்கினார். இதனால் ஜமீனில் அவளுக்கு தன் மருமகளுக்கான சேடிப்பெண்ணாக உத்யோகமும் கொடுத்துவிட்டார். இப்பொழுது கூட சுனைக்குப்போய் தண்ணீர் எடுத்துக் கொண்டு ஜமீனுக்குத் தான் போய்க்கொண்டிருக்கிறாள். எதிரில்தான் புலியனும் நெற்றியைக் காட்டி, "துண்ணூறுவை உன் கையால..." என்று அடம் பிடித்துக் கொண்டிருக்கிறான். செங்கம்மாள் உடனேயே சிரித்துவிட்டு, "நான் என்ன சாமியாடியா. முச்சூடும் கைல துண்ணூறோட திரிய-வழியவிடு!" என்றாள்.

"பாத்தியா... புலி பிடிக்கப்போறேன். என்னைப் போய் சாவுடாங்கற மாதிரி வெறும் நெத்தியோட அனுப்புறியே செங்கம்மா..." -வழிந்தான். அவன் புலி பிடிக்கப்போகிறேன் என்று சொன்னதுதான் தாமதம். அவள் முகத்தில் அதிர்வலைகள்.

"தனியாவா போறே?"

"இல்லே செங்கம்மா... இரண்டு கை, அதுல பத்து விரலுன்னு துணையோட தான் போறேன்." -புலியன் கைகளைக் குத்திக்கொண்டே சொன்னான்.

"வேண்டாம்யா. அது வெறி புடிச்ச புலியாம்."

"இருந்தா என்ன... அத அடக்குனாத்தானே எனக்கு மதிப்பு..."

"உனக்கு ஏதாவது ஆயிட்டா?"

35846
5329352

"நீ நிறைஞ்ச மனசோட என்னை அனுப்பு. அந்தப் புலி என் எதுப்பால நாய்க்குட்டி மாதிரி வாலை ஆட்டிக்கிட்டு வரும்."

"போய்யா... உட்டா என்ன அந்த ஆதிபராசக்தின்னே சொல்லிப்பிடுவே போல இருக்குதே."

"என் வரைல நீ சக்தியேதான். அதுல சந்தேகம் என்ன?"

"இப்படியே சொல்லி என்னை கோவில்ல கொண்டு போய் உக்காத்தி வெச்சுப்பிட போறீங்க."

"செஞ்சா ஒரு தப்பும் அது இல்ல..."

"நீ வழிய விடு... சின்னவங்களுக்கு நான் மருதாணி வெச்சு உட்றேன்னு சொல்லியிருந்தேன். தேடிக் கிட்டிருப் பாங்க..."

-அவள் விலகி ஓடப் பார்த்தாள். எதோ ஒரு துணிச்சல், அப்படி ஓட நினைத்தவளைப் பிடித்து இழுத்தது. அவளும் வெட்கத்துடன், "கையை உடுய்யா. யாராவது பாக்கப் போறாங்க..." என்று சிணுங்கிக் குலுங்கினாள்.

"விட்றேன் விட்றேன்... உன்கிட்ட ஒண்ணு கேட்கணும்னு..."

"இன்னும் என்ன?"

"இருக்கு... ஆமா சின்னவங்க பேர் என்ன?"

"செவ்வந்தி நாச்சி?"

"அவுகளுக்கு பிள்ளையே பொறக்காதாமே...?"

-புலியன் அப்படி ஒரு கேள்வியை அந்த நேரத்தில், அதுவும் கையைப் பிடித்து நிறுத்திக் கேட்பான் என்று அவள் துளிக்கூட எதிர்பார்க்கவில்லை. பதிலுக்கு புலி யனை மலங்க மலங்கப் பார்த்தாள்.

"என்ன பாக்கறே... நான் கேள்விப்பட்டது நெசமா?"



"ஆமாம்யா.. நானும் அப்படித் தான் கேள்விப்பட்டேன். யாரோ ஒரு ஜோசியக்காரரு அப்படிச் சொல்லிப் பிட்டாராம். அதனால சின்னவங்க மனசு ஒடிஞ்சு போய்ட்டாங்க. தினம் என்னாண்ட உன் கையால என் வவுத்தை வருடிக்கொடு. அதனாலயாவது எனக்கு புள்ள பொறக்குதா பாக்கறேன்னு தினம் தினம் ஒரே அழுகை."

-செங்கம்மா சொல்லும் விதமே மிகுந்த கழிவிரக்கத் தோடு என்னவோ போல் இருந்தது. அதே சமயம் பக்கவாட்டில் ஒரு புதருக்குப் பின்னால் இருந்து புலி உறுமும் சப்தமும் கேட்டது.

## 29

புலியின் உறுமல் செங்கமாளை உலுக்கிவிட்டது. ஆனால், புலியன் அதைத் தனது வீரத்துக்குக் கிடைத்த ஒரு சவாலாகத்தான் நினைத்தான். எப்பொழுதும் இடுப்பில் உறைக்குள் படுத்தபடி இருக்கும் பிச்சுவாக் கத்தியை உருவி எடுத்துக்கொண்டு செங்கம்மாளைத் தன் பின்னால் தள்ளி நிறுத்திக் கொண்டு உறுமல் சப்தம் வந்த புதரைப் பார்த்தான்.

செங்கம்மாள் பதறத் தொடங்கினாள்.

"வேணாம்யா... வாய்யா போய்டலாம்" என்று நடுங்கினாள்.

"நீ அப்படியே பின்னாலேயே போ. நான் இப்ப இதை இரண்டுல ஒண்ணு பாத்துடறேன்" என்று அவன் சொல்லும்போதே புதருக்குள் இருந்த அது ஓர் அசுரப் பாய்ச்சல் பாய்ந்து அவன் மேல் வந்து விழுந்தது. அடுத்த நொடியே அந்த இடத்தில் புழுதி பறக்க ஒரு ஆக்ரோஷ மான மோதல் மனிதன் ஒருவனுக்கும் மிருகம் ஒன்றுக்கும் ஆரம்பமாயிற்று.

செங்கம்மாள் தண்ணீர் பானையைப் போட்டுவிட்டு "பெருமாளே" என்று அந்த வேலிக்காட்டு தெய்வத்தை நினைத்து உருகத் தொடங்கிவிட்டாள்.

நல்லவேளை... புலியன் கைதான் ஓங்கியது. அவனது பிச்சுவா வகை தொகை இல்லாமல் அந்தப் புலியின் மேனி மேல் இறங்கி ரத்தம் பீறிட விட்டது. அதுவும் அவன் மார்பில் அறைந்து கெச்சலாய் சதையை வழித்து எடுத்தது. அசரவில்லை புலியன். அதன் நடுவயிற்றில் பிச்சுவாவைக் குத்தி அப்படியே இழுத்துக் கிழித்தான். அதுவும் வேறு வழியில்லாமல் உயிரை விட்டொழித்தது. செங்கம்மாள் சிலிர்த்துவிட்டாள்.

அதன்பின் தோளில் உயிர்போன புலியைத் தூக்கிப் போட்டு அதன் நான்கு கால்களையும் மடக்கிப் பிடித்தபடி நடந்து வருவதை வேலிக்காடே வேடிக்கை பார்த்தது. பலர் முன்னால் வந்து திருஷ்டியெல்லாம் கழித்தார்கள். அப்படியே அவனோடு சேர்ந்து நடந்தார்கள்.

ஜமீன்வாசலில் ஜமீன்தாரர் செய்தியறிந்து காத்துக் கொண்டிருந்தார். புலியன் வரவும் முன்னால் வந்து சந்தோஷப் பார்வை பார்த்தார். புலியனும் கொன்ற புலியை அவர் முன்னால் சொத்தென்று தரைமேல் போட்டான்.

"புலியா நீ பெரிய வீரன்தான்..." என்று பாராட்டியவர் அறிவித்தது போல ஐந்து வேலி நிலத்துக்கும் அப்போதே பத்திரம் போடச் சொன்னார்.

"கணக்குப்பிள்ள... வாய்யா இப்படி. புலியன் இந்த ஆயிரம் வேலிக்காட்டுல எந்த இடத்தைக் கேட்டாலும் கொடு" என்றார் சந்தோஷத்தில்.

"ஆண்டே, எனக்கு ஊரணிக்கரை பக்கமாதான் வேணும்" என்று புலியனும் இடத்தைச் சொன்னான்.



"எடுத்துக்கோ... எடுத்துக்கோ...' என்றார். ஆனால், அதில் ஒரு சிறு கருத்து வேற்றுமை ஜமீன்தாருக்கும் அவரது மகன் நரசிம்மராயனுக்கும் உருவாயிற்று.

"நீங்களா மேட்டுப்பாங்கான ஒரு இடத்துல இடத்தைக் கொடுக்கறத விட்டுப்புட்டு. இது என்ன ஊரணிக் கரையில இடத்தைக் கொடுத்துகிட்டு...' என்று அவரோடு மல்லுக் கட்டினான்.

"இப்ப என்ன... நமக்கு சொல்லு எப்பவும் பெரிசுடா ராயா..." -என்றார் ஜமீன்தார்.

அதன்பின் நரசிம்மராயன் பெரிதாய் எதுவும் பேசவில்லை. ஆனால் நரசிம்மராயனின் மைத்துனன் சிங்கராயன், அவன் சகோதரியும் நரசிம்மன் ராயரின் பெண்டாட்டியுமான செவ்வந்தி நாச்சியிடம் உறுமிக் கொண்டிருந்தான்.

"செவ்வந்தி... உன் மாமனார் இதே போக்குல போனா இந்த வேலிக்காட்டையே அந்தக் கூலிக் கூட்டத்துக்குக் கொடுத்துப்புடுவாரு. அப்பால நீயும் மாப்பிளையும் தெருவுல நிக்க வேண்டியதுதான்" என்றான்.

"இதை நீ போய் உன் மாப்ளகிட்டையே சொல்லு..." என்று செவ்வந்தி நாச்சியும் உசுப்பேத்திவிட அதன்பின் அதுதான் நடந்தது.

புளியங்காட்டில் கல்மேடையில் கள் குடித்தபடி இருந்த நரசிம்ம ராயனை சிங்கராயன் போய்ப்பார்த்து உசுப் பேத்தத் தொடங்கினான்.

"மாப்ள... உங்கப்பாவைக் கொஞ்சம் அடக்கி வையுங்க. இந்த ஜமீனை நீங்கதான் நிர்வாகம் பண்ணணும். இல்லே குடி முழுகினாலும் முழுகிடும்."

"தெரியும். தெரியும். எனக்கு எல்லாம் தெரியும்."

"என்ன தெரியும்? வாரிசுக்கு வழி இல்லைன்னு ஆயிடிச்சு. வரப்போற நாட்கள்ல கட்டி ஆள யார் இருக்கான்னு உங்கப்பாரு தானம் கொடுத்தே சொத்த அழிச்சிடப் போறாரு ஜாக்ரதை" என்று வாரிசு நினைப்பை மூட்டிவிட்டுப் போக நரசிம்மராயனை சிங்கராயனின் பேச்சுக் கொத்திக் குதறியது. பக்கத்தில் அப்பொழுதுதான் இறங்கிய கள்ளின் புளிப்பு வாசம். சிங்கராயனின் மனக் குமுறலை அந்தப் புளித்த கள் கூட்டிக் கழித்தது. போதையும் இஷ்டத்துக்கும் தலைக்கேறப் பார்த்தது. அப்படியே தள்ளாடிக் கொண்டு நடந்தவன் ஓர் இடத்தில் சுருண்டு விழுந்துவிட்டான். நல்லவேளை அந்தப்பக்கமாக வந்த ஊழியம்பாடிகள் சிலர் சிங்கராயனைப் பார்த்துவிட்டு அவனைத் தூக்கி கொண்டுபோய் பங்களாவில் சேர்த்தார்கள்.

போதையில் கிடந்தவனை செவ்வந்தி நாச்சிக்குகூட பிடிக்கவில்லை. விட்டு விலகிவிட்டாள். படுக்கையில் புரண்டுகொண்டே இருந்தவன் பித்தம் கலந்த போதையால் அப்படியே வாந்தி எடுத்தான். துர்நாற்றம் அந்த அறையையே ஆக்ரமித்து அமுக்கியது. ஜமீன்தாரும் எட்டிப்பார்த்தாரே ஒழிய கிட்டே சென்று அவன் போதையை தெளிவிக்கவோ, அந்த இடத்தைச் சுத்தப் படுத்தவோ நினைக்கவில்லை. பதிலுக்கு செவ்வந்தி நாச்சியை சந்தித்து கணவனைப் போய் ஒழுங்குபடுத்து என்றார். அவள் அசைய மறுத்துவிட்டாள். இந்த நிலையில் தான் மனது பொறுக்கமாமல் செங்கம்மாள் நரசிம்மராயனின் அறைக்குள் நுழைந்து அவனுக்குத் தண்ணீர் தெளிப்பித்து வாந்தியையும் சுத்தப்படுத்தினாள். தாயானவள் குழந்தையின் மலத்தைச் சுத்தப்படுத்துகின்ற மாதிரி பயங்கர சகிப்புணர்வோடு அவள் செயல்படும்போது ஒரு விபரீதமும் அரங்கேற ஆரம்பித்தது.



போதை ஓரளவு மட்டுப்பட்டிருந்தும் முழுதும் விலகியிராத நிலையில் தள்ளாடலில் இருந்த நரசிம்மராயன் அவள் குனிந்து வளைந்து காரியம் செய்யும்போது காம வசப்பட்டு அப்படியே அவள் மேல் விழுந்தான்.

"ஆண்டே, விடுங்க ஆண்டே... வேண்டாம் ஆண்டே." -அவள் கத்திப் பார்த்தாள். கூப்பாடும் போட்டுப் பார்த்தாள். பலனில்லை. விதி அந்த நிமிடத்தில் நரசிம்மராயன் ரூபத்தில் செங்கம்மாளிடம் விளையாடி விட்டது. அதன்பின் அவள் அழுதபடி போய் ஜமீன்தார் எதிரில் நின்ற போது ஜமீன்தார் ஆடிப்போய் விட்டார்.

ஊழியம்பாடிகளும் ஜமீன் பங்களா முகப்பில் ஒரு கூட்டமாய் திரண்டு விட்டனர். கத்திக் கூப்பாடு போட்டு நியாயமும் கேட்டனர். போதை தெளிந்து எழுந்து வந்திருந்த நரசிம்மராயனும் ஓர் ஓரமாக குற்றவாளி போல நின்று கொண்டிருந்தான்.

ஜமீன்தார் அவனையும் கூட்டத்தையும் மாறி மாறிப் பார்த்தார். பின் ஒரு முடிவுக்கு வந்தவராக, "செங்கம்மாளுக்கு இந்த நிலையில் ஒரு நியாயத்தை நான் தரணும்னா அதுக்கு ஒரே வழி நான் அவளை மருமகள் ஆக்கிக்கறதுதான்... இந்தநிமிஷம் செங்கம்மா இந்த ஆயிரம் வேலித் தோட்டத்தை சேர்ந்த ஜமீனோட மருமகள். வாரிசு இல்லாத குறையைப் போக்க நானே என் மகனுக்கு இன்னொரு கல்யாணம் பண்ற எண்ணத்துல இருந்தேன். இப்ப எனக்கு அந்த வேலையும் மிச்சம்" என்று அவர் சொன்னபோது செங்கம்மாளும் வேறு வழி இல்லாமல் அதற்கு உடன்பட்டாள். ஆனால் பாவம் புலியன். காதல் காரணமாய் துடித்துப் போய்விட்டான்.

இருந்தும் நாளாவட்டத்தில் உணர்ச்சிகளைக் கட்டுப் படுத்திக் கொண்டு செயல்பட ஆரம்பித்தான். ஜமீன்தார் அவனது வீரச்செயலையும் சாதாரணமாக விட்டுவிட

வில்லை. ஒரு நடு கல்லில் அவனது பிரதாபத்தை எழுதி அவன் புலியைக் கொன்ற இடத்திலேயே அந்த கல்லையும் பதித்துவிட்டார். பக்கத்திலேயே ஆயிரம் வேலிக்காட்டின் பிரதான வாசலும் வரவேற்பு வளைவும்!

காலமும் உருண்டு ஓடத்தொடங்கியது. ஜமீன் பங்களா வில் ஒரு வேலைக்காரியாக இருந்தவள் சின்ன ஜமீன் தாரிணியாக வலம்வர ஆரம்பித்தாள். செவ்வந்தி நாச்சி அதைப் பார்த்து புழுங்கித் தவித்தாள். அவள் சகோதரன் சிங்கராயன் அவளுக்கு மேல் புழுங்கினான்.

"செவ்வந்தி... கோட்டை விட்டுட்டியே புள்ள. இப் படியா மோசம் போவே?" என்று கேட்டு செங்கம்மாளை நெருப்புப் பார்வை பார்த்தான்.

அவர்களது கோபமும் தாபமும் அதிகரிக்கும் விதத்தில் செங்கம்மாளும் மசக்கை வாந்தி எடுத்தாள். அவள் வயிற்றில் ஜமீன் வாரிசு வளர ஆரம்பித்துவிட்டது. நரசிம்மராயன் குதூகலித்துப் போனான். செங்கம்மாளைத் தலையில் வைத்துத் தாங்கினான். சதாசர்வ காலமும் அவள் காலடியிலேயே கிடந்து செவ்வந்தி நாச்சியை கதறவிட்டான். ஒருநாள் செவ்வந்தி வந்து அவனிடம் அழுதாள்.

"இது உங்களுக்கே நல்லா இருக்கா... ஒரு கூலிக்காரியே கதின்னு கிடக்கீங்களே. நான் என்ன பாவம் பண்ணேன்?"

"நீ என்ன பாவம் பண்ணியோ... யாருக்குத் தெரியும்? அதான் உன் வயித்துல ஒரு புழு பூச்சி தங்கலை. மலட்டு மேனியா போச்சு உன் உடம்பு. ஒரு மலடிக்கு ஜமீன் தாரிணிங்கற அந்தஸ்து இருக்கறதே பெரிசு. எதுவும் பேசாம போய் சோலியைப் பாரு..." என்று அவளையும் விரட்டினான்.



இதை எல்லாம் பார்த்துக்கொண்டிருந்த சிங்கராயன் ஒரு முடிவுக்கு வந்துவிட்டான். செவ்வந்தி நாச்சியைத் தனியே அழைத்து அவளிடம் "இனியும் பொறுமையாக இருந்தால் நீ இந்த ஜமீனில் வேலைக்காரியாகிவிடுவாய். அவளே ராணியாகி ஜமீனும் கைவிட்டுப் போய்விடும்" என்றான். அவளை தீர்த்துக் கட்டப் போவதாகக் கூறினான். செவ்வந்தி நாச்சியும் "முதலில் அதைச் செய். அப்பொழுதுதான் நீ என் அண்ணன்" என்றாள்.

"அவளை மட்டுமில்லை உன் புருஷன், உன் மாமனார் என்று ஒருவரைக்கூட விடப்போவதில்லை. அவள் போய் இவர்கள் மட்டும் இருந்தாலும் ஆபத்துதான். இவர்களைக் கூண்டோடு கைலாசம் அனுப்பினால்தான் இந்த ஜமீன் உன் ஜமீனாகும். எனக்கு இங்கு மரியாதை கிடைக்கும்" என்றவன் அதற்காகத் திட்டம் போட ஆரம்பித்தான்.

–சோணைமுத்து தாத்தா தான் சொல்லி வந்த கதையில் முக்கியமான இடத்தில் இடைவெளி விட்டார். எதிரில் இமைக்காத விழிகளோடு ராதா, கள்ளவேலன், பட்டாபி! மூவரில் பட்டாபிக்கு தாத்தா விட்ட இடைவெளி எரிச்சலைத் தந்தது.

"என்ன தாத்தா... அதுக்கப்புறம் என்ன நடந்தது? அந்த சிங்கராயன் தன் திட்டப்படி எல்லாரையும் கொன்னுட் டான். அதுக்கப்புறம். என்ன நடந்தது?" பட்டாபியிடம் ஆவல் கொப்பளித்தது.

தாத்தாவும் ஆமோதிப்பதாகத் தலையை அசைத்தார்.

"என்ன தாத்தா... சிங்கராயன் பிளான் சக்ஸஸ் ஆயிடிச்சா?" ராதாவும் கேட்டாள்.

"ஆனதும்மா... ஆனா அதுல ஜமீன்தார் மட்டும் எப்படியோ பிழைச்சுட்டார்..."

"அப்படியா... விபரமா சொல்லுங்க தாத்தா..."

"சொல்றேம்மா... அந்த சிங்கராயன் ரொம்பவும் கெட்டிக்காரன். அந்தக் கொலைகளை அவன் நேரடியா செய்யாமல் வருஷ நாட்டு வழிப்பறிக்கள்ளன் வரதமலை கிட்ட அந்தப் பொறுப்பை ஒப்படைச்சான். வரதமலையும் சின்னவரும், செங்கம்மாளும் நம்ம ஆயிரம் வேலிக்காட்டு கோவிலுக்கு சாமித கும்பிட வந்த இடத்துலையே சாமி பலிபீடம் முன்னால வெச்சு அவங்களைக் கொன்னுட்டான். சாமி சன்னதிக்கு எதிரில் இந்த ஜமீனோட அதிபதியும் அவனுக்கு மனைவியாயிட்ட ஊழியம்பாடியான செங்கம்மாளோட சடலமும் தலைவேற உடம்பு வேற துண்டாயி கீழ விழுந்தது. அப்ப நானும் அங்கே இருந்தேன். எனக்கு வயது அப்ப பதினஞ்சுதான்..." தாத்தா மீண்டும் நடந்து முடிந்த ஃப்ளாஷ்பேக்கில் நுழைந்தார்.

**த**லையும் உடம்பும் தனித்தனியே கிடக்க பட்டர் தட்டைப்போட்டுவிட்டு எடுத்தார் ஓட்டம், கூட்டமும் சிதறி ஓடியது. தகவலறிந்து ஜமீன்தார் கோவிலுக்கு ஓடி வந்து பார்த்தபோது சன்னதியில் குட்டி நந்தஸ்வாமியின் விக்கிரகத்தையும் காணவில்லை.

ஜமீன்தாருக்கு நெஞ்சையடைத்தது.

கூடவே வந்திருந்த சிங்கராயன் தனக்கு ஒன்றுமே தெரியாது என்கிறார்போல, "ஐயோ மாமா... நடக்கக் கூடாதது எல்லாம் நடந்துடிச்சே. அந்தக் கள்ளன் இப்படி அநியாயமா சின்ன ஜமீனையும் செங்கம்மாளையும் கொன்னுபுட்டு சாமிசிலையையும் வேற தூக்கிட்டு ஓடிட்டானே" என்று ஒப்பாரி வைத்து அழுதான்.

ஜமீன்தாருக்கு என்ன பேசுவது என்றே தெரியவில்லை. இந்த மாதிரி சமயங்களில் எல்லா பெரியவர்களுக்கும் வரும் மயக்கம்தான் அவருக்கும் வந்தது.



## 30

**ந**ந்தன் குட்டி ஸ்வாமியின் விக்கிரகமும் களவுபோய், பலிபீடத்தின் ஜமீன் வாரிசும் அடுத்த ஜமீனுமான நரசிம்மராயனும் அவனால் பெண்டாளப்பட்டு மனைவியான செங்கம்மாளும் தலை வேறு உடல் வேறாகக் கிடக்க அந்தக் கோரக்காட்சி ஜமீன்தார் உடையப்பராயரை மயக்கத்தில் பிடித்துத் தள்ளியது.

செய்தியறிந்து ஒன்றுமேயறியாதவள் போல ஓடிவந்த செவ்வந்தி நாச்சியும் மயங்கி விழுவது போல நடித்து மயங்கி விழுந்தாள். ஊழியம்பாடிகள் விக்கித்துப்போய் விட்டனர். வயிற்றிலும் வாயிலும் அடித்துக்கொண்டு அழுதார்கள். தங்கள் வழியில் ஒருத்தி ஜமீன்தாரிணி ஆகி விட்டாள் என்ற சந்தோஷத்தில் இருந்தவர்களுக்கு அவள் கொலையானது இடிபோல் அமைந்துவிட்டது.

ஏற்கெனவே செங்கம்மாளை இழந்துவிட்ட புலியன் அடுத்தடுத்து நடந்த இந்த சம்பவங்களால் ஸ்தம்பித்துப் போய் ஓர் ஓரமாய் போய் அமர்ந்து விட்டான்.

எவ்வளவு நேரம்தான் அப்படியே இருக்கமுடியும்?

அதன்பின் கண்விழித்த ஜமீன்தார் ஒருவாறு ஆசுவாசப் படுத்திக்கொண்டு ஊழியம்பாடிகளை எல்லாம் ஒருமுகப் படுத்தி அந்த இடத்திலேயே இதற்கெல்லாம் காரணமான கள்ளன் வரதமலையை உயிருடனோ இல்லை பிணமாகவோ பிடித்துத் தருபவர்களுக்கு அந்த ஆயிரம் வேலித்தோட்டத்தையும் எழுதித் தருவதாகச் சொன்னார். அத்தனை உணர்ச்சிக் கொந்தளிப்பு அவரிடம். அந்தக் கூட்டத்தில் சிங்கராயனும் இருந்தான்.

"கள்ளன் வரதமலையைப் பிடிப்பதுதான் தன்னுடைய முதல்வேலை. இதற்காகத் ஜீவனே போனாலும் சரி" என்று ஒரு போலிச் சபதம் போட்டான்.

பலருக்கும் கள்ளன் வரதமலை எப்படி இருப்பான் என்றே தெரியாது. சிங்கராயன் போட்ட சபதத்தை எப்படி நிறைவேற்றப் போகிறான் என்பது தெரியாமல் அவனைப் பார்த்தார்கள்.

ஒரு வேங்கைப் புலியையே தன்னந்தனியாய் அடக்கிய புலியன் சும்மா இருப்பானா என்ன? அவனும் தொடைதட்டிக் கொண்டு நிமிர்ந்தான்.

இந்த அநியாயத்தைச் செய்த வரதமலையை உயிருடனேயே பிடித்து வருவேன் என்று அவன் கர்ஜித்தபோது சிங்கராயனுக்கு சற்று நடுக்கமாகிவிட்டது.

புலியன் ஒரு விஷயத்தில் இறங்கிவிட்டால் சாதிக்காமல் விடமாட்டான் என்பது சிங்கராயனுக்கும் எல்லோருக்கும் தெரியும்.

ஊழியம்பாடிகள் அவ்வளவு பேரும் புலியன் நிச்சயமாக வரதமலையை கட்டி இழுத்து வருவான் என்று உளமாற நம்பினார்கள்.

அதேசமயம் விக்கிரகம் களவு போன கோயிலை பட்டரும் இழுத்து மூடினார். அப்படி மூடப்போகும்போது அவருக்கேகூட தெரியாது, இனி காலம் காலமாய் அந்தக் கதவு திறக்கப்படவே போவதில்லை என்பது...! அதற்கு ஏற்பத்தான் அடுத்தடுத்து சம்பவங்கள் நிகழ ஆரம்பித்தன.

ஜமீன்தான் உடையப்ப ராயரும் நடந்த சம்பவங்களால் நொறுங்கிப் போய் படுத்த படுக்கையாகி விட்டார்.

செவ்வந்தி நாச்சி, சிங்கராயனிடம் "இவரையும் சேர்த்துக் கொலை செய்வதாகக் கூறிவிட்டு இவரை விட்டு விட்டாயே. இப்பொழுது வரதமலையை புலியன் பிடித்து



விட்டால் ஆயிரம்வேலித் தோட்டமே அவனுக்குச் சொந்தமாகி விடுமே, என்ன செய்வது?" என்று கேட்டுப் புலம்பினாள்.

"சும்மா இரு... வரதமலை அசகாயசூரன். அவன்கிட்ட ஒரு பய நெருங்க முடியாது. மீறி நெருங்கினா அவன் காலி" என்று சிங்கராயன் பதிலுக்கு சிலிர்ப்பினான். அப்படியே...

"இந்தப் புலியனை உயிரோட விட்டு வெச்சாத்தானே இவன், அவன்கிட்ட போவான். இவன் கதையை நான் இங்கேயே முடிக்கிறேன்" என்றான்.

"முதல்ல அதைச் செய்... படுத்த படுக்கையா இருக்கற ஜமீன்தாரை நான் பரலோகத்துக்கு அனுப்பி வைக்கறேன். புலியனை நீ பார்த்துக்கோ. அப்பத்தான் ஆயிரம் வேலிக் காடு நம்ம கையை விட்டுப்போகாது..." என்று அவளும் ஒரு சதித் திட்டத்தை முன் போட்டு உடைத்தாள்.

இத்தனை அழகாய் சதித்திட்டம் போட்டவர்கள் அதை ஜமீனில் ஊழியம் பார்த்துக் கொண்டிருந்த சோணைமுத்து ஒட்டுக்கேட்டு விட்டதை மட்டும் உணரவில்லை.

சோணைமுத்துவுக்கோ உயிர்க்குலையே நடுங்கியது. நேராக ஜமீன்தாரை நோக்கித்தான் ஓடினான்.

ஜமீன்தார் நெஞ்சைக் கையில் பிடித்துக்கொண்டு இருந்த விதத்தைப் பார்க்கவும் சோணைமுத்துவுக்கு மனது மாறிப்போனது.

தன் காதில் விழுந்ததை இப்பொழுது இவர் காதில் போட்டால் செய்தியைக் கேட்ட வேகத்திலேயே ஜமீன்தார் பரலோகப் பிராப்தி அடைந்தாலும் அடைந்து விடலாம். எனவே முதலில் விஷயத்தை புலியன் காதில் போட்டு அவனை எச்சரிப்பதுதான் புத்திசாலித்தனம் என்று தோன்றியது.

அதேவேளையில் ஜமீன்தாரை அப்படியே விட்டு விட்டுப் போனால் அந்த சதிகாரி செவ்வந்தி நாச்சி ஓசைப் படாமல் விஷத்தைக் கொடுத்து கொன்றாலும் கொன்று விடுவாள் என்றும் மனது பதறியது.

இந்தச் சூழ்நிலையை எப்படி சமாளித்து செயல்படுவது என்று புத்தியைக் கசக்கிக்கொண்டபோது பர்மாவிலிருந்து ஜமீன்தாரின் பெரியப்பாவான கதிர்வேல் ராயர் என்பவர் யதார்த்தமாக ஜமீனுக்குள் பரவேசித்திருந்தார். மிகுந்த தள்ளாமையோடு தடுமாறிக்கொண்டு வந்தவரிடம் ஜமீன்தாரும் நடந்தவற்றை எல்லாம் சொல்லிப் புலம்ப ஆரம்பித்துவிட்டார்.

சோணைமுத்துவுக்கு அந்த நொடி ஜமீன்தாருக்கு ஒரு பாதுகாப்பு கிடைத்தாகத்தான் தோன்றியது. பெரியப்பா கதிர்வேல் ராயர் பேசிக்கொண்டிருக்கும்போது புலியன் எங்கே என்று தேடிக்கொண்டு ஓடினான்.

நல்லவேளை புலியனும் ஒரு வேட்டைக்குப் புறப்படு கின்றவன் எப்படி ஆயத்தங்களுடன் புறப்பட்டுக் கொண் டிருப்பானோ அப்படி தயாராகிக் கொண்டிருந்தான்.

சோணைமுத்து வந்து விஷயத்தைச் சொல்லவும் பேச்சு மூச்சற்று ஸ்தம்பித்தே போனான்.

"என்ன புலியா ஸ்தம்பிச்சுட்டே பாத்து! எல்லாம் இந்த சிங்கராயன் வேலை. வரதமலையைத் தூண்டிவிட்டு இந்தக் கொடுமையை செய்தவன் இப்ப உனக்கும், ஜமீன்தாருக்கும் குறி வெச்சுட்டான். இதை எப்படிச் சமாளிக்கப்போறே?" -என்று கேட்கவும் புலியனும் நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு எழுந்தான். சோணைமுத்துவின் தோளைப் பற்றியவன் எதுவும் பேசவில்லை. அவனது மௌனமே நடப்பதைப் பார் என்றது.

நடுநிசி!



குடுமியான் மலை அடிவாரக்காட்டில் ஏகத்துக்கும் சில்வண்டுச் சப்தம். பொந்தும் புதருமாய் இருந்த அந்தக் காட்டுக்குள் நுழைந்து கொண்டிருந்தான் சிங்கராயன்.

ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வந்தவன் ஒருவிதமாய் நரி போல ஊளைச் சத்தம் போட்டான். பதிலுக்கு அதே போல் சப்தம் எதிரொலித்தது. தொடர்ந்து சில நிமிடங் களில் நான்குபேர் தீப்பந்தங்களுடன் சிங்கராயன் நின்று கொண்டிருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தனர்.

வந்தவர்கள் சிங்கராயன் கண்ணைக் கட்டி தங்களோடு அழைத்துச் சென்றனர். அதே வேளையில் அவர்களை ஓர் உருவமும் மெல்ல பின் தொடர்ந்தது! நெடுந்தூர நடைக்குப் பிறகு கண்கட்டை அவிழ்த்து விடவும் எதிரில் வரதமலை தெரிந்தான்.

மீசையை முறுக்கிக்கொண்டு அவன் பார்த்த விதத்தில் கொடூரக் கொப்பளிப்பு. சுற்றிலும் அவன் சகாக்கள். எல்லோருமே சிங்கராயனை வெறித்தார்கள். வரதமலை பேச ஆரம்பித்தான்.

"எங்கலே... எனக்குத் தர்றதா சொன்ன நூறு தோலாத் தங்கம்?"

"அது சம்மந்தமா பேசத்தான் வரதமலை வந்தேன். போட்ட திட்டத்துல பாதிதான் ஈடேறியிருக்கு. ஜமீன் தாரும் செத்திருந்தா இந்த நொடி ஜமீன் சொத்துல இருந்து உன் கூலியான நூறு தோலாத் தங்கத்தை கொண்டாந் துருப்பேன். ஆனா நீ அவரை விட்டுப்பிட்டு சின்னவனை யும் அந்த ஒண்டிவந்தவளையும் தான் கொன்னுருக்கே. அதான் இப்ப சிக்கலே..."

"தெரியும்... என்னை உசுரோடையோ இல்ல பொண மாவோ பிடிச்சுக்கிட்டுப்போய் உங்க ஜமீன்தார் எதிர்க்க நிறுத்தினா ஆயிரம் வேலிக்காட்டையே எழுதி வைப் பாராமே அவரு...?"

"ஆமாம்... நீ அவரைக் கொல்லாததால வந்த வினை. புலியன்னு ஒருத்தனும் உன்னைப் புடிச்சுக் காட்றேன்னு புறப்பட்டுட்டான்."

"அதுக்கு நான் என்ன பண்ண... கோவிலுக்கு மூணு பேரும் வருவாங்க. போட்டுத் தள்ளிருன்னு நீ சொன்னே. ஆனா ஜமீன்தார் வராததுக்கு நான் என்ன பண்ணு வேன்?"

"அதால பரவாயில்ல. புலியன் விஷயத்துல எச்சரிக் கையா இருன்னு உன்னை எச்சரிக்கத்தான் நான் வந்துருக் கேன். அவனை நான் அங்கேயே தீத்துக்கட்ட திட்ட மெல்லாம் போட்ருக்கேன். அதேசமயம் ஜமீன்தாரை என் தங்கச்சி செவ்வந்தி நாச்சி தீத்துக் கட்டிடுவா. அதன் பொறவு ஜமீனுக்கு அவதான் வாரிசு. அப்படி அவ வாரிசான பிறகுதான் உன் கூலியை நான் தரமுடியும்."

"வாக்கு மாறமாட்டியே..."

"மாறினா விட்றவனா நீ?"

"பயமிருந்தா சரி... புறப்படு."

வரதமலை நறுக்காகப் பேசி விட்டு சிங்கராயனை திரும்பச் சொல்ல சிங்கராயன் பார்வை அவர்களின் இருப்பிடத்தை ஒரு பார்வை பார்த்தது. வரதமலை இருந்த இடத்தில் ஒரு பெரிய பெட்டி. அதன்மேல் சாவிக்கொத்து. சாவிகளும் வித்தியாசமாக இருந்தன. பெட்டியிலும் பக்கத்துக்கொரு சாவித்துவாரம் இருந்தது.

"என்ன வரதமலை... இதுல தான் உன் கொள்ளையடிச்ச சாமான்களைப் போட்டு வெச்சிருக்கியா?"

"தேவையில்லாத கேள்வி... புறப்படுன்னு சொன் னேன்ல?"



"இல்ல... ஒரு பெட்டிக்கு இத்தனை சாவித் துவார மான்னு தான் கேட்டேன். விசேஷமான பெட்டின்னு சொல்லு."

"அப்படித்தான்... என்னைத் தவிர யாராலையும் இத திறந்து மூடமுடியாது. இந்த சாவிங்கள்ல எதை முதல்ல போட்டுத் திறக்கணும், அடுத்து எதைத் திறக்கணும்னு எனக்குத்தான் தெரியும். அது தெரியலேன்னா நாள்பூரா முயற்சி பண்ணாமலும் பெட்டி திறக்காது."

"பலே கள்ளன்யா நீ... ஊரான் பொட்டியை நீ சுலபமா திறப்பே. ஆனா உன் பெட்டியை மட்டும் யாராலேயும் திறக்க முடியாதோ?"

"கள்ளனுக்கு கள்ளன் இருந்தா களவாண்டத காப்பாத்த வேற வழி?"

"அப்ப இதுலதான் உன் களவுத்தங்கம் பூரா இருக்குதுன்னு சொல்லு..."

"இதுக்குமேல நீ பேசாம பொறப்பட்றதுதான் உனக்கு நல்லது."

"சரி சாமி... நான் புறப்பட்றேன். புலியன் விஷயத்துல கவனமா நடந்துக்கோ..."

"அவனத்தான் நீயே போட்டுத் தள்ளிட்றேன்னு சொல்லியிருக்கியே -அப்புறம் எனக்கென்ன பயம்?"

"ஒருவேளை என்னைத் தாண்டி உன்கிட்ட அவன் வந்துட்டா... அதுக்காக சொன்னேன்."

"அப்படி வந்தா அவனை என்ன பண்ணணும்னு எனக்குத் தெரியும். நீ கவலைப்படாதே..."

-வரதமலை கர்வமாகச் சொல்லும்போதே அங்கே திபுதிபுவென்று ஒருவித புகை ஆக்ரமிக்கத் தொடங்கியது.

ஆளுக்கு ஆள் இறுமியபடியே சுருண்டு மரவட்டை போல கீழே விழுந்தனர். சிங்கராயனும் வரதமலையும்கூட மயங்கிக் கீழே விழுந்தார்கள்!

சில நிமிடங்களில் புகை கரைந்து அங்கே நிசப்தம் நிலவிய நிலையில் வாயையும் மூக்கையும் இறுக்கக் கட்டிய நிலையில் கையில் ஒரு தீப்பந்தத்துடன் அங்கே தோன்றியது ஓர் உருவம். சிங்கராயனை சமீபித்த அந்த உருவம் துளியும் தாமதிக்காமல் கட்டாரியை எடுத்து மார்பைப் பிளந்து விட்டு வரதமலையையும் குண்டுக்கட்டாகக் கட்டித் தூக்கிக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டது. சற்றுதூரம் சென்ற உருவம் வரதமலையை புரவி மேல் கிடத்திவிட்டு திரும்பி வந்து ஞாபகமாக அந்தப் பெட்டியையும் சாவியையும் எடுத்துக்கொண்டது.

## 31

குடுமியான்மலை அடிவாரக்காட்டில் அரைமணி கால அவகாசத்தில் என்னவெல்லாமோ நடந்து முடிந்து விட்டது. கள்ளர் குகையில் மயங்கி விழுந்த கள்ளர்களிடம் மயக்கம் தெளிந்தபோது மீண்டும் மயக்கம் வருவது போல அவர்கள் எதிரில் சிங்கராயன் பிணமாகக் கிடந்தான்.

கள்ளன் வரதமலையையோ அந்தப் பெட்டியையோ காணவில்லை. கள்ளர்கள் ஊகித்துவிட்டனர்.

சிங்கரயன் எச்சரித்தது அவன் எச்சரிக்கும்போதே நடந்துவிட்டது.

அப்படியானால் தங்கள் மயக்கத்திற்கு காரணமான புகைக்கும், சிங்கராயன் சாவுக்கும், வரதமலையின் மறைவுக்கும் புலியன்தான் காரணமா?

புலியன் அத்தனை பெரிய வீரனா?



முகமூடி தரித்த நிலையில் குதிரையில் வரதமலையின் பிணத்தைப் போட்டுக்கொண்டு வந்த நபரைப் பார்த்து ஜமீன்தார் அப்படியே ஆடிப்போய்விட்டார். அருகிலேயே ஜமீன்தார் உடையப்ப ராயரின் பெரியப்பா கதிர்வேல் ராயர் வேறு...

"ஏய் யாரு நீ.. குதிரைல கிடக்கற இந்தச் சவம் யாரோட சவம்?"

கதிர்வேல் ராயர் கர்ஜித்தபடி கேட்டார். பதிலும் வரத் தொடங்கியது.

"இவன்தான் கள்ளன் வரதமலை."

"வரதமலையா?"

"ஆமாம்.. வரதமலையேதான். சந்தேகமா இருந்தா அதை எப்படி வேணா தீர்த்துக்கங்க."

"அப்ப நீ யாருவே?"

கதிர்வேல் ராயரின் கேள்விக்கு அப்பொழுது தான் முகமூடியை விலக்கினான் அந்தப் புதிர் மனிதன். எல்லோரும் வாயடைத்துப் போக கதிர்வேல் ராயர் உச்சபட்சமாக குரல் கொடுத்தார்.

"சமாதானபாண்டி.... நீ யாலே?"

"ஆமாம் அப்பு... நானேதான்!"

"என்னால நம்பவே முடியலையே. நீ... நீ எப்படிலே இதைச் சாதிச்சே?"

"ரங்கூன்ல இருந்து நீங்க புறப்பட்ட மறுநாளே நானும் புறப்பட்டுட்டேன். இங்க ஆயிரம் வேலிக்காட்டு எல்லைல கால் வெச்சப்பவே இங்க நடந்த கூத்தெல்லாம் தெரிய வந்துச்சு. அப்படியே புத்துக் கோவிலாண்ட போய் சபதம் போட்டேன். அண்ணனை ஒரு அகதி மனுஷனா பாக்கறத

விட இப்படி வீரமா எதையாவது சாதிச்சிட்டுப் பார்த்தா நல்லா இருக்கும்னு தோணிச்சு. அதுக்குத் தோதா குடுமியான் மலைக்காட்டுல கள்ளன் வரதமலை ஒளிஞ்சிருக்கறதா தெரிய வந்துச்சு. போனேன். கச்சிதமா காரியத்தை முடிச்சேன். இப்ப அவன் பிணம் இங்க..."

சமாதானபாண்டி வரதமலை பிணத்தைக் கைகாட்டிச் சொன்னபோது சுற்றிலும் ஊழியம்பாடிகளின் கூட்டம் பிலுபிலுவென்று கூடிவிட்டது.

புலியன் தான் சாதிக்கப்போகிறான் என்று பார்த்தால் அது இப்படி மாறிப்போனதை நினைத்த ஏமாற்றம் அவர்களுக்குள்.

அது சரி புலியன் எங்கே?

எல்லோரும் அந்தக் கேள்வியில் விழுந்தபோது ஜமீன்தார் உடையப்பராயர் வந்து சமாதான பாண்டியைக் கட்டிக்கொண்டார்.

"தம்பி... நீ இவ்வளவு பெரிய வீரனா? நினைக்கவே ரொம்ப பெருமையாக இருக்குதுப்பா" என்றார்.

"அது இருக்கட்டும் அண்ணே... இனி நீங்க எதுக்கும் கவலைப்படக்கூடாது. இனி இந்த வேலிக்காட்டு நாட்டாமை என்னைச் சேர்ந்தது..."

சமாதானபாண்டி நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு சொன்னதை செவ்வந்தி நாச்சியும் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் விழிகளில் நம்ப முடியாத அளவுக்கு ஓர் ஆச்சரியம். நடுவில் பட்டர் குரல் இடையிட்டது.

"பெரியவாள்லாம் என்னை மன்னிக்கணும். கள்ளன் வரதமலையைப் பிடிச்சுட்டதா கேள்விப்பட்டுத்தான் ஓடி வரேன். அவனைப் பிடிக்கறதோ இல்ல கொன்னு போடறோ முக்கியமில்லை. அவன் களவாண்டு போன



குட்டி நந்தஸ்வாமி விக்கிரகம் என்ன ஆச்சு? அதைப் பார்த்தேளா?"

-பட்டர் கேட்கவும் ஜமீன்தாரும் சமாதான பாண்டியைப் பார்த்து அதே கேள்வியைக் கேட்டார்.

"சமாதானம்... பட்டர் கேட்கறது சரிதான். தினமும் ஆறுகால பூசை கண்ட சாமி விக்கிகரகம் அது. அது இல்லாம கோவிலையே பூட்டி வெச்சிருக்கோம். அதை நீ பார்க்கலையா?"

"பார்க்கலையே அண்ணே. அந்தக் குகைல இவனும் இவன் கூட்டாளிகளும் தான் இருந்தாங்க. யாரோ ஒருத்தன் அங்க கள்ளன் வரதமலையால கொலை செய்யப் பட்டுக் கிடந்தான். நான் விஷப்புகை போட்டு அவ்வளவு பேரையும் மயக்கியடிச்சுத்தான் புடிச்சேன். அப்ப அங்க நான் எந்த விக்கிரத்தையும் பார்க்கலையே..."

சமாதானபாண்டி உகந்த ஏற்ற இறக்கமுடன் சொல்லவும் பட்டர் முகத்தில் பலத்த வாட்டம். இருந்தும், ஜமீன்தார் அதைப் போக்குகின்ற விதமாக, "கவலை வேண்டாம் பட்டரே... ஒரு நல்ல ஐம்பொன் திருமேனியையே புதுசா செஞ்சு வெச்சிடுவோம். என்ன சொல்றீர்," என்று கேட்டார்.

"ஆமா... அப்படித்தான் செஞ்சாகணும். ஆனா அதுக்கு சுவாமிகிட்ட உத்தரவு கேட்கணும்."

"என்ன சொல்றீங்க பட்டரே...?"

"கோவில் விஷயத்துல நம்ம இஷ்டத்துக்கெல்லாம் எதையும் பண்ணக்கூடாது ஜமீன்தார்வாள். அப்புறம் தெய்வக்குத்தம் ஏற்பட்டுடும். அதுலயும் நம்ம கோவில் குட்டிநந்தன் விக்கிரகம் காளிங்கனை வதம் பண்ணி அடக்கிய ருத்ர சொரூபம் வேற. ஆகையால பெருமாள் உத்தரவு கொடுத்தா கோவிலைத் திறந்து வேற விக்கிரக

பிரதிஷ்டை பண்ணலாம். இல்லேன்னா என்ன உத்தரவு வருதோ அந்த உத்தரவுபடிதான் நடக்கனும்." பட்டர் தனக்குத் தெரிந்த ஆகம நியாயத்தைக் கூறினார்.

ஆனால் பட்டரின் அந்த ஆகம நியாயத்தை சமாதான பாண்டி ஏற்கவில்லை.

"பட்டரே, உத்தரவு அது இதுன்னு ஐதீகம் பேசினா எப்படி? சாமியா நேர்ல வந்து இப்படிச்செய், அப்படிச் செய்யுன்னு உத்தரவு போடப்போகுது. எந்தக் காலத்து லய்யா சாமி நேர்ல வந்துருக்கு?"

வெடுக்கென்று கேட்ட சமாதானபாண்டியை பதிலுக்கு பட்டர் பார்த்த பார்வையில் பதற்றமும் பரிதவிப்பும் தான் இருந்தது.

"சமாதானம்... பட்டரைப் பேசவிடு. அவங்க பல தலைமுறையா நம்ம ஆயிரம் வேலிக்காட்டுக்குள்ளேயே நம்மகூட இருந்து சாமிக்கு கைங்கர்யம் பண்றவங்க. சாமி யும் துடியான சாமி. கோவில் விஷயத்துல எல்லாம் நாம நாட்டாமை பண்ணக்கூடாது" என்று நல்லவேளையாக ஜமீன்தாரே ஒருமாதிரிப் பேசி பட்டருக்கு உதவி செய்தார்.

பட்டருக்கும் அதன்பிறகுதான் தைரியமே வந்தது.

"சரி. எப்படி உத்தரவு கேட்பீங்க. அதச் சொலவலுங்க" என்றான் சமாதானபாண்டி.

"குருவாயூர்ல ஒரு நம்பூதிரி இருக்கார். தேவப் பிரசன்னம் பாக்கறதுல அவர் கைதேர்ந்தவர். அவரைக் கூட்டிண்டு வருவோம். அவர் நேமநிஷ்டையோட பிர சன்னம் பார்ப்பார். பிரசன்னத்துல உத்தரவு வரும். என்ன உத்தரவு வந்தாலும் சரி. அப்படியே செய்துடுவோம்."

"ரொம்ப சந்தோஷம். முதல்ல அதைச் செய்யுங்க. நானும் ஒரு நல்ல முடிவெடுத்து வெச்சிருக்கேன்.



அவர்கிட்ட அதைச் சொல்றேன். அதையும் அவர் சாமி கிட்ட கேட்கட்டும்." -ஜமீன்தாரும் பட்டர் முடிவை அங்கேயே அப்போதே ஆமோதித்துக் கூடவே தன் முடிவு என்று ஒரு ரகசியமான விஷயத்தையும் கூறியது, எல்லோரையுமே சற்று ஆச்சரியப்படுத்திற்று. பட்டர் அப்பொழுதே அங்கிருந்து குருவாயூர் கிளம்பிப் போனார்.

**ஒ**ருவாரம் ஓடிவிட்டது.

குருவாயூர் போன பட்டர் பற்றி தகவலே இல்லை. இடையில் சிங்கராயன் உடம்பை யாரோ கொண்டு வந்து வேலிக்காட்டு எல்லையில் போட்டுவிட்டு ஓர் எச்சரிக் கைக் கடிதத்தையும் வைத்துவிட்டுப் போனார்கள்.

கடிதத்தில் 'வரதமலையை வஞ்சகமாகக் கொன்ற புலியனைப் பழிக்குப் பழி வாங்காமல் விடமாட்டோம். இப்படிக்கு கள்ளன் வரதமலையின் மகன் கோவிந்தமலை' என்று இருந்தது!

அதைப் பார்த்த ஜமீன்தார் குழம்பிப் போனார். சமாதான பாண்டியைக் கூப்பிட்டு கடிதத்தைக் காட்டி நடந்ததைக் கேட்டார். "அண்ணே... நான் முகமூடியோட போய் அவங்கள ஏமாத்தி வரதமலையைக் கொண்டு வந்தேன். வழியில வரதமலை மயக்கம் தெளிஞ்சு என்கூட மோதினான். அப்ப நான் அவனைக் கொல்லும் படியாயிடிச்சு. இதுதான் நடந்தது. என்னைத்தான் அவங்க புலியன்னு நினைச்சிருக்கனும். ஆமா, யார் அது புலியன்?"

சமாதானபாண்டி திருப்பிக் கேட்டான்.

"புலியன் இந்த ஊழியம்பாடிக் கூட்டத்தோட பெரிய வீரன். தனியாளா இந்தக் காட்டுக்குள்ள வந்த புலியையே அடக்கினவன்."

"இப்ப அவன் எங்கே?"

"தெரியலை. கள்ளன் கூட்டம் திரும்பச் சவால் விட்டுருக்கிறதை நினைச்சா எனக்கு பயமா இருக்குப்பா" என்று ஜமீன்தார் நடுங்கினார்.

செவ்வந்தி நாச்சி செத்துப்போன சிங்கராயனுக்காக கண்ணீர் விட்டு அழுதாள்

சமாதானபாண்டி இதை எல்லாம் பார்த்து துளிகூட அயரவில்லை.

"அண்ணே... தைரியமா இருங்க! நான் இருக்கேன். நான் இருக்கற வரை இங்க இனி யாரும் எதுவும் செய்ய முடியாது..." என்று தைரியம் தந்தான்.

ஆனால் அந்த தைரியத்தால் எந்தப் பயனுமில்லை. மறுநாள் ஜமீன்தார் உடையப்ப ராயர் கோவில் வாசலில் கொல்லப்பட்டு பிணமாகக் கிடந்தார். பங்களாவில் செவ்வந்தி நாச்சியும் கொலை செய்யப்பட்டுக் கிடந்தாள். கள்ளர் கூட்டம்தான் இருவரையும் கொன்றிருக்க வேண்டும் என்று தீர்மானமாகியது.

இதற்கிடையே ஜமீன்தாருடன் புலியனைச் சிலர் பார்த்தாக வேறு கூறினார்கள். புலியன் ஆக்ரோஷமாக அவரிடம் பேசியதாகவும் ஜமீன்தார் அவனைச் சமாதானப்படுத்த முயன்றதாகவும் கூட சிலர் பேசினார்கள். அவ்வளவு பேரையும் சமாதானபாண்டி அடக்கினான். அடியாள் கூட்டம் ஒன்றை வேலிக்காட்டைச் சுற்றிக் காவலுக்கும் போட்டான்.

குருவாயூர் போன பட்டர் நம்பூதிரியுடன் திரும்பி வந்தபோது ஜமீன்தார் இடத்தில் சமாதானபாண்டி! பட்டர் நடந்ததை எல்லாம் கேள்விபட்டு மௌனியானார். பிரசன்னமும் பார்க்கப்பட்டது.

பிரசன்னத்தின்போது சமாதானபாண்டியைத் தவிர யாரும் அருகே இருக்கக்கூடாது என்று கூறிவிட்டார் நம்பூதிரி.



தனித்து நின்ற சமாதானபாண்டியிடம் சாமிவந்தவர் போல பிரசன்ன ஆரூட சமாராசாரத்தைச் சொல்லத் தொடங்கினார்.

என்ன சொன்னார் ஏது சொன்னார் என்றெல்லாம் யாருக்கும் தெரியாது. ஆனால் சமாதானபாண்டி பிரசன்ன மேடையை விட்டு வெளியில் வந்து எல்லோரையும் பார்த்துச் சொன்னான்:

"பிரசன்னத்துல கோவில் கதவை எந்தக் காரணம் கொண்டும் திறக்கக்கூடாது. புது விக்கிரகப் பிரதிஷ்டையும் கூடாதாம். அதே சமயம் சுவாமியே இனி இந்த ஆயிர வேலிக்காட்டை காவல் காக்கப் போறதா சொல்லிடிச்சு. இனி இந்தக் காட்டுக்கு எதிரா யார் நடந்தாலும் அவங்கள சுவாமி பார்த்துக்கும். அவங்க உயிருக்கு எந்த உத்தரவாதமும் கிடையாது. பிரசன்னம் பார்த்த நம்பூதிரியே ஒரு சக்கரத்தை கதவுக்கு முன்னால பிரதிஷ்டை செய்யப் போறார். அப்படிச் செய்துட்டா யாராலயும் இங்க வாலாட்ட முடியாது. கோவில் கர்த்தாவான ஜமீன்தாரும் என் அண்ணனுமான உடையப்ப ராயரையும், செவ்வந்தி நாச்சியையும் கொன்னது புலியனாம். புலியன் ஊழியம்பாடியா இருந்தாலும் கள்ளன் வரதமலை கூட்டத்தைச் சேர்ந்தவனாம். இந்த ஆயிரம் வேலிக்காட்டை அடையறதுதான் அவன் நோக்கமாம். ஆகையால புலியன் செய்த பாவத்துக்காக ஊழியம்பாடிகள் இந்த காட்டுல சேவகம் பண்ணி கணக்கு தீர்க்கணுமாம். மறுத்தாலோ, விலகிப் போனாலோ அவங்களை குட்டி நந்தஸ்வாமியோட சக்கரம் விடாது. இதுதான் பிரசன்ன ஆரூடத்தில் வந்த தகவல்!"

-சாமாதானபாண்டி சொன்னதைக் கேட்டு ஊழியம்பாடிகள் விக்கித்துப் போனார்கள்.

"புலியன், கள்ளன் கூட்டத்தைச் சேர்ந்தவனா இருக்காது" என்று சிலர் கூக்குரல் எழுப்பினார்கள். அன்று

இரவே அவர்கள் பாம்பு கடித்தும், மாடு முட்டியும் செத்துப்போனார்கள்.

அதைப் பார்த்த பிறகு யாருக்கும் பேசவே தைரியம் இல்லாமல் போய்விட்டது.

அதன்பின் பலகாலம் வரை யாரும் வாயையே திறக்க வில்லை. புலியன் என்ன ஆனான் என்றும் தெரியாமலே போய்விட்டது!

**சோ**ணைமுத்து தாத்தா ஒருவிதமாய்த் தனக்கு தெரிந்ததை எல்லாம் கூறி முடித்திருந்தார்.

ராதாவும் பட்டாபியும் அவர் சொன்ன கதையில் ஆழ மாகப் புதைந்து போய் விட்டிருந்தனர். கள்ளவேலன் ஒரு கன்று ஈன்ற பசுவைப்போல ஓர் ஓரமாகச் சுருண்டு படுத்துவிட்டான்.

நெடுநேரம் அங்கே மௌனத்தின் ஆக்ரமிப்பு. பிறகு அதை ராதா தான் உடைத்தாள். அதுவும் ஒரு பிரதான கேள்வியோடு. “அப்ப உங்க கதைப்படி புலியன் இன்னும் உயிரோடதான் இருக்கானா தாத்தா?”

“ஆமாம்மா. நான் அப்படித்தான் நினைக்கேன்.”

“உயிரோ இருந்தா ஏன் தலைமறைவா இருக்கணும். எதனால தலைமறைவா இருக்கணும். சாமியோட பிரசன்ன ஆரூடத்துக்குப் பயந்துகிட்டா...”

“தெரியலம்மா... ஆனா ஒண்ணு, பிரசன்ன ஆரூடத் தையே நான் பொய்யின்னு தான் நினைக்கிறேன். ஆரூடத்தை அந்த நம்பூதிரி ஏன் ரகசியமா சமாதான பாண்டிகிட்ட சொல்லணும்? எல்லார் எதிர்லயும் சொல்லாம் இல்லையா?”

“அப்படின்னா சமாதானபாண்டியான என் தாத்தா ஏதோ சதி வேலை செய்துருக்கார். அப்படித்தானே?”

“நிச்சயமா?”



# 32

**சோ**ணைமுத்து தாத்தா, சமாதானபாண்டிதான் எல்லாவற்றுக்கும் காரணம் என்பதுபோல பேசி முடிக்க, ராதா அதுவரை டேப் செய்த ரிக்கார்டரை ஆஃப் செய்தாள்.

திரும்பி பட்டாபியையும், கள்ளவேலனையும் பார்த்தாள்.

அவர்கள் பிரமை பிடித்த மாதிரி அமர்ந்திருந்தனர்.

“என்ன... விக்ரமாதித்தன் கதை மாதிரி இருக்கா?”

“ஆமாம் மேடம். நம்பவே முடியல. வாழ்க்கைல இப்படி எல்லாம் கூட நடக்குமா?”

“நடந்திருக்கே...”

“சரி மேடம், இனி என்ன பண்ணலாம்?”

“யோசிக்கிறேன். நிறைய கூட்டிக் கழிக்க வேண்டி யிருக்கு. இப்ப நீங்க ஜாக்கிரதையா போய்ச் சேருங்க. திரும்ப சந்திக்கும்போது நான் என் திட்டத்தைச் சொல் றேன்.”

“மேடம்...” -பட்டாபி சற்று இழுத்தான்.

“என்ன...?”

“எனக்கும் ஒரு எண்ணம்...”

“எல்லாத்தையும் நாளைக்குப் பேசுவோம். இன்னிக்கு இவ்வளவு நேரம் பேசினதே அதிகம். நானும் சந்திரமோகன்கிட்ட கொஞ்ச பேச வேண்டியிருக்கு...”

“அவரும் இங்க வரப்போறாரா மேடம்?”

"தெரியாது... நிறைய யோசிக்கவேண்டியிருக்கு. ஆனா சந்திரா என் போனுக்கா ஈகரா காத்துக்கிட்டிருப்பார்."

"சரி மேடம், நீங்க கிளம்புங்க. நீங்க சொன்னமாதிரி நாளைக்குச் சந்திப்போம்."

"குட்..."

-ராதா நழுவத் தொடங்கினாள். அவர்கள் மூவரும் வைத்த கண் வாங்காமல் அவள் போவதையே பார்த்தபடி இருந்தனர்.

**குளத்துவீடு!**

குளத்தங்கரையில் ஈஸிசேரைப் போட்டுக்கொண்டு மல்லாந்திருந்தார் சமாதானபாண்டி. அருகில் பாதி குடித்த நிலையில் அவர் வைத்திருந்த சுருட்டு. சொச்சத்துக்காக கைநீண்டபோது ராயர் அங்கே பிரவேசித்தபடி இருந்தார். கூடவே அவரது வலதுகை வீரபத்ரன்!

இருவரும் சமாதானபாண்டி அருகே வந்து நிற்க, அவர் சுருட்டுப் புகையை உமிழ்ந்தபடி அவர்களை ஏறிட்டார்.

"வரச்சொன்னீங்களாமே?"

"ராதா வந்துருக்குதா?"

"ஆமாம்... காலேஜுக்குப் போன இடத்துல எப்படியோ கை ஒடிஞ்சி இருக்கு. அதான் லீவு போட்டுட்டு வந்துருக்கா..."

"கேட்டாதான் சொல்வியா?"

-ராயர் மௌனம் கட்டினார்.

"பதில் சொல்ல முடியல இல்ல..."

மீண்டும் ராயரிடம் மௌனம்.



"உன்னத்தாண்டா...?" -சமாதானபாண்டியிடம் கோபம் சீற்றமாய் எகிறியது.

"அது ஒரு விஷயமா நான் நினைக்கல. அதான் சொல்லல." -ராயர் மிடறு விழுங்கியபடி சொன்னார்.

"அப்ப நீ இந்த வேலிக்காட்டுக்குத் துளிகூட லாயக்கில்லாதவன்னு நான் சொல்றேன்."

-ராயர் பதிலுக்கு சற்று கோபத்துடன் பார்த்தார்.

"முட்டாப் பயலே... மூணு கண்ணு வேணும் மூணு கண்ணு வேணும்னு நான் சொல்வேன் ஞாபகமிருக்கா?"

ராயர் தலை ஆடியது.

"உனக்கு இரண்டு கண்ணே ஒழுங்கா இல்லடா..."

"இப்ப என்ன வந்துடிச்சின்னு கோபிக்கிறீங்க. ராதாவுக்கு கை சரியில்லைன்னுதானே இங்க இருக்கறா."

"போடா முட்டாப்பயலே... அவ நாம சரியில்லேன்னு முடிவு பண்ணி திட்டம் போட்டு திரும்பி வந்துருக்காடா..."

"எதை வெச்சு அப்படிச் சொல்றீங்க?"

"போ.. போய் அவ கை ஒடிஞ்ச கைதானான்னு சோதிச்சுப்பாரு. அப்பத்தான் தெரியும்..."

சமாதானபாண்டி அழுத்தமாகச் சொன்னார்.

ராயர் உடனே திரும்பினார்.

"நில்லு..."

நின்றவர் திரும்பிப் பார்த்தார்.

"நான் சொல்றது உண்மைன்னா அவளை இங்க கூட்டிக்கிட்டு வந்து என் வீட்ல விட்டுடணும்..."

"பொய்யா இருந்தா?"

"இந்த சமாதானபாண்டி சந்தேகம் எப்பவும் வீண் போகாது. கைல அடின்னு திரும்பி வந்தவ நம்ம நூறு குடியான்களோட சேர்ந்து சுத்தறான்னா... அதுக்கு பின்னாடி ஏதோ இருக்குது."

"முதல்ல... உங்க சந்தேகத்தை நான் சரிசெய்துக்கேறேன். அப்புறமா வந்து பேசறேன்."

-ராயர் பதில் கோபத்தோடு புறப்பட்டுப் போனார். சதாமானபாண்டி உதட்டில் மீண்டும் சுருட்டுப்புகை!

வீட்டின் மொட்டை மாடி. அதில் ஒரு மூலையில் கைப்பிடி சுவர் மேல் சாய்ந்தபடி செல்போனை தட்டி விட்டிருந்தாள் ராதா.

மறுமுனையில் சந்திரமோகன்.

"ராதா... உன் போனுக்காகத்தான் காத்துக்கிட்டிருக் கேன்."

"தெரியும். இங்க சூழ்நிலை ரொம்ப இறுக்கமா இருக்கு. அதான் மாடியில வந்து போன் பண்றேன்."

"முன்னேற்றமா... குமுதத்துல ஒரு மர்மத்தொடர் எழுதலாம். அவ்வளவு தூரத்துக்கு ஒரு கதை இருக்கு."

"கதையா..."

"ஆமா... அவ்வளவையும் டேப் பண்ணியிருக்கேன். உனக்கு எப்படி அனுப்புறதுன்னுதான் யோசிக்கிறேனே."

"யார்கிட்டேயாவது கொடுத்து விடமுடியுமா?"

"முயற்சி பண்றேன். அவசரப்பட்டு நீ இங்க வந்துடாதே!"

"எனக்கு ஒவ்வொரு நாளும் டென்ஷனா இருக்கு."



"அதுக்கு மேல இங்க டென்ஷன். ஒண்ணு மட்டும் நிச்சயம். உன் சந்தேகம், என் சந்தேகம் எல்லாத்துக்குமே பெரிய அளவுல காரணங்கள் இங்க இருக்கு. என் தாத்தா சமாதானபாண்டி ஒரு ராட்சஸ சைஸ் குறியாதான் இந்த நிமிஷம் வரை என் கண்ணுக்கு தெரியறார்."

"சரி... அடுத்து என்ன செய்யப் போறே?"

"முதல்ல கேசட்டைக் கேளு. அப்பத்தான் உனக்கு சில ஐடியாக்கள் கிடைக்கும். நான் சொல்லப் போறதையும் உன்னால புரிஞ்சுக்க முடியும்."

"குட்... எப்ப எப்படி கேசட் வரும்?"

"நாளைக்கு நீ இருக்கற இடத்துக்கு எப்படியாவது வந்து சேரும். நான் பொறுப்பு. இங்க பட்டாபின்னு ஒரு பட்டர் பையன் இருக்கான். அவன்தான் இதுக்கு லாயக்கு. அவனை நான் அனுப்பித் தரேன்."

"சீக்கிரம்..."

"ஓ.கே. பை... யாரோ வராங்க."

-செல்போனை அணைத்தாள். ராயர் மாடி ஏறி வந்து கொண்டிருந்தார். செல்லை விலக்காமல் அவரையும் பார்க்காதபடி பேச்சை அப்படியே மாற்றினாள்.

"சொல்லுடி... அப்புறம்? அந்த அசைன்மெண்ட் பேப்பர்ஸ் பத்திரமா வை. நான் வந்து காப்பி பண்ணிக்கறேன்.

-ராயர் அருகில் சமீபித்து நின்றார். அவளும் நிமிர்ந்தாள். பார்வையில் என்னப்பா என்னும் கேள்வி. கை கழுத்துத் துணியாலான தூளியில் தொங்கிக் கொண்டு...

"யார் கூட பேசிக்கிட்டிருக்கே...?"

"காலேஜ் ஃப்ரெண்ட் ஒருத்தியோட...."

"எங்கே?" -செல்போனை வாங்கி நம்பரைப் பார்த்தார். மளமளவென்று தட்டினார். ராதாவுக்கு வியர்க்கத் தொடங்கிவிட்டது. அதுவும் வானில் நீந்தி மறுமுனையில் சந்திரமோகனின் செல்லைக் குடைந்து சப்தம் போட்டது.

அவனும் எண்ணைப் பார்த்து விட்டு காதைக் கொடுத்தான்.

"ஹலோ..." -ராயரின் குரல் முதலில் ஒலிக்க,

'யெஸ் ப்ரியா ஹியர்" -மறுமுனையில் பெண் குரல் கேட்க, சட்டென்று ஆஃப் செய்தவர் செல்ஃபோனைப் பதிலுக்கு அவளிடம் நீட்டினார்.

"அந்தப் பொண்ணு பேர் ப்ரியாவா?" என்றார். ராதாவுக்குண்டான நிம்மதியில் மார்பு இரண்டும் காற்றுப் போகும் பலூனாய்த் தாழ அமுங்கின.

"ஆ... ஆமாம்!"

"இந்தா பிடி... இங்க வந்தும் படிப்பு சிந்தனைதானா?" -அந்தக் கேள்வியோடு வெறித்தார். கைக்கட்டைப் பார்த்தார். ராதாவும் கைக்கட்டின் மேல் கண்களைக் கொண்டு சென்றாள்.

"கைவலி எப்படி இருக்கு..?"

"வலி எல்லாம் இல்ல."

"ஜாக்ரதையா பாத்துக்கோ..."

-ராயர் திரும்புவதுபோல கைப்பிடி சுவர்மேல் அமர்ந்தார். கீழே மறுபக்கத்தில் ஸ்லாப். விழுந்தாலும் அடிபடாத உயரம்!

சட்டென்று தடுமாறிக் கொண்டு விழுபவர்போல "அம்மாடி...!" என்று விழப்போனார். ஓடிவந்தவள் வலக்கையை நீட்டிப் பிடிக்கப் பார்த்தாள். முடியாமல் அவர் ஸ்லாப் மேல் விழுந்தார்.



"மவனே ஏண்டா இப்படி நடிக்கறே?" என்கிற மாதிரி ஸ்லாப்பில் இருந்த விளிம்புமுனை இடுப்பில் ஒரு குத்து குத்தி வலியை உருவாக்கியது.

சுதாரித்து எழுந்தார். தடுமாறிக்கொண்டு மீண்டும் சுவரின்மேல் ஏறி மேல்தளத்துக்கு வந்து பெருமூச்சு விட்டார்.

"உங்களுக்கு என்னப்பா வந்துச்சு?"

-ராதா முகத்தை ஒரு மாதிரியாக வைத்துக்கொண்டு கேட்டாள்.

"ஒண்ணுமில்லைம்மா... ஒண்ணுமில்லை..."

"இப்ப சொல்றீங்களா இல்லையா...?"

"ஒண்ணுமில்லம்மா... உன் தாத்தாவுக்கு இப்ப சந்தேகம்கற வியாதி வந்துருக்கு. அது அவரை பிடிச்சு ஆட்டிக்கிட்டிருக்கு."

'நான் உங்களைக் கேட்டா நீங்க தாத்தாவைப் பத்தி பேசறீங்களே..."

"தாத்தாதானே நான் இப்ப உன்னை சந்தேகப்படவே காரணம்?"

"என் மேல சந்தேகமா?"

"ஆமாம்... உனக்கு கை நிஜமா ஒடிஞ்சிருக்கா -இல்லை நடிக்கிறயான்னு. இப்ப அது தெரிஞ்சுபோச்சு.

-ராயர் புதிர்போட ராதாவிடம் மீண்டும் இதயத் திணறல்.

"உனக்கு கை ஓடியலைன்னா நான் கீழே விழும்போது நீ ஓடிவந்து பிடிச்சிருப்பே. அதுலையே தெரிஞ்சுபோச்சு எனக்கு..."

"ஏம்ப்பா அவருக்கு இவ்வளவு சந்தேகம்?"

"அவர் அப்படித்தாம்மா. சந்தேகம்... சந்தேகம்... அது வேலிக்காட்டோட முதல் சொத்து. அப்புறம்தான் செடி கொடி தோட்டம் துரவு எல்லாம்."

"அதான் ஏன்... என்னையே சந்கேதப்படற அளவு அப்படி என்ன விஷயம்?"

"என்னை ரொம்ப கேள்வி கேட்காதே. புலி வாலைப் பிடிச்சவங்களும் நாங்களும் ஒண்ணு."

"ஒண்ணுமே புரியல."

"நீ போம்மா... போ! எப்படியோ என் வயித்துல பாலை வார்த்தே. அது போதும் எனக்கு..."

-ராயர் இடுப்பைத் தேய்த்தபடி நடந்து மறைந்தார். ராதா மீண்டும் பெருமூச்சு விட்டாள். செல்லைப் பார்த்து திரும்பத் தட்டினாள். பார்வை நாலாபக்கத்திலும் ஒரு வட்டம் கட்டம் வட்ட...

மறுமுனையில் சந்திரமோகன் அகப்பட்டான்.,

"சந்திரா நான்தான்..."

"முன்ன பேசினது யார் உன் அப்பாவா?"

"ஆமா.. அது யார் ப்ரியா?"

"என்ன கேள்வி இது. நான்தான் சட்டுன்னு குரல் மாத்தி அப்படிக் கேட்டேன். நீ போனதடவை பேசினப்போ அவசரமா யாரோ வராங்கன்னு முடிச்சப்பவே சந்தேகப்பட்டேன். அதே சமயம் உடனே போன் வந்து ஆண்குரல் கேட்கவும் சுதாரிச்சேன்."



"ஓ... மார்ல்ஸ். ரியலி நீ கிரேட். இங்கயும் பெரிய ஒரு வலைல இருந்து நான் தப்பிச்சேன். அந்த பெரிய கிழடு எனக்கு கைல அடிபட்டது உண்மையான்னு சோதிக்கச் சொல்லி இருக்கு..."

"அப்புறம்?"

"என் ஐக்யூ என்னைக் காப்பாத்திடிச்சு. உன் ஐக்யூவும்..."

"இந்த இரண்டு ஐக்யூவும் உங்க ஆயிரம் வேலிக்காட்டு ரகசியத்தைக் கண்டுபிடிக்குமா?"

"நிச்சயமா..?"

-சொல்லிவிட்டு செல்லை அணைத்தபடி கீழே பார்த்தாள். ராயர் குளத்து பங்களா நோக்கி ஆவேசமாக நடந்து கொண்டிருந்தார்.

அவளுக்குப் புரிந்துவிட்டது.

## 33

ராயர், குளத்துவிடு நோக்கி நடந்தபடி இருக்க, அதைப் பார்த்து ராதா முகத்தில் ஓர் அழுத்தமான புன்னகை வந்து பரவியது. அர்த்த புஷ்டியோடு சிரித்தாள்.

திட்டமில்லாமல் போய் நின்றால் அதைக்கூட சமாதானபாண்டி சந்தேகப்படலாம் என்று யூகித்தவள், அங்கு போவதற்கான காரணத்தைத் தேடத் தொடங்கினாள். காரணத்திற்கா பஞ்சம் என்கிற மாதிரி அயிரை மீன் குழம்பு வாசம் கமகமவென்று காற்றில் மிதந்து வந்து மூக்கில் புகுந்தது.

ராதா பரபரப்பாகத் தயாரானாள்.

குளத்து வீடு!

ராயர் உள்ளே நுழைந்தபோது வழக்கம்போல இருளின் ஆக்ரமிப்பு. வீட்டுத் தாழ்வாரத்தில் நின்றுகொண்டு உள்ளே பார்த்தவரால் எதையும் பார்க்க முடியவில்லை. பார்வைத் துழாவலில், அந்த இருளில் யாரோ ஒருவர் வருவது தெரிந்தது. அருகே வந்த பிறகுதான் அது வீரபத்ரன் என்பது தெரிந்தது.

"ஏலே வீரபத்ரா நீயா...?"

"ஆமாம் ஆண்டோ... பெரியவர் என்னை இங்கே காவலுக்கு உட்காரச் சொல்லிட்டார்!"

"காவலுக்கா... ஆமா அவரு எங்கடா?"

"அவசரமா கேரளா பக்கம் வயநாடு வரைக்கும் போய் வர்றதா சொல்லிட்டுப் போனார்."

"வயநாட்டுக்கா... எதுக்கடா?"

"அதான் ஆண்டே எனக்கும் புரியல!" –வீரபத்ரனும் கையைப் பிசைந்தான்.

"சரி... உறுதியாத் தெரியுமா... பெரியவர் கிளம்பிப் போய்ட்டாரா?"

"போய்ட்டார் ஆண்டே... வழக்கமா அவர் மட்டும் பயன்படுத்தற அந்த கறுப்புக் கார்ல அவர் கிளம்பிப் போனதை நானும் பார்த்தேன்."

–வீரபத்ரன் உறுதியளித்தான்.

"முதல்ல விளக்கைப் போடு... அவருக்குத்தான் இருட்டுன்னா இஷ்டம். உனக்கென்னடா வந்துச்சு..."

"அவர் இங்கே இருக்கும்போது வீடு எப்படி இருக்குமோ அப்படியே இருக்கணும்னு சொல்லிட்டுத்தான் பெரியவர் புறப்பட்டார். அப்புறம்..."

"என்ன அப்புறம்?"



"நீங்க வந்து இங்கே எதையும் சோதிச்சு பார்க்கக் கூடாது... நான் சொன்னேன்னு சொல்லுன்னாரு."

"அப்படியா சொன்னாரு..."

"ஆமாம் ஆண்டே... நான் இல்லாதப்ப இங்கே யார் எதுக்கு வந்தாலும் எனக்கு தெரிஞ்சிடும்னும் சொன்னாரு..."

வீரபத்ரன் தயங்கித் தயங்கிச் சொன்னது ராயரைத் துவட்டியது. நெடுநேரம் அவன் எதிரில் மௌனமாக யோசித்தபடியே நின்றார்.

"என்மேல வருத்தப்படாதீங்க ஆண்டே. அவர் சொன்னதைத்தான் நான் சொன்னேன்."

"உன்னை எனக்குத் தெரியும்டா... ஆனா பெரியப்பாதான் ஏன் இப்படி நடந்துக்கறாருன்னு எனக்குத் தெரியல."

"ரொம்பப் பதட்டமா இருந்தாருங்க... ஒரு முடிவு வரப்போகுதுன்னு சொல்லிக்கிட்டு இருந்தாரு."

"எனக்கும் குழப்பமா இருக்கு. இங்கே சந்திரமோகன் வந்துட்டுப்போனதுல இருந்துதான் இவ்வளவு குழப்பமும். அவன்தான் போய்ட்டானே... ஏன் இவர் இப்படிக் கிடந்து தவிக்கிறாரு?"

"தெரியல ஆண்டே... கிழவன் சோணைமுத்துவை கூப்பிட்டு வேற பேசிக்கிட்டிருந்தாரு?"

"என்ன பேசினாரு...?"

"என் எதிர்க்க பேசுவாருங்களா... என்ன போகச் சொல்லிட்டாரு. ஆனா அவன்கிட்ட ரொம்ப கடுமையா பேசிக்கிட்டிருந்த மாதிரிதான் தெரியுது."

"சரி... இப்ப எங்கே கிழவன்?"

"அவன் குடிசைலதான் கிடப்பான்."

"சரி... நீ போய் அவனை கூட்டிக்கிட்டு வா..."

-ராயர் சொல்லவும் வீரபத்ரன் நெளிந்தான்.

"போடா..."

"இல்ல... என்ன இந்த வீட்டைவிட்டு எதுக்காகவும் போகக்கூடாதுன்னு சொல்லியிருக்காரு."

"அதான் அவர் இல்லேல்ல... நான் பாத்துக்கறேன். நீ போய்ட்டு வா..."

"ஆண்டே..."

"பயப்படாதே... நான் இந்த இடத்தை விட்டு நகர மாட்டேன். நீ தைரியமா போய்ட்டு வா... கேட்டா நான் சொல்லிக்கிறேன்."

-அரைமனதாக வீரபத்ரன் வெளியேறினான். எதிரில் தூக்குவாளியில் மீன் குழம்புடன் ராதா வந்து கொண்டிருந்தாள்.

வீரபத்ரன் வரவும் அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

"எங்க தாயி...?"

"அம்மா, தாத்தாவுக்கு குழம்பு கொடுத்துவிட்டாங்க."

"அவர் இப்ப வீட்ல இல்லையே தாயி..."

"எங்க போய்ட்டாரு?"

"வேண்டாம் தாயி. என்ன எதுவும் கேக்காம திரும்பிப் போயிடுங்க. அதான் உங்களுக்கு நல்லது."

"என்ன சொல்றே நீ... என் தாத்தாவை நான் பார்க்கப் போறேன். நீ என்னென்னமோ சொல்றியே."



"தாயி... சொன்னா கேளுங்க தாயி... உங்களுக்கு எதுக்கு தாயி இந்த எடுபிடி வேலையெல்லாம். இதுக்குத்தான் நாங்க இருக்கோமே..."

"சரி சரி... நீ அரைச்ச மாவையே அரைக்காதே. நான் திரும்பிடறேன்."

ராதா அப்படியே திரும்பி நடந்தாள். சிறிது தூரம் அவளுக்குப் பின்னால் வந்தவன், ஒரு பிரிவில் சோணை முத்துத் தாத்தா வீட்டைக் குறி வைத்து நடந்தான். ராதாவும் அவன் போவது வரை பார்த்துவிட்டு திரும்பவும் குளத்துவீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

குளத்து வீட்டில் எல்லா விளக்குகளும் எரிந்து கொண்டிருந்தன. ராயர் வீடு முழுக்க ஒரு பூனைபோல நடந்து நோட்டம் போட்டபடி இருந்தார். பிரதானமாகக் குளத்தில் கண்டெடுத்த பெட்டி எங்கே என்றுதான் தேடினார்.

ஒரு அறை பூட்டுப்பட்டு பெரிதாகப் பூட்டு தொங்கியது.

சாவித்துவாரம் வழியாக உள்ளே பார்த்தார். கும்மிருட்டில் பெட்டி ஒரு பெரிய கறுப்புச் சதுரமாக ஓரளவு தெரிந்தது.

ராயருக்குள் பூச்சி பறந்தது. எப்படியாவது உள்ளே நுழைந்து பெட்டியைத் திறந்து பார்க்கவேண்டும் என்று தோன்றியது. அதுவும் வீரபத்ரன் வருவதற்குள் பார்த்து விடுவது நல்லது என்று தோன்றியது.

அண்ணாந்து பார்த்தார். ஓட்டுக் கூரைச் சரிவு! ஒரு வழி கிடைத்த மாதிரி ஒரு மலர்ச்சி முகத்தில். மளமள வென்று வெளியே வந்தவர் ஓட்டுக் கூரைமேல் ஏறினார். நேராக அறைக்கு மேலே ஓட்டைப் பிரித்தார். தேக்குமரத் தண்டுகள் குறுகிய இடைவெளியோடு உள்ளே குதிப்பது சிரமம் என்கிற மாதிரி எச்சரித்தன.

ஆசையும் பதட்டமும் வீரபத்ரன் சொன்னதை எல்லாம் தூக்கி தூரப் போட்டுவிட உள்ளே குதித்தார். பெட்டி அருகில் சென்று அதைத் திறக்கப் பார்த்தார். முடிய வில்லை. வரிசையாக ஒன்றுக்கு ஏழாக சாவித் துவாரங்கள். குழம்பிற்று. அதே சமயம் சாவித்துவாரம் வழியாக ராதா உள்ளே பார்த்து விக்கித்துப் போயிருந்தாள்.

சாவித் துவாரங்களில் ராயரின் கை தடவுவதையும் அவை வரிசையாக சின்னதாகிக் கொண்டே செல்வதையும் பார்த்தவளுக்கு கொஞ்சம் போல மூச்சையடைத்தது. புத்தியில் பாம்புப் புற்றில் கிடைத்த சாவிக்கொத்தின் ஞாபகம் வந்தது. அது இந்தப் பெட்டிக்கு தொடர்புடையதுதானா? அப்பாவே திருட்டுத்தனமாய் உள்ளிறங்கித் தடுமாறுகிறார் என்றால் அப்பாவிடம் கூட சாவியில்லையா?

கேள்விகள் அவளுக்குள் அணிவகுத்தன.

அதற்குள் ராயர் திரும்பவும் ஓட்டுக்கூரை துவாரம் வழியாக மேலேறத் தொடங்கியிருந்தார். இனி அங்கே இருப்பது ஆபத்து என்று அவளது மூளையிலும் எதிரொலித்தது. ராயர் கூரையில் இருந்து இறங்கி வருவதற்குள் நழுவி விட முடிவு செய்து வேகமானாள்!

"ஏலேய் எங்கடா சோணைமுத்து...?" -வீரபத்ரன் எதிர்ப்பட்ட சில ஊழியம்பாடிகளிடம் கேட்டுக் கொண்டிருந்தான்.

"தெரியலியே வீரபத்ரா..."

"குடிசைல கூட இல்லியே..."

"ஒருவேளை தோட்டத்துல தண்ணி பாச்சிக்கிட்டு இருக்கானோ என்னவோ...?"

-வீரபத்ரன் அங்கிருந்து தோட்டம் நோக்கி நடக்க ஆரம்பித்தான். எதிரில் சில ஊழியம்பாடியினர் அவனது தேடலை சற்று ஆச்சரியத்தோடு பார்த்தனர்.



அவன் பட்டர் வீட்டு வழியாகச் செல்லும்போது பட்டர் திண்ணையில் பஞ்சாங்கம் பார்த்துக் கொண்டிருந்தார். வீரபத்ரனைப் பார்க்கவும் தன்னை நோக்கித் தான் வருகிறான் என்று எழுந்து நின்றார்.

வீட்டினுள்ளே பட்டாபி. வீரபத்ரனோ பட்டரைப் பார்த்துச் சிரித்தபடி கடந்து சென்றான். பட்டருக்கு ஆச்சரியமாகிப் போனது.

"யாரைத் தேடுறே வீரபத்ரா..."

"சோணைமுத்துக் கிழவனை..."

"நான் என்னைத்தான் தேடி வர்றியோன்னு நினைச்சுட்டேன்."

"இல்ல பட்டரே... நீங்க வேலையைப் பாருங்க. எல்லாம் என் தலையெழுத்து..." -வீரபத்ரன் சலித்துக்கொண்டு நடப்பது பட்டாபியின் காதிலும் விழுந்தது. வேகமாய் வெளியே வந்தான். பட்டாபிக்கு ஒரே குறுகுறுப்பாகி விட்டது. சோணைமுத்து தாத்தாவை வீரபத்ரன் தேடுகிறான் என்றால் ஏதாவது பொல்லாத காரணத்திற்காகவா? கேள்வி பிராண்டியது. தங்களுக்குத் தாத்தா கதை சொன்னது ராயருக்கும், பெரியவருக்கும் தெரிந்து விட்டதா? கேள்விகளுடன் அவனும் வீரபத்ரனைப் பின்தொடரத் தொடங்கினான்.

சென்னை, வேளச்சேரி! சந்திரமோகனின் அப்பா ரத்னசபாபதியின் பங்களாவில் பிரவேசித்திருந்த காரில் இருந்து இறங்கிக் கொண்டிருந்தார் பணிக்கர். வாசலிலேயே காத்திருந்த ருக்மணியும் ரத்னசபாபதியும் அவரை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றனர்.

நலம் விசாரிப்போடு பேச்சைத் தொடங்கினார் ரத்னசபாபதி.

"பயணமெல்லாம் சௌகர்யமா இருந்ததா பணிக்கரே?"

"நல்ல சௌகர்யம். ஆமா எதுக்காக என்னை அவசரமா வரச்சொல்லியிருக்கீங்க?"

"சந்திரமோகன் சம்பந்தமாத்தான்... அவன் இப்ப எங்கே இருக்கான்னே தெரியல பணிக்கரே... வீட்டை விட்டுப் போய் ஒருவாரம் ஆச்சு."

"ஓஹோ..." -பணிக்கர் தாடையைத் தடவினார்.

"எங்களுக்கு ரொம்ப பயமா இருக்கு. திரும்பவும் அந்த வேலிக்காட்டுக்குப் போய் அவனுக்கு குட்டி நந்தஸ்வாமி யால ஏதாவது ஆபத்து வந்துடுமோன்னு பயப்படறோம்."

"சரி... நான் குளிக்க முதல்ல ஏற்பாடு செய்யுங்கோ..." -பணிக்கர் சொன்ன பத்தாவது நிமிடம் ஹீட்டார் கொதித்து வெந்நீரை கொட்டியது. பணிக்கரும் குளித்து விட்டு ஈரத்தலையுடன் புதிய பட்டுவஸ்திரத்தை உடம்பில் சுற்றிக்கொண்டு வெளியில் வந்தார். தான் கொண்டு வந்திருந்த பெட்டியில் இருந்து ஒரு ஓலைக்குடலையை எடுத்தவர் அதிலிருந்து சோழிகளைக் குலுக்கி வெளியே எடுத்தார்.

பூஜை அறை நோக்கி நடந்தார்.

அறையில் விளக்குகள் எரிய தேஜோமயமான ஒருவித திவ்யச் சூழல். நடுவில் கோலம். அதன் முன் அமர்ந்து தியானத்தில் நுழையத் தொடங்கினார். ரத்னசாபதியும் ருக்மணியும் அவர் அடுத்து என்ன செய்யப்போகிறார் என்று கவலையுடன் பார்க்க ஆரம்பித்தனர்.

**வே**லிக்காட்டுத் தோட்டம்!

வீரபத்ரன் பாகம் பாகமாய் பார்த்துகொண்டே போனான். நடுநடுவே "சோணை..." என்று தீனமாய் குரல் கொடுத்தான். பதிலில்லை... பின்தொடர்ந்து கொண்டிருந்த பட்டாபியும் நின்று நின்று தொடர்ந்தான். அடர்வான



புளியமரக் காட்டுக்குள் நுழைந்தபோது வீரபத்ரனுக்கு மின்னல் தாக்கியதைப் போல இருந்தது.

ஒரு புளிய மரக்கிளையில் தூக்குச் சவமாக சோணை முத்துத் தாத்தா!

## 34

**பு**ளியமரத்தில் தொங்கிக் கொண்டிருந்த சோணை முத்துக் கிழவன் வீரபத்ரனின் உயிர்க்குலையையே ஒரு பிடிபிடித்தான். பின்தொடர்ந்து வந்து பார்த்த பட்டாபிக் கும் நடுமுதுகில் மின்னல் இறங்கினார்ப்போல ஓர் அதிர்ச்சி!

வீரபத்ரன் நெருங்கிச் சென்று பார்த்தான். யாரும் அடித்துக் கொன்ற மாதிரியே தெரியவில்லை. குளத்துவீடு நோக்கி ஓட ஆரம்பித்தான்.

பட்டாபிக்குத்தான் சுதாரித்து நிமிரவே நெடுநேரம் ஆகிவிட்டது!

**கு**ளத்து வீட்டில் ராயர் பெட்டியை நெருங்கிப் பார்த்து விட்ட மாதிரியே இல்லாமல் வீட்டு வாசலில் வீரபத்ரனுக்காகக் காத்துக் கொண்டிருந்தார்.

ஓடிவரும் வீரபத்ரனும் அவரைச் சமீபித்து "ஆண்டே... கிழவன் புளியங்காட்டுல தூக்குமாட்டிக்கிட்டு தொங் கிட்டு இருக்கான். என்னால நம்பவே முடுடியல" என்றான்.

"நிசமாவா சொல்றே வீரபத்ரா..."

"ஆமாம் ஆண்டே. நீங்க வேணா வந்து பாருங்க. பெரியவர் என்ன சொன்னார்னு தெரியல. கிழவன்

மிரண்டு போய் இப்படி ஒரு முடிவுக்கு போயிட்டான்" என்ற வீரபத்ரனைத் தொடர்ந்து அங்கிருந்து ஓடப் பார்த்தார். அவர் ஓடி முடியவும் பக்கவாட்டின் உள்ள ஒரு தென்னைக்குப் பின்னால் இருந்து வெளிப்பட்ட ராதாவுக்கும் அந்த செய்தியால் இதயம் துடித்தது.

ஒரு பூர்வ கதையை சொல்லி மர்மத்தின் முடிச்சுகளை அங்கங்கே அடையாளம் காட்டிய கிழவன் எதற்காக இப்படி ஒரு முடிவிற்கு வந்தான்? தப்பிக் வழி தெரியாத தாலா... இல்லை அவன் பேசியதை தெரிந்து கொண்டு பெரியவர்தான் உயிரை வாங்கி தூக்கில் தொங்க விட்டு விட்டாரா?

ராதாவை குழப்பம் கிள்ளி அள்ளத் தொடங்கியது.

**நீ**லாங்கரை! சந்திரமோகன் பங்களாவில் பூஜையறையில் தியானத்தில் இருந்த பணிக்கர் சோழிகளை உருட்ட ஆரம்பித்திருந்தார்.

"என்ன பணிக்கரே... வந்ததுல இருந்து சோழிகளை உருட்றீங்களே தவிர எதையும் சொல்ல மாட்டேங்கறீங்களே?" –சந்திரமோகனின் அப்பா ரத்னசபாபதி கெஞ்சாத குறையாக கேட்டுக் கொண்டிருந்தார்.

"சந்திரமோகன் செளகர்யமாயிட்டு உண்டு. க்ஷேம குந்தகம் ஏதுமில்லா..."

"அது சரி, இப்ப எங்க இருக்கான். அந்த வேலிக் காட்டுக்குள்ளே திரும்ப போயிட்டானா?"

"இல்லா... அவன் ஏகாந்தமாய் ஓர் இடத்தில் ஓய்வில் இருக்கான். அவனிருக்குமிடத்துக்குப் பக்கத்தில் ஒரு மலைக்கோயில் . தெரியுது. அதே சமயம் இன்னும் சில திவசங்களில் ஆ வேலிக்காட்டில் பெரிய பிரளயங்கள் நடக்கப் போகுது..."



"இப்படி பொதுவாக சொன்னா எப்படி பணிக்கரே? இப்ப நீங்க எங்க கிட்ட மறைக்காம பேசப்போறீங்களா? நான் இப்பவே வேலிக்காட்டுக்கு கிளம்பிப் போய் அங்கே என் மகன் இருக்கானான்னு பாக்கவா?"

–ருக்மணி கொஞ்சமாய் பூச்சி காட்டினாள்.

"அவசரப்படாதே மகளே... நீ ஒரு பாவியோட மகள். ஓர் அசுரனோட மகள்! அறுபத்தி ஆறு வருஷமாயிட்டு ஒரு பாதகத்தை நீங்கள் செய்து வந்துருக்கீங்க. அதற்கு என்னைப்போல ஒரு ஜோசியனும் உடந்தை. அதாலே அந்த பரமாத்மாவான கிருஷ்ணன் ஜலத்தில் மூழ்கிப் போனான். எப்பேர்ப்பட்ட பாதகம் தெரியுமா இது– நான் அதுக்கு ஒரு முடிவு கட்டவே இங்கே வந்தேன்."

"கொஞ்சம் புரியும்படி விளக்கமா சொல்லக்கூடாதா?"

"நாலு நாள்... எண்ணி நாலே நாள் பொறுத்திருங்கோ. எல்லாம் புரியும். நீங்கள் குமாரனே சர்வத்தையும் புரிய வைக்கும்."

–பணிக்கர் மீண்டும் புதிர்போட்டார். ரத்னசாபதிக்கும் ருக்மணிக்கும் அவரை ஏன் கூப்பிட்டோம் என்றாகி விட்டது.

**சி**ணுங்கிய செல்ஃபோனை காதுக்கு கொடுத்த சந்திரமோகனுக்கு மஞ்சள் பாஸ்பரஸ் முகத்தில் பட்டது போல ஆகிவிட்டது. ராதா சோணைமுத்து தாத்தா தூக்கில் தொங்கிவிட்டதை விவரித்துக் கொண்டிருந்தாள்.

"சந்திரா... சோணைமுத்து தாத்தா தூக்குல தொங்கிட்டதையும் சமாதானபாண்டி தாத்தா கேரளா போய்விட்டதையும் கூட்டிக்கழிச்சா எனக்கு ஒரு விஷயம் க்ளியராகுது."

"என்ன ராதா?"

"சோணைமுத்து தாத்தா சொன்னபடி கோயிலை மூடியே வெச்சிருக்கணும்னு சொன்னது, ஒரு மலையாள நம்பூதிரி. அன்னிக்கு ரகசியமாய் நம்பூதிரி என்ன பேசினார்னு தெரியாது. ஆனா நம்பூதிரி சொல்லிட்டதால இனி கோயிலை திறக்கக்கூடாதுன்னு தாத்தா தீர்மானம் போட்டாராம். இப்ப கேரளா பக்கம் அந்த நம்பூதிரியை பார்க்கத்தான் தாத்தா போயிருக்கணும்."

"அதுக்கு இப்ப என்ன அவசியம்?"

"தாத்தா இனியும் வேலிக்காட்டு ரகசியத்தைக் கட்டிக் காப்பாத்தறது கஷ்டமான காரியம்னு நினைச்சிருப்பார். அடுத்து என்ன செய்யலாம்னு கேக்கறதுக்காகப் போயிருக் கலாம்."

"அப்ப உன் தாத்தாவுக்கு நம்ம சந்தேகம் தெரிஞ்சு போச்சா?"

"அப்படித்தான் நினைக்கறேன். என் மேல சந்தேகம். -சோணைமுத்து தாத்தா மேல சந்தேகம். அதோட எதிரொலியா அப்பாகூட சண்டை. இதுக்கெல்லாம் அர்த்தம் என்ன... அவர் சுதாரிக்கப் பார்க்கறார்ங்கறது தானே?"

"உன் அப்பா நிலைமை?"

"குழப்பத்துல இருக்கார்... அடுத்து என்ன செய்யற துன்னு தெரியாத குழப்பத்துல இருக்கார்..."

"தாத்தா பாடியை என்ன பண்ணப்போறீங்க?"

"வழக்கம் போல காதும் காதும் வெச்சமாதிரி வேலிக் காட்டு சுடுகாட்டுல தாத்தாவை புதைச்சுடுவாங்க. வேற என்ன செய்வாங்க?"

"நோ... தாத்தா நமக்கு ஒரு நல்ல சந்தர்ப்பத்தைக் கொடுத்திருக்கார். போலீசுக்கு போன் பண்ணி தாத்தாவோட சாவைப் பத்திச் சொல்லி போலீஸ் வந்து



தாத்தா உடம்பை போஸ்ட் மார்ட்டத்துக்கு எடுத்துகிட்டு போகட்டும்."

"அதனால நமக்கென்ன லாபம்."

"பைத்தியம். இந்த சாக்குல உன் அப்பாவை, அந்த வீரபத்ரனை போலீஸ் தள்ளிக்கிட்டு போய் விசாரிக்கும். அவங்க போலீஸ் கஸ்ட்டியில ஒரு ராத்திரி இருந்தா போதும். சமாதானபாண்டி தாத்தா வேற கேரளா போயிருக்கற இந்த சந்தர்ப்பத்துல நாம ரொம்ப சுலபமா கோயிலுக்குள்ளே போய் கதவை திறந்து பார்த்துடலாம்."

"கேட்க நல்லா இருக்கு. ஆனா போலீஸ் வேலிக்காட்டு விஷயத்துல இவ்வளவு நாள் தலையிட்டதில்லை. அப்பா, தாத்தா சொல்வாக்கு அப்படி! ஆகையால கம்ப்ளைண்ட் பண்ணா நாமதான் மாட்டிப்போம. நம்ம மேல அப்பாவுக்கு சந்தேகம் அதிகமாகும்."

"நீ எதுக்கு கம்ப்ளைண்ட் கொடுக்கறே. ஒரு ஊழியக் குடியனை ரெடி பண்ணு. துணிஞ்சு கம்ப்ளைண்ட் கொடுத்து பிணத்தை பரிசோதனை பண்ணட்டும். உன் அப்பாவையும் போலீஸ் என்கொயரி வளையத்துக்குக் கொண்டு வரட்டும். இதை நீ செய்யத் தவறினா நமக்கு இதைவிட ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைக்கவே கிடைக்காது. போலீஸ் மறுத்தா எனக்கு போன் பண்ணச் சொல்."

"குட்... நான் ஏற்பாடு பண்றேன். கள்ளவேலன்னு ஒருத்தன் இருக்கான். வெரி ரைட் பர்சன். அவனைத் தூண்டிவிடறேன். உன்னோட அடுத்த திட்டம்?"

"போலீஸ் உன் அப்பாவை தள்ளிக்கிட்டு போகட்டும். உடனே தகவல் கொடு. நான் இப்பவே வேலிக்காட்டு எல்லைல உள்ள வில்லேஜுக்கு வந்து அங்கே காத்து இருக்கேன். உன் அப்பா நகர்ந்தா நான் நுழைய வேண்டி யது தான்..."

"சரி... நான் கள்ளவேலனை ரெடி பண்ணிட்டு அப்பா நகர்ந்த உடனே போன் பண்றேன்."

-ராதா செல்லை அந்தப் பக்கம் முடக்க... இந்தப் பக்கமாய் சந்திரமோகன் லாட்ஜை காலி செய்து கொண்டு காரில் ஏறினான்.

ஸ்டியங்கை இறுக்கமாய்ப் பற்றினான். மனக்கண்ணில் அந்த மூடியிருக்கும் சந்தனம் பூசிய கோயில் கதவுதான் பெரிதாகத் தெரிந்தது.

பட்டாபி, கள்ளவேலனால் அழுகை அடக்க முடிய வில்லை. ராதா தேறுதல் சொல்லிக் கொண்டிருந்தாள்.

"இது அழற நேரமில்லை கள்ளவேலா... நான் சொன்ன மாதிரி நீ போய் போலீசுக்கு புகார் கொடுத்து அவங்களோட இங்கே வரே..."

"அம்மா, நான் உயிரைக்கூட கொடுக்கத் தயாரா இருக் கேன். ஆனா போலீஸ் என் கம்ப்ளைண்டை எடுத்துக் கும்மா?"

"கவலைப்படாதே... சந்திரமோகன் செல் நம்பரை நான் தரேன். நீயே சந்திராகிட்ட பேசு. கம்ப்ளைண்டை வாங்கிக்க மறுத்தா சந்திரமோகன் அடுத்து என்ன செய்யணும்னு உனக்கு வழிகாட்டுவார்."

"சரிம்மா... ஒருகால் நிஜப் போலீஸ் வர மறுத்தா நானும் ஐயாவும் யாரையாவது செட் அப் பண்ணி போலீஸா இங்கே கூட்டிகிட்டாவது உங்க அப்பாவையும் அந்த வீரபத்ரனையும் பிடிச்சு இழுத்து கிட்டுப் போறோம். நீங்க மட்டும் போட்ட திட்டத்துல பின் வாங்கிடாதீங்க..." -கள்ளவேலன் துணிந்து எழுந்து நின்று சற்று தைரியத் துடன் ஐடியாவையும் கொடுத்தான்.

"ரைட்... கிளம்பு! அப்பா, அந்த வீரபத்ரன்லாம் இப்ப சோணைமுத்து தாத்தா உடம்பை அவர் வீட்ல போட்டு



கிட்டு அங்கேதான் இருக்காங்க. தாத்தா வரட்டும்னு காத்திருக்காம சீக்கிரமா புதைக்கத்தான் அவங்க பார்ப்பாங்க. புதைக்கறதுக்குள்ள நீங்க போலீஸோட வர்றீங்க. கமான் க்விக்!"

-ராதா அவனை உந்தித் தள்ள கள்ளவேலன் ஒரு புதிய எழுச்சியுடன் புறப்பட்டான்!

பட்டாபி ராதாவை பிரமிப்போடு பார்த்தவனாய், "மேடம் எனக்கு என்ன வேலை மேடம்" என்று கேட்டான்.

"சொல்றேன்... அப்பாவும், வீரபத்ரனும் இந்த வேலிக் காட்டை விட்டு போன மறுநொடி நீ பக்கத்து வில்லேஜில் இருக்கற சந்திரமோகனோட ஏதாவது மாறுவேஷத்துல குளத்து வீட்டுக்கு வந்துடு."

"குளத்து வீட்டுக்கா... அங்கே எதுக்கு?"

"அங்கேயும் திறந்து பார்க்க வேண்டிய ஒரு விஷயம் இருக்கு...?"

"அந்த பெட்டியா?"

"ஆமாம்..."

"சாவி இல்லாம உங்கப்பாவே திணறிட்டு இருக்கும் போது நீங்க எப்படி திறக்கமுடியும்?"

"ஒரு செட் போலி சாவியை செய்து வைச்சுக்கிட்டுதான் புத்துல கிடைச்சதை நான் இங்கே கொடுத்தேன். டோண்ட் ஒர்ரி..."

-ராதா பட்டாபியை வியப்பின் உச்சிக்குத் தூக்கினாள்.

"மேடம் நீங்க கிரேட் மேடம்!"

உணர்ச்சி வசப்பட்ட பட்டாபியைப் பார்த்து சிரித்த ராதா அண்ணாந்து வானத்தை பார்த்து ஒரு பெருமூச்சு விட்டாள்.

**சோ**ணைமுத்துவின் சடலம் பாடையில் ஏறியது. சுற்றி இருந்த சொல்ப ஊழியக்குடிகள் ஒப்பாரியின் உச்சத்திற்கு செல்ல சடலம் சுடுகாடு நோக்கிக் கிளம்பியது. வீரபத்ரன் இருந்து விரட்டிக் கொண்டிருந்தான். இந்த மாதிரி சமயங்களில் சாதாரணமாக தலைகாட்டாத ராயர் அதிசயமாக அங்கே மிக வருந்துகிற மாதிரியான ஒரு பாவனையில் இருந்தார்.

சடலம் நகர்ந்தபடி இருக்க அவரும் அதைத் தொடர்ந்து கொண்டிருந்தார். ஒரு மூன்றாம் மனுஷி போல் பார்க்க வந்திருந்த ராதா பதைப்போடு சடலம் நகர்வதை ஒரு பார்வையும் போலீஸ் ஜீப் வராதா என்று மறுபார்வையும் பார்த்தபடி இருக்க, பிணம் சென்று கொண்டிருந்த அதே பாதையில் எதிர் திசையில் போலீஸ் ஜீப்பும் பிரவேசித்துக் கொண்டிருந்தது. ஜீப்பில் போலீஸோடு கள்ளவேலன்!

ராதா சுறுசுறுப்பானாள்.

## 35

**இ**துநாள் வரையில் ஆயிரம் வேலிக்காட்டுக்குள் போலீஸ் வந்ததே இல்லை.

ராயரும், வீரபத்ரனும் சடலத்துடன் பாதையில் தேங்க, ராதாவும் ஓர் இடத்தில் நின்று கவனிக்க ஆரம்பிக்க, ஜீப்பில் இருந்து இன்ஸ்பெக்டர் ஒருவர் இறங்கினார். கூடவே இறங்கிய கள்ளவேலன், ராயர் முகத்தில் மிளகாய்ப்பொடிய்யை ஊதியது போல ஒரு சிவப்பை உருவாக்கினான். இருந்தும் சுதாரித்தார்.



32846 6329362

"வாங்க சார்... எங்கே இவ்வளவு தூரம்?"

"காரணமாத்தான்... சோணைமுத்துங்கறவர் பாடியா இது?"

"அ.. ஆமாம் இன்ஸ்பெக்டர்..."

"இவர்தான் தற்கொலை செய்து கிட்டவரா...?"

வீரபத்ரனை பார்த்தார், அவன் புரிந்து கொண்டு பேச ஆரம்பித்தான்.

"அதெல்லாம் இல்லீங்களே... வயசாயிடிச்சு போய்ச் சேர்ந்துட்டான்..."

"இல்ல.. அவர் தற்கொலை செய்துகிட்டதாகவும் அதுல சந்தேகம் இருக்கறதாகவும் கம்ப்ளைண்ட் வந்துருக்குதே..."

"யார்... இந்த வீணாப்போன பயலுக்கு கம்ப்ளைண்ட் கொடுத்தானாக்கும்?"

"அதிகம் பேசாதீங்க. இந்த சாவு சம்பந்தமா கம்ப்ளைண்ட் வந்துட்டதால பிணத்தை கைப்பற்றி பிரேத பரிசோதனை செய்யற கடமை எங்களுக்கு இருக்கு..."

"ஐயா... இது வேலிக்காடு. பெரியவர் சமாதான பாண்டியோட பூமி. தெரிஞ்சுதான் வந்திருக்கீங்களா...?"

"யாரா இருந்தா என்ன... கம்ப்ளைண்ட் வந்தா என்னன்னு பாக்க வேண்டியது எங்க ட்யூட்டி."

-இன்ஸ்பெக்டர் திடகாத்திரமாக பேசியபடி சோணை முத்து சடலத்தை நெருங்கி அதன்மேல் கிடந்த துணியை லத்தியால் விலக்கி கழுத்துப் பாகத்தைப் பார்த்தார்.

ரத்தம் கட்டிய செம்பழுப்பு வரிக்கோடு போல் ஒன்று தெரிந்தது. ராயருக்குப் புரிந்துவிட்டது. இனிச் சமாளிப்பது சுலபமல்ல என்று புரிந்துகொண்டவர் குமுறினார். பின், "இன்ஸ்பெக்டர் சார்... சோணைமுத்து தற்கொலைதான்

செய்துகிட்டான். எங்க காட்டு வழக்கப்படி அடக்கம் பண்ணப் போய்க்கிட்டிருக்கோம். பிரேத பரிசோதனைங் கற பேர்ல அவன் உடம்பைக் கூறுபோட்டு அப்புறமா புதைக்கறதுல யாருக்கு என்ன லாபம்?"

"அப்ப... சட்டத்தையே திருத்தி எழுதிடச் சொல்லிடு வோமா?" -கிண்டலாகக் கேட்டார் இன்ஸ்பெக்டர். ராயர் இப்படி எதிர்கேள்விகளைக் கேட்டிராதவர். "இப்ப என்ன பண்ணுங்கிறீங்க?"

"அப்படியே உடம்பை ஜீப்புல ஏத்திட்டு நீங்களும் கூட வர்றீங்க..."

"நாங்க எதுக்கு?"

"நீங்கதானே சட்டத்தை மீறி இதைப் புதைக்க முயற்சி செய்தவர்?"

"இல்லை... உடம்பை எடுத்துக்கிட்டுப் போங்க. என்ன வேணா பண்ணிங்குங்க. நான் எங்க வழக்கத்தைச் சொன்னேன்."

"இப்ப பல்டி அடிக்கறதுல பிரஜோனமில்ல மிஸ்டர் கழுகாசலராயர்."

ராயருக்கும் தர்மசங்கடமாகிவிட்டது. வீரபத்ரன் மட்டும் எகிறினான்.

"யோவ் போலீசு... யார்கிட்ட பேசறே அய்யாவோட செல்வாக்குத் தெரியாம பேசறே நீ..."

அவன் அப்படிப் பேசிய மறுநொடி ஒரு போலீஸ்காரர் அவன் கழுத்தைப் பிடித்தார். ஒரே தள்ளு.

அதன்பிறகு ராயர் எதையும் பேசவில்லை. அவராகப் போய் ஜீப்பில் ஏறினார்.

ஊழியம்பாடிகள் முகத்தில் வியப்பலை! கள்ளவேலன் அதை அற்புதமாக ரசித்தான்.



ராயர் பார்வை மட்டும் அவனை லேசர் கதிராய்த் துளையிடுகிற மாதிரி துளையிட்டது.

'வந்து கவனிச்சுக்கறேன்டா...' என்கிற அதன் மொழி பெயர்ப்பு அவனுக்கு அர்த்தமாகியது. அடுத்த சில நொடி களில் ஜீப் அவர்கள் அவ்வளவு பேருடன் தொடர்ந்து வந்த ஒரு வேனில் சோணைமுத்து தாத்தா பிணத்துடன் வேலிக்காட்டை விட்டுப் புறப்பட்டது. சேதி தெரிந்த கல் வீட்டில் இருந்த சங்கவை நாச்சி அலறி அடித்துக்கொண்டு ஓடி வந்தாள்.

வழியிலேயே ராதா தடுத்தாள்.

"அம்மா நில்லு... எங்கப்போறே?"

"என்னகண்ணு இது. உங்கப்பாவை போலீசு இழுத்துக்கிட்டு போவுதாம்ல?"

"ஆமாம் நீயும் நானும் போய் தடுக்க முடியாது. வக்கீல் வெச்சுத்தான் இனி முயற்சி செய்யணும்."

'அவள் பதிலைத் தொடர்ந்து சங்கவை அலற ஆரம்பித்தாள்.

"என்ன கண்ணு என்னென்மோ சொல்றே... இந்த நேரம் பார்த்து உங்கண்ணன் கோபால் வேற இல்லாம போயிட் டானே..."

அவள் கோபாலைப் பற்றிப் பேசவும் தான் ராதாவுக்கே அவன் ஞாபகம் வந்தது.

"ஆமா... அண்ணன் எங்கம்மா? எனக்கு சுத்தமாக ஞாபகம் இல்லை."

"உங்க தாத்தாதான் ஒருநாள் கூப்பிட்டாருன்னு போனான். அப்பால வீட்டுக்கு வரவே இல்லை. கேட்ட துக்கு அவனை உங்க தாத்தா பர்மாவுக்கு அனுப்பி யிருக்கிறதா உங்கப்பா சொன்னாரு."

–ராதாவுக்கு சங்கவை நாச்சி முற்றிலும் ஒரு புதிய திசையை காட்டுகிற மாதிரி தோன்றியது. சங்கவையோ செய்வது தெரியாமல் திரும்பத் திரும்ப புலம்பினாள்.

"அடியே... உன் தாத்தா கூட இப்ப ஊர்ல இல்லாத நேரத்துல என்னென்னவோ நடக்குதேடி. அவருக்கு மட்டும் போலீஸ் வந்துட்டுபோனது தெரிஞ்சா ஸ்டேஷனையே கொளுத்திடுவாருடி...."

"கொஞ்சம் சும்மா இரும்மா. அண்ணன் இல்லைன்னா என்ன? நான் இருக்கேன்ல... நீ அமைதியா இரு. நான் போய் நம்ப வக்கிலைப் பாக்கறேன். அப்பாவை வீட்டுக்கு கூட்டிக்கிட்டு வரவேண்டியது என் பொறுப்பு."

ராதா தனது அடுத்த கட்டத்துக்குத் தயராகி விட்டாள்.

போர்டிகோவில் நின்று கொண்டிருந்த காரைக் கிளப்பினாள். வழியிலேயே பட்டாபி நின்று கொண்டு காரில் ஏறிக்கொண்டான்.

காருக்குள்...

"மேடம், போட்ட ப்ளான்படி எதுவும் பிசிறடிக்கல. அடுத்து என்ன பண்ணப் போறோம்?"

"நேரா போய் சந்திரமோகனை முதல்ல சந்திப்போம். மற்ற விஷயங்களை அங்கே வெச்சு பேசலாம்."

"உங்கப்பா ஸ்டேஷன்ல இருந்து திரும்ப வந்துட்டா..."

"அவரை வரவிடாம பண்ணத்தான் நான் இப்ப வந்துகிட்டிருக்கேன்."

"எப்படி?"

"பொறுத்திருந்து பாருங்க."

நல்லவேளை!



வக்கீல் காரில் ஏறும்போது ராதாவின் கார் முந்திக் கொண்டு அவர் முன் போய் நின்றது. காரைவிட்டு இறங்கி நடந்து வருபவளைப் பார்த்து வக்கீல் ஆச்சர்யப்பட்டார்.

"நீ ராயர் மக ராதா தானே?"

"ஆமாம் சார். உங்களைப் பாக்கத்தான் வந்துகிட்டு இருக்கேன்."

"யூ நோ.. ஸ்டேஷன்ல இருந்து உங்கப்பா போன் பண்ணார். இட் ஈஸ் ரியலி சர்ப்ரைஸ்!"

"அப்ப ஸ்டேஷனுக்குத்தான் கிளம்பிக்கிட்டு இருக்கீங்களா?"

"எக்ஸாக்ட்லி..."

"நல்லவேளை... உங்களை பிடிச்சுட்டேன். நீங்க இப்ப ஸ்டேஷனுக்கு போகவேண்டாம் ஸார்..."

"ஏம்மா... உங்கப்பா அங்கே என்கொயரிங்கற பேர்ல டார்ச்சர்ல இருக்கார்..."

"தெரியும்... தாத்தா சமாதானபாண்டிதான் உங்களைப் போகவேண்டாம்னு சொல்லச் சொன்னார்."

"தெரியலை... எனக்கு கொஞ்ச முன்னாலதான் போன் வந்தது."

"அந்த போனை அவர் எனக்கே பண்ணி இருக்கலாமே. எதுக்காக உங்களுக்கு பண்ணினார்...?"

வக்கீலின் மடக்கல் ராதாவைக் கொஞ்சம் திணற விட்டது.

"அது... நான் அவருக்கு போன் பண்ணினப்போ அப்பா அரெஸ்ட் ஆன விஷயத்தைச் சொன்னேன். அப்ப சொன்னார்." –ராதா சமாளித்தாள்.

"ஆச்சரியமாயிருக்கே... இந்த மாதிரி சமயத்துல ஒரு புயலைப் போல நாங்க நடந்துக்கணும்னுல்ல எதிர் பார்ப்பார். ஆமா அவர் நம்பர் ஒங்கிட்ட இருக்கா..?"

"அது... வீட்ல டைரியில இருக்கு..."

"ப்ளிஸ்மா.. முதல்ல கொடு. நானே ஏன்னு கேட்டறேன்."

"சரி.. வெயிட் பண்ணுங்க.. நான் போய் உங்களை காண்டாக்ட் பண்றேன்."

"ப்ளிஸ்மா... முதல்ல செய். ஆனா ஒண்ணு, பெரியவர் சொன்னா அதுல மீனிங் இருக்கும். நான் காத்திருக்கேன்."

-வக்கீல் தற்காலிகமாகத் தேங்க ராதா பெருமூச்சுடன் புறப்பட்டாள்.

காரில்...

"என்ன மேடம் பண்ணப்போறீங்க. வக்கீல் ரொம்ப நேரம் காத்திருக்க மாட்டார் மாதிரி தெரியுதே?"

"அஃப்கோர்ஸ்... ஆனா இவர் போனா எப்படியும் அப்பாவை ஜாமீன்லயோ இல்ல வேற வழியிலையோ கூட்டிக்கிட்டு வந்துடுவார். இன்னிக்கு ஒரு ராத்திரி இவரைச் சமாளிச்சா போதும். என்ன பண்ணலாம்?"

"சந்திரமோகன் சார்கிட்டையே ஐடியா கேட்போம். அவரும் வந்திருப்பார்!"

பட்டாபியின் வாய்க்கு சர்க்கரை தான் போட வேண்டும். சந்திரமோகன் ஒரு ராக்கெட் ஏவுகணைபோல வேலிக்காட்டுக்கு பக்கத்து டவுனான மேலூர் லாட்ஜில் காத்துக் கொண்டிருந்தான். ராதாவும் பட்டாபியும் வரவும் பரபரப்பாகி இருவரோடும் அறைக்குள் அடைந்து கொண்டு கேள்வி மேல் கேள்வி கேட்க ஆரம்பித்தான்.

"ராதா... ப்ளான் சக்ஸஸா?"



"இந்த நொடி ஓகே சந்திரா., ஆனா வக்கீலைத்தான் எப்படித் தடுத்து நிறுத்தறதுன்னு தெரியல..."

"நோ ப்ராப்ளம். வக்கீல் என்ன முயற்சி செய்தாலும் பிரயோஜனமில்லை. உன் அப்பாவும் அந்த வீரபத்ரனும் இப்ப ஸ்டேஷன்ல இல்லை. எஸ்.பி.ஆபீஸ்ல இருக்கற ஸ்பெஷல் என்கொயரி பிளாக்ல இருக்காங்க. அவர் அங்கே இருக்கற விஷயம் வக்கீலுக்குத் தெரியவே விடிஞ்சுடும்."

"ஓ... எல்லாம் உங்க ஏற்பாடா?"

"ஆமாம்... எஸ்.பி.யோட சன் என் கிளாஸ்மேட். அவர் கிட்ட ஆதியோட அந்தம் எல்லாம் சொன்னேன். ரொம்ப பெக்கூலியரா இருக்கேன்னு ஆச்சரியப்பட்டார். அதனால தான் வேலிக்காட்டு கண்ட்ரோல்ல வர்ற ஸ்டேஷன் இன்ஸ்பெக்டரை அனுப்பாமல், க்ரைம் பிராஞ்ச் இன்ஸ் பெக்ட்டரை அனுப்பினாரு."

"அப்ப ஸ்டேஷனுக்கு வக்கீல் போனா அவருக்கே அதிர்ச்சியா இருக்குமா?"

"நிச்சயமா..."

"ஆனா அப்பா போன் பண்ணி பேசியிருக்காரே...?"

"அதுக்கும் காரணம் இருக்கு. வக்கீல் வந்தா அவரே மாட்டப்போறார். இதுக்கு முந்தி எந்த மாதிரி கேள்வி அவர் எப்படியெல்லாம் டீல் பண்ணி இருக்காருங்கறது தெரிய வேண்டாமா..?"

"எந்த வக்கீல் சந்திரா அதையெல்லாம் சொல்வார்! அவங்க ட்யூட்டியோட பவுண்டரி ரொம்ப பெரிசு. போலீஸ் அத்துமீறிட்டதா சொல்லி அதை பிரச்சனை ஆக்கமாட்டாங்க?"

"இந்த மாதிரி சமயங்கள்ல சட்டத்தை விட சாமர்த்தியம் தான் பெரிசு. அந்த சாமர்த்தியம், நமக்கு நாளைக்கு காலை

வரும். எப்படியும் துணை செய்யும். அதுக்குப் பிறகு என்ன நடந்தா நமக்கென்ன? அதுக்குள்ள நாம கோவிலை திறந்து பார்த்துடப் போறோம்ல?"

"பார்க்கணும். பை த பை இன்னொரு விஷயம். எங் கண்ணன் கோபாலைப் பெரியவர் பர்மாவுக்கு அனுப்பி யிருக்காராம்."

"எதுக்கு?"

"சோணைமுத்து தாத்தா சொன்ன தகவல்படி பார்த்தா பெரியவரோட ஆரிஜின் அதுதானே? அங்க இருந்து இங்கே வந்து தானே வேலிக்காட்டை அவர் லபக்குன்னு சுருட்டி விழுங்கினார்."

"சரி... இப்ப அங்கே யார் இருக்கா?"

"தெரியல. பெரியவரும் இல்லாததால ஒரே குழப்பமா இருக்கு."

"சரி... எல்லாத்தையும் காலைல பேசிக்கலாம். இப்ப நம்ம டார்கெட் கோயில்தான்."

"அதுக்கு முந்தி பெரியவரோட குளத்து வீட்ல இருக்கற பெட்டியையும் திறந்து பார்த்துடணும் சந்திரா..."

"ஓ... அது ஒண்ணு இருக்கா... குளத்துல கிடைச்ச அந்த உலோகப் பெட்டிதானே?"

"ஆமாம்."

"அதுல அப்படி என்ன இருக்கும்?"

"சோணைமுத்து தாத்தா சொன்ன கதைப்படி அது கள்ளன் வரதமலையோடது. வரதமலையோட கொள்ளை யடிக்கப்பட்ட சொத்து பூரா அதுலதான் இருக்கணும்."

"அது எப்படி ராதா குளத்துல போய் விழுந்தது?"



"அதுதான் தெரியல. பெட்டியையும், வரதமலையையும் ஒரு முகமூடி உருவமா போய் கொண்டுகிட்டு வந்தது பெரியவர்னு சோணைமுத்து தாத்தா சொன்னாலும் அவருக்கே அதுல நிறைய சந்தேகம்."

"எப்படி?"

"அப்படி பெரியவர் பெட்டியைக் கொண்டு வந்திருந்தா அவர் அதைக் குளத்துல போட வேண்டிய அவசிய மென்ன? அது திரும்ப கிடைச்சப்போ அதைப் பார்த்து ஆச்சரியப்படவும் தேவையில்லையே?"

"அப்படின்னா?"

"கள்ளன் வரதமலையைக் கொன்னு பெட்டியையும் மீட்டது புலியனா இருக்கணும். புலியன்தான் பெட்டியை வரதமலை உடம்போட ஜமீன்தாரைப் பார்க்க வரும் போது பெரியவர் இடையில் புகுந்து புலியனைத் தாக்கிட்டு வரதமலை உடம்போட வந்துருக்கணும்கறது சோணை முத்து தாத்தாவோட எண்ணம்."

"இருக்கலாம். இப்ப பல கேள்விகளுக்கு நமக்கு விடை தெரியணும். முதல் கேள்வி கள்ளன் வரதமலையை உண்மையில் கொன்னது யார்? அடுத்த கேள்வி பெரியவர் சமாதானபாண்டி மிகச் சரியான அந்தச் சந்தர்ப்பத்துல எப்படி அங்கே வந்தார்? மூணாவது கேள்வி, ஜமீன்தாரைக் கொன்னுட்டு ஓடினது புலியன்தான்னு சொல்லி புலியன் மேல பழிபோட காரணமென்ன? அப்படி பழிசுமந்த புலியன் அதுக்குப் பிறகு ஏன் இந்த வேலிக்காட்டு பக்கம் வரவேயில்லை. ஒரு வேளை பெரியவர் கொன்னுட் டாரா..."

"எல்லாத்துக்கும் மேல கோயிலை பூட்டியே வெச் சிருக்கச் சொன்னதுக்கு எது காரணம்? இதுதானே நம்ம கேள்விகள்..."

"ஆமாம்... அதுல இரண்டு கேள்விக்கு விடை இன்னிக்கு ராத்திரி நமக்கு தெரிஞ்சிடும். மத்ததுக்கு விடையை பெரியவர்தான் சொல்லணும்."

-ராதாவும் அழகாய் ஒரு ரவுண்ட் ஆஃப் கொடுத்தாள்.

"சரி... தாமதிக்காம நாம அடுத்த காரியத்துல இறங்கு வோம். இப்ப நாம முதல்ல குளத்து வீட்டுக்குப் போய் பூட்டைத் திறக்கப் போறோமா?"

"ஆமாம்... இதோ சாவிக்கொத்து..." -காலேஜில் மெக் கானிக்கல் ஓர்க்ஷாப்பில் ஒரிஜினலைக் கொண்டு செய்த சாவிக்கொத்தை ராதா தூக்கிப் போட்டுப் பிடித்தாள். இதை ரசித்துப் பார்த்த சந்திரமோகன், "கமான் லெட் அஸ் கோ..." என்று ஒரு ப்ரீஃப்கேசுடன் புறப்பட்டான்.

குளத்துவீடு!

இரவின் அமைதியில் வழக்கமான சில்வண்டுக் கச்சேரியில் ஊடே ஒரு கறுப்புத்துண்டமாய்த் தெரிந்த வீட்டின் கூரையின் மேல், சந்திரமோகன், ராதா. பட்டாபி முன்னால் காவலுக்கு நின்றுவிட்டான்.

ஓட்டைப்பிரித்து உள்ளே குதித்த ராதாவும், சந்திர மோகனும் மிகுந்த சிரமப் பிரயாசையுடன் சாவியைப் போட்டதில் மிக சுபலமாய் அது திறந்து கொள்ள உள்ளே எட்டிப்பார்த்த சந்திரமோகனும் ராதாவும் ஒரு க்ஷணம் விக்கித்துப் போனார்கள்! உள்ளே...

## 36

பெட்டிக்குள்ளே குட்டிநந்தஸ்வாமியின் விக்கிரகம் இருந்தது! நான்கடிக்குக் குறையாத கண்ணன் சிலை. அநேகமாக இந்த இந்திய தேசத்தில் கண்ணனுக்கு இப்படி



ஒரு சிலை எங்கேயும் இருக்காது என்கிற மாதிரியில் இடையில் கச்சக்கட்டும், கையில் சக்ராயுதமாக முகத்தில் விரிந்த புன்னகையுடன் உள்ள அற்புதமான சிலை!

ராதாவும், சந்திரமோகனும், சிலையைப் பார்த்து விக்கித்துப் போயினர். தண்ணீருக்குள் கிடந்ததால உள்ளேயும் தண்ணீர் இறங்கி கல்மேனி முழுக்கப் பசலை பூத்திருந்தது.

"சந்திரா... தாத்தா சொன்ன கதைப்படி பார்த்தா இது கள்ளன் வரதமலையால் திருடப்பட்ட சிலை. இந்த சிலையைத் திருட வந்தப்பத்தான் கள்ளன் வரதமலை செங்கமாளையும் கொலை செய்தான்."

"அப்ப இது எப்படி இந்தப் பெட்டிக்குள் வந்தது?"

"தாத்தா சொன்ன அதே கதைப்படி பார்த்தா இந்தப் பெட்டிகூட கள்ளன் வரதமலையோடதுதான். சிலையைத் திருடியவன் அதைப் பத்திரமா இந்தப் பெட்டியில் வெச்சிருக்கலாம் இல்லையா?"

"ஏழு சாவி போட்டுத் திறந்தால் தான் திறக்க முடியங்கிற ஒரு பெட்டியில யாராவது இப்படி ஒரு கற்சிலையைப் போட்டு வைப்பாங்களா... இடிக்குதே ராதா..."

"அப்படி இல்லை... இந்தப் பெட்டியிலதான் கள்ளன் வரதமலை அவன் கொள்ளை அடிச்ச தங்க நகைகளை எல்லாம் வெச்சிருந்திருக்கணும். அவனைக் கொன்னுட்டு பெட்டியை களவாடிய முகமூடி உருவம் நகைகளை எடுத்துக்கிட்டு சிலையை மட்டும் பெட்டியிலயே விட்டு வெச்சிருக்கலாம் இல்லையா?"

"சரி... அப்படி விட்டு வெச்சிருந்தா அந்தப் பெட்டி எப்படி குளத்துக்குள்ளே போனது? இதோட சாவிகள் எப்படி பாம்புப் புத்துக்குள்ளே கிடந்தன... சோணைமுத்து

தாத்தா சொன்ன தகவல்படி பார்த்தா இந்தப் பெட்டியை கள்ளன் வரதமலைகிட்ட இருந்து கடத்தியவர் உன் தாத்தா சமாதானபாண்டி. வீரதமலையைக் கொன்னவரும் அவர்தான். வரதமலையைக் கொன்னுட்டு பெட்டியைக் கடத்திய உன் தாத்தாதான் இதைக் குளத்துலயும், சாவிக் கொத்துகளைப் பாம்புப் புத்துக்குள்ளேயும் போட்டாரா...? தானே வெச்சுக்காம அவர் ஏன் அப்படிச் செய்யணும்?"

"இந்த கேள்விக்கெல்லாம் அவசியமே இல்லை சந்திரா... தாத்தா சமாதானபாண்டி வரதமலையைக் கொல்லலை. பெட்டியையும் அவர் கடத்தலை. அப்படி அவர் செய்திருந்தா அவர் குடியிருக்கற இந்த வீட்டுக் குளத்துல ஒரு பெட்டி இருக்கறதா இதுல இறங்கிய வெட்டியான் ஊனக்கண்ணன் சொன்னப்போ 'அது எனக்கும் தெரியும்; நீ போய் உன் வேலையைப் பாரு'ன்னுதான் சொல்லியிருப்பார். வெளியே எடுக்கச் சொல்லியிருக்க மாட்டார். திறந்து பார்க்கவும் கஷ்டப்பட்டிருக்க மாட்டார். இப்படி ரகசியமா ஒரு அறைல போட்டு பூட்டி வைக்கவும் மாட்டார்."

"கரெக்ட்... அப்ப இதை செய்தது...?"

"நிச்சயமா புலியனாத்தான் இருக்கணும். புலியனால தான் இதைச் செய்திருக்கவும் முடியும். புலியன்தான் இதை இந்தக் குளத்துல போட்டிருக்கணும். சாவிக்கொத்தையும் புத்துக்குள்ளே போட்டிருக்கணும்."

"புலியன் எதுக்காக இப்படிச் செய்திருப்பான்னு நினைக்கிறே...? அதே சமயம் புலியன் கொலை செய்த வரதமலையை உன் தாத்தா எப்படி சுமந்துகிட்டு வந்து ஜமீன்தார் எதிர்க்க காண்பிச்சார்?"

"இந்தக் கேள்விக்கெல்லாம் பதிலை தாத்தாவால மட்டும்தான் சொல்ல முடியும். இப்போதைக்கு பெட்டி விஷயம் இதுதான்னு தெரிஞ்சுபோச்சு. நேரமும் ஆகிக்



கிட்டிருக்கு. வாங்க கோயிலுக்குப் போய்க் கதவைத் திறந்து பார்ப்போம். அங்கே என்ன இருக்குன்னு தெரிஞ்சுக்கறது தான் இப்ப நமக்கு முக்கியம்."

இருவரும் விக்கிரகப் பெட்டியைத் திரும்பவும் பூட்டி னர். ஆவல் தாளமாட்டாமல் உள்ளே வந்த பட்டாபிக்கும் பூட்டியதைத் திறந்து விக்கிரகத்தைக் காட்டினர்.

"அடப் பெருமாளே... விக்கிரகம் இங்கன்னா இருக்கு? அப்ப விக்கிரகம் இருக்கவேண்டிய சன்னதியிலே என்ன இருக்கு?"

"வா பட்டாபி, போய்ப் பார்த்துடுவோம். நம்ம ப்ளானோட உச்சக்கட்டமும் அதுதானே?"

வேலிக்காட்டிற்குள் சர்வ ஜாக்கிரதையாக ஒரு போர்வைப் போர்த்திக்கொண்டு கையில் ஒரு மூங்கில் கழியையும் பிடித்துக்கொண்டு யாராவது பார்த்தாலும் ஊழியம்பாடிகளில் யாரோ இயற்கை உபாதையைத் தீர்க்க ஓரமாக ஒதுங்கத்தான் போகிறார்கள் என்று நினைக்கும் விதமாக மூவருமே சற்று இடைவெளி விட்டு நடந்தபடி இருந்தனர்.

ராயரும் வீரபத்ரனும் பெரியவர் சமாதானபாண்டியும் வேலிக்காட்டுக்குள் இல்லாவிட்டாலும், அவர்களது கையாட்கள் படு சின்சியராக உளவு வேலை பார்த்துக் கொண்டிருக்கலாம் என்கிற பயம், சந்திரமோகனிடம் இருக்கத்தான் செய்தது.

அமெரிக்காவில் இருந்து இந்திய மண்ணில் காலை வைத்தபோது இப்படி எல்லாம் வேஷம்போட வேண்டியிருக்கும் என்று அவன் கனவில் கூட நினைத்துப் பார்க்கவில்லை.

நல்லவேளை, ராதா என்கிற மாணிக்கம் அவனுக்கு உதவிகரமாக அமைந்தாள்.

"ராதா... எனக்காக நீ எடுத்திருக்கிற இந்த ரிஸ்க்கை நினைச்சு நான் ரொம்ப பெருமைப்படறேன்..." என்று ஒரு கட்டத்தில் நின்று திரும்பி அவள் கைகளைப் பிடித்துக் கொண்டும் சொன்னான்.

"ஐயையோ... இது அப்ரிஷியேட் பண்ற நேரமா... நாம அரைக் கிணறு தாண்டியிருக்கோம். நடங்க நீங்க சீக்கிரமா..."

–அவள் பறந்தாள்.

**ந**ள்ளிரவு கடந்துவிட்ட *12.40!* ஒவ்வொருவராக நடந்து கோவில் முன் சென்று பிராகாரத்தில் நுழைந்தார்கள்.

சந்திரமோகன் டார்ச்சை ஆன் செய்து கதவு முன்னால் ஒளியைப் பாய்ச்சினான். சந்தனக் கரைசல்கள் காய்ந்து கட்டிகட்டியாகப் படிந்திருக்க, மாலைச் சரங்களும் காய்ந்திருக்க, அதை வெறித்தவன், முன்னால் உள்ள மூன்று படிகளின் மேல் ஏறி சந்தனத் திப்பிகள் மேல் கையை வைத்தான். பொலபொலவென்று அது உதிர்ந்தது.

பல வருடங்களில் பட்டருக்குப் பிறகு ஒரு மூன்றாவது மனிதனின் கை இப்பொழுது அதன் மேல் படுகிறது.

டார்ச்சை பட்டாபி வசம் தந்து படுவேகமாக மொத்த சந்தனத்தையும் உதிர்த்தவன் கண்ணில் கதவின் சாவித்துவாரம் தெரிந்தது. நிச்சயம் பூட்டியிருக்க வேண்டும் என்ற அனுமானத்தில் பாக்கெட்டில் கையை விட்டவன் ஒரு பிஸ்டலை வெளியே எடுத்தான்.

ராதாவும் பட்டாபியும் காதுகளை மூடிக்கொண்டு வெறித்து நோக்க, ஸ்ட்ரிக்கரை சந்திரமோகன் அழுத்த 'டும்ம்ம்...!' என்கிற ஒருவிதமான சப்தத்துடன் அங்கே புகை கசியத் தொடங்கியது. ஆர்வத்துடிப்போடு கதவை உந்தித்தள்ளினான். கலகலவென்று மணிச்சப்தமும், கீச்சுவீச்சு சப்தமுமாய் விறகு முறியும் சப்தமுமாய் பல



கலவைகளோடு கதவும் திறந்து கொள்ள, உள்ளிருந்து குப்பென்று அனல்காற்று வெளிப்பட்டு சந்திரமோகன் முகத்தில் அறைந்தது. ராதாவும் பட்டாபியும் கூட அங்கே உஷ்ணக்காற்றைப் புழுக்கமாய் உணர, பட்டாபி டார்ச்சின் ஒளியை உள்ளே செலுத்தினான். விறுவிறுவென்று ஓடிய அந்த ஒளிவட்டம் கர்ப்பக்கிரகம் மேல் போய் நிலைகொண்ட போது அந்த பீடத்தின் முன்னால் ஒரு கல் பலகை! அதில் ஏதோ ஒரு செய்தி.

அதைப் பார்த்த நொடி, தாவிக்குதித்து உள்ளே சென்ற சந்திரமோகன், வெகு வேகமாய் அந்தக் கல் பலகை மேல் ஒளியைப் பரவவிட்டு அதில் செதுக்கியிருந்த செய்தியை வாசிக்க ஆரம்பித்தான். தலைப்பில் '*உயில் சாசனம்*' என்றிருக்க, கீழே அந்த நாளைய வழக்கிலிருந்த வார்த்தைகளின் சேர்க்கையில், "பிங்கள ஆண்டு ஆடி மாசமிதில் பௌர்ணமி திதியில் ஆயிரம் வேலிக்காட்டு க்ஷேத்ரமாம் இந்த நந்தன்குட்டிஸ்வாமி கோயிலுக்காய் இந்த ஆயிரம் வேலிக்காட்டு நிலபுலன்களையும் ஜங்கம ஜீவாதார நீர்நிலை கேணி குளம் ஊருணி என்று சர்வத்தையும் அடியேன் உடையப்பராயன் தானமாய்ச் சமர்ப்பிக்கிறேன் என்பதையும், இந்தக் கோயில் சொத்தைக் காத்து ரட்சித்துப் பராமரிக்கும் பாடானது இந்த வேலிக்காட்டு ஜனங்களான ஊழியாம்பாடிகளுக்கு மட்டுமே உரியது என்பதையும் யாதொரு உற்பாதமும் இன்றி சத்யப்பிரமாணமாய் இங்கே லிபிபூர்வ சாஸனமாக்கியே மொழிகிறேன். ஊழியம் பாடிகள் உள்ளவரை அனுபவ பாத்யதையையும், அவர்கள் இடம்பெயர்தாலோ இல்லை பாத்யதையை மறுத்தாலோ பின் இது அரசாங்கம் வசம் சேர்ந்து பொதுச் சொத்தாக வேண்டும் என்றும் விருப்பம் தெரிவிக்கிறேன். இனி இதன் பேரில் என் வம்சாவழியினர் சொந்தம் கொண்டாட எந்த முகாந்திரமும் கிடையாது என்பது மறிக!

தாஸன்

உடையப்பராயன்."

கல்வெட்டு சாஸனத்தை வாசித்த சந்திரமோகன் விக்கித்துப்போய் நிமிர்ந்தான். ராதாவும் பட்டாபியும்கூட அதை வாசித்து விட்டு ஏன் இதைப் பெரியவர் சமாதான பாண்டி பூட்டியே வைத்திருக்க முயன்றார் என்பதை அந்த நொடியே உணர்ந்தவர்களாக நிமிர்ந்தனர்.

"சந்திரா... இந்த சாஸனம் வெளியே தெரியக் கூடாதுன்னுதான் கோயிலைப் பூட்டியே வெச்சிருந்துருக் காங்க. ஆமாம்... பத்திரமா இல்லாம இப்படி கல்வெட்டா இருக்கற சாஸனங்களுக்கு சட்டப்படி பவர் உண்டா?"

-ராதா க்ஷணத்தில் தனக்குள் தோன்றிய சந்தேகத்தைக் கேள்வியாக்கினாள்.

"பவர் இருக்கா இல்லையாங்கறது வக்கீல் சொல்ல வேண்டிய விஷயம் ராதா. ஆனா எந்த நிலையிலும் இந்த ஆயிரம் வேலிக்காடு உன் குடும்பத்துக்கு சொந்தம் இல்லைங்கறதுதான் இதுல இருக்கற முக்கிய விஷயமே. இது கோயிலுக்கு வரும்போது பாக்கறவங்களுக்கெல்லாம் தெரியவருமே... அப்படித் தெரியணும்னு தானே சாச னத்தை இங்கே கோயில் பீடத்துலயே உருவாக்கியிருக்கார் ஜமீன்தார் உடையப்பராயர்!"

"சந்திரமோகன் சார், இங்கே நின்னு பேசவேண்டாமே. யாராவது வந்துடப் போறாங்க..." -பட்டாபிக்கு பயம் கலந்த எச்சரிக்கை.

"வரட்டும் பட்டாபி... நல்லா வரட்டும்... இந்த சாஸனத் தையும் பார்க்கட்டும். இங்கே ஒரு சமுதாயத்தையே ஒரு கூட்டம் எப்படி இவ்வளவு நாளா ஏமாத்தியிருக்குங்கறது எல்லோருக்கும் தெரிய வரட்டும். கேரளா போயிருக்கிற பெரியவர் திரும்பி வரும்போது அவர் பெரியவரா இருக்கக் கூடாது. உலகமகா கிரிமினலாதான் அவர் இருக்கணும். அவருக்கு உடந்தையா இருந்த ராயர், அடியாள் வீரபத்ரன்



இன்னும் யார் யாரெல்லாம் இங்கே இருக்காங்களோ அவ்வளவு பேரையும் எல்லாரும் காறித் துப்பட்டும்..."

"காறித் துப்பினா போதுமா சார்... இதுக்கெல்லாம் தண்டனை?" -பட்டாபிதான் கேட்டான்.

"நிச்சயமா உண்டு. தப்பிக்கவே முடியாது இவங்க."

-சந்திரமோகன் அழுத்தம் திருத்தமாய் சொல்லிவிட்டு கோயிலுக்கு வெளியில் வந்தான். செல்போனைக் கையிலெடுத்தான்.

அவனது முயற்சியில் மறுமுனையில் க்ரைம் பிராஞ்ச் இன்ஸ்பெக்டர் அகப்பட்டார்.

"என்ன சந்திரமோகன்... உங்க கேஸ் ஓவரா?"

"ஓவர் இன்ஸ்பெக்டர். விடியும்போது இந்த ஆயிரம் வேலிக்காடே ஒரு சுதந்தர பூமியாயிட்டதை எல்லோரும் தெரிஞ்சுக்கப் போறாங்க. நீங்களும்தான்."

"அவ்வளவு நேரம் நான் எதுக்குக் காத்திருக்கணும். நான் இப்பவே கிளம்பி வரேன். பை த பை, இன்னொரு முக்கியமான விஷயம்..."

"என்ன இன்ஸ்பெக்டர்?"

"வக்கீல் மூலமா பெரியவர் சமாதானபாண்டிக்கு எல்லா விஷயங்களும் போயிருக்கு. அவர் விலாவாரியா ஒரு கடிதம் எழுதி எங்களுக்கு ஃபேக்ஸ் பண்ணியிருக்கார். அந்தக் கடிதப்படி பார்த்தா அவர் இப்போ உயிரோட இருக்க சான்ஸ் இல்லைன்னு நினைக்கிறேன்."

-இன்ஸ்பெக்டரின் பதிலில் சில விநாடிகள் கலங்கிய சந்திரமோகன் பின் நிதானமாய்ச் சொன்னான்:

"இதை நான் எதிர்பார்த்தேன் இன்ஸ்பெக்டர். பெரிய வர் மாதிரி கேரக்டர்களை யாராலயும் எதுவும் செய்ய

முடியாது. அவங்களுக்கு அவங்களேதான் வில்லனாக முடியும். அந்தக் கடிதத்தை நாங்க பார்க்கலாமா.. எங்களுக்குப் பல கேள்விகளுக்கு விடை தெரிய வேண்டியிருக்கு.."

"ஷ்யூர் சந்திரமோகன்... லெட்டரோட ஜெராக்ஸ் காப்பியோட அறுபது நிமிஷத்துல உங்களை நான் சந்திக்கிறேன்!"

-இன்ஸ்பெக்டர் பேசி முடித்தார். சந்திரமோகனும் செல்லை அணைத்து பாக்கெட்டில் செருகிக்கொண்டான்.

பட்டாபியும் ராதாவும் அருகே வந்தனர்.

"என்ன சந்திரா... பெரியவர் சூஸைட் பண்ணிக்கிட்டாராமா?" -ராதா கேட்டாள்.

"உம்!"

"தப்பிக்க வழியில்லேன்னு தெரிஞ்சிடிச்சாட்டம் இருக்கு..."

"இவர் பார்க்கப்போயிருந்த நம்பூதிரியே 'அவ்வளவுதான் சாமி உன் கதை'ன்னு சொல்லியிருப்பான். அதுலேயே மனுஷனுக்குப் பாதி உயிர் போயிருக்கும்..."

"சாரியாச் சொன்னே பட்டாபி... இந்த ராத்திரி இப்படி டென்ஷனே இல்லாதபடி மாறும்னு நான் எதிர்பார்க்கவேயில்லை."

"எல்லாம் குட்டி நந்தஸ்வாமியோட அனுக்ரகத்தாலதான்..."

"இடிச்சேனா... அவருக்கே நாமதான் இங்கே திரும்ப உக்காத்தி வெச்சு அனுக்ரகம் பண்ற நிலைல இருக்கோம். ஞாபகம் வெச்சுக்கோ..."

"வாஸ்தவம்தான். நான் போய் என் அப்பாவையும் அம்மாவையும் கூட்டிண்டுவரேன். முதல்ல அவங்க கோயிலைப் பாக்கட்டும். அப்புறம் ஊர் பாக்கட்டும்."



"நீ எதுக்குப் போகணும்? மணியை அடி. எல்லாரும் திரண்டு வரட்டும். பாக்கட்டும். இன்ஸ்பெக்டரும் வந்துடுவார். எல்லார் முன்னாலேயும் பெரியவரோட கடிதத்தையும் படிச்சுடுவோம்.

"அதுவும் சரிதான்..." என்றபடி பட்டாபி எழுந்துபோய் மணிக்கயிறைத் தொட்டு இழுத்தான். 'டணங்... டணங்ங்...!'

மணி சப்தம் அந்த இரவில் ஒரு அதிசய ராகமாய் ஒலிக்கத் தொடங்கியது.

**வி**மான நிலையத்துக்கு ராதாவும் வந்திருந்தாள். அவனோடு பட்டாபி, சங்கவை, ரத்னசபாபதி, ருக்மணியும் வந்திருந்தனர்.

பிரியாவிடை பெற்றபடி எல்லோருக்கும் டாடா காட்டிக்கொண்டே விமானத்தை நோக்கி நடந்தான் சந்திரமோகன். இரண்டு மாதத்திற்கு முன் ஸ்ரீமதியோடு ஜோடியாக வந்தவன் தனியாகத் திரும்பிச் செல்கிறான். உள்ளே சீட்டில் போய் அமர்ந்தவன் ஸ்ரீமதி நினைப்போடு பாக்கெட்டில் கையை விட்டான். அவளது புகைப்படம் அவன் விரல்களில் சிக்கியது. அதை முகத்துக்கு நேரே வைத்துக்கொண்டு உற்றுப்பார்த்தான். கண்கள் கலங்கிவிட்டன.

உதட்டில் முணுமுணுப்பு.

"ஸ்ரீ... உன்னைக் கொலை செய்த கூட்டத்தை உள்ளே தள்ளிட்டேன். உன்னால ஏழைக் கூட்டத்துக்கே விடிவும் பிறந்திருக்கு. ஆனா என் வாழ்க்கை மட்டும் அஸ்தமிச்சு போச்சேடா...? நீ போய்ட்டியேடா..."

அழுதான். மீண்டும் பாக்கெட்டில் போட்டோவை வைத்தான். அப்போது அந்த ஃபேக்ஸ் கடிதம் விரலில் பட்டு உரசியது.

வெளியே எடுத்தான்.

பல ரகசியங்களுக்கு விடை சொன்ன அதைப் பலமுறை படித்துவிட்டான். இருந்தும் திரும்பவும் ஒருமுறை படிக்கத் தொடங்கினான்.

"இன்ஸ்பெக்டர் அவர்களுக்கு!

ஆயிரம்வேலித் தோட்டத்து சமாதானபாண்டி எழுதிக் கொள்வது. இந்தக் கடிதம் உங்கள் கையில் இருக்கும் நேரம் நான் உயிரோடு இருக்கமாட்டேன். இதுநாள் வரை என் கட்டுப்பாட்டில் இருந்த காக்கை குருவி கூட பறக்க அஞ்சிய என் ஆயிரம்வேலித் தோட்டமும் கைநழுவிப் போயிருக்கும்.

என் தம்பி மகனான கழுகாசலராயரின் மகள் ராதாவும், சந்திரமோகனும் மிக சாமர்த்தியமாக கோயில் கதவைத் திறந்து உள்ளிருக்கும் சாசனத்தைப் படித்திருப் பார்கள். இதை எல்லாம் நினைக்கும்போது இவ்வளவு நாள் நான் அந்த வேலிக்காட்டைக் கட்டிக் காப்பாற்றி யதே அதிகம் என்றுதான் தோன்றுகிறது. சந்திரமோகன் மனைவி ஸ்ரீமதி விஷயத்தில் ராயனும், வீரபத்ரனும் அவசரப்பட்டு விட்டனர். சந்தோஷமாக அனுப்ப வேண்டிய ஜோடிகளைப் பிரித்து பயமுறுத்த நினைத்தது தவறாகிவிட்டது.

உண்மையில் புலியனுக்குத்தான் அந்த வேலிக்காடு சொந்தம். அவன்தான் கள்ளன் வரதமலையைக் கொன்று வரதமலையின் பொக்கிஷங்களையும் கொள்ளை அடித்தவன். பொக்கிஷங்களை எங்கோ பதுக்கிவிட்டு வரதமலையோடு வந்தவனை நடுவழியில் சந்தித்த நான் தான் அவனை சாட்டையால் அடித்துப்போட்டு விட்டு வரதமலை உடலையும் எடுத்துக்கொண்டு ஜமீன்தாரைப் போய் சந்தித்தேன்.

புலியன் இறந்துவிட்டதாக நான் கருதியது தப்பாகி விட்டது. அவன் உயிரோடு திரும்ப வந்து ஜமீன்தாரையும்



சந்தித்து என் சதிச்செயலைச் சொல்லியும் விட்டான். இதனால் கொதித்துப்போன ஜமீன்தார் என்னை ஊரறிய அவமானப்படுத்தவும், புலியனை ஊரறிய கௌரவப் படுத்தவும் மிக ரகசியமாகத் திட்டமிட்டார். இரவோடு இரவாக சாசனம் எழுதி அதைக் கோயிலில் வைத்து விட்டுத் திரும்பவும் விக்கிரகப் பிரதிஷ்டை செய்யவும் திட்டமிட்டார். இதைக் கண்டுபிடித்வர் என் அப்பாவான கதிர்வேல் ராயர்தான். விஷயத்தை என்னிடம் கூறியவர், விடியவதற்குள் சாசனத்தைப் பதிக்கச் சென்ற புலியனை யும் ஜமீன்தாரையும் தீர்த்துக் கட்டச் சொன்னார்.

கோயிலில் பிரதிஷ்டை செய்வதற்காக புலியன் வீட்டில் உள்ள விக்கிரகத்தைக் கொண்டு வரச்சென்றிருக்கும் புலியன் ஆட்களைத் தான் பார்த்துக் கொள்வதாக கூறிப் புறப்பட்டுச் சென்றார். அதற்கேற்ப என் வசமும் அவர் வசமும் ரங்கூனிலிருந்து கொண்டு வந்திருந்த துப்பாக்கிகள் இருந்தன. அவர்தான் புலியன் ஆட்களைத் தீர்த்துக்கட்டி விட்டு பெட்டியையும் குளத்தில் போட்டது. சாவியோடு அவர் திரும்பும்போது புலியனைப் பாராட்டி ஜமீன்தார் நட்ட நடுகல் கண்ணில் பட்டு எரிச்சல் மூட்டியதால் அதைப் பிடுங்கி அருகில் இருந்த பாம்புப் புற்றுக்குள் போட்டு மூட நினைத்தபோது, அவரை ஒரு நல்லபாம்பு கடித்துவிட்டது. அப்பொழுதுதான் சாவிக்கொத்தும் அங்கே விழுந்திருக்க வேண்டும். அந்த சாவிக்கொத்து என் பேத்தி ராதா கையில் கிடைத்தது என்வசம் திரும்ப வந்த போது ஆச்சரியப்பட்டுப் போனேன்.

பெட்டிக்கும் சாமி சிலைக்கும் என் அப்பாவே சமாதி கட்டினார். நானும் கோயிலில் ஒளிந்திருந்து ஜமீன் தாரையும் புலியனையும் தீர்த்துக் கட்டினேன். அதில் புலிய னின் உடம்பை மட்டும் யாருக்கும் தெரியாமல் புதைத்து விட்டு, ஜமீன்தார் உடம்பை வெளியே போட்டு கள்ளன் வரதமலையின் தம்பி பழிவாங்கி விட்டதாக எல்லோரை

யும் நம்ப வைத்தேன். கோயிலையும் மூடி சாசனம் வெளியே தெரியாமல் பார்த்துக்கொண்டேன். இதற்கு நம்பூதிரியைத் துணைச்சேர்த்துக் கொண்டேன்.

பிறகு ஒரு நாளில் சாசனத்தை வெடிவைத்து தகர்த்து விடலாம் என்றுதான் நினைத்தேன். ஆனால் அதைச் செய்ய இறுவதிவரை முடியவில்லை. நான் உருவாக்கிய நம்பிக்கை என்னையே கட்டிப் போட்டு விட்டது. கள்ளன் வரதமலை திருடிய நகை, முதல் கோயில் நகை வரை சகலமும் உருக்கப்பட்டு, தங்க பிஸ்கெட்டுகளாக மாற்றப்பட்டு அதையும் கூட கோபாலிடம் பர்மாவுக்குக் கொடுத்து அனுப்பியுள்ளேன்.

இனி தப்பிக்க வழி இல்லாத நிலையில் நான் எழுதும் இந்தக் கடிதத்தை ஒரு வாக்குமூலமாகவே தருதவும்.

இப்படிக்கு சமாதானபாண்டி."

அந்த ஜெராக்ஸ் கடிதத்தைப் படித்துத் திரும்ப பாக்கெட்டின் உள்ளே வைத்தான். ஜன்னல் வழியாக வெளியே பார்த்தான். விமானம் கிளம்பி நடுவானில் இருப்பது தெரிந்து. வெளியே மேகப் பொதிகள். அவன் மனதிலும் ஒருவித அமைதி!

சென்னை மாவட்ட கிளை நூலகம்
35846
ரு329362
கொளத்தூர், சென்னை